# விடைபெற்ற வசந்தம்

உபாலி லீலாரத்ன



தமிழில்

திக்குவல்லை கமால்

# விடை பெற்ற வசந்தம்

විඩෙයි පෙට්ර වසන්දම්

## அறுவடை- மொழி பெயர்ப்புக்கள்

1. குருதட்சணை - தெனகம சிரிவர்தன -2008
2. வெற்றியின் பங்காளிகள் - விமலதாஸ முதாகே -2009
3. தொடரும் உறவுகள் - சிட்னி மாகஸ் டயஸ் -2009
4. குறும்புக்கார குரங்குக் குட்டி - மெடில்டா அதிகாரம் -2009
5. திறந்த கதவு - கமல் பெரேரா -2009
6. மலையுச்சி மாளிகை - டெனிஸன் பெரேரா -2010
7. அமைதியின் குரல் - ஜனசங்கதய -2010

PINIVAN THALAWA
UPALI LEELARATHNA

# விடை பெற்ற வசந்தம்

*විඩෙයි පෙට්ර වසන්දම්*

சிங்களத்தில்:
**உபாலி லீலாரத்ன**

தமிழாக்கம்:
**திக்குவல்லை கமால்**

எஸ். கொடகே சகோதரர்கள்
அரச விருது பெற்ற வெளியீட்டாளர்கள்
675, பி. டி எஸ் குலரத்ன மாவத,
கொழும்பு 10.

விடைபெற்ற வசந்தம்

உபாலி லீலாரத்ன ©

முதற் பதிப்பு- 2010

மொழி பெயர்ப்பு:
திக்குவல்லை கமால்

கணனி அச்சமைப்பு:
எஸ். எஸ். குமாரி

அட்டை அமைப்பு:
மேமன்கவி

அச்சுப் பதிவு:
சதுர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ்
வெல்லம்பிட்டி

வெளியீடு:
எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ. டி எஸ். குலரத்ன
மாவத
கொழும்பு- 10.

VidaiPetra
Vasantham

Upali Leelarathna

-First Print

Translated By:
Dickwelle Kamal

Type Setting
S. S. Kumari

Cover Designed By:
Memonkavi

Printed By:
Chathura Printers
69, Kumaradasa Place,
Wellempitiya.

Published By:
S. Godage & Brothers
675, P.De S. Kularatna
Mawatha,
Colombo- 10.

**ISBN: 978-955-30-2825-9**

13356/1608/350

**சமர்ப்பணம்:**

மலையக
பெருந்தோட்டத்
தொழிலாளர்களுக்கு

# திறவுகோல்

சிங்கள இளைஞர் நாவல்களை நிறையவே வாசித்திருக் கிறேன். ஒரு சிலவற்றை மொழியாக்கம் செய்திருக்கிறேன். அவற்றிலே 'விடைபெற்ற வசந்தம்' என்ற இந்நாவல் வித்தியாசப்பட்டு நிற்கிறது.

கட்டிளமைப் பருவம், வேகமும் குதூகலமும் வேடிக்கையும் நிறைந்ததுதான். அந்த அனுபவம் எல்லோருக்குமுண்டு. உண் மையில் நூலாசிரியர் தனது நண்பர்களுடனான மறக்க முடியாத சம்பவங்களைத் தொகுத்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். அதனை நாவல் வடிவமாக்குவதற்கு கலையும் கற்பனையும் கைகொடுத்திருக்கிறது.

முற்குறிப்பாக அறிமுகம், பிரவேசம் என்று சுமார் பத்துப் பக்கங்கள் எழுதியுள்ளார். அது படைப்பின் உண்மைத் தன்மையை மேலும் வலியுறுத்துகின்றது.

அதிர்ஷ்டவசமாக தலவாக்கலைத் தோட்டப் பிரதேச வாழ்வு இவருக்கு வாய்த்துள்ளது. அங்கு பல்லின மக்களோடும் நண்பர்களோடும் இணைந்த வாழ்வும், அந்த வாழ்வின் சுருதி பேதங்களுமே இப்படைப்பின் மூலவிசையாகத் திகழ்கிறது.

அவர் ஒரு கட்டத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

“எனது தாய் தந்தையரோடு சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்ட தமிழ்- சிங்கள- முஸ்லிம் அன்பர்களில் பெரும்பா லானவர்கள் இன்று உயிருடனில்லை. எனது தந்தை உள்ளிட்ட அந்த வயதுத் தொகுதியினர் இவ்வுலகிலிருந்து விடைபெறும்

போது, அடுத்த பரம்பரையான எங்களிடையே பிரிக்க முடியாததொரு பிணைப்பை ஏற்படுத்தி விட்டே சென்றனர்"

இந்த உண்மை இந்த நாவல் முழுவதும் விரவிக் கிடக்கின் றது. அந்தச் செய்தி நாடெங்கும் வளர வேண்டும், நிலைக்க வேண்டுமென்பதினாலேயே இந்தப் படைப்பை எமக்கு உருவாக்கித் தந்துள்ளார்.

ஆனால் நடந்ததென்ன? இனமுறுகலும் மோதலும் செய்த நாசங்களை நாமறிவோம். எல்லாம் இழந்த பின் எமக்குப் பிறந்துள்ள ஞானம் இனியொரு வசந்தத்தை நோக்கிக் கண் சிமிட்டுகிறது.

இலக்கியப் படைப்பாக்கமும் மொழியாக்க முயற்சிகளும், தேச அபிவிருத்திப் பணியாக ஆகிவிட்ட இன்றை சூழலில் இந்நாவல் வெளிவருவது மிகவும் பொருத்தமானதாகும்.

நல்லது நடக்க கைகோர்த்துக் கொண்டுள்ள சிங்கள- தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினதும், கொடகே வெளியீட்டு நிறுவனத்தினதும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

இலக்கிய தாகமே இமய தாகம்.

**திக்குவல்லை கமால்**
2010.07.31

**dicwellekamal @ gmail.com**

# 1

"ஐயோ அம்மா.... அடிக்க வேணா அடிக்க வேணா.....ம்...... அம்மா..... வலிக்குது..... இல்ல.... இல்ல... ஐயோ ...... நோனாச்சீ...... அம்மா அடிக் கிறா....... இனிப் போகமாட்டேனம்மா...... ஐயோ..... என்னைக் காப்பாத் துங்க நோனாச்சி"

வெள்ளயன் மேலே பாய்ந்து பாய்ந்து கத்தத் தொடங்கினான். சீதை மாமி கொய்யாத் தடியினால் அவனது முதுகிற்கும் கால்களுக்கும் மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தாள்.

"சும்மா இரு சீதை. அந்தப் பெடியனக் கொல்லப் போறியா.... நீ இங்கால வா வெள்ளயன்....."

வெள்ளயனைத் தன்னோடு அணைத்துக் கொண்ட நோனாச்சி, சீதை மாமியைக் குற்றம் சாட்டினாள்.

மூக்கினால் வழிந்த இளம் பச்சைநிறச் சளியை சீறி வீசிவிட்டு, நோனாச்சிக்குப் பின்பக்கமாக நின்று தனது அம்மாவைப் பார்த்தான்.

"பாருங்கொ நோனாச்சி இவன் சொல்றத கேக்கிறதேயில்ல..... பெடியன்களோட சேர்ந்து விலியமின் தோட்டத்துக்கு கொய்யா பிய்க்கப் போய்... அந்தப் பொம்புள அம்மா அப்பாவை இழுத்து சத்தமிட்டு... கேக்க முடியாத தூசணம். பொடியன்களெல்லாம் பாய்ந்தோடி..... எங்கடவன் பிடிபட்டு..... இரு இரு உன்ன நான் ஒரு கை பாக்கிறன் பிறகு....."

வெள்ளயனை நோக்கிப் பிரம்பை நீட்டி இப்படிச் சொல்லிவிட்டு, அதனை எறிந்த சீதை மாமி, கொண்டையைச் சேர்த்து பின்பக்கமாக உருண்டையாகக் கட்டிக் கொண்டாள்.

வீட்டுத் திட்டத்தில் வெள்ளயன் வீட்டுச் சிறுமுற்றத்தில் நடைபெற்ற இந்தக் குழப்பநிலையை அடுத்தடுத்த வீட்டுக்காரர்களெல்லாம் பார்த்த படியிருந்தனர். சிறு பிள்ளைகள் பெண்களெல்லாம் மெல்ல மெல்ல அந்தப் பக்கமாக வரத் தொடங்கினர்.

பத்து வீடுகளைக் கொண்ட வீட்டு வரிசையில் முதல் வீடு வெள்ளய னுடையது. அடுத்தது நோனாச்சியின் வீடு. வெள்ளயன் வீடடார்தான் அவளது கிட்டிய அயலவர்கள்.

இதனால்தான் வெள்ளயனின் பிரச்சினையில் நோனாச்சி தலையிட்டாள்.

வீட்டுத் திட்டத்தின் கீழ் வாழும் சகலருமே இந்த வயதாளிப்

பெண்ணின் பேச்சுக்கு சற்றே பயந்தனர். வாய் கடுமையான போதும் மிகவும் அப்பாவிப் பெண்ணான நோனாச்சி, எவரையும் அன்புடன் கவனிக்கும் உயர்குணம் கொண்டவள். அதனால் அவளது புத்திமதிகளையோ வேண்டுகோளையோ புறந்தள்ளும் எவரும் அந்த வீட்டுத் தொகுதியில் இருக்கவில்லை.

மூன்றாவது வீட்டில் வசிக்கும் தலவாக்கலை லயன் அச்சகத்தில் வேலை செய்யும் குனபால ஐயாவும் அவரது குடும்பத்தவர்களும், அவளது அடுத்த நெருங்கிய அயலவர்களாவர். வெள்ளயனின் வயதேயான ஆண்பிள்ளை உபாலி, அவனது இளைய சகோதரன், சகோதரி, கைக்குழந்தைகளுடன் குசுமாவதி அல்லது எல்லோரும் அறிந்த உபாலியின் அம்மா அந்த வீட்டில் வாழ்ந்து வந்தாள்.

இந்த இரு குடும்பங்களும் மாத்திரமன்றி, வீட்டுத் தொகுதியில் வாழும் எல்லோருமே நோனாச்சிக்கு மிகுந்த மரியாதை காட்டினர். அவளது புத்திமதி, அறிவுறுத்தல், திட்டல்களுக்கு வயதானவர்கள் கூடக் கோபம் கொள்ளவில்லை.

வெள்ளயனின் பெற்றார் நோனாச்சிக்கு அன்பும் மரியாதையும் காட்டுவது வெளிப்படையாகத் தெரியும் விடயம். அவளது தேவைகளுக்காக எந்தவேளையிலும் கடைக்குப் போவதற்கு அந்தத் தமிழ் குடும்பப் பெடியன்கள் மட்டுமன்றி, வளர்ந்த பெண்கள் கூட விருப்பத்தோடு ஈடுபட்டனர். இக்குடும்பத்தின் நான்காவது பிள்ளையான வெள்ளயன் கடைக்குச் செல்ல எந்தவேளையிலும் தயாராகவே நின்றான். நோனாச்சிக்கு மட்டுமன்றி, அவளது மகனான நல்லமாமாவுக்குத் தேவையானவற்றைக் கொண்டு வந்து கொடுக்கவும் வெள்ளயன் பழகியிருந்தான். இதனால் சீதைமாமியின் தண்டனைகளின் போது, தனக்கான பாதுகாப்பை நோனாச்சி அல்லது நல்லமாமாவிடமிருந்தே வெள்ளயன் எதிர்பார்த்தான்.

"ஐயோ சும்மா இரு சீதே..... நீ அந்தப் பொறுக்கியின் வாய்க்குப் பயந்து சும்மா அநியாயமா இந்தப் பெடியனப் போட்டு அடிக்கிறாய்..... உனக்கு பைத்தியமா பிடிச்சிருக்கு? பெடியன்கள் அப்படித்தான்டீ.... கொய்யாப் பழமொன்று பிடுங்கிச் சாப்பிட்டதற்காக அவளின்ற என்ன கொறஞ்சி போச்சாம்?"

நோனாச்சி விலியம் அப்பச்சியின் மனைவியைப் பட்டப் பெயர் சொல்லி ஏசி, அவளைச் சபித்தாள்.

கூடவே வெள்ளயனின் முதுகைத் தடவி மிகுந்த அனுதாபத்தோடு அவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

"உனக்கு நடக்க வேணும்.... இந்த வீட்டு வரிசைக்கு முன்னால எத்தனை கொய்யா மரமிருக்கு. உங்கட வாசற் படியிலும் ஒரு கொய்யா மரமிருக்கு....... ம் அந்தக் கிழவியின் பிடவைக்குள்ள என்னத்துக்குப் புகுந்து கொள்ளப் போறாய்?...... அங்கபார் பொடி அப்புவின் வாசற்படிக்கு முன்னால் இரண்டு பெரிய கொய்யா மரமிருக்கு. வேண்டிய மட்டும் பிய்த்துச் சாப்பிடு..... யார் ஏசப் போறாங்க?"

"ஆனா பொடியப்பு மாமாவின்ற சுஸிலும் தயையும், சின்னவனும் மூனுபேருமே கொய்யா மரத்தில ஏறினாங்க.... நான் மரத்துக்குக்கூட ஏறல்ல..... ஆனா நான்தான் பிடிபட்டன்....."

வெள்ளயன் விடுதலைக்கான காரணம் சொன்னான்.

"பொய் சொல்லாத வெள்ளயா... இது எங்கட பெரிய கொய்யா மரம் இரண்டிருக்கு. எங்கட தம்பிமார்... அந்தப் பொறுக்கியின் மரமேறப் போறதில்ல"

சுஸிலின் பெரியக்காவான சுமனா, வெள்ளயனுக்கு விரல் நீட்டி எச்சரித்தாள்.

வெள்ளயனின் வீட்டுக்கு முன்னாலுள்ள செம்மண் பாதையருகே தேயிலைப் பற்றைக்கிடையில் நிலத்தில் அமர்ந்திருந்த பெடியன்கள், நடப்பவற்றையெல்லாம் மிகுந்த உற்சாகத்துடன் பார்த்திருந்தனர்.

வெள்ளயன் காட்டிக் கொடுத்த, சுமனாக்காவின் தம்பிமார் மூவரும் அங்கு காணப்பட்டனர்.

"இவன் எங்களயும் காட்டிக் குடுத்திட்டான். அவன் திரும்பவும் விளயாட வரட்டும் பாப்பம்..... கொலஹொட்டா....."

சின்னவன் கோபத்திற்குள்ளானவனாகச் சொன்னான்.

எப்பொழுதும் வெள்ளயனின் மூக்கிலிருந்து சளி வழிந்து கொண்டிருப்பதால், ரொபட் மாமாவின் மகன் ரோஹித அந்தப் பட்டப் பெயரை வைத்தான். அவனுக்கு இதுமாத்திரமன்றி இன்னும் பெயர்களையும் வைத்திருந்தனர். அதில் எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் வெள்ளையன் கோபத்தோடு கத்தி எதிர்ப்புக் காட்டுவான். இந்தப் பட்டப் பெயர்களுக்கு மேலதிகமாக, இன்னும் சில பெயர்கள் வைக்கக் கூடிய சூழலும் நிலவியது. ஏனென்றால் வெள்ளயனின் செயற்பாடுகள் சிரிப்பூட்டுவதாகவே இருந்தன.

"சின்னக்காவுக்கு இனி தம்பிமார்தான் பெரிசு. அநியாயமாக அவங்க ளால நான் அடி வேண்டினன். பொறுக்கி ஆச்சி பொடி அப்புவின்ற

பெடியன்களென்று தான் ஏசினவ. இன்னும் ஏசிறாவாக்கும். பொய்யென்னா போய்க் கேட்டுப் பாருங்கொ... ம்..... அதுதான் உண்ம"

வெள்ளயன் நோனாச்சிக்கு மறைந்து கொண்டு வெறுப்பான குரலில் சொன்னான்.

சீதை மாமியின் முகம் மகிழ்ச்சியால் நிறைந்தது. முகத்தில் படிந்திருந்த கோபச் சாயல் மங்கிச் சென்றது.

"என்ற பெடியன் மட்டுமல்ல, சுமனாவின் தம்பிமாரும் சேர்ந்துதான் இந்த வேலயச் செய்திருக்காங்க. நோனாச்சி சொல்றாப்போல பெடியன்கள் அப்பிடித்தான்"

அவள் அவ்வாறு சொன்னாள்.

சீதை மாமி உடனே வெள்ளயனின் அருகே சென்றாள். தனக்குப் பயந்து இன்னுமின்னும் நோனாச்சியை அணைந்த வெள்ளயனின் மூக்கிலிருந்து வழிந்த சளியை அணிந்திருந்த சாரியினால் துடைத்தாள்.

நோனாச்சி, வெள்ளயனின் தலையைத் தடவி சீதை மாமியிடம் அவனைக் கையளித்தாள்.

சுமனக்கா இன்னும் ஏதேதோவெல்லாம் சொல்ல ஆரம்பித்தாள்.

"சும்மா பொய்க்கு சத்தம் போடாதே சுமன. உன்ற வீட்டுப் பெடியங்கள் எப்படியென்று எனக்குத் தெரியும்.... அவங்க மட்டுமல்ல, எங்கடவன்கள் ரெண்டு பேரும் கூட சம்பந்தப்பட்டிருப்பாங்க..... எங்க அவங்கெல்லாம் ஒன்னா இருப்பாங்களே"

சுமனக்காவுக்கு குற்றம் சொல்லிய நோனாச்சி சுற்று வட்டாரத்தைப் பார்த்தாள்.

சிறுமண் பாதையருகே தேயிலைப் பற்றைக் கிடையே நிலத்தில் அமர்ந்திருந்த பெடியன் கூட்டம், அவளது முதிர்ந்த கண்களுக்கு சாடையாகத் தெரிந்தது.

அவள் 'எங்கட ரெண்டும்' என்று குறிப்பிட்ட அவளது பேரப் பிள்ளைகளான கீர்த்தியும் அசோகவும் கூட அந்தக் குழுவிலே நின்றனர். அவர்கள் 'மாபெரும் கொய்யாக் கொள்ளையில் ஈடுபட்டு, பெற்றோருக்கு முகம் மறைத்துக் கொள்ள கடும் முயற்சி செய்தனர்.

சற்று நேரத்தில் சமாதானச் சூழல் உருவாகியது. எல்லோரும் தத்தமது வழமையான காரியங்களில் ஈடுபட்டனர். பெண்கள் தரப்பினர் இரவுச் சமையல் செய்ய முனைந்தனர். இதற்கு அவசியமான பொருட்க

ளைக் கொண்டுவர பெடியன்களின் உதவி தேவைப்பட்டது. இதனை அறிந்திருந்த அவர்கள், அதற்குகந்த நேரத்தில் வீட்டுப் பக்கமாக நிற்க திட்டமிட்டுக் கொண்டனர்.

முதலாவது கடமை வெள்ளயனுக்குத்தான்.

சீதைமாமி அவனை அழைத்தாள்.

"வெள்ளயன் கடைக்குப் போ..... கருவாடு அரிக்காலும் மண்ணெண் ணெய் அரை போத்தலும் கொண்டுவா..... கடயப்பம் கொஞ்சத்தயும் கணக்குப் பார்த்து வைக்கச்சொல்லு....... நான் மாலயில வந்து சல்லி எடுக்கிறதாச் சொல்லு......."

தனது தாய்மொழியைவிட சிங்களத்தில் கதைக்க அதிவிருப்பம் காரணமாகவோ என்னவோ சீதைமாமி சிங்களத்தில் சொன்னாள். பெருந்தோட்டப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் சிங்கள மொழியில் கதைப்பதற்கு மிகுந்த விருப்பம் காட்டுவர். தென்னிந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்ததால் இலங்கைச் சிங்கள சமூகம், தமிழ் மக்களைப் புதிய இனக்குழுவாக மதிப்பதே இதற்குப் பிரதான காரணமாகும். அனுமதியற்ற முறையில் வருகை தந்தோரை 'கள்ளத்தோணி' என்றே அடையாளப்படுத்தினர். இவர்களைப் பற்றி எழுதப்பட்ட பாடலொன்று அந்நாட்களில் மிகப் பிரபலமாக ஒலித்தது.

இந்நேரத்தில் நோனாச்சியின் தேவைக்காகவும் கடைக்குச் செல்ல வேண்டுமென்பதை வெள்ளயன் அறிந்திருந்தான். இருந்தாலும், அதனை அடுத்த முறை கடைக்குச் செல்லும் நிகழ்வாக வைத்துக் கொள்ள அவன் விரும்பினான். இரண்டு வீடுகளுக்குத் தேவையான சாமான்களை ஒரே தடவையில் கொண்டு வருவதிலுள்ள அசௌகரியங்கத்தை விட வேறொரு காரணம் அதில் முதன்மை பெற்றிருந்தது. தனது வீட்டுக்குக் கொண்டு வரும் சாமான்களதும் நோனாச்சி வீட்டுக்குக் கொண்டு வரும் சாமான்களதும் கணக்கு வழக்கைச் சீர்செய்வதில் கடும் பிரச்சினைகள் அவனுக்குத் தலைதூக்கும். இன்னொரு பக்கத்தால் பார்த்தால் நோனாச்சிக்கு கடைக்குச் செல்வதால் கிடைக்கும் ஐந்து சதத்திலும் குறைவான தொகை, தவறியேனும் அவனது அம்மாவின் கைக்குச் சென்றுவிடக் கூடிய வாய்ப்பையிட்டு மிகவும் ஆழமாக யோசித்தான். அதை ஒரு போதும் நோனாச்சிக்கு கடைக்குச் சென்றதால் கிடைத்த சந்தோஷமாக அவள் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. மாறாக வீட்டுக்கு சாமான் கொண்டு வந்த போது செய்த அடிமடியாகவே அவள் எடுத்துக் கொள்வாள் என்பதை வெள்ளயன் நன்றாக அறிவான்.

மண்ணெண்ணெய் போத்தலைத் தூக்கியபடி கற்படிக்கட்டினூடாக கீழே இறங்கிய வெள்ளயன், அதன் அடிவாரத்தில் கீர்த்தியையும் அசோகவையும் கண்டான். அவன் பயந்து போனான். 'ரெண்டுபேரும் சேர்ந்து எனக்கு அடிப்பாங்களோ' என்று எண்ணினான்.

"நீ எங்கள காட்டிக் கொடுத்தாயென்ன" வெள்ளயனின் கையைப் பிடித்தபடி அசோக கேட்டான்.

கையைத் தட்டிவிட்டு திரும்பி ஓட எத்தனித்த வெள்ளயனுக்கு கீர்த்தி இடம் கொடுக்கவில்லை. அவன் வெள்ளயனின் அடுத்த கையைப் பற்றிக் கொண்டான்.

வெள்ளயன் கையில் வைத்திருந்த போத்தல் கீழே விழுந்தது. அசோக அதனையெடுத்து கல்லருகில் சேர்த்து வைத்தான். போத்தல் உடைந்து போகாததையிட்டு அவன் அடிமனதால் கடவுளுக்கு நன்றி தெரிவித்தான்.

"என்ன விடு கீர்த்தி..... நான் உன்னக் காட்டிக் கொடுக்கலயே..... சுஸிலின்.... சின்னவனின் பெயரை மட்டுந்தானே சொன்னன்"

வெள்ளயன் தாழ்மயான குரலில் சொன்னான்.

"நாம எல்லாரும் ஒன்றடா. ஒரே பஜாரிலிருக்கும் எங்களயும் நீ இப்படித் தான் நாளைக்கு காட்டிக் குடுப்பாய். தமிழன நம்பக் கூடாதென்று கடை மெனேஜர் சொல்ற கத உண்மதான். உன்னோட பழகி எங்கட பஜாரில வெச்சிருக்கிறதுக்கு எங்களுக்கு இப்படி நடந்தது போதாதுடா"

பொறுப்பு மிகுந்த குழுத் தலைவர் போன்று அசோக, பாரதூரமான வெளிப்பாட்டோடு சொன்னான்.

கீர்த்தி, வெள்ளயனின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். மெல்ல மெல்ல கையை முறுக்கி அவனது முதுகைக் கிள்ளத் தொடங்கினான்.

"அவனப் போகவிடு கீர்த்தி. கெட்ட கேட்டுக்கு அவன் சத்தம் போடத் தொடங்கினானென்றா... எங்களுக்கு ஆச்சியிடம் தப்பக் கிடைக்காது. நல்ல மாமாவும் சும்மா இருக்கமாட்டார். கைய விடு...ம்... அவனப் போக விடு"

அசோக கீர்த்திக்குச் சொன்னான்.

வெள்ளயனின் காதைத் திருகி விட்டுத் தான் கீர்த்தி அவனை விடுதலை செய்தான்.

போத்தலைக் கையிலெடுத்தபடி கொஞ்சத் தூரம் சென்ற வெள்ள யன் மீண்டும் திரும்பிநின்று....

"டேய் லெண்டியா....."

சத்தமிட்டுச் சொல்லி அவனுக்குக் கோபமூட்டிவிட்டுக் கடைப் பக்கமாக ஓடினான்.

மெலிந்த உடல் வாகுடைய கீர்த்தியை அப்பெயர் சொல்லி அழைத் தால் அவனுக்குத் தலைக்குமேல் கோபம் வரும். அப்பெயரில் வயதாளி ஒருவர் அந்தத்தோட்டத்தில் வாழ்ந்துவருகிறார்.

கோபத்திற்காளான கீர்த்தி கல்லொன்றைப் பொறுக்கி அவனை நோக்கி எறிந்தான். அது அவனுக்குப் படவில்லை.

"போட.... நீ கடைக்குப்போய் வருவாய்தானே. நான் உன்னப் பிடிச்சிக்கொள்றன்.... சளிமூக்கன்....."

"இது இங்க வாடா.... சாரை அடித்துப் பாவம் சுமக்காமல்....."

சம வயது மட்டத்திலிருந்தாலும்கூட கீர்த்தி, அசோகாவைவிட முழு மையாகவே வித்தியாசமானவன். அவன் விரைவாகக் கோபத்திற் குள்ளாகுவான். எவருக்கும் பயமற்ற அவன், யாராக இருந்தாலும் முகத் திற்கு நேரே எதையும் சொல்வதற்கு இரண்டு முறை சிந்திக்கமாட்டான். வாயாடிச் சிறுவனாக அறிமுகமாகியுள்ள அவனது பெற்றோர், தலவாக்கலை நகரிலிருந்து சற்றுத் தொலைவில் அமைந்துள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையமொன்றின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத் தில் வாழ்கின்றனர். தந்தையின் அம்மாவான நோனாச்சியின் வீட்டிலி ருந்தே அவன் பாடசாலைக்குச் சென்றான். அசோக அவனது மாமியின் மகன். இருவரும் மச்சான் முறையானவர்கள்.

நோனாச்சி தனது பேரன்மாரைக் கடைக்கனுப்புவதற்கு விரும்ப வில்லை. கொண்டுவரும் சாமான்களின் தரம் பற்றி கவலைப்படாதது மட்டுமன்றி, சாமான்களின் அளவைக் குறைத்து தமது தேவையை நிறை வேற்றிக் கொள்ள அல்லது கள்ளக்கடையப்பம் சாப்பிடுவதற்கு எவ்வள வாவது மிச்சம் பிடித்துக் கொள்ள, இந்த இருவரும் முனைப்பாகச் செயற் படுவதை நோனாச்சி அனுபவபூர்வமாகத் தெரிந்து வைத்திருந்தாள். வெள்ளயன் அல்லது சின்னவனுக்கு சிறு சந்தோஷம் கொடுத்து கடைக் கனுப்ப முயல்வது அதனால்தான். அதுமாத்திரமன்றி பாவனைப் பொருட் களை தெரிந்தெடுப்பதில் வெள்ளயனுக்கு நல்ல கைப்பழக்கமுண் டென்பதும் அவளது எண்ணம். நீர் சலனிக்கும் நல்ல தேங்காயைத் தெரி வதற்காக, கடைச் சேவகர்களின் ஏச்சுப் பேச்சைப் பொருட்படுத்தாமல் முழுத் தேங்காய்க் குவியலையுமே புரட்டிக் கொண்டு தேடுவான்.

தனது வீட்டிலும் கடையப்பம் செய்வதற்கான மிகச் சிறந்த 'மூலப் பொருட்களை' தெரிவு செய்யும் நல்ல அனுபவம் வெள்ளயனுக்குண்டு.

இதனால் வெள்ளயனைக் கடைக்கனுப்புவது, தான் செல்வதைவிட நன்மையானதென நோனாச்சி நினைத்தாள்.

தங்களது வீட்டுக்கு சாமான் கொண்டுவர வெள்ளயனை அனுப்பு வதையிட்டு கீர்த்தியின் மனதில் பொறாமை ஏற்படவில்லை. இருந்தும் அவன் எப்பொழுதுமே வெள்ளயனை துன்புறுத்தவோ அவமதிக்கவோ தயாராகவே இருந்தான். எவ்வளவு தான் துன்புறுத்தினாலும் அவமதித் தாலும் கீர்த்தியால் தவிர்க்க முடியாததொரு குழு நண்பன் தான் வெள்ளயன். ஏனைய குழு நண்பர்களுக்கும் வெள்ளயன் கண்டிப்பாகத் தேவையான நண்பனே. எந்தவொரு விடயமாக இருந்தாலும் சண்டையாகவிருந்தாலும் தயங்காமல் முன்னே பாய்கின்ற, சிலவேளை அதனால் நன்றாக வாங்கிக் கட்டிக் கொள்ளும் இனிய நண்பன் அவன்.

## 2

"இன்னும் லொறிவரவில்லயா சோமவீர?"

பீடியொன்றைப் பற்ற வைத்தபடி சிரிஸேன முதலாளி கேட்டார்.

லஜரொன்றில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த சோமவீர லிகிதர், தலையை உயர்த்திப் பார்த்தார்.

"இன்னும் இல்ல முதலாளி. இப்போ வர வேண்டிய நேரம்"

அவர் பதில் கொடுத்துவிட்டு தனது காரியத்தில் கண் வைத்தார்.

"ஆ... அது அங்கே வாராப்போல.... ஏன் இன்றக்கி இவன் சுணங்கினான்?"

தூரப் பார்த்தபடி நின்ற சிரிஸேன முதலாளி, கடையின் முன்னாலு ள்ள காணில் துப்பினார். ஓரளவுக்கு அவர் கோபத்தோடிருந்தார்.

"பாஸ்மார் சரியாக வேல செய்வதில்லயென்று ஏசிஏசித்தான் பேமய்ய லொறிக்கேறினான்"

அரிசிச் சாக்கைச் சுருட்டியபடி ஹரிஸ்சந்திர சொன்னான்.

"அவன் எப்பவும் அதத்தானே சொல்றான். எங்கட கராஜில திருத்தும் போது கைக்கு ஒன்றும் கிடைக்காதே. அதுதான் மூக்கால் அழுகிறான்"

சிரிஸேன முதலாளி சிரித்தபடி சொன்னார்.

வேகத்தைக் குறைத்துக் கொண்டு கடையருகே வந்து லொறி நின்றது. சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்த பேமய்ய லொறியிலிருந்து இறங்கி னான். உதவியாளர் ஜகத், பலகைக் குற்றித் துண்டொன்றை பின் டய ரோடு இறுக்கி வைத்தான்.

பேமையா கையில் பார்ஸலொன்றுடன் சிரிஸேன முதலாளியை நெருங்கினான்.

"ஏன் சுணக்கம் பிரேமதாஸ?"

சிரிஸேன முதலாளி பார்ஸலை எடுத்தபடி கேட்டார். எப்பொழுதும் முதலாளி கேட்கும் இக்கேள்விக்கு, பதிலாக ஏதாவது சொல்வது பேமய்யாவின் பழக்கம்.

"லொறிக்கு புதிய ரேஸர் போட்டாலும் சரியாகல்ல போலிருக்கு. இன்னும் பழய தொல்லயிருக்கு"

தலையைச் சொறிந்தபடி பேமய்யா சொல்லும்போது, கராஜுக்குள்ளிருந்து விஜேசிங்க பாஸும் அவர்களருகே வந்தான்.

"என்ன பேமய்யா..... என்ன நடந்திருக்கு?" அவன் கேட்டான்.

"வாங்க காட்டிறன்"

பேமய்யா, விஜேசிங்ஹ பாஸுடன் லொறி அருகே சென்று, பொனட்டை உயர்த்தி எதையோ காட்டி விபரித்தான். பின்னர் இருவரும் சிரிஸேன முதலாளியிடம் வந்தனர். விஜேசிங்ஹ பாஸ் விடுவிப்புக்கு காரணம் சொன்னார்.

"பழய ரேஸர் கொண்டுவந்து போட்டால் அப்படித்தான் ஐயா"

சிரிஸேன முதலாளி, விஜேசிங்ஹ பாஸை முறைத்துப் பார்த்தார்.

"என்னடாப்பா? பழய ரேஸர்? எப்படி பழசாகும்? நான் புதுசுதானே கொண்டு வந்தன். ம். புதிய பெட்டியல போட்டிருந்தாங்கள்"

ஏதோ வஞ்சகம் நடைபெற்றுள்ளதென்ற உணர்வு சிரிஸேன முதலாளியின் மனதுக்குள் புகுந்தது.

"பெட்டியில இருந்தது உண்மதான் முதலாளி. ஆனா பழய ரேஸர் தான். பின்ன நாடார் கடயால கொண்டுவந்த பழய ரேஸரென்றுதான் நான் நினைச்சன். அத எங்கிருந்து எடுத்தீங்க முதலாளி? தல வாக்கலயிலிருந்துதானே?"

களவுக் குற்றச்சாட்டு தன்மீது விழுந்துவிடுமென்ற சந்தேகம் விஜேசிங்ஹ பாஸுக்கு ஏற்பட்டது.

"இல்ல பேமதாஸ... நான் புதுசுதான் கொண்டுவந்தன். ஹட்டனில் வாங்கினன். பில்கூட காரில் இருக்கும். எனக்கு நல்ல நம்பிக்கை. நான் பெட்டியைத் திறந்து ரேஸரைக் கையிலெடுத்துப் பார்த்தன். புத்தம்

புதுசொன்று. அப்படீன்னா அதுக்கு என்ன நடந்தது? நன்றாக தேடிப் பாருங்க பாஸ் ஐயா. புதுசு இருக்க பழயத பூட்டிவிட்டீங்களோ தெரியாது. ஐயோ எனக்குத் தெரியாது உங்கட வேலகள்"

அப்படிச் சொன்ன சிரிஸேன முதலாளி பேமய்யாவைக் கூப்பிட்டார்.

"ம் போவம் பேமதாஸ. நேரம் போயிட்டுது. கொடகல ரத்னகார முதலாளி நான் வரும் வரயில பாத்திட்டிருப்பார்"

"முதலாளி லொறியிலயா போறீங்க. அதத் திருத்தாம போறது கஷ்டம்"

பேமய்யா சொன்னார்.

"கார எடுக்க வழியில்ல. விபுலபேபிக்கு ஏதோ பயணம் போகணுமாம். பரவாயில்ல மெல்லமெல்லப் போவம். என்ன டவுன் கடயில விட்டிட்டு நீ திரும்பி வா. வந்து லொறிய செய்துகொள். கடைக்கு தேவையான ஏதுமிருந்தா வரும்போது எடுத்துக் கொண்டு வா. நீயும் ரேஸரப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பார். அத எங்காவதொரு மூலயில போட்டிருப் பாங்கள்"

சிரிஸேன முதலாளி அப்படிச் சொன்னாலும் கூட அவர் மனதிலே சந்தேகமொன்று எழுந்திருந்தது.

'ரெண்டு பேச்சுக் கிடயாது. பாஸ் ரேஸர வித்திருக்கக்கூடும்'

அவன் நினைத்தான்.

'பாஸ் ஐயா ரேஸர மாற்றியிருக்கார். பழயதைப் போட்டுவிட்டு புதிச எடுத்திருப்பார் பிறகு விற்கிறதுக்கு' பேமய்யா நினைத்தான்.

❖❖❖❖❖❖

"சிரிஸேன முதலாளி புதிய லொறி கொண்டு வாராராம்"

பெடியள் கூட்டத் தலைவன் சுஸில் சொன்னான். அவன் பின்னால் சகபாடிகள் வந்து கொண்டிருந்தனர். இரண்டு மணி நேரத்திற்கு மேல் கீழ் கொத்மலை ஓயாவில் நீந்திக் குளித்து விளையாடி விட்டு வந்து கொண்டிருந்த பொடியன்களின் கைகளில ஈரமான உடுப்புக்கள் மாத்திரமன்றி, இன்னும் என்னென்னவோ இருந்தன. மீன்குஞ்சுகள் கொண்ட சிறிய பேணியொன்று கொதலாவலயின் கையிலிருந்தது. எல்லோருடைய கைகளிலும் கரும்புத் தண்டுகள் காணப்பட்டன. ஒருவகை நீர்த் தாவரக் கட்டொன்றை அதன் கருமை சார்ந்த வேரினால் தூக்கியபடி வந்த கீர்த்தி, சிறு கற்களைப் பொறுக்கி கீழ்ஓயாவை இலக்கு வைத்து வீசத் தொடங்கினான்.

ஆற்று வரப்பிலிருந்து கண்டெடுத்த வெற்று சேலைன் போத்த லொன்று தயாஸிரி வைத்திருந்தான். எட்டடி அளவு நீளமான மூங்கில் தண்டொன்றை சின்னவன் கழுத்தில் வைத்தபடி வந்தான்.

சுதந்திரமாக தன்பாட்டில் வந்து கொண்டிருந்த பெடியள் கூட்டம் சிரிஸேன முதலாளியின் கடையடியை நெருங்கிக் கொண்டிருந்தது. கடையைத் தாண்டி சிரிஸேன முதலாளியின் கராஜ் அருகால் செல்கையில் சற்று நின்றனர். அந்த கராஜுக்குள்ளேயிருந்து யாரோ மரணஓலம் எழுப்புவது அவர்களுக்குக் கேட்டது.

"கொல்லுவம் உன்ன. உண்மயச் சொல்லு நாயே. எங்க அத மறச்சி வெச்சிருக்காய் சொல்லு. இல்லாவிட்டா உன்னக் கொன்று தோல உரிப்பம்"

விஜேசிங்ஹ பாஸ், சில்லறைக் கடையிலும் கராஜிலும் கையுதவி செய்யும் பையனான குணதிலகவை பயமுறுத்தினான். சோமவீர லிகிதரும் அவனை எச்சரித்தபடி அடித்துக் கொண்டிருந்தார்.

பெடியள் குழுவினர் கராஜுக்கு வெளியே ஒரு மூலையில் நின்று, உள்ளே என்ன நடக்கிறதென்பதை அனுமானித்தபடி காது கொடுத் தனர். கராஜுக்குள்ளிருப்பவர்கள் இதுபற்றி அறிந்திருக்கவில்லை.

கராஜுக்குள் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருக்கும் கடைக் கையுதவியாளனான குணதிலக, பெடியள் கூட்டத்திற்கு நெருக்கமா னவன். இருந்தும் அவனுக்கு இந்த நண்பர்களோடு விளையாடவோ சுற்றித் திரியவோ அனுமதி கிடைப்பதில்லை. கடைக்கு வரும் இளவட் டத்தினரோடு அதிகம் கதைப்பதற்கு சோமவீர லிகிதர் உள்ளிட்ட ஏனையவர்களோ கராஜ் விஜேசிங்ஹ பாஸோ இடம் கொடுக்கவில்லை.

குணதிலகவுக்கு கடையிலுள்ள ஏனையவர்கள் துன்பம் தொல்லை கொடுப்பதை இளவட்டத்தினர் அறிந்து வைத்திருந்தனர். இந்த விப ரங்களைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது அவன் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளப் பழகியிருந்தான். இருந்தும் இந்நண்பர்கள் கடைக்கு சாமான் வேண்டவரும் போது, அடுத்தவர்களுக்குத் தெரியாமல் சீனி உருண்டை பத்தோ பதினைந்தோ, கொடுப்பதற்கு மேலதிகமாக எந்த ஒத்தாசையும் செய்ய வேண்டிய தேவை அவனுக்கிருக்கவில்லை. கடை லிகிதர் ஐயா உள்ளிட்ட சேவகர்கள் அவனைச் சந்தேகக் கண்ணோடு கவனித்தபோ தும், அதற்கு மேலாக அவன் எந்த வஞ்சமும் செய்யவில்லை. பொருட் களைக் களவெடுத்து சகபாடிகளுக்குக் கொடுக்க வில்லை. தாழ்மை யோடு தனது தொழிலைச் செய்தான். அதனால் அதிகம் பேர் அவனை விரும்பினர். இளம் பெடியளுக்கும் அவன் விருப்பத்திற்குரியவனானான்.

அதன் காரணமாக அவனது நண்பர்கள் குணதிலகவுக்கு என்ன நடக்கிறதென்று அறிய ஆவல் கொண்டனர்.

"குணதிலகவுக்கு லிகிதர் ஏன் அடிக்கிறாரோ தெரியல்ல?" வெள்ளயன் அருகே நின்ற தயாவிடம் கேட்டான்.

"தெரியாதடா. கடை லிகிதர் சின்ன விஷயத்துக்கும் அவனுக்கு அடிப்பார்" தயா பதில் சொன்னான்.

"இவன் வம்புத்தனமாகி.... இப்படி அடித்து வேலயில்ல. இவனக் கொன்று போடுவதுதான் சரி. ஒரு விதமான சந்தேகமுமில்ல இவன்தான் எடுத்திருப்பான். சும்மா சுத்தித் திரியிறவங்களுக்கு குடுத்து எவ்வளவாச்சும் எடுத்திருப்பான். உண்மயச் சொல்லுடா. அது ரெண்டு துட்டுச் சாமானல்ல. நூறு ரூவாக்கு மேல் பெறுமதி"

சோமவீர லிகிதர் ஐயாவின் அச்சுறுத்தல் கராஜ் அருகே நின்ற பெடியள் குழுவுக்கு நன்கு கேட்டது.

"கடவுளே என்ற அம்மா. என்னக் கொல்லப் வேணாம்"

கராஜுக்குள்ளிருந்து எழுந்த அந்த மரண ஓலம் இளவட்டத்தினரின் நெஞ்சிலே அதிர்வை மூட்டியது. அவர்கள் பயந்த முகத்தோடு பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

சற்று நேரத்தில் கராஜினுள்ளே நிசப்தம் நிலவியது.

"தண்ணி கொஞ்சம் தெளித்துப் பாருங்கோ"

"கெட்ட இடத்துக்குப் பட்டதோ தெரியல்ல"

"அவன் நடிக்கிறானோ?"

கராஜுக்குள்ளே தாழ்ந்த தொனியில் கதைப்பது பெடியளுக்குக் கேட்டது. திடீரென்று சோமவீர லிகிதர் கராஜின் பின்பக்கமாக வந்தார். மறைந்து நின்ற இளவட்டத்தைக் கண்டு அவருக்கு கோபம் வந்து விட்டது.

"டேய் இங்க என்னடா செய்றீங்க? ஓடுங்கடா....."

பெடியள் பயந்தபடி ஓடத் தொடங்கினர்.

## 3

ஹொலிறூட் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்சாலை, தலவாக்கல- பூதுறுஓயா பெரும் பாதை அருகே அமைந்துள்ளது. தொழிற்சாலைக்கு சற்று தொலைவில் பாலத்திற்கருகாமையிலிருந்து, கிறேட்

வெஸ்டேன் தோட்டம், கல்கந்த தோட்டம், ரத்னகிரி தோட்டம் ஆகிய வற்றோடு தெவ்சிரிபுர வீட்டுத் திட்டத்திற்கும் செல்லக் கூடிய பதினைந் தடி அகலமான பாதை ஆரம்பிக்கிறது. கொஞ்ச தூரம் மேலே போகும் வரை இந்த தோட்டப் பாதைக்கு தார் போட்டு செப்பனிடப்படவில்லை. முச்சந்தியிலிருந்தே தார் போடப்பட்டுள்ளது. வலப் பக்கமாக பிரதான பாதை தெளிவாகத் தெரியக் கூடிய முச்சந்தியிலிருந்து சுமார் எட்டடி அகலமான சிறிய பாதையொன்றுள்ளது. தேயிலைச் செடிகளுக்கு நடுவால் சொல்லக் கூடிய இச்சிறுபதை மேலும் இரண்டாகப் பிரிகிறது.

இந்தச் சந்தியில் விசாலமான இரண்டு ஆலமரங்களின் நிழலில் மாடசாமி கோவில் அமைந்துள்ளது. மாடசாமி கோவிலின் முன்னால் ஒரு சிறுபாதையும் பின்பக்கமாக இன்னொரு சிறுபாதையும் அமைந்துள்ளன. முன்பக்க சிறுபாதையினூடாகச் சென்று, தெவ்சிரிபுர வீட்டுத் திட்டப் பக்கமாக தலவாக்கல நகருக்கும், மீண்டும் ஹொலிறூட பக்கமாக கிறேட் வெஸ்டேன, கல்கந்த பகுதிக்கும் செல்ல முடியுமான தார் வீதியைச் சென்றடையலாம். மற்ற சிறுபாதை ஹொலிறூட் வீட்டுத் திட்டப் பக்கமாகச் செல்கிறது.

மாடசாமி கோவிலுக்கு சற்று தொலைவிலுள்ள சந்தியிலிருந்து தேயிலைச் செடி நிறைந்த மலையின் மேற்பகுதிக்கு செல்வதற்கான பாதை தாரிட்டு ஓரளவு நல்ல நிலையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. இப்பாதையினூடே மேலே பயணிக்கும் போது சுற்றிவர மலைச்சாரல் கள், ஹொலிறூட் தேயிலைத் தொழிற்சாலை, ஹொலிறூட் பட்டண வீடுகள், மேல் கொத்மலை ஓயா, தலவாக்கல நகரம், கொழும்பு- பதுளை புகையிரத வீதி இப்படி நிறைய விடயங்கள் கண்களைக் கவரும். ஹொலிறூட் நகர வீடுகளில் வாழும் பிள்ளைகள் விளையாடும் பச்சை மைதானம். பெரும் கிணறு போன்றவை கூட அழகாகக் காட்சியளித்தன.

பொதுவாக தோட்டப்புற பாதைகளில் விளையாடுவது தடை செய்யப்பட்டுள்ளதை எவரும் அறிவர். உத்தியோக பூர்வமான தடை இருந்தாலும் இல்லாவிட்டாலும் தோட்டப் பகுதியில் எப்பொழுதும் சுற்றிக் கொண்டிருக்கும் காவல்காரனின் கடமைப் பொறுப்பின்படி, தோட்டப் பாதைகளில் மட்டுமல்ல, தோட்டப் பகுதியில் எங்கேயாயினும் தோட்டத்துடன் சம்பந்தமற்றவர்கள் நடமாடுவது தடை செய்யப்பட்டுள் ளது. அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

தோட்ட நிர்வாகியான வெள்ளைக்காரரின் இந்தச் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்துவதில் காவலாளி பின்வாங்கவில்லை. அப்பொழுது ஹொலிறூட் தோட்ட காவலாளியாக ஆனிஸ் ஸிஞ்ஞோ கடமையாற்றி

னார். அவரும் வெள்ளைக்காரனின் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பின் நிற்காதவர். இளவட்டத்தினரின் கேலி கிண்டலுக்கு ஆளாகும் இந்த நடுத்தர மனிதன், மனதில் ஈரமற்றவரென்பது பெரும்பாலானோரின் கருத்தாகும்.

எவ்வாறாயினும் தோட்டத்திலோ, மயானத்திலோ, வேறு எங்கேயென்றாலும் தடை செய்யப்பட்ட இடத்தில், விளையாடுவதற்கு நகர வீட்டுத் திட்டப் பெடியளுக்கு பயம், அச்சம் எதுவும் காணப்படவில்லை.

தோட்டப் பகுதியில் வாழும் சிங்கள, தமிழ் இளம்பெடியள் அவ்வாறான கம்பீரத்தை வெளிப்படுத்தவில்லை. தோட்டத்துறை முழுவதும் தோட்ட நிர்வாகிகளான வெள்ளையரின் ஏகாதிபத்திய பரிபாலனம் அச்சொட்டாக நிலைநாட்டபடுவதும் அதற்கு இணையாக அகங்காரம் மிகுந்த அதிகாரிகளின் செயற்பாடும் பரவிக் கிடப்பதினால், இங்கு வதியும் தோட்டத் தொழிலாளர் மட்டுமல்ல, அவர்களது பிள்ளைகளும் கூட, தோட்ட அதிகாரிகளின் முன்னால் தலை தாழ்த்தி பயந்தாங் கொள்ளிகளாக வாழ்ந்து வருகின்றனர். இதனாலோ என்னவோ தோட்டப் பகுதியில் வதியும் சிங்கள இளசுகள் நகரசபை நிர்வாகத்திற்குட்பட்ட பெடியன்களோடு பழகுவதில்லை. அது மாத்திரமன்றி இந்திய தமிழ் தோட்டத் தொழிலாளர்களோடு ஒன்றாக வாழ்வதனால் தாங்கள் குறைவான மக்கள் குழு என்ற உணர்வோடுதான் எல்லா நிலைகளிலும் நடந்து கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖

சிறிய கருங்கற்கள் மட்டுமட்டாக மறையுமாப் போல் குறைவாகத் தாருற்றி ஒழுங்குபடுத்திய ஹொலிறூட் கிறேட் வெஸ்டேன் தோட்டப் பாதையில் மேலிருந்து வேகமாகப் பள்ளம் இறங்கியபடி சிறிய கரத்தை ஒன்று வந்தது. இளவட்டத்தினர் மிகுந்த ஆர்வத்தோடு அதனைப் பார்த்திருந்தனர்.

கரத்தையின் கலைத்துவத்தை வெளிப்படுத்தியபடி அதில் கொதலாவல அமர்ந்திருந்தான்.

கரத்தையைச் செலுத்தும் சுக்கானாக, முன்பின்னாக அசைக்கக் கூடிய வகையில் கரத்தையின் சட்டகத்தின் மத்தியில் இணைத்த ரீப்பையின் நுனியில் குறுக்காக திருகாணியொன்று பொருத்திய இரண்டடியளவு ரீப்பை காணப்பட்டது. அதன் இரு அந்தங்களிலும் ரேஸர் சக்கரம் பொருத்துமிடத்திற்கு அருகில் சக்திமிகு தும்புக் கயிறு முடிச்சிடப்பட்டிருந்தது. கரத்தையின் சுக்கானமாக அந்தக் கயிற்றை தேவைக்கேற்ப இழுப்பதன் மூலம் வண்டியைத் திருப்ப முடியும்.

கரத்தையைச் செலுத்தும் கொதலாவலையின் சந்தர்ப்பம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கீழ் வளைவில் கரத்தை இழுபட்டுச் செல்கையில், கரத்தையை மீண்டும் திருப்பும் விதமாகக் கயிற்றுப் பட்டை இழுத்துக் கொண்டிருந்தான் அவன். கரத்தை வந்த வேகம் காரணமாக, மீண்டும் திருப்பியபோதும் மேட்டுப் பக்கம் சென்றே நின்றது. இளவட்டத்தினருக்கு அற்புதமான இன்பானுபவத்தை வழங்கும் விளையாட்டு அது.

பலர் கரத்தையின் அருகே ஓடிச் சென்றனர்.

"நான் இன்னும் ஓட்டேல்ல. எனக்கு தாடாப்பா" உக்கும் கரத்தை யைக் கேட்டான்.

"அங்கால போ. நானும் இன்னும் ஓட்டேல்ல." வெள்ளயன் முன்னே பாய்ந்து கயிற்றுப் பட்டைப் பிடித்துக் கொண்டான்.

"எங்க எங்க..... இங்க கொண்டா. நானொரு ரவுண் அடித்திட்டு வாரன்..... அடுத்தது வெள்ளயன். அதன் பிறகு உக்குவா"

இளவட்டத் தலைவன் சுஸில் ஓடிவந்து கரத்தையைக் கையி லெடுத்தான்.

"சுஸில் நீ மூன்று தடவை ஓட்டிவிட்டாய். எங்களுக்கு ஒவ்வொரு தடவை"

கீர்த்தி தனது எதிர்ப்பைத் தெரிவித்தான்.

சுஸிலின் முகம் மாறிவிட்டது. தவறு செய்துவிட்டதை அந்த முகம் பிரதிபலித்தது. இருந்தும் குழுத்தலைவன் என்றவகையில் அடுத்தவர்க ளின் எண்ணத்திற்கு அடிபணிய விரும்பவில்லை.

"இங்க நான்தான் தலைவன். உங்களுக்கு இதயெல்லாம் சொல்லித் தந்து இங்க கூட்டிட்டு வந்தது நான்தானே?"

சுஸில் தனது சுட்டுவிரலை நெஞ்சுக்கு நீட்டிச் சொன்னான்.

ஏனையவர்கள் அமைதி காத்தபோதும் வெள்ளயன் விட்டுவிட வில்லை.

"இருந்தாலும் கரத்தைக்கு ரேஸர் சக்கரம் இரண்டு நான்தானே தந் தன். அதுவும் புத்தம் புதுசு"

அவன் கரத்தையின் பிரதான பங்காளியென்பதை மறைமுகமாகச் சொன்னான்.

"நான்தான் கரத்தய செய்தன். அதச் செய்யப் போய் மாமாவிடம் நல்லா பேச்சு வேண்டினன்."

கரத்தையை நிர்மாணித்த கொதலாவல தனது நிலை நாட்டினான். அவனது மாமாவான சிரிசேன வீட்டின் பின்பக்கம் தச்சுப் பட்டறை வைத்திருந்தார். பல சந்தர்ப்பங்களில் பெடியள் அங்கு சென்று அவருக்கு கையுதவி செய்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். இருந்தாலும் மற்றவர்களை விடத் தச்சு வேலையில் கொதலாவலைக்கு நல்ல அனுபவமிருந்தது.

“சரி சரி அதுக்கு இனி சண்ட பிடிக்கணுமா? சுஸில் ரவுன் அடித்திடடு வருவான். அப்புறம் நாங்க போவம்”

உபாலி சொன்னான்.

“ம்..... இனி நீ எப்பவும் சுஸிலின் பக்கந்தானே”

கீர்த்தி குற்றம் சுமத்தினான்.

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத சுஸில், வண்டியை செலுத்திக் கொண்டு பாதையின் உச்சிக்கே சென்றான்.

❖❖❖❖❖❖

தேயிலைத் தொழிற்சாலை அருகே நிறுத்தியிருந்த மொரிஸ் மைனர் ரகத்தைச் சேர்ந்த வேன் போன்றதொரு வாகனம் மெல்ல வந்து, பிரதான வீதியின் பாலத்தைத் தாண்டி, இடது பக்க மேல் பாதையில் முன்னோக்கிச் சென்றது. திருவானக் கல் பரப்பியிருந்த பகுதியைக் கடந்த தார் போட்டிருந்த முச்சந்தி அருகே அந்த மோட்டார் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது.

பெருந்தோட்ட நிர்வாகியான வெள்ளைக்கார சிம்ஸன் துரை வெளியிறங்கினார். ‘தோட்ட வெள்ளைக்காரன்’ என்று பொதுவாகச் சொல்லப்படும் அவரது காலொன்று ஊனமுற்றிருந்ததால் நொண்டி நொண்டி நடந்தார்.

தேயிலைப் பற்றை அருகே சென்ற அவர் தேயிலைப் பயிர்ச் செய்கையை அவதானிக்கத் தொடங்கினார். பெருந் தோட்டத்தையும் நகர சபை பரிபாலனப் பிரதேசத்தையும் வேறுபடுத்தும் கம்பி வேலியில் அவரது கவனம் குவிந்தது.

வெள்ளைக்காரன் நின்ற இடத்திற்கு நன்கு தெரியும் ஹொலிறூட் பெரிய கடை ஹோட்டலின் தேநீர் அலகுக்கருகே தோட்டக் காவலாளி ஆனிஸ் ஸிஞ்ஞோ நின்றான். ஃபோஎஸஸ் சிகரட்டொன்றைப் பற்றியபடி மிகுந்த உற்சாகத்தோடு காணப்பட்ட அவன், சோமவீர லிகிதருடன் பலதும் பத்தும் கதைப்பதில் வல்லவர்.

“ஆனிஸ் அண்ணா வெள்ளத்துரை மேல் பாதயில சுத்திறார்”

கடைச் சிப்பந்தி ஹரிஸ்சந்ர சத்தமிட்டான்.

ஆனிஸ் ஸிஞ்ஞோ கையிலிருந்த சிகரட்டை ஒருபக்கமாக எறிந்தான். அவன் பயத்துடன் மேல் தோட்டப் பக்கம் பார்த்தான்.

"எங்க எங்க சொல்லு தம்பி. எங்க போனார்? என்னத் தேடுறாரோ தெரியல்ல"

"காரால் இறங்கி மேல் பாதயால் போறதக் கண்டன்"

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஹரிஸ்சந்ர சொன்னான்.

"வெள்ளத்துரை வந்ததாச் சொன்னதும் ஆனிஸ் அண்ணனுக்கு சிகரட்டு வேண்டாமப் போயிட்டு"

சோமவீர லிகிதர் நையாண்டி செய்தார்.

"நீங்க சொல்லுவீங்க. நான் இங்க நடுங்கிறன். இங்கிருப்பதக் கண்டிருந்தா எனது தொழிலும் போய்விடும்"

அப்படிச் சொன்ன ஆனிஸ் ஸிஞ்ஞோ, தேயிலைப் பற்றைக்குள்ளால் புகுந்து மேல் பாதைப் பக்கம் போகத் தொடங்கினான்.

இரண்டொரு நிமிடத்தில் அவன் மேற்பாதைக்கிறங்கினான். மோட்டார் வண்டிக்கு மறைந்து பாதையருகால் மேலே சென்றான். தொப்பியைக் கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு வெள்ளைத்துரை அருகே சென்றான்.

"குட்மோனிங் ஸேர்"

வெள்ளைத்துரை திரும்பிப் பார்த்தார்.

பணிவை வெளிப்படுத்தி நிற்கும் ஆனிஸ் ஸிஞ்ஞோவை அவர் கண்டார். தவறொன்றைப் பிடிக்கும் எண்ணத்தோடு அவர் ஆனிஸ் ஸிஞ்ஞோவைக் கவனமாகப் பார்த்தார்.

"குட் ஆ.்.படர் நூன்.... என்ன உனக்கு காலை நேரம் போலவா தெரியுது? இல்ல..... லன்ச் இன்னும் எடுக்கலயா? பார்..... உன்ற சேர்டின் பொத்தானப் போடு"

"வெரி ஸொரி ஸேர்"

தலையைச் சொறிந்தபடி பின்னே திரும்பிய ஆனிஸ் ஸிஞ்ஞோ, சேர்ட் பொத்தான்களைப் போடத் தொடங்கினான்.

திடீரென்று கேட்ட ஏதோ சப்தத்திற்கு காது கொடுத்தபடி வெள்ளை துரை கதைத்தார்.

"வட்ஸ் திஸ் நொய்ஸ் ஆனிஸ்? என்னவோ சத்தம் கேக்குது"

வெள்ளைத்துரை பாதை மேற்பக்கம் கண்களைத் திருப்பினார். தேயி லைப் பற்றைக்கு மேலால் உயரேயிருந்து வேகமாக மனிதத் தலை யொன்று கீழ்நோக்கி வருவதைக் கண்டு அவர் வியப்பிற்குள்ளானார்.

"ஓ..... வட் எ ஹெல்....சம்பொடி ரைட்ஸ் எ ஸ்மோல் பைசிகல் ஓ ஸம் வன் வெஹிகல்?..... வட் ஈஸ் இட் ஆனிஸ்? என்ன அந்த வண்டி?"

"அந்தப் பக்கம் நகரசபை வீட்டுப் பெடியன்கள் சைக்கிள் விடுறாங் களாக்கும் ஸேர். எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டாங்க. இருங்கோ ஸேர் நன் போய் பிடிச்சிட்டு வாரன்"

தான் கடமை தவறிவிட்டதாக வெள்ளைத்துரை நினைப்பதாக உணர்ந்த ஆனிஸ் பயந்து போய் நின்றான். பெடியன்களைப் பற்றி அவன் மனதில் பெரும் கோபம் மூண்டிருந்தது.

"நோ..... நோ.... அப்படி நில்லு. வீ லுக்.... நாங்க பாப்பம். இந்தப் பெடியள் என்ன செய்றாங்க?"

வெள்ளைத் துரை தேயிலைப் பற்றைக்கிடையில் இறங்கி கானுக் கூடாக மெல்ல மெல்ல மேலே சென்றார். ஆனிஸ் பாதையின் மேல்பக்க தேயிலைப் பற்றைக்குள் புகுந்து மறுபக்கத்தால் மேலே சென்றான். பாதையோர தேயிலைப் பற்றை அருகே குனிந்து மறைந்து நின்ற வெள்ளைத்துரை, பாதைக்கு மறுபக்க தேயிலைப் பற்றைக்கிடையால் புகுந்து வரும் ஆனிஸைப் பார்த்தார். அவனுக்கு அமைதியாக நிற்குமாறு வெள்ளைத்துரை சமிக்ஞை செய்தார்.

❖❖❖❖❖❖❖

சுஸிலின் சந்தர்ப்பத்தை எடுத்து கரத்தையிள் கயிற்றைப் பிடித்துக் கொண்ட வெள்ளயன் பாதை நெடுக மேல்நோக்கி பயணித்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்தில் கரத்தை வரும் கரகரப்பான சத்தம் கேட்கத் தொடங்கியது. தேயிலைத் தோட்டத்தின் நடுவால் அவனது தலை மாத்திரம் கீழ்நோக்கி வருவது தெரிந்தது.

துரையும் ஆனிஸும் பாதையின் இரு பக்க தேயிலைப் பற்றைகளுக் குள் மறைந்திருந்த அந்தப் பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். சில விநாடிகளில் சரிவைத் தாண்டிய வெள்ளயன் சமதரைப் பகுதியை அடைந்து கரத்தையைத் திருப்பினான். அது மேல் பக்கமாக கொஞ்சத் தூரம் சென்று நின்றது. அவன் அதிலிருந்து இறங்குவதற்கு முன் நண்பர்

குழு அந்த இடத்திற்கு ஓடினர். அதற்கிடையில் ஆனிஸ் ஸிஞ்ஞோ முன் பாய்ந்தான். ஒரே எடுப்பில் வெள்ளயனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

பயந்து போன பெடியன்கள் ஓட்டமெடுத்தனர். வெள்ளயனும் ஆனிஸ் ஸிஞ்ஞோவிடமிருந்து தப்பிக் கொள்ள எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

துரை அந்த இடத்திற்குச் சென்றார். பாதை மத்தியில் நின்ற சிறுவண்டியைத் தூக்கி நன்றாகப் பரிசீலித்தார். இரண்டு அங்குல பலகைச் சட்டகத்தை மையமாகக் கொண்டு, இன்னொரு பலமான பலகைப் பட்டியடித்து, இரும்பு ரேஸர் சக்கரங்கள் பூட்டியிருந்த அந்த அழகிய கரத்தை மீது வெள்ளை துரையின் மனம் சென்றது. கரத்தயின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் குறுக்கு ரீப்பையின் ரேஸர் சக்கரங்களுக்கு அணித்தாக பழைய தோற் செருப்பின் அடிப்பாகம் இரண்டு அந்தத்தில் ஆணியடித்து பொருத்தப்பட்டிருந்தன. கரத்தயின் செயற்பாட்டைப் புரிந்து கொண்டாலும் கூட, செருப்பு அடி இரண்டினதும் இயக்கம் என்னவென்பது துரைக்கு விளங்கவில்லை. அது என்ன வென்று கேட்குமாப் போல் வெள்ளயனைப் பார்த்தார்.

வெள்ளயன் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான். அவனது முகம் சிவந்து போயிருப்பதைப் பார்த்து வெள்ளைத்துரைக்கு சிரிப்பு வந்தது. கூடவே அவர் மனதில் அனுதாபமும் ஏற்பட்டது. இது ஒரு சிங்களச் சிறுவனென்று அவர் நினைத்தார். அவர் சிரித்தபடி வெள்ளயனின் பயத்தை அகற்ற முனைந்தார்.

“ஆனிஸ் போய் பயம். நீ பயப்படாத உன்ன வீட்ட போக விடுறன். இது திஸ் ஓல்ட் சூஸ்? ஸே திஸ் வை?”

துரை கரத்தையின் செருப்பு அடிப்பாகம் இரண்டையும் காட்டிக் கேட்டார். வெள்ளயனின் மனதில் மூண்டிருந்த பயம் குறைந்து சென்றது. வெள்ளை துரையின் சிரிப்பை ஏற்றுக் கொண்டவனாக அவனும் வெட்கத்துடன் சிரித்தான்.

செருப்பு அடி இரண்டினதும் வேலை என்னவென்று வெள்ளைதுரை கேட்பது அவனுக்கு விளங்கியது.

“பிரேக்..... அத மிதித்தா கரத்த நிற்கும்”

அந்தச் செயற்பாட்டைக் கைகளாலும் காட்டியே வெள்ளயன் விளக்கமளித்தான்.

வெள்ளைதுரை புதுமையடைந்து செருப்பு இரண்டையம் பார்த்து பெரும் சத்தத்துடன் சிரித்தார்.

வெள்ளயனைப் பிடித்துக் கொண்டிருந்த ஆனிஸ் ஸிஞ்ஞோவும் வெள்ளைதுரையின் மனதைச் சந்தோஷப்படுத்தப் பொய்ச் சிரிப்புதிர்த்தான்.

கரத்தையைப் பாதை நடுவில் வைத்து அதன் மீதமர்ந்து வெள்ள துரை, கயிற்றைப் பிடித்தபடி சொற்ப தூரம் முன்னே சென்று பிரேக்கை அழுத்திப் பார்த்தார். அது நல்ல முறையில் வேலை செய்தது. அவர் கரத்தையில் அமர்ந்திருந்தபடியே சிரித்தார்.

வெள்ளயன் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். தோட்டச் சொந்தக்காரனான வெள்ளைதுரை, சிறு பிள்ளைபோல் சிரித்துக் கொண்டு, பலகைக் கரத்தையில் அமர்ந்து அதனைச் செலுத்துவது, அவனால் நம்ப முடியாத அபூர்வ காட்சியாகத் தெரிந்தது.

"வண்ட.்.புல் காட். வண்ட.்.புல். இருந்தாலும் நீங்கள் பாதையில விளயாடி இருக்கீங்க. ரோட் டெமேஜிற். இட்ஸ் டு பேட். அது பிழ. இந்த காட் யார் செய்தது? நீ தானா?"

வெள்ளதுரை கரத்தையைப் பாராட்டிவிட்டு, அதைச் செலுத்தியது பிழையென்று சொன்ன போது வெள்ளயனின் மனதிலே மீண்டும் பயம் ஏறிவிட்டது. வண்டியைச் செய்த கொதலாவலையின் பெயரைச் சொல்லி தான் தப்பிக் கொள்வது நல்லதென நினைத்தான்.

"கொதலாவலதான் செய்தான்"

"ஓஹ்..... கொடலாவல? தட் .்.பேவரிட் லீடர்? நீ இல்லயா இதை செய்தது? கொடலாவலயா செய்தான்? என்ன ஆனிஸ் இந்த போய் சொல்றான்?"

பிரதமர் பதவி வகித்த ஜோன் கொதலாவல பற்றி அறிந்திருந்த வெள்ளைதுரை கேட்டார்.

"இல்ல ஸேர்...... அந்தக் கொதலாவல இல்ல. இவன் பண்டையாவின் பெடியனப் பத்தி சொல்றான். அவனோடிருக்கிற கோபத்துக்கு சொல்றானாக்கும்."

கொதலாவலயின் தகப்பனின் நண்பன் என்பதால் ஆனிஸ் ஸிஞ்ஞோ அவ்வாறு சொன்னான்.

வெள்ளயனுக்கு அது விளங்கிவிட்டது. அதன்படி கரத்தையைச் செய்தது தானே என்பதை ஏற்றுக் கொள்ள அவன் முடிவு செய்தான்.

"நான்தான் வண்டிய செய்தன்"

"ஓ..... யூ? யுவர் .்.பாதர்..... உனது அப்பா யார்? என்ன செய்றார்?"

"இவன் தமிழன் ஸேர். இவனது பெரியவன் டவுணில லொறி டைவர். பெயர் கனகு" ஆனிஸ் பதில் சொன்னான்.

"தமிழ்..... டெமிழ்?..... வெரிகுட். நல்லா சிங்களம் கதக்கிறான்..... வெரி குட் ஸிங்ஹலீஸ் ஸ்பீக்கிங்.... உனது பெயரென்ன?"

"ராஜா"

வெள்ளயன் சொன்னான். தான் யாரென்பதை வெள்ளைதுரைக்கு காட்டிக் கொடுத்ததையிட்டு வெள்ளயனின் மனதில் ஆனிஸ் ஸிஞ்ஞோ மீது கோபமேற்பட்டது. வீட்டுக்குச் சென்றதும் அம்மாவிடம் நல்ல அடி கிடைக்குமென நினைத்தான்.

'இந்தக் கழுத எங்கிருந்தானோ தெரியாது. இவன் தேத்தண்ணிக் கடக்கி போறதக் கண்டுதான் நாம கரத்த ஓட்ட வந்தோம். இப்போ என்ன செய்வது? இவன்ற கையக் கடித்திட்டு ஓடினாலென்ன?' அவன் இப்படி நினைத்தாலும் கூட அதனைச் செயற்படுத்தப் பயந்தான்.

"இந்த காட்..... உனது வண்டிய நான் கொண்டு போறன். பங்களாவில வைக்கிறன். உனக்கு நான் சல்லி தாரன். டேக் திஸ்"

வெள்ளதுரை மூன்று மொழியில் கதைத்தவிட்டு ஐந்து ரூபா நோட்டு இரண்டை வெள்ளயனுக்கு நீட்டினான்.

நோட்டு இரண்டையும் கண்ட வெள்ளயனின் கண்கள் விரிந்தன. அவனது மனதில் ஒருவித பயமும் மேலிட்டது. அவன் அதனை எடுக்க வில்லை. துரை ஏதோ உபாயம் செய்து பொலீஸ"க்கு பிடித்துக் கொடுக் கப் போவதாக எண்ணினான்.

"ஸேருக்கு நான் நல்ல கரத்தயொன்று செய்து தாரன். இந்த உடை ந்த கரத்தைக்கு சல்லி எதற்கு? இத சும்மா எடுத்திட்டுப் போவம். அவன் தவறு செய்தது போதாதற்கு...... ஸேர் சல்லியும் குடுக்கிறீங்க? இவனைப் பிடித்து பொலீஸில் குடுப்பம் ஸேர்"

வெள்ளயனின் கையை இறுக்கமாகப் பிடித்துத் திருகிய ஆனிஸ் ஸிஞ்ஞோ சொன்னான்.

"பொலீஸ்? அது என்னத்துக்கு ஆனிஸ்? ஹீ ஈஸ் எ ஸ்மோல் செப்..... உனக்கும் இப்பிடி பிள்ளகள் இருக்கில்லயா?"

"இவனொரு தமிழன் ஸேர்....."

"உனக்கு வெட்கம் இல்லயா? இந்தப் பையன் நன்றா சிங்களம் ஸ்பீகிங். உன்ன விட நல்லா கதக்கிறாங்..... வட் ஈஸ் ஹி டிட்? இதென்ன பிழ? நீ குடித்திட்டு தூங்கிறாய்......அதென்ன மாட்டு விளையாட்டு?

கெம்ப்ளின்...... காட் விளையாட்றாய். கள்ளன் நல்லா களவு செய்றாய்..... ம்....இந்த சல்லிய எடுத்திட்டு நீ போ"

வெள்ளை துரையின் கதைப் பாங்கு வெள்ளயனுக்கு சிரிப்பை ஏற்படுத்தியது. குறிப்பாக சீட்டு விளையாடுவது பற்றிச் சொன்ன விதம் அவனது மனதைத் தொட்டது.

வெள்ளயன் இரு நோட்டுக்களையும் கையிலெடுத்தான். ஆனிஸ் ஸிஞ்ஞோ அவற்றை இழிவாசையுடன் பார்த்தான்.

'இந்த சல்லிய இவனிடமிருந்து பறித்தெடுக்க வழியில்லயே. துரை பார்த்துக் கொண்டிருக்கார். கருமம்தான். மாலயில சாராயம் கொஞ்சம் குடித்து சீட்டாட்டப் பக்கம் போய்வர இந்த ரெண்டுதாளும் மேலதிகம் தான்' மனதால் வெள்ளயனை சபித்துக் கொண்டு ஆனிஸ் ஸிஞ்ஞோ அப்படி நினைத்தான்.

"லெட் ஹிம் கோ ஆனிஸ். பையனப் போகவிடு"

வெள்ளைதுரை கட்டளையிட்டார்.

ஆனிஸ் ஸிஞ்ஞோ அந்தக் கட்டளையை விருப்பத்தோடு ஏற்கவில்லை.

வெள்ளயனின் மனதில் நிலவிய பயம் மெல்ல அகன்றது. அவன் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாகி துரைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, பாதை நெடுக கொஞ்ச தூரம் மெல்ல நடந்து சென்று, கோயில் அருகாமை சிறுபாதைக்குப் பாய்ந்து திரும்பிப் பார்க்காமல் ஓடத் தொடங்கினான்.

வெள்ளயன் ஓடும் விதத்தை மிகுந்த தேவையுடன் பார்த்துக் கொண்டிருந்த வெள்ளதுரை மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

நண்பர்களுக்கு இந்த நிகழ்வை விபரிக்கும் வரை வெள்ளயனுக்கு பொறுமையிருக்கவில்லை.

"ஆனிஸ் இந்த வண்டிய பங்களாவுக்கு கொண்டு போகணும். கொழுந்து லொறியில போட்டனுப்பு"

அப்படிச் சொன்ன துரை வாகனத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார்.

"ரைட் ஸேர்"

வாகனம் கிறேட் வெஸ்டேன் பாதையில் மேலே சென்று மறையும் வரை ஆனிஸ் ஸிஞ்ஞோ பார்த்தபடியிருந்தான்.

'ஒரு மாதிரி அதால தப்பிட்டன். மாடசாமி கோவிலுக்கு பின்னால தேயிலச்செடி ரெண்டுமூணு பிடுங்கிப் போட்டிருக்கு. வெள்ளதுர கண்டி

ருந்தா இந்த மாதச் சம்பளமும் இல்லாமப் போயிரும். நல்ல நேரம் கரத் தய கண்டிட்டார்.' ஆனிஸ் ஸிஞ்ஞோ அவ்வாறு நினைத்தபடி கயிற்றுப் பட்டால் பிடித்து கரத்தையை பாதை நெடுக இழுத்தபடி கடைப் பக்கமா கச் சென்றான்.

❖❖❖❖❖❖❖

நகர வீட்டு வரிசை அந்தத்திலுள்ள சிறுபாதையில் இளைஞர்கள் டிக்கோல் விளையாடிக் கொண்டிருந்தனர். ஐந்து, பத்துச் சதத்திற்கு பந்தயம் பிடிக்கும் இந்த விளையாட்டில் சிறிய ஆண் பிள்ளைகளும் சேர்ந்து கொள்வார்கள்.

கரத்தை செலுத்தப் போய் வெள்ளை துரையின் வரவால் பயந்து பாய்ந்தோடிய இளவட்டத்தினர், எதுவும் தெரியாதது போல் அந்த இடத்தில் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தனர். இடையிடையே கோயில் பக்கப் பாதையைப் பார்க்கத் தவறவில்லை.

"அ..... அங்க பார் வெள்ளயன் வாரான்"

கொதலாவல தயாவிடம் ரகசியமாகச் சொன்னான்.

வெள்ளயன் சுஸிலின் அருகே சென்றான்.

"சுஸில் கொஞ்சம் இங்க வா"

அவன் அழைத்த போதும் சுஸில் அதனைப் பொருட்படுத்தவில்லை. எதுவும் கேட்காதது போல் அவன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

வெள்ளயன் மீண்டும் அவனை அழைத்தான்.

"போடா வெள்ளயா போ. பெருந் தொகையொன்று தோத்துப் போயி ருக்கிறன். உனக்குத் தர என்னிடம் சல்லியில்ல. வென்றால் ஐந்த சத மென்றாலும் தாரன். கொஞ்சம் நில்லு"

வெள்ளயன் பந்தயம் பிடிக்க காசு கேட்க வந்துள்ளதாக எண்ணியே சுஸில் இப்படிச் சொன்னான். அவனது குரலில் சற்றே கோபமும் கலந்திருந்தது.

வெள்ளயனுக்கும் கோபம் வந்து விட்டது.

புதிய போட்டிக்கு ஆரம்பிக்கும் கட்டம்.

"நானும் வாரன்"

வெள்ளயன் போட்டிக்கு முன் வந்தான்.

"இங்க சல்லி தருவதாகச் சொல்லி விளையாட முடியாது. சல்லி போடு"

பல சுற்றுக்களிலும் வெற்றியீட்டியிருந்த கொதலாவல சட்டம் போட்டான்.

தன்னோடு ஒன்றாகப் பழகும் நண்பர்கள் இந்தவிதமாக வேறுபாடு காட்டுவது வெள்ளயன் மனதைப் புண்படுத்தியது.

அவனது மனதில் கோபம் மூண்டது.

"தருவன். இந்தா பிடி மீதியைத் தா"

வெள்ளயன் ஐந்து ரூபா நோட்டைக் கீழே போட்டான். எல்லோருமே வியப்படைந்து வெள்ளயன் பக்கம் பார்த்தனர்.

கொதலாவல குனிந்து அந்த நோட்டைப் பொறுக்கி எடுத்தான்.

"நான் இத கரத்தைக்குப் பதிலா எடுக்கிறன். உனக்குப் பத்துச் சதம் தாரன். நீ வண்டியோட்டும் போதுதான் ஆனிஸ் கரத்தையைப் பறித்தெடுத்தான்."

கொதலாவல கரத்தையின் நட்டத்தை அறவிட்டுக் கொண்டான்.

"அதெப்படி நீ மாத்திரம் சல்லி எடுப்பது? அசோகவும் நானும் ரேஸர் ரெண்டு போட்டோம். எங்களுக்கும் அதால் சல்லி தா"

கீர்த்தியும் உரிமைப் பங்கு சொல்லி பணம் கேட்டான்.

"நீங்க ஒருவருமல்ல. நான் தான் இங்க தலைவன். அந்த கரத்த செய்த விதத்தச் சொல்லித் தந்து வேலய ஆரம்பித்தவன் நான். எனக்கும் உரிம இருக்கு"

சுஸிலும் தனது பங்கைக் கேட்டான்.

"நீங்கள் எல்லாரும் சல்லி பங்கு போட சண்ட பிடிக்கிறீங்க. முதல்ல சல்லி வந்த வழியப் பாருங்கடா. அவன் அம்மாவிடமோ அப்பாவிடமோ களவெடுத்திட்டு வந்திருக்கானோ தெரியல்ல."

சரத் தனது சந்தேகத்தை வெளியிட்டான்.

சுஸிலை ஒரு பக்கமாக அழைத்துச் சென்ற வெள்ளயன், நிகழ்வை விபரித்தான்.

"இது சரியான செய்தியடா. நட்டமில்ல. நாலு ரேஸர் சக்கரத்திற்கும் செலவு கிடயாது. கொதலாவலயின் தச்சுப் பட்டறை பலகத் துண்டுகளும் ஆணி கொஞ்சமும்..... ரெண்டு ரூபாக்கு மேல் பெறுமதியில்லாத கரத்த. உண்மயச் சொல்லு வெள்ளயன் துரை உனக்கு எவ்வளவு தந்தார்?"

சுஸில் சந்தேகத்தை எழுப்பிக் கொண்டு கேட்டான்.

"அவ்வளவு தான்டா தந்தவர். நம்ப மாட்டியா?"

ஐந்து ரூபா நோட்டொன்றை இடையில் கோயில் கல்லொன்றுக்க டியில் மறைத்து வைப்பது புத்தியான நடவடிக்கையென வெள்ளய னுக்கு முன்கூட்டியே புலப்பட்டது. அவன் அவ்வாறு செய்துவிட்டுத்தான் இங்கே வந்துள்ளான்.

நண்பர்கள் சுற்றி நின்று அவனது சேர்ட், காற்சட்டை பொக்கற்றெ ல்லாம் சோதித்தனர். பின்னர் திருப்தியடைந்த எல்லோரும் புல்வெளி யின் கற்பரப்பை நோக்கிச் சென்றனர்.

சிறிது நேரத்தின் பின் வேக நடையில் தேநீர் கடைப்பக்கம் சென்றான் உக்குங்.

அதிக நேரமெடுக்கவில்லை. பெரிய கடதாசிப் பைநிறைய இனிய சிற்றுண்டிகள் சுமந்து கொண்டு அங்குமிங்கும் சந்தேகத்தோடு பார்த்தவனாக கற்பரப்பை நோக்கி நடந்தான்.

❖❖❖❖❖❖

கரத்தை ஒன்றைக் கழுத்தில் வைத்தபடி வந்த ஆனிஸ் ஸிஞ் ஞோவை எல்லோரும் மிகுந்த ஆர்வத்தோடு பார்க்கத் தொடங்கினர்.

"இன்னக்கி ஆனிஸுக்கு நல்ல வேட்ட கிடச்சிருக்கு"

தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த சிரிபால சொன்னான்.

"வேட்டதான். அடுத்தவங்க பாவத்த நான் சுமக்க வேண்டியிருக்கு"

கரத்தையை கடையருகே வைத்துவிட்டு ஆனிஸ் ஸிஞ்ஞோ சொன்னான்.

"அதென்ன?"

காசுக் கவுண்டரில் நின்ற சந்திரசேன கேட்டான்.

"பெடியன்கள் கரத்தை உருட்டும் போது வெள்ளதுரைக்கு பிடிபட்டு, அகப்பட்ட பெடியனுக்கு துரை சல்லி குடுத்திட்டு இத பங்களாவுக்கு அனுப் பச் சொன்னார். இத தோட்ட லொறியில போட்டு அனுப்புங்க. லொறி டவுனுக்குப் போயிருக்கு. அது திரும்ப தோட்டப் பக்கம் போனதா?"

"ஓம்..... டவுனிலிருந்து வந்து தோட்டப் பக்கம் போயிட்டு"

சிரிபால சொன்னான்.

"அப்பிடியென்னா இன்னம் கொஞ்ச நேரத்தில பரிப்புவாட கொழுந்து டெக்டர் வரும். அதில அனுப்பலாம். தம்பி சிரிபால எனக்கு தேத் தண்ணியொன்று போடு"

ஆனிஸ் ஸிஞ்ஞோ தேநீர் குடித்து சிகரட் துண்டொன்றை பற்றவைத்துக் கொண்டார்.

"அப்படீன்னா நான் போறன் சிரிபால. டெக்டர் வந்தா இதயும் போட்டுக் கொண்டு போகச் சொல்லுங்கொ. நான் போறன். வீட்டுப் பக்கம் போய் வரணும். லிகிதர் ஐயா என்ற தேநீர் கணக்க புத்தகத்தில போடுங்க"

ஆனிஸ் ஸிஞ்ஞோ கைத்தடியைச் சுழற்றியபடி நொண்டிப் பாங்கில் நடந்து சென்றார். விகடமான அவனது நடவடிக்கைகள் வாலிபர்களுக்கு எப்பொழுதும் சிரிப்பூட்டுவதாக இருக்கும்.

❖❖❖❖❖❖

சிரிஸேன முதலாளி வாகனத்திலிருந்து இறங்கி கடைக்கு வந்து கொண்டிருந்தார். தேநீர்க் கடைச் சுவருக்கு சேர்த்து வைத்திருந்த விளையாட்டுக் கரத்தையை சாடையாகக் கண்டார். சில்லறைக் கடைப் பக்கமாகப் போகும் போது உள்மனதில் ஏற்பட்ட ஏதோவொரு உணர்வின் காரணமாக மீண்டும் திரும்பி அந்தக் கரத்தையைப் பார்த் தார். 'யாராவது பெடியனொருவனின் கரத்தை' என்ற எண்ணம் மனதில் எழுந்து உடனடியாகவே இல்லாமல் போயிற்று.

"குணதிலக... ம்.... இந்தப் பெடியனப் பத்தி ஏதாவது தகவல் வந்ததா?"

சிரிஸேன முதலாளி சோமவீர லிகிதரிடம் கேட்டார். ஏதோ கற்பனையில் ஆழ்ந்து போயிருந்த அவர் திடுக்கிட்டார்.

"இல்ல...... இன்னுமில்ல முதலாளி எல்லா இடத்துக்கும் செய்தி குடுத்திட்டம்...... ம்....."

பயந்த தோற்றத்தில் அவர் பதில் சொன்னார்.

சிரிஸேன முதலாளிக்கு அந்தப் பதிலில் மாற்றம் எதுவும் தெரிய வில்லை. அவரது மனதிலே ஆயிரம் பிரச்சினைகள் குவிந்து கிடந்தன. அவர் யோசித்தபடி கராஜுக்குச் சென்றார்.

"ரேஸர் இருந்ததா?"

அவர் விஜேசிங்ஹ பாஸிடம் கேட்டார்.

மனதில் ஏதோ அமைதியற்ற தன்மை காணப்படுவதாக சிரிஸேன முதலாளிக்கு விளங்கியது. இருந்தும் அது ஏன் என்று விளங்கவில்லை.

லொறிக்கு அடியில் புகுந்து கொண்டிருந்த விஜேசிங்ஹ பாஸ் தலையை வெளியே நீட்டிப் பார்த்தார்.

"எல்லா இடமும் பாத்திட்டன் ஐயா. எங்குமே இல்ல. ஆனா பெட்டி

யிருக்கு. நான் பழய இரும்புக் குவியலயும் பார்த்தன். குணதிலக பெடியன் எடுத்திருப்பான் போல தெரியுது. அவனப் பத்தி லிகிதருக்கும் சந்தேகமிருக்கு. அதனாலதான் ஓடிப் போயிருப்பான்"

அவன் பதில் கூறினான். எதுவும் சொல்லாத சிரிஸேன முதலாளி, கொண்டு வந்த புதிய ரேஸரை லொறி அருகே வைத்தார்.

"ம்..... பரவாயில்ல. இந்தாங்க புதிசொன்னு கொண்டு வந்தன். இதப் போட முன் நல்லாப் பாருங்கொ"

லொறிக்கடியிலிருந்து வெளியே வந்த விஜேசிங்ஹ பாஸ் ரேஸரை நன்கு அவதானித்தான்.

"சரி..... இது புதிசு. இது சரி"

அந்த நேரத்தில் தேநீர்க் கடையருகே இருந்த கரத்தையைத் தூக்கியபடி டெக்டரை நோக்கிச் சென்றான் அதில் உதவியாளனாக இருக்கும் யோகா.

சிரிஸேன முதலாளியின் கண்கள் மீண்டுமொரு முறை கரத்தையில் குவிந்தது. ஒரேயடியாக அவருக்கு ஏதோ ஞாபகம் வந்தது.

"ம்..... அத இங்க கொஞ்சம் கொண்டுவா பாப்பம்"

அவர் சொன்னார்.

"இது கடைச் சாமனல்ல ஐயா. காவல்காரர் இதை வெள்ளத்துரை யின் பங்களாவுக்கு கொண்டு போகச் சொல்லி வைத்திட்டுப் போனாராம். அப்படி சிரிபால அண்ணாதான் சொன்னார்"

கடைக்குரிய சாமான் என்று நம்பி சிரிஸேன முதலாளி சந்தேகித்தார் என்று கருதியே யோகா அப்படிச் சொன்னார்.

"சரி சரியப்பா..... எனக்கந்த ரேஸரப் பார்க்கணும். கொஞ்சம் காட்டன்"

அவ்வாறு சொன்ன சிரிஸேன முதலாளி கரத்தையின் ரேஸர்களை நன்கு பரீட்சித்தார். மூக்குக் கண்ணாடியைப் போட்டும் பார்த்தார். பின்னர் கராஜ் பக்கமாகத் திரும்பி விஜேசிங்ஹ பாஸைப் பேசினார். அவன் உடனே ஓடிவந்தான்.

"இதப் பாரும். பின்பக்க ரேஸர். இது பழயது போலில்லயே. புதிசு போலிருக்கு"

விஜேசிங்ஹ அதில் படித்திருந்த சேற்றைத் துடைத்துவிட்டு நன்கு பார்த்தான்.

"உண்மதான் ஐயா. இது புத்தம் புதிய ரேஸர். இப்படி பெறுமதியான

ரேஸர யார் கரத்தக்குப் போடுறது? இப்போதே இதன் பின்பக்கம் நன்றா தேய்ந்து போயிருக்கு. இது நம்பரும் வடிவாயிருக்கு"

இதற்கிடையில் தேநீர் கடையிலும் சில்லறைக் கடையிலும் நின்றவர்கள் அங்கே குவிந்துவிட்டார்கள்.

"இது யாருடய கரத்தை?"

சிரிஸேன முதலாளி கேட்டார்.

"ஆனிஸ் ஸிஞ்ஞோ கொண்டு வந்தவர். தோட்டப் பாதயில பெடியன்கள் உருட்டும் போது வெள்ளதுரை பிடித்தவராம். கரத்தயில நின்ற பெடியனுக்கு சல்லி குடுத்து அனுப்பினாராம். இத பங்களாவுக்கு அனுப்பச் சொல்லி ஆனிஸ் ஸிஞ்ஞோவுக்கு கட்டளயிட்டாராம்"

சிரிபால சகல விபரங்களையும் சொன்னான்.

"அதுதான் துரைக்கு விஷயம் விளங்கியிருக்கு. இது புதிய ரேஸ ரென்று அவர் கண்டிருப்பார். அது தான் சல்லி குடுத்து கரத்தய வாங்கி யிருக்கார். ம்..... பரவாயில்ல..... அத எடுத்திட்டுப் போ"

தன்னால் கொண்டுவரப்பட்ட ரேஸரின் தலைவிதி என்னவென்று புரிந்து கொண்ட சிரிஸேன முதலாளி, அது எவ்வாறு நடைபெற்றதென்ப தைத் தேடிப் பார்க்கத் தீர்மானித்தார்.

## 4

"அங்க பார் வெள்ளயன் விடியக் காலமே தலயில வாழ இலக் கட்டோட வாரான். என்னவோ தெரியல"

தேநீர்க் கடைக்கு கடையப்ப வட்டில் இரண்டைச் சுமந்து கொண்டு சென்ற அசோக சொன்னான். கீர்த்தியும் சூடியும் கூட காலைச் சாப்பாட் டிற்கு பாண் கொண்டு வரக் கடைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

"என்னவாவது இருக்கும். இரவு முழுவதும் அவங்க வீட்டில் ஏதோ சத்தமாக இருந்தது. ஏதோ விஷேசம் போல"

கீர்த்தி சொன்னான்.

"இன்னக்கி நாம மேல் மைதானத்துக்குப் போறதாகக் கதைத் தோமில்லயா? இவன் வருவானோ தெரியல்ல"

அசோக விசாரித்தான்.

"அவன் வருவான்டா. அவன் மட்டுமில்ல அவன்ட தம்பி ஜெயக்குமா ரும் வருவான்"

சூடி சொன்னான்.

"வீட்டில கொண்டாட்டமென்டா பலகாரமெல்லாம் செய்திருப்பாங்களே"

பலகாரத் தட்டைக் கைமாற்றியபடி அசோக சிரித்துக் கொண்டு சொன்னான்.

மூவரும் தேநீர்க் கடைக்கு ஏறாமல், வெள்ளயன் வரும்வரையில் சற்று தாமதித்தனர். வெள்ளயன் அவர்களருகே வந்தான்.

"என்னடாப்பா இன்னடக்கி உங்கட வீட்டில? உங்கட ஆச்சியின்ற கலியாணமா?"

கீர்த்தி பகிடியாகக் கேட்டான்.

வாழை இலைக் கட்டை தேயிலைப் பற்றை மேல் வைத்த வெள்ள யன், கீழே அவிழ்த்து விழும் காற்சட்டையை உயர்த்திக் கொண்டான். அவனது முகம் கோபத்தால் சிவந்திருந்தது. அவன் பதில் கொடுக்க முயலவில்லை.

"இன்னக்கி எங்களுக்கு வடை, முறுக்கெல்லாம் தின்னலாம் போலிருக்கு"

சூடி சொன்னான்.

"கல்கந்த பெரியப்பாட மகளுக்கு கலியாணம். கோயில்லதான் நடக்கிது. இனி எங்க வீட்டில தான் சாப்பாடெல்லாம் செய்றது. பெரிய கரச்சல்டா. அவங்க வேலக்கிப் போயி நாங்க பேச்சு வேண்டணும்"

வெள்ளயன் இடுப்பிலடித்துக் கொண்டிருந்த கத்தியால் பக்கத்தி லிருந்த மரத்திற்கு குத்தினான்.

"உனக்கு யார் ஏசினது சொல்லு"

அசோக கேட்டான்.

வெள்ளயனுக்கு சிரிப்பு வந்தது.

"வாழ இல வெட்டிக் கொள்ளவான்னு நான் தர்மையா வீட்டில கேட் டன். இல வெட்டினா குல மோசமாகுமாம். ஒவ்வொரு நாளும் இலவெட்டி வாழ மரமெல்லாம் நாசமென்று அந்தப் பொம்புள சத்தம் போட்டா"

"ஏன்றா தர்மையா நிக்கலியா?"

"நின்றவர். இரவு வேல முடிஞ்சி வந்து மீச வழிக்கிறார். அவர் ஒன்னும் சொல்லல. நான் வந்திட்டன்."

"இனி இத எங்கதான் வெட்டினாய்?"

கீர்த்தி கேட்டான்.

"பரியாரியின் தோட்டத்தில வெட்டினன். இருந்து பார். நல்ல வேல செய்றன் அந்தப் பொம்புளக்கி"

வெள்ளயன் வாழை இலைக்கட்டை தலையில் வைத்தபடி சொன்னான்.

"இந்த கடயப்பத்த யாருக்கு விக்கிறதுக்கு இங்க வெச்சிட்டிருக் கிறீங்கள்? கடைக்கு கொண்டு வாரதில்லயா?"

தேநீர்க்கடை சிரிபாலவின் கத்தலுக்கு நண்பர் சங்கமம் முற்றுப் பெற்றது. அசோகவும் கீர்த்தியும் கடைக்கு ஓடிச் சென்றனர்.

கடையினுள்ளே தோட்டத்தில் வேலை செய்யும் பலரும் தேநீர் பருகியபடியிருந்தனர்.

அழுக்கடைந்த ஆடைகளோடு சிறு ஆண் பிள்ளைகள் இரண்டு மூன்று பேர் கூட, சாமான் வாங்குவதற்காக வந்திருந்தனர்.

"அப்பம் நாப்பது. இடியப்பம் தொண்ணூற்றைந்து"

கடைச் சேகவனான கபில கடையப்பங்களை எண்ணிச் சொன்னான்.

"இடியப்பம் நூறு கொண்டு வந்தன்"

அசோக, சேவகனை முறைத்துப் பார்த்துச் சொன்னான்.

"நான் சரியாக எண்ணினன். ஐந்தைந்தாக பத்தொன்பதிருக்கு"

சேவகன் ஐந்து கொண்ட இடியப்ப அடுக்கை எடுத்துக் காட்டி தனது கணித வல்லமையை வலியுறுத்தினான்.

"நான் ஐந்து இடியப்பம் எடுத்தன். அதோட சேர்த்து நூறு சரி"

தொங்கல் மேசைக்கு உணவு பகிர்ந்து கொண்டிருந்த சிரிபால கூறினான்.

"அதுதான் பாருங்க. அவன் அளவுக்கதிகம். கன்னம் வெடிக்க அடிக்கணும் அவனுக்கு"

கீர்த்தி பற்களைக் கடித்தபடி கூறினான்.

அது சேவகனுக்கு கேட்டது. அவன் கீர்த்தியை முறைத்தான்.

"என்ன முறைக்கிறாய்?"

கீர்த்தி கேட்டான்.

"ஏய் பெடியா உனக்கென்ன நடந்திருக்கு? கடை வேல செய்றத

விட்டிட்டு ஆக்கள என்னத்துக்கு தொந்தரவு செய்யப் போறாய்? பன்சாலயில கையுதவி செய்தவங்கள இங்க கொண்டு வந்து போட்டா எங்களுக்குத் தான் தொல்ல"

அவ்வாறு சொன்ன லிகிதர் ஐயா அசோகவின் பக்கம் பார்த்து தனது கோபத்தைத் திசை திருப்பினார்.

"கடைக்கு வந்தால் வந்த காரியத்தப் பார்த்துக் கொண்டு போகாம விடியக் காலமே எங்க வாயக் கொழப்புறீங்க...ம்.... இனிப் போங்க போங்க"

"வேலக்காரர சரியா நடத்துங்க. எங்க மேல பாயாதீங்க"

யாராக இருந்தாலும் முகத்துக்கு நேரே சொல்லும் கீர்த்தியின் கதை கேட்டு லிகிதர் ஐயாவுக்கு சிரிப்பு வந்தது. தேநீர் குடித்துக் கொண்டிருந்தவர்களுக்கும் அவனது கதை விநோதமாக அமைந்தது.

பெடியள் மூவரும் கடையிலிருந்து வெளியிறங்கினர்.

❖❖❖❖❖❖

"அந்தப் பெடியனின் வாய்தான் வாய். யாருக்கும் முகத்துக்குச் சொல்லுவான். பயமேயில்ல"

புஞ்சிரால தேநீர்க் கோப்பையின் இறுதி மிடறைக் குடிக்குமுன் மெல்லிய தொனியில் சொன்னார்.

"அது பொடிஹாமியின் இளய பெடியன். யாருக்கும் பயப்பட மாட்டான்"

"பொடி அப்புஹாமி....... டீஆர்ஜயில் மெகானிக் வேல செய்றவரா?"

புஞ்சிரால கேட்டான்.

"ஓம் ஓம்.... நோனாஹாமி மாமி வீட்டில்தான் அந்தப் பெடியன் நிக்கிறான்"

கிரிபண்டா பாஸ் சொன்னான்.

"நோனாஹாமி மாமியினதும் வாய் நல்லதில்லதானே? பெடியனும் அப்பிடி"

சிகரட் பற்றவைத்தபடி ராமையாவும் அந்த உரையாடலில் பங்கு கொண்டான்.

❖❖❖❖❖❖

பொன்னிறச் சூரியக் கதிர்களுக்கூடாக தொலைவானில் சிறகடிக்கும் காகங்களைக் கணக்கிட்டபடி முற்றத்தில் வீற்றிருந்தான் வெள்ளயன்.

"டேட வெள்ளயா வா வா. ஆக்களெல்லாம் ரெடி"

வேலிக்கருகே வந்த கொதலாவல மெல்ல அழைத்தான்.

அங்குமிங்கும் பார்த்த வெள்ளயன் வீட்டினுள்ளே நோட்டம் விட்டான். யாரும் தெரிய இருக்கவில்லை. அவன் சத்தமில்லாமல் படிக்கட்டி னூடாக இறங்கி சிறிய பாதைக்குச் சென்றான்.

தேயிலை பற்றைக்கிடையிலான சிறுபாதைக் கூடாக சிறிது தூரம் சென்று வளைவில் திரும்பியதும் நண்பர்கள் குழு நிற்பதை வெள்ளயன் கண்டான்.

"எனக்குப் பயமாயிருக்கடா. இதை நாங்கள் கைவிட்டு விடுவோம்"

நண்பர்களுக்குள் சென்று வெள்ளயன் சொன்னான்.

"நீ என்னப் பைத்தியமாக்காதே வெள்ளயன். உனக்காகத்தான் நாங்க இந்த வேலயச் செய்றம். எங்களுக்கொரு பயனுமில்ல. இங்கபார். அசோகவும் வந்திட்டான். தர்மையா அவன்ற உறவினர். நீயும் சரியா தோட்டத்து ஆக்கள் போல பயப்படாதடா. பிடிபட்டால் எல்லோருந்தான்"

சுஸில் சொன்னான்.

"போங்கடா. நீங்கெல்லாம் பயந்தோடுவீங்க. கடைசியா நான்தான் பிடிபடுவன். அம்மாவிடமும் நன்றாக அடிவேண்டுவன். உங்களுக் கென்ன? நான்தான் குற்றவாளியாகுவன்"

வெள்ளயனின் பின்வாங்கலால் நண்பர் வட்டம் கோபத்துக்குள்ளாகியது.

"சரி, அப்படீன்னா நீ வீட்டுக்குப் போ. நாம இதச் செய்வம். ஆனா ஒன்று சொல்றன். கடைசியில எனக்கும் தாடாப்பா என்று கேட்டுக் கொண்டு வராதே. வந்தால் காலால அடிச்சுத்தான் விரட்டுவம்"

தேயிலைப் பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த சாக்குப்பையை எடுத்தபடி சரத் சொன்னான்.

இளவட்டத்தினர் குறும் பாதை நெடுகப் பயணித்தனர். சற்று நேரம் தரித்து நின்று யோசித்த வெள்ளயன் ஒரேயடியாக அவர்களோடு சேர்ந்து கொள்ள ஓடத் தொடங்கினான்.

"அப்படி நில்லுங்கடா நானும் வாரன்"

எட்டுப் பேர் கொண்ட பெடியள் குழு, சிறுவழியின் எல்லையிலுள்ள கற்படிக்கட்டால் கீழ் புகைவண்டிப் பாதைக்கிறங்கினர்.

ஹொலிறூட் பெருந்தோட்டத்தில் வாழ்பவர்களும் வடகொட, தலவாக்கல பக்கமாகப் போய்வரும் நகரசபைப் பிரதேசத்தில் உள்ளோரும் ரயில் பாதையில் போக்குவரத்துச் செய்வது சர்வசாதார ணம். ரயில் பாதைக்கு சமாந்தரமாக கீழே பெருந்தெரு காணப்பட்ட

போதும், புகையிரதப் பாதையால் பயணிப்பதால் நேரத்தை மிச்சம் பிடித்துக் கொள்ளலாம். அது மாத்திரமன்றி வளைவுகள் கொண்ட பெருந்தெரு ரயில் பாதையைவிட தூரமானதும் கூட.

இதனால் தலவாக்கல- பூடுலுஓயா பெரும்பாதை அதிகம் பயன்படுவது வாகனப் போக்குவரத்துக்குத் தான். தலவாக்கல நகரிலிருந்து வடகொட நகரம் புகையிரத வழியாக ஆறு கிலோமீற்றர் தூரத்தையே கொண்டது. பெருந்தெரு வழியாக சுமார் எட்டு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டது. தலவாக்கல நகரிலிருந்து புகையிரதப் பாதையை விட அந்தப் பெருந்தெருவும் கூட தூரம் அதிகம்தான்.

தினசரி கடமையை முடித்து வீட்டுக்குத் திரும்பும் மூத்தவர்களின் கேள்விக் கணைகளிலிருந்து தப்பிச் செல்வது இளவட்டத்தினருக்குள்ள அடுத்த சவாலாகும். எல்லா நண்பர்களும் ஒன்றாகச் சேர்ந்திருப்பது கூட மூத்தவர்களின் கவனத்தை ஈர்க்கும் விடயமாகுமென, இளவட்டத் தலைவன் குழுவுக்கு எடுத்துச் சொன்னான்.

படிக்கட்டருகிலிருந்து தலவாக்கல பக்கமாக ரயில் பாதை நெடுக கொஞ்சத் தூரம் போகும் போது, இடப் பக்கமாகக் கீழே செல்லும் சிறுபாதையின் அந்தத்தில் பீலியொன்று காணப்படுகிறது. அதனால் குளிக்கச் செல்வதாக கேட்பவரிடம் சொல்ல பதிலைத் தயார் செய்து கொண்டு, வெவ்வேறாக இடைவெளிவிட்டு ஒருவர் பின் ஒருவராக புகைவண்டிப் பாதை நெடுக நடக்கத் தொடங்கினர்.

முதன் முதலில் நகரசபை நீர்க் குழாய் திருத்துநரான எல்மட் மாமாதான் எதிர்பட்டார். அமைதியான மனிதரான அவர் இளசுகளை உன்னிப்பாகப் பார்க்கவோ கேள்வி எழுப்பவோ இல்லை.

அடுத்ததாக சந்தித்தவர் அச்சுக் கந்தோர் குணபால மாமா. எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்படும் அவர் எந்தச் சிறுபிள்ளைகளுக்கும் ஒன்று போல் அன்பு காட்டுபவர். இளவட்ட அங்கத்தவரான உபாலியின் தந்தை.

“பிள்ளையள் எங்க போறீங்க? ம் குளிக்கவா போறீங்க?”

மெல்ல மெல்ல நடந்தபடியே கேட்டார். உபாலி தந்தையின் பார்வையில் அகப்படாமல் பின்வாங்கியபடி நின்றான்.

“ஓம் மாமா”

சுஸில் சுருக்கமாகப் பதில் சொன்னான்.

குணபால மாமாவைப் பின்தொடர்ந்து சிறிது தூரம் சென்ற குழுவினர்,

பீலிப் பக்கமாக அமைந்த சிறுபாதைக்கு இறங்கினர். மீண்டும் சிறுபாதை வளைவில் எல்லோரும் ஒன்று கூடினர்.

"ஜோர்ஜ் மாமா பீலியில் குளிக்கிறார். அவர் போகும்வர நிற்பமா?"

சுற்றுவட்டாரத்தை உளவு பார்த்துக் கொண்டிருந்த சின்னவன் கேட்டான்.

"இல்லயில்ல. நாங்கள் குளிக்கப் போவது போல போவம். அவருக்கு எங்களப் பத்தி சந்தேகமில்ல. ஆனா அதல்ல பிரச்சின. குணபால மாமா இப்ப குளிக்க வருவாரே"

சுஸில் உபாலியின் பக்கமாகப் பார்த்தபடி கேட்டான்.

"அப்பா காலயில குளிச்சிட்டார். இப்ப வரமாட்டார்"

உபாலி நண்பர்களின் ஐயத்தை அகற்றினான்.

"அப்படியென்னா சரி. ஜோர்ஜ் மாமா போனதும் எங்கட வேலயில இறங்குவம்"

நிலையற்ற மனநிலையிலிருந்து வெள்ளயன் சொன்னான்.

"அப்படியும் ஏலாதடா. இன்னும் கொஞ்சம் இருட்டாகுமட்டும் இருப்பம். நீ கொஞ்சம் மேலே போய் யாராவது வாராங்களான்னு பார். தர்மே அண்ணன் வடகொட பக்கமாக ரயில் வழியாக எண்ணெய் அடித்துச் செல்றத கீர்த்தி கண்டானாம்"

"அவர் இப்போதே திரும்பி வரமாட்டாரடா. வடகொடைக்கு போகவே ஒரு மணித்தியாலம் செல்லும். கொதலாவல நீ படிக்கட்டுக்கு மேலே போய் எங்களுக்கு தெரிய நில். எங்கள் வீட்டுப் பக்கமிருந்து யாராவது குளிக்க வாறாங்களான்னு பார். சரத்...... சுனில்......தயா....... நீங்க மூவரும் தேயிலப் பற்றைக்குள்ளால புகுந்து போங்கோ. கானுக்குள் ஒவ்வொரு இடமாக நின்று, நாங்கள் தாரத மலை உச்சிக்கே கொண்டு போங்க"

சுஸில் தன் பரிவாரங்களுக்கு கட்டளை பிறப்பித்தான்.

"ஏய் எல்லாரும் மறையுங்கடா. ஜோர்ஜ் மாமா வாறார்"

பீலிப் பக்கமிருந்து ஓடிவந்த சூடி சொன்னான்.

"வேணாம்..... நாங்க குளிக்க வந்தது போல கீழே இறங்குவம்" அவ்வாறு சொன்னபடி சுஸில் கீழே இறங்கத் தொடங்கினான்.

குளித்துவிட்டு வந்த ஜோர்ஜ் மாமா சிறுவர்களோடு சிரித்தபடி, "இந்த நேரம்கெட்ட நேரத்த விட்டா உங்களுக்கு குளிக்க வேற நேரமே இல்லயா?" என்று கேட்டபடி புகையிரதப் பாதைக்கேறினார்.

"ஜோர்ஜ் மாமா போயிட்டார். இனி நாங்க எங்கட வேலயச் செய் வம்....ம்.... போவம்"

சுஸில் சொன்னான். பெடியள் உடனடியாகச் செயலில் இறங்கினர். தேயிலைப் பற்றைகளுக்கிடையே இரண்டடி ஆழத்திற்கு, நிலைக்குத் தாக வெட்டப்பட்டுள்ள காணில் மூவர் இறங்கினர்.

தேயிலை பயிரடப்பட்டுள்ள மேல் மலையைச் சுற்றி மண் பாது காப்புக்காக ஆழமான காண் வெட்டப்பட்டுள்ளது. கழுவப்படும் மண் காணில் சேரக் கூடியதாகவும் நீர் மாத்திரம் வெளிச் செல்லத்தக்கதாக வும் அவை அமைந்துள்ளன. நீர்ப் பீலிக்கு அருகிலிருந்து மேலேயுள்ள காணில் இறங்கி அதன் நடுவால் எவருக்கும் தெரியாமல் மலையுச்சிக் கும், அதற்குக் கீழுள்ள புற்பரப்புக்கும், நகரசபை வீட்டுக்கு முன்பான குறும்பாதைக்கும் போக முடியும்.

இந்தக் காண்களை வெட்டிய தொழிலாளர்களை விட, நகரசபை வீட்டுத் தொடர் சிறுவர்கள் இந்தக் காண்களுக்கூடாக புகுந்து செல்வதில் மிகுந்த திறமை கொண்டிருந்தனர். பெரியவர்களுக்கு அகப்படாமல் புகைக்கப் பழகும் இளசுகள் தங்களது பால பாடத்தை இந்த காண்களுக்கூடாக புகுந்து சென்று மலையுச்சியில் மறைந்தே மேற்கொள்கின்றனர்.

சுனில், பீலிக்கருகிலிருந்து புகைவண்டிப் பாதை வரை விசாலமான பகுதியில் காணப்படும் வளமான வாழைப் பற்றைக்குள் புகுந்து சென்றான்.

"இதோ பார் வெள்ளயன். உனக்காக இந்த வேலய ஆரம்பிக்கிறம்"

வாழைப் பற்றைக்குள் புகுந்த சுஸில் பின்னால் வரும் வெள்ளயனுக் குச் சொன்னான்.

❖❖❖❖❖❖

"மண்ணெண்ணெய் கால் போத்தலும் நல்ல சிரட்டைக்கரி ஒரு ராத்தலும் தாங்க ஆச்சாரியாருக்கு"

வெள்ளயன் சில்லறைக் காசாக மேசை மேற் கண்ணாடியில் வைத்துக் கேட்டான்.

"டேய் தம்பி சிரட்டக்கரி ஒருராத்தல் நிறுத்துக் குடு. மண்ணெண் ணெய் காபோத்தலும் குடு"

சோமவீர லிகிதர் கடைச் சேவகனுக்குக் கட்டளையிட்டார்.

கடைப் பையன் ஹரிஸ்சந்ர, ஏதோ ஞாபகம் வந்தவனாக வெள்ள யன் பக்கம் பார்த்தான்.

"நீதானே வெள்ளயன்?"

அவன் கேட்டான்.

"ஓம்"

லிகிதர் அண்ணன் ஒரேயடியாகக் குழம்பிவிட்ட பாங்கை வெளிப் படுத்தினார்.

"ஹ்ம்..... வெள்ளயன் எங்கிறது இவன்தானா? உன்ன நான் பார்க்கவர இருந்தன். நீயே வந்தது நல்லது. உன்னிட்ட ஒரு செய்தியறிய வேண்டி யிருக்கு. இங்கவா"

அடுத்துள்ள தேநீர்க் கடைக்கு வெள்ளயனை அழைத்துச் சென்ற லிகிதர் ஐயா கடைசி மேசையருகே அமர்ந்தார்.

"சாப்பிட ஏதாவது கொண்டு வா"

அவர் இனிப்புப் பண்டங்களுக்கு ஏற்பாடு செய்தார்.

வெள்ளயனுக்கு எதுவுமே புரியவில்லை. மனதில் ஒரு பயம் ஏற்பட்ட போதும் மேசைமீது காணப்பட்ட பலகாரத் தட்டைக் கண்டதும் ஒரு மகிழ்ச்சியும் ஏற்படாமலில்லை. அவற்றின் மணமே சுவையுணர்வை முன்னறிவித்தது.

"சாப்பிடு தம்பி. விருப்பமானதை சாப்பிடு. சாப்பிட்டிட்டு எனக்கொரு உதவி செய்"

சோமவீர லிகிதர் அப்படிச் சொன்னாலும் கூட, 'இவன் எனக்கு பெரிய பில் வைப்பானோ'- என்ற எண்ணமே நிலவியது.

வெள்ளயன் கல்பணிஸ் ஒன்றை எடுத்து சாப்பிடத் தொடங்கினான். அதை விழுங்கித் தள்ள அவனுக்கு அதிக நேரமெடுக்கவில்லை.

அவனது கை அடுத்து கரும் தொதலை நோக்கி நீண்டது. அதைக் கையிலெடுத்துக் கொண்டு லிகிதர் ஐயாவைப் பார்த்தான். அவர் வெளியே பார்த்தபடியிருந்தார்.

"எனக்கு ஃபோரேஸஸ் சிகரட்டொன்று கொண்டு வா தம்பி. இத கடை பில்லுக்குப் போடு"

என்ற லிகிதர் ஐயா சிகரட்டைப் பற்ற வைக்க பொய்லர் அருகே சென்றார். வெள்ளயன் அதற்கிடையில் இன்னொரு கரும் தொதல் துண்டை எடுத்து தனது பொக்கற்றில் போட்டுக் கொண்டான்.

"எனக்கு உண்ம தெரியணும் தம்பி"

வெள்ளயனின் மனதில் மீண்டும் மெல்லிய பயமொன்று ஏற்பட்டது. அவன் லிகிதர் ஐயாவைப் பார்த்தான்.

"என்ன லிகிதர் ஐயா?"

"வெள்ளதுர பறித்தெடுத்து கொண்டு போன கரத்த இருக்கே அதுக்கு போட்டிருக்கிற ரேஸர் எங்கால கிடச்சிது?"

சோமவீர லிகிதர் கேள்வி எழுப்பினார்.

சிரிஸேன முதலாளி அவருக்கு இது பற்றித் தேடுவதற்கான அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். வெள்ளயனுக்கு நல்ல உபசரிப்பும் அதன்படிதான் கிட்டியது. வெள்ளயன் சிரித்தான். அவன் மனதிலேற் பட்ட சந்தேகம் நீங்கியது.

"விபுலபேபி தந்தவ. நாலு ரேஸர் சக்கரம் தந்தா கரத்த செய்துதரச் சொல்லி"

வெள்ளயன் பதில் மொழிந்தான்.

"விபுலபேபி? எங்கட முதலாளியின் பேபியா தந்தவ?"

சோமவீர லிகிதர் அதிசயத்துடன் கேட்டார்.

"ஓம் பேபிதான் தந்தவ. ஆனா அந்தக் கரத்தய பேபிக்கு குடுக்க முடியல. பேபி பள்ளிக்கூட லீவு முடிந்ததும் கண்டிக்குப் போயிட்டா. அந்தக் கரத்தயத்தான் வெள்ளதுர கொண்டு போனார்."

வெள்ளயன் கூறினான்.

அது முழு உண்மையல்ல. அது விபுலபேபிக்கு கொடுக்கச் செய்த தல்ல. மேலும் கேள்விகள் எழ இடம் வைக்காமல் வெள்ளயன் அந்தப் பொய் யைச் சொன்னான். அவன் எண்ணியது போல் அது வெற்றியளித்தது.

சோமவீர லிகிதர் ஐயாவின் கேள்விகள் முற்றுப் பெற்றன. வெள்ளயனுக்கு வெளியேற அனுமதி கிட்டியது. சிரட்டைக் கரியிட்ட சீமெந்துப் பையையும் எண்ணெய் போத்தலையும் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு கடையிலிருந்து வெளிப்பட்டான். அவனுக்கு திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தது. கரிப் பையை அடுத்த கைக்கு மாற்றி, பொக்கற்றில் கையை விட்டுப் பார்த்தான். தொதல் துண்டு பாதுகாப்பாக இருப்பது அவனுக்கு விளங்கியது.

கரிப்பையையும் எண்ணெய் போத்தலையும் வயதாளியான ஆச்சாரி யாரிடம் கொடுத்த வெள்ளயன், மீண்டும் கடைப்பக்கம் போக குறும் பாதைக்கிறங்கினான்.

"ஏய் எங்கடா போறாய்? உன்னத் தேடாத இடமில்ல"

உபாலி முன்னே வந்தபடி கேட்டான்.

"ஆச்சாரியாருக்கு சாமான் வாங்க கடைக்குப் போனன். நானும் உன்னத் தேடிப் போகப் பார்த்தன். வா கோயில் பக்கம் போவம். உனக்கு ஒரு சாமான் தரவேண்டியிருக்கு"

வெள்ளயன், உபாலியின் கழுத்தில் கைபோட்டுக் கொண்டு கோயில் முற்ற ஆலமரத்தடிக்குச் சென்றான். இருவரும் மரவேர்ப் பகுதியில் அமர்ந்து கொண்டனர். வெள்ளயன் மீண்டும் எழுந்தான். பொக்கற்றில் கைவிட்டு தொதல் துண்டை எடுத்து உபாலிக்குக் கொடுத்தான்.

"எங்கிருந்தடா?"

"கடை லிகிதர் ஐயா தந்தார்"

"இனி எனக்குத் தாராய். ரெண்டுபேரும் பங்கு போட்டுச் சாப்பிடுவம்"

"வேண்டாமடா நான் வயிறு நிறையச் சாப்பிட்டன். அது உனக்குத் தான் சாப்பிடு"

உபாலி அன்பு நிறைந்த கண்களோடு வெள்ளயனைப் பார்த்து, நசுங்கி சிதைந்த தொதல் துண்டின் சுவை பார்க்கத் தொடங்கினான். அதற்கிடையில் வெள்ளயன் ஆலமரத்தடி வேர்பக்கமாக அளவான கல்லொன்றை உயர்த்தி அதன் கீழிருந்து ஐந்து ரூபா நோட்டொன்றை வெளியெடுத்தான்.

"நீ சல்லி ஒளிக்கிறது இங்கதானா? உனக்கு எங்கிருந்து அவ்வளவு தொகை. சொல்லு வெள்ளயன். வீட்டால் களவெடுத்தியா? நீ எனக்குப் பொய் சொல்கிறாய். இந்தப் பலகாரம் எப்படி எடுத்தாய்? உண்மயச் சொல்லு"

உபாலி தொடர்ச்சியாகக் கேட்டான்.

"சரி சரி உனக்கு நான் உண்மயச் சொல்றன். கொஞ்சம் பொறுமயா இரு. நான் ஒன்றும் களவெடுக்கல்ல"

வெள்ளயன் சகல விபரங்களையும் சொல்ல ஆரம்பித்தான். உபாலி காது கொடுத்துக் கேட்டான்.

வெள்ளயன் சொல்வது உண்மையென்று அவனுக்கு விளங்கியது.

"இந்தச் சல்லிய பத்தி உனக்கு மட்டுந்தான் தெரியம். வேற யாருக்கும் சொல்லாத. எங்க ரெண்டு பேருக்கும் ஒரு மாதத்துக்கு கள்ள கடயப்பம் தின்ன இது போதும்."

வெள்ளயன் சொன்னான்.

உபாலி தன் உடன்பாட்டை சிரித்தபடி தெரிவித்தான்.

# 5

சிறுபாதையின் இரு மருங்கிலும் பச்சைக் கம்பளம் போல் படர்ந்திருந்த புற்பற்றை மீது படிந்திருந்த பனித்துளிகளை விலக்கிக் கொண்டு, அதிகாலைக் குளிரில் நடுங்கியபடி பாடசாலைக்குச் சென்ற மாணவ மாணவிகள் மீண்டும் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். சீதளக் காற்று ஓரளவு வேகமாக வீசிக் கொண்டிருந்தாலும் உடலைச் சுட்டெரிக்கும் வகையில் கடும் சூரியக் கதிர்கள் பரவின. காற்றுக் காரணமாக வியர்வை ஆவியான போதும் உடலுக்கு எந்தக் குளிர்மையும் கிட்டாத அளவுக்கு சூரிய வெப்பம் காணப்பட்டது.

மேல் கொத்மல ஓயாவோ நீரூற்றுக்களோ, கீழ் நோக்கி ஒன்று சேர்ந்து பாயும் பீலிகளோ சூரிய வெப்பத்தை உறிஞ்சிக் கொள்ளாத தாலோ என்னவோ ஊற்றுநீர் அதே குளிர்ச்சியோடு பாய்ந்து கொண்டிருந்தது. சுற்றாடலின் இந்த அதி உஷ்ணம் காரணமாகவும் பழக்கம் காரணமாகவும் குளிப்பதற்கு ஆற்றுக்கும் பீலிக்கும் செல்வோர் அதிகரித்திருந்தது.

நகரசபை வீட்டு வரிசை அருகே பள்ளத்தில் தேயிலைக் கொழுந்து கிள்ளிக் கொண்டிருந்த பெண்கள், சூரியன் மேற்கே செல்கையில் உச்சிமலைக்குச் சென்று கொழுந்து கிள்ளத் தொடங்கினர்.

வீட்டுத் திட்ட வீட்டு வாசற்படிகளில் அமர்ந்து, வயதாளிப் பெண்களும் இளம் பெண்களும் தலைவாரியபடியும் பேன் பார்த்தபடியும் ஏதேதோ கதைத்துக் கொண்டிருந்தனர்.

இளைஞர்களும் சிறுபிள்ளைகளும் தோட்ட எல்லைக்கும் வீட்டுத் திட்டத்திற்கும் இடையிலான ஒழுங்கையில் ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்தனர்.

கொழுந்து பறிப்போருக்கு உத்தரவு கொடுத்தபடி அவர்களை மேற்பார்வை செய்யும் கங்காணி, சிறுபாதை வழியாகச் சென்று கொழுந்து கிள்ளுவோர் முன் தனது ஆணையைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

திடீர் திடீரென்று சத்தமிடுவார். அதையெல்லாம் கணக்கில் கொள்ளாத, கொழுந்து கிள்ளும் பெண்கள், தங்கள் கடமையில் பூரண கவனத்தைக் குவித்திருந்தனர்.

ஒழுங்கையினூடாகச் செல்லும் சில இளைஞர்கள், கொழுந்து கிள்ளும் பெண்களை கோபமூட்டுவதற்காக "அரைப் பேர் அரைப் பேர்" என்று சொல்வார்கள்.

இளைஞர்களோடு டிக்போல் விளையாடிக் கொண்டிருந்த சுஸில் அவ்விடத்தால் விலகி தனது நண்பர் எங்கேயென்று பார்க்கத் தொடங்கினான். சற்றே குழப்ப நிலைக்கு உள்ளாகியிருந்தான்.

"வெள்ளயன் எங்கடாப்பா சரத், சுனிலெல்லாம் போய் சீக்கிரமா தேடிக் கொண்டு வாவன்"

சுனில் சொன்னான்.

"என்னடா என்ன நடந்திருக்கு?"

அதேவேளையில் கொழுந்து பறிக்கும் பெண்கள் பக்கமாக பெரும் சத்தமொன்று எழுந்தது.

"ஐயோ கடவுளே..... யாரோ கொன்று போட்டு பொதச்சி வெச்சிருக் காங்க..... ஐயோ"

கொழுந்துக் கூடையை தேயிலைப் பற்றைக்குள் போட்டுவிட்டு பயந்து கீழே ஓடிவந்த பெண்களின் சத்தம் கேட்டு, நகரசபை வீட்டுக்காரர்கள் உடனே சிறுபாதையூடாக மலைச் சாரலருகே ஒன்று சேர்ந்தனர்.

"சீக்கிரமா பொலீஸுக்கு சொல்லுங்கோ. யாரும் அந்தப் பக்கம் போக வேணாம்"

முற்றத்தில் பரத்தியிருந்த சின்ன வெங்காயத்தைச் சேர்த்தபடி நின்ற நாடார் மாமா கூறினார்.

ஒற்றைக் கடையருகே ஓடிச் சென்ற இளைஞன் ஒருவன் பாதையில் ஓடிய வாகனமொன்றை நிறுத்தி, இது பற்றிப் பொலீஸுக்கு தெரிவிக்குமாறு வேண்டினான். இன்னொருவன் ரயில் கடவை அறை தொலைபேசி மூலம் புகையிரத நிலையத்திற்கூடாக பொலீஸுக்கு அறிவிக்க ஓடினான்.

கங்காணி கொழுந்து பறிக்கும் பெண்களை அமைதிப்படுத்த முயற்சித்தார். அவர் மலையுச்சிக்குச் செல்லத் தயாரான போதும், அங்கு குழுமியிருந்தோர் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

"என்ன நடந்தது தங்கச்சி? முதல்ல யார் கண்டது?"

ஜேன்மாமி தனது இளைய சகோதரியிடம் கேட்டாள்.

"பார்வதி அக்கா கொழுந்து பறித்துப் பறித்துச் செல்கயில் ஒரேயடியாக குழியொன்றுக்குள்ள கால் போயிட்டாம். சாக்குப் பையொன்றுக்குள் போட்டுப் புதைத்த சவமொன்றாம். நன்றாகப் பழுதடைந்ததாம். சேற்ற மிதித்தது போல இருந்ததாம் அக்காவுக்கு"

சோமா மாமி பதில் சொன்னாள்.

"சின்ன ஒருவன்ற உடல்தானாம்"

"பார்வதி நன்றாப் பயந்து பேச்சு மூச்சு இல்லயாம்"

"புதிசா கிடச்ச குழந்தயா இருக்கலாமாம்"

"ஐயோ பாவம் சின்னப் பிள்ளையென்ன? என்ன மனசோட கொன்றாங்க கடவுளே"

"இவ்வளவு பழுதாகியும் மிருகங்கள் ஏன் தோண்டல்ல?"

"கடை குணதிலக போனவந்த இடமில்லயாம். அந்தப் பெடியனோ தெரியல்ல"

"சரியான முடிவில்ல. இருந்தாலும்... கடைப் பையன்தான் போலிருக்கு"

"கராஜுக்குள்ளே போட்டு அவனுக்கு நன்றாக அடித்திருக்காங்க"

"கடை லிகிதரும், கராஜ் பாஸும் தான் அடித்திருக்காங்க. பொல்லாத இடத்துக்கு பட்டிருக்கு. சத்தமில்லாம கொண்டு வந்து புதச்சிட்டாங்க"

"சில நாட்களா கராஜ் பாஸ் ஒரு பெடியனோட ஒரு நாளக்கி ரெண்டு மூணு தடவ பீலிப் பக்கம் போய் வாரதக் கண்டோம். யாராவதொரு குட்டியோட கூட்டாளியாத்தான் போறதாக நெனச்சம். இப்பதான் விஷயம் விளங்குது"

"கடைப் பையன் எங்கேயென்னு சிரிஸேன முதலாளியிடம் கேட்டா வீட்டுக்கனுப்பிட்டன் என்று சொல்றார்....ம்.... முதலாளிக்கும் இது தெரியும்"

"கஷ்டத்துக்காகத்தானே வேலக்கி வந்தான். பாவம் கடவுளே. யார்ரயென்டாலும் பிள்ளயில்லயா. இவங்களுக்கு இடி விழணும்"

கூடி நின்றவர்கள் வெவ்வேறு கருத்துச் சொன்னபோதும் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

பொலீஸார் வந்தனர்.

"எங்கே வாங்க போய்ப் பார்ப்பம். முதல்ல கண்டது யார்? கூப்பிடுங்க"

கேள்விமேல் கேள்வி கேட்டபடி பொலிஸ் அதிகாரிகள் இருவர் மலையுச்சிக்கு ஏறத் தொடங்கினர். அவர்கள் பின்னால் ஆண்கள் பலரும் சென்றனர்.

பொலீஸார் தேயிலைப் பற்றைக்கிடையால் சென்று காணுக்குள் இறங்கினர்.

சிறிது நேரத்தில் பொலீஸ்காரர் காணிலிருந்து மேலே வந்து, கொழுந்து கிள்ளும் பெண்களுக்குப் பொறுப்பான கங்காணியை அழைத்தனர்.

"ஏய் இங்க வாரும் கங்காணி"

"நீங்கெல்லாம் என்ன யோசனயோட உங்க கடமய செய்றீங்க?"

அவர் கங்காணியை கடுமையாகத் திட்டினார். அதற்கிடையில் தோட்டத்து வெள்ளைதுரை, கண்டக்டர், காவலாளி எல்லோரும் வந்திருந்தனர்.

"தெயா ரா னோ டெட் பொடி ஸர்..... ஸப்..... ஃபுருட்ஸ். ஐ திங் பிலான்டன் பெரீட் இன் த பிட்"

பொலீஸ் அதிகாரி, அங்கே இறந்த உடல் எதுவுமில்லை. வாழைப பழம் ஏதோ புதைக்கப்பட்டுள்ளதாக, வெள்ளைதுரைக்கு விளக்க மளித்தார். துரைக்கு சிரிப்பு வந்துவிட்டத.

"ஹோ..... வட் கைன்ட் ஒஃப் பீபில்..... எங்கே இந்த கங்காணி. வேலயிலிருந்து நிற்பாட்டிறன் ஒரு மாதத்துக்கு"

அப்படிச் சொன்ன வெள்ளைதுரை திரும்பிச் சென்றார்.

கொழுந்து பறிக்கும் பெண்களின் முகத்தில் அப்பிக் கிடந்த பயம் விலகிச் சென்றது. அவர்கள் ஒருவரையொருவர் பகிடி பண்ணத் தொடங்கினர்.

அந்த நிகழ்வோடு எல்லாம் அடிபட்டுப் போனபின் அயல்வாசிகள் தங்கள் பரிசீலனையை ஆரம்பித்தனர்.

"யாரோ வாழக்குலயொன்ன வெட்டி பழுக்கிறதுக்கு புதைத்திருக் காங்க"

குழிவெட்டி சாக்குப் பையை வெளியெடுத்த ஒருவன் சத்தமிட்டான்.

"பழுக்கிறதுக்கு நன்றாகப் புகயும் அடித்திருக்காங்க"

"இங்கு துளபோட்ட சிரட்டயும் இருக்கு"

"பையில் ஏதோ எழுத்துப் போட்டிருக்கு"

"கே.எம். ஜே என்ற எழுத்துக்களும் அந்த சாக்கில் எழுதியிருக் காங்களாம். அதன் சொந்தக்காரர கண்டுபிடிச்சா, செய்த ஆக்களத் தேடிக் கொள்ளலாம்."

"கே. எம். ஜே. ம்..... யாருடயது?"

"அது ஜோன் அண்ணாவுடய சாக்காக இருக்கலாம். கே.எம்.ஜோன்"

"அப்படீன்னா இது ஜோன் அண்ணாவின் பெடியன்களின் வேல"

"யாரடா பேயன். எங்கட பிள்ளகளப் பிடிக்கிறது? எங்க வீட்டில சாக்கு யாவாரம் செய்றதா நினச்சீங்களா?"

"பிள்ளகள சுத்தமாக்க வேணாம் ஜோன் அண்ணா. பெடியன்கள் அப்படித்தான். அது தனிய செய்யக் கூடிய வேலயல்ல. பெடியள் சேர்ந்து செய்திருக்காங்க. உங்க பாட்டுக்கு வாய வெச்சிருங்கோ. இல்லாட்டா பொலீஸ்"ம் கையுமாப் போக வேண்டி வரும்"

ரொபட் மாமா சொன்னார்.

சுஸில் உள்ளிட்ட இளவட்டத்தினர் புற்றரை கற்பரப்பில் அமர்ந்து இந்நிகழ்வு பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர். கனிந்த வாழைப்பழச் சீப்பொன்றுடன் சூடி அப்பக்கமாக வெளிப்பட்டு வந்தான். சற்று நேரத்தில் வாழைத்தோல் மாத்திரமே கற்பரப்பின் மேல் காணப்பட்டது.

"உனக்கு வாழக்குலயோடு சாக்குப் பைய கொண்டு வரச் சொன்னத கேக்கல. குலய மாத்திரம் கொண்டு வந்திருக்காய். இங்க பார் இனி எப்படி வீட்ட போறது? அப்பாவிடம் அடி வேண்ட வரும்"

சரத்தும் சுஸிலும் சொன்னார்கள்.

"நீங்க சொல்லுவீங்கடா. சாக்குப் பைய கொண்டு வந்திருந்தா எல்லோரும் பொலீஸ் கூட்டுக்குப் போக வேண்டி வந்திருக்கும். ஒருவருக்கும் தெரியாமல் அந்த இடத்துக்கு ஊர்ந்து போய்த்தான் எவ்வளவு கஷ்டத்தோட குலயக் கொண்டு வந்தன்? பொய்யென்னா இந்த சின்னவனிடம் கேட்டுப்பார்"

வெள்ளயன் வீரச் செயலொன்றைச் சாதித்ததுபோல் சொன்னான்.

"உண்மதான். கெட்டநேரத்துக்கு தேயிலச் செடியொன்று கழன்றிருந்தா நாங்க பிடிபடுவோம். பாத்தீங்களா தேயில வேருக்கு என்ற காலும் பழுதாகிட்டுது"

சின்னவன் சொன்னான்.

"எங்க இனி வாழக்குல?"

சுஸில் கேட்டான்.

"இந்தப் பக்க மலை காணுக்குள மறைத்திருக்கோம். இன்னும் பழுக்கல்ல. நாளையாகும் போது பதமாவரும்"

"ஒரு குல நன்றாக முற்றியிருக்கு. மற்றது முற்றியது காணாது.

இன்னொரு தரம் புக அடித்தால் சரி. என்ன செய்றது தலவிதி. இவங்க இந்தப் பக்கம் கொழுந்து கிள்ள வந்திட்டாங்களே"

"நான் சொன்னன் உனக்கு. ஒரு குல முற்றவில்லையென்று. நீ கேட்டால்தானே"

"அந்த நேரத்துக்கு அதெல்லாம் விளங்குமா? இருட்டாக இருந்தது. யாரும் வந்து விடுவாங்களோவென்ற பயம்"

"ஆனா வாழக்குலகளுக்கு என்ன நடந்ததென்று இன்னுமே தர்மையாவுக்குத் தெரியாது"

உபாலி கூறினான்.

"வாழ இல வெட்டக் கேட்டதற்கு என்ன ஏசி விரட்டாமல் விட்டிருந்தா, வாழக்குலகள் இன்னுமே மரங்களிலதான் இருந்திருக்கும்"

"பைத்தியமாடா. நாங்க வெட்டாம விட்டிருந்தாலும் மிஞ்சியிருக்காது. வேறு யாராவது களவாக வெட்டிக் கொண்டு போவார்கள்"

அசோகா சொன்னான்.

## 6

"வெள்ளயன் யாருக்கடா முட்ட கொண்டு போறாய்?"

கோழி முட்டை இரண்டு கையில் கொண்டு கடையிலிருந்து வந்த வெள்ளயனிடம் சுஸில் கேட்டான்.

"இது ஆச்சாரியாருக்கடா"

"என்னடா ஆச்சாரியார்? காலயிலும் மாலயிலும் கடவுள் வணங்கிற வர். மீன் இறச்சி சாப்பிடுறதில்ல. ஆனா முட்ட சாப்பிடுறதா?"

அசோக கேட்டான்.

"ஐயோ இல்லயடா. ஆச்சாரியார் முட்ட சாப்பிடுறதில்ல. இது மந்திரிப்பதற்கு கொண்டு போறன்"

"மந்திரிக்க? யாருக்கடா? நோயாளிகளின் உடலில் சிவப்பு சந்தனம் மட்டுந்தானே ஆச்சாரியார் பூசுவார்"

"இல்லடா. முட்டையும் மந்திரிப்பார். பெரேத்த பசாசின் பார்வ விழுந்த வங்களுக்கு முட்டதான் மந்திரிப்பார். கற்பூரமும் பற்ற வைக்கிறது. ஏன் நீங்கள் கண்டதில்லயா? செய்ற முறய பிறகு சொல்றன். இத நான் குடுத்திட்டு வாரன். கொஞ்சம் சுணங்கும்"

வெள்ளயன் சொன்னான்.

"அதக் குடுத்திட்டு சீக்கிரம் வா நாங்க நிற்பம். சாயந்திரம் வரயில இதில பந்தடிப்பம்"

❖❖❖❖❖❖

நிலத்தில் அமர்ந்திருந்த ஆச்சாரிக் கிழவனைச் சுற்றி இரும்பு, பித்தளை, செம்பு, ஆகிய உலோகத் துண்டுகளும் உடைந்த குடை, குடைப் பிடவை என்பனவும் குவிந்திருந்தன. அவரெதிரில் ஸிலிப்பர் கட்டைத் துண்டொன்றில் பொருத்திய சிறிய பட்டறையொன்று காணப்பட்டது. பல சுவர் மணிக்கூடுகள் அவர் சேர்ந்திருந்த சுவரில் ஆங்காங்கே காட்சி தந்தன.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நாயகர்களின் சட்டமிடப்பட்ட பெரிய படங்கள் பல தொங்கவிடப்பட்டிருந்தன. பழைய பெட்டகம், ட்ரங்குப் பெட்டிகள், பழைய புத்தகங்கள் இப்படி எவ்வளவு அந்தச் சிறிய அறையிலே நிறைந்திருந்தன.

இந்த அறை...... அவரது சமையலறையாகவும் நோயாளிகளுக்கான சிகிச்சை நிலையமாகவும், தெய்வ ஆசீர்வாதம் பெற்றுக்கொடுக்கும் தேவாலயமாகவும், கைத்தொழிற்சாலையாகவும், தங்க நகை உற்பத் திப்பட்டறையாகவும் சந்தர்ப்பத்திற்கேற்ற விதமாக மாறும்.

உடைந்து பழுதடைந்த வீட்டு உபகரணங்களை மணிக்கூடு போன்றவற்றைப் பல்லாண்டுகள் நின்று நிலைக்கத் தக்கவகையில் திருத்தியமைப்பதற்கான அபூர்வ நிபுணத்துவம் கொண்டுள்ள ஆச்சாரி யாரின் கைராசி காரணமாக நோய்களிலிருந்து சுகமடைந்தவர்கள் எத்தனை பேரென்று சொல்லிவிட முடியாது.

சிறுபிள்ளைகளைத் தொற்றிக் கொள்ளும் கடவுளின் நோய்கள் முதல் வளர்ந்தவர்களை வாட்டி வதைக்கும் வாதம்- பித்தம்- சளி முதலான ரோகங்களுக்கும் சிகிச்சையளிக்க ஆச்சாரியார் முன்வருவார்.

வட்டமாக வெட்டிய செம்புத் தகட்டில் நாயின் உருவம் குத்தி மந்திரி த்து சிறுவர்களின் கழுத்தில் தொங்கவிடுவது ஆச்சாரியாரின் பிரசித் தமான வைத்திய முறையாகும். சிறார்களின் கக்கல், இருமல் போன்றவை இந்தத் தகட்டு மாலை கட்டுவதால் விரைவாக நல்ல சுகம் கிட்டுவதாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சகலகலாஜீவனிடம் சிகிச்சை பெற தூரத் தோட்டங்களிலிருந் தும் இங்கே வருவார்கள். நகரசபை எல்லைக்குள் வாழ்வோர் ஆச்சாரியாரின் உதவியை நோய் குணமாக்கிக் கொள்வதற்காக எதிர் பார்க்கவில்லை. உடைந்த பாண்டங்களை புதுப்பித்துக் கொள்ளவே

அவரை நாடினர். குடை திருத்துவதில் இந்த அபூர்வ பிறவி மிகவும் பெயர் பெற்றவர்.

அப்படியிருந்தாலும் கூட, அவர் சிறுவர்களதும் வாலிபர்களதும் நையாண்டிக்கு ஆளாகாமலிருப்பதில்லை. நகரசபை எல்லையில் அமைந்துள்ள மாடசாமி கோயிலின் பூசாரி பதவியும் அவருக்கே வழங்கப்பட்டிருந்தது. அது உத்தியோகபூர்வமாக எவரும் வழங்கும் பதவியல்ல. பிரமச்சாரியாக வாழும் கௌரவமான மூத்த மனிதனின் ஆழ்ந்த மத ஈடுபாடும் அதேபோன்று இயல்பான மதஞானமும் காரணமாக இந்தப் பதவி நாடி வந்து சேர்ந்ததாகும்.

தினசரி காலையிலும் மாலையிலும் கோயிலுக்கு ஆச்சாரியார் களைப்புடனேயே நடந்து செல்வார். சுகவீனப் பாங்கு வெளிப்படாவிட்டா லும் அவரது கால்களை அவசரமாக வைக்க முடியவில்லை. நீண்ட காலமாக ஒரு துறவி போல் கால் மடித்து அமர்ந்திருந்ததனாலேயே அவ்வாறு ஏற்பட்டுள்ளதாக எவரும் கூறுவர்.

ஏதோ உடல் நலக் குறைவால் துன்புறும் சிறு குழந்தையை மடியில் வைத்தபடி, நாலு அங்குலம் அளவில் உயரமான வாங்கில் அமர்ந்திருக்கும் நடு வயதுப் பெண் இரு கைகளையும் ஒன்றிணைத்து வணங்கியபடி நின்றாள். கடும் சோர்வுற்ற நிலை அவளிலே காணப்பட்டது.

ஆச்சாரியார் இரு கண்களையும் மூடியபடி மந்திரம் ஓதிக் கொண்டி ருந்தார். பட்டறைக் கருவி பொருத்திய பலகைப் பகுதியின் ஒரு பக்கத் தில் சாம்பல் நிறைந்த பித்தளைக் கிண்ணமொன்றில் கற்பூரத் துண் டொன்று எரிந்து கொண்டிருந்தது. அதனருகிருந்த பெட்டியிலிருந்து இன்னொரு கற்பூரத் துண்டை எரியவிட்டு அது முடியும் தருவாயில் அதன் சுவாலை அருகே, கைகளால் துடைத்தெடுத்த வெற்றிலை யொன்றை பிடித்து, சிறிது நேரத்தின் பின் அதனைக் குழந்தையின் தலையில் தேய்த்தபடி மந்திரம் சொன்னார் ஆச்சாரியார்.

பிள்ளையின் தந்தையென்று கருதக் கூடிய நடுவயது மதிக்கத்தக்க ஒருவர் களிமண் வாங்கில் அமர்ந்து வெற்றிலை சப்பிக் கொண்டிருந்தார். கடுமையாக உழைக்கும் ஒரு தோட்டத் தொழிலாளி என்பதை அவரது தோற்றம் காட்டியது. நோயாளிக் குழந்தைக்கு நிச்சயமாகச் சுகம் கிடைக்குமென்ற நம்பிக்கை அப்பெண்ணின் மனம் பூராகவும் பரவியிருப்பதை அவளது பக்தி ததும்பும் பார்வை வெளிக்காட்டியது.

'அநியாயம். இதனால என்ற சல்லி சும்மா செலவாகுது'

அந்த மனிதன் இப்படி நினைத்தான். இந்தச் சிகிச்சை பற்றி அந்தள வுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் அவனொரு சமய பக்தன்தான்.

வெள்ளயன் ஒரு பக்கமாய் அடுத்த தேவைக்கு உதவ எதிர்பார்த்து நின்றான். எப்போதுதான் இவ்விடத்தால் விடைபெறக் கிடைக்குமென்று யோசித்த அவன், உள்மனதால் புதிதாக வந்துள்ளவர்களைத் திட்டிய படி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். ஏதாவது ஞாபகம் வந்தவுடன், ஆச்சாரியார் எடுத்துக் கொடுக்கும் காசில், அடிமடியடித்த ஐம்பது சதமும் பாதுகாப்பாக இருப்பதை சந்தேகமின்றி நிச்சயப்படுத் திக் கொண்டான். சாந்திக் கருமத்தால் ஆச்சாரியாருக்குக் கிடைக்கும் பணத்தில் பத்துச் சதமோ இருபத்தைந்து சதமோ தனக்கும் கிடைக்கு மென்பது சட்டென்று அவனுக்கு ஞாபகம் வந்தது. அது இருபத்தைந்து சதமாகவே இருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டான்.

முட்டையைக் கையிலெடுத்து மந்திரித்த ஆச்சாரியார், கற்பூரத் துண்டொன்றை எரித்து அதன் சுவாலைக்கு அதனைப் பிடித்து வெற்றிலையின் மேல் வைத்தார். இரண்டொரு பாக்குத் துண்டுகள், கற்கண்டுக் கட்டியொன்று, செப்புக் காசொன்று இப்படியிப்படி அந்த வெற்றிலையின் மேல் வைத்தார். பின்னர் அதனைப் பிள்ளையின் முகத்தருகே கொண்டு சென்று சுற்றியபின் மெல்லிய குரலில் மந்திரம் சொல்லி மேசைமீது வைத்தார்.

"எல்லாம் நல்லபடி நடக்கும் ராமசாமி. ஒவ்வொரு நாளும் பூஜை செய்ய வேணும். பிள்ளைக்குக் கண் திருஷ்டி இருக்கு"- ஆச்சாரியார் அவ்வாறு சொல்லி சாந்திக் கருமத்தை நிறைவு செய்தார்.

பார்த்துக் கொண்டிருந்த ஆச்சாரியார் பக்கம் குனிந்து இரு கைகளையும் கூப்பி உச்சியில் வைத்து வணங்கினாள் அவள்.

'போதும். ஒருவாறு முடிந்தது. இனி எனக்குப் போகலாம்'- வெள்ள யன் அவ்வாறு நினைத்தபடி சாந்திக் கருமத்திற்கு பயன்படுத்திய பொருட்களை அகற்ற முனைந்தான்.

"நான் போறன் தாத்தா"

வெள்ளயன் வெளியே போகத் தயாரானபடி கூறினான்.

"சரி இந்தா. இத வெச்சிக்க. இதயும் கோயில்ல வெய். பையன்கள கூட்டிட்டுப் போகாத"

ஆச்சாரி தாத்தா இருபத்தைந்து சத நாணயத்தை வெள்ளயனின் கையில் கொடுத்து சாந்தி கர்மத்தின் கடைசிக் காரியத்தை விளக்கிப் பொறுப்பளித்தார். எதுவும் சொல்லாத வெள்ளயன், முட்டை, பாக்கு

முதலிய பூஜைப் பொருட்கள் கொண்ட வெற்றிலை விரிப்பை கையிலெடுத்தபடி சிறுபாதைக்கு இறங்கினான்.

கோயில் பக்கமாகச் செல்லும் சிறிய பாதை அருகில், நகரசபை பிரதேச எல்லையில் பொது மலசலகூடத் தொகுதியைத் தாண்டுகையில் எல்லோரையும் போல் மூக்கை மூடிக் கொள்ள வெள்ளயன் மறக்கவில்லை. இரும்பு வாளிக்கு கழிவு சேரும் வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள மலசல கூடங்களைச் சுத்தப்படுத்தி நடாத்திச் செல்ல அதற்கென்று ஊழியர்களை நகரசபை நியமித்துள்ளது.

கோயில் முற்றத்தில் சமதரையான இடமொன்றில் பையன்கள் டிக்போல் விளையாடிக் கொண்டிருந்தனர்.

வெள்ளயன் பொக்கற்றில் கையைவிட்டுப் பார்த்தான்.

இருபத்தைந்து சதக் காசுகளின் ஸ்பரிசம் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை வார்த்தது. 'டிக் போல் இரண்டொரு கை அடித்து வென்றால் இன்னும் ஒரு கணக்கு தேடிக் கொள்ளலாம்' அவன் மனதால் கணக்குப் போட்டான். 'ஆறு பையன்கள் இருக்காங்கள்..... ஐந்து சதப் பந்தயம் போடுறது...... முப்பது சதம். இரண்டு முறை வென்றால் அறுபது சதம். என்ற பத்துச் சதத்தைக் கழித்தால் ஐம்பது சதம்..... அப்படியென்றால் என்னிடம் ஒரு ரூபா இருக்கு'

வெள்ளயன் வருவதைக் கண்ட சுஸில் அவனது அருகே சென்றான். அவன் எதற்காக வருகிறானென்று வெள்ளயன் அறிந்திருந்தான்.

"வேலயில்லயடா. காணிக்க வைக்கிறது ரெண்டு சதம்தான்"

வெள்ளயன் சொன்னான்.

"ஆச்சாரி தாத்தாவிடம் வாரவங்களும் அவரப் போல கஞ்சன்கள். கைய நீட்டி ஒரு இருபத்தைந்து சதம் வைக்கத் தெரியாதா அவங்களுக்கு. பேயா.... கடவுளுக்குக் கொடுக்கிறதும் பிச்சக்காரனுக்குக் கொடுக்கிறதும் ஒரே மாதிரியா...... பரவால்ல...அதயாவது தா"

அப்படிச் சொன்னபடியே சுஸில் பூஜைப் பொருட்களைப் பார்த்தான்.

"இந்த முட்டயும் மாடசாமிக்கா?"

கொஞ்சம் சிந்தனையோடு சுஸில் கேட்டான். அவன் முட்டையைக் கையிலெடுத்து நன்கு பரிசீலித்துப் பார்த்தான்.

வெள்ளயன் குழப்பமடைந்தான். அவன் மனதில் பயமேற்பட்டது.

"ஐயோ சுஸில் அதயென்னா குடிக்காதே. நன்றாக மந்திரம் ஓதிய முட்டை. கடைசியில் மகாசோனாப் பேய் உன்ன மூடிக் கொள்ளும்"

அவன் முட்டையை மீண்டும் எடுக்க முயற்சித்தான். சரத்தும் அந்த இடத்தை நெருங்கினான்.

"எங்களவிட மகாசோனா எங்கடா இருக்கு? பாரன் தோட்டச் சனங்கள் ஆலமரத்தடியால் போகப் பயம். மாடசாமி இருக்கு. மகாசோனா இருக்கென்னு சொல்றாங்க. பாரடா நன்றாக இருட்டினாலும் நாம பந்தடிச்சுக்கிட்டிருப்பம்"

சரத் சொன்னான்.

"உன்ற கத சரி வெள்ளயன். இந்த முட்டய குடிக்கிறது சரியில்ல. நாம இதுக்கு நல்லதொரு வேல செய்வம்"

முட்டையில் படிந்திருந்த தூசிதுகள்களைத் துடைத்தபடி சுஸில் சொன்னான்.

"என்ன?"

வெள்ளயன் கேட்டான்.

"நாங்க இத விற்று விடுவம். அப்போ மகாசோனாவாலும் எங்களுக்கு பிரச்சின இல்லயே"

சுஸில் சொல்லும்போது வெள்ளயன் பயந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

"அது சரியான வேல. நான் கண்டன் புதிய சீனி உருண்டையெல்லாம் கடைக்கு வந்திருக்கு. அத எப்பிடி சாப்பிடுறதென்று யோசித்து யோசித்து இருந்தன்"

சொல்லும் போதே சுனிலின் வாயூறியது.

"பைத்தியமாடா உங்களுக்கு? இது பிடிபட்டா ஆச்சாரி தாத்தா என்ற கழுத்த நசுக்குவார்."

வெள்ளயன் மிகவும் பயந்திருந்தான்.

தான் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமென அவன் கருதி னான். இந்த சந்தர்ப்பத்தில் மாடசாமி கடவுளிடம் மட்டுமன்றி மகாசோனா பேயிடமும் கூட மனதால் மன்னிப்புக் கோரினான். தனது சமயப்படி பொருந்தாவிட்டாலும் கூட புத்தபெருமானின் தயவையும் நாடினான்.

"ஓம் அது உண்ம. அது அவ்வளவு நல்ல வேலயில்ல. நீ போய் அதை மாடசாமிக்கு வைத்து வணங்கிவிட்டு வா"

முட்டையை மீண்டும் வெற்றிலையில் வைத்தபடி சொன்ன சுஸில் பந்தடிக்கும் இடத்திற்குச் சென்றான்.

வெள்ளயன் மாடசாமி கோவிலுக்குள் பிரவேசித்தான்.

சுஸில் இளவட்ட சகாக்களை அழைத்துக் கொண்டு பின்பக்கமாகச் சென்றான். ஏதோ ரகசியமாகச் சொன்னான். அதற்கு அவர்கள் உடன்பட்டதை உணர்ந்தான்.

❖❖❖❖❖❖

பல பக்கமாகவும் இருள் பாய்ந்து வந்தது.

ஆலமரத்தடி நிலத்தில் கீறியிருந்த கோடுகள் தெளிவாகத் தெரிய வில்லை. இதனால் டிக்போல் விளையாட்டைத் தொடர முடியவில்லை. இதுவரையில் வெள்ளயன் கையில் பணநிலை உயரவில்லை. அது பதினைந்து சதமளவு கீழிறங்கியிருந்தது.

சின்னவன் தனது விளையாட்டு நுட்பத்தையிட்டு அகந்தையோடு கூறியபடி காசை எண்ணிக் கொண்டிருந்தான். இருள் படர்ந்து கொண்டிருந்த போதிலும் எவருக்குமே தத்தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற அவசியமிருக்கவில்லை.

ஆலமர வேரில் அமர்ந்திருந்த பையன்களில் ஒருவன், அங்கிருந்து ஒழுங்கைக்கூடாக கோயிலின் பிற்பக்கமாகச் சென்றான். சுவருக்கரு கால் எவருக்கும் தெரியாதவகையில் அவன் அடுத்த சுவரின் மூலைப் பக்கமாகி ஆலமரத்தடி வேரைப் பார்த்தான். அங்கு சுஸிலைக் கண் டான். அடுத்தவர்கள் கோயில் பக்கம் பார்க்கிறார்களாவென்று அக் கறையோடு அவதானித்த சுஸில், அவர்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பத் தயாராக நின்றான். கோயிலுக்கு முதுகு காட்டி நின்ற அவன், இடக்கையால் தலையின் பிற்பகுதியைச் சொறியுமாப் போல் தனது சகபாடிக்கு சமிக்ஞை செய்தான். அவன் சற்றே நடுக்கத்தோடும் பயத்தோடும் கோயிலினுள்ளே புகுந்தான். தலை இருபக்கமாகவும் மேல் நோக்கியபடி கூரான இரு குறுகிய கொம்புகளுடன் பயங்கரமான பார்வையோடு ஒருதொடையின் மீது மறுகாலை வைத்தபடி ஒரு கையிலேயுள்ள தடியை மார்பிலே சேர்த்தபடியான தோற்றத்தில் நின்ற மாடசாமி சிலை அவன் மனதிலிருந்த பயத்தை அதிகமாக்கியது. சிலையின் மடியில் பல வெற்றிலைகளின் மத்தியிலே வைக்கப்பட்ட முட்டை அரை இருளில் தெளிவாக வேறுபட்டுத் தெரிந்தது. அவனது கண்கள் அதன் மீது குவிந்தது.

"எங்கடா.....? இப்போ நின்றவன். எங்க போனான்?"

தயா கேட்டான். அடுத்தவர்களுக்கும் அப்போதுதான் அவனை ஞாபகம் வந்தது.

"நான் இங்கே...."

ஆல மரத்திற்கு பின்பக்கமிருந்து அவனது குரல் வெளிப்பட்டது.

"சரி போவம் இரவாகிவிட்டது. வீட்டில தேட முதல்ல போய் விடுவம்"

சுஸில் ஆல மரத்தடி சிறுபாதைக்கிறங்கியபடி கட்டளையிட்டான்.

"போன விஷயம் சரியா?"

சுஸில் சகபாடியிடம் விசாரித்தான்.

"சரி சரி. அடுத்த கட்டம்தான் கஷ்டம்"

"அதென்னடா?"

சுஸில் கேட்டான்.

எல்லோரும் சிறுபாதை வழியாகப் போகும் போது, சுஸில் தனது நண்பனுடன் முன்னாலுள்ள வீட்டுக்குப் போகாமல், வலப்பக்கம் திரும்பி ஒற்றைக் கடைப்பக்கமாகச் செல்ல முனைந்தான்.

"நீங்கள் எங்கடா போறீங்கள்?"

உபாலி அவர்களிடம் கேட்டான்.

பெடியள் சற்று நின்றனர்.

"நாங்கள் கடைப் பக்கம் போயிட்டு வாரம். நீங்கள் போங்கள்"

சகபாடி பதிலிறுத்தான்.

"அத வெள்ளயனின் தம்பி ஜெயக்குமாரிடம் கடைக்கு அனுப்பினால் விஷயம் சரி. நாங்க அவனுக்கு எவ்வளவாவது கொடுப்பம். அப்போ மகா சோனா எங்களுக்கு மட்டுமல்ல, அவனுக்கும் சேர்த்துத்தான் அடிக்கும்"

சுஸில் முட்டையை பையிலிருந்து எடுத்துக் கடதாசியில் சுற்றியபடி சொன்னான்.

"எங்கிருந்தென்று அவன் கேட்பான். பின்னர் அதை வெள்ளயனுடன் சொல்வான்"

"அப்படி நடக்காதுடா. ஜெயக்குமாருக்கு யார் உண்மயச் சொல்லப் போறம்! நாடார் அண்ணாவின் கோழி எங்க வீட்டுக் கதவு மூலயில இட்ட முட்டயென்று சொல்வம். சரிதானே"

"அப்படீன்னா சரி"

"இத கடைக்கு விற்றால், கடையிலிருந்து யார் கொண்டு போவாங் களோ தெரியாது"

"யார் கொண்டு போனால் எங்களுக்கென்னடா. அங்க ஜெயக்குமார் வாரான். இத வெச்சிரு. நான் அவனக் கூப்பிடுறன்"

அரிசி நிறைந்த பிடவைப் பையொன்றைத் தூக்கியபடி வரும் ஜெயக்குமாரின் பக்கம் சுஸில் சென்றான். அவனது தோளில் கைபோட்டபடி ஏதோ விபரித்தான்.

பிடவைப் பையைக் கீழே வைத்த ஜெயக்குமார் முட்டையைக் கையிலெடுத்துக் கொண்டு கடைப் பக்கமாகச் சென்றான். சுஸில் நண்பனுக்கு கையால் சமிக்ஞை செய்தான்.

அவன் சுஸிலைப் பார்த்துச் சிரித்தான். சுஸிலும் பதிலுக்குச் சிரித்தான். சிறுபாதை அருகே வைத்திருந்த ஜெயக்குமாரின் அரிசிப் பையை சுஸில் மிகுந்த மரியாதையோடு தூக்கினான். ஜெயக்குமாருக்காக அதனை வீடுவரை எடுத்துச் சென்று கொடுப்பதென அவன் தீர்மானித்தான்.

அரை இருளில் கைகளை வீசியபடி வேகமாக வரும் ஜெயக்குமாரைக் கண்ட சுஸிலும் அவனது சகபாடியும் அவனருகே சென்றனர்.

❖❖❖❖❖❖

இரண்டு தினங்களுக்குப் பிறகு குறிப்பிட்ட அந்தநாள் உதயமாகியது.

பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த இளவட்டத்தினர் உணவுண்டபின், இடைத்தீனிக்காக அடுத்தவர்களின் பழமரங்கள், கரும்பு போன்றவற்றில் கவனத்தைச் செலுத்தியபடி உலா வந்தனர்.

ஆச்சாரி தாத்தாவின் வீட்டிலிருந்து சிறுபாதைக்கிறங்கி கடைப்பக்கமாகச் சென்ற வெள்ளயன், முன் வளவில் நின்ற சுஸிலைக் கண்டான். திரும்பிச் செல்ல வேண்டுமென்று நினைத்த வெள்ளயன் அவ்வாறு செய்யவில்லை. 'பொய்யொன்று சொல்றதுதானே' என்று எண்ணியபடி முன்னே சென்றான்.

"எங்கடா போறாய்?"

அவன் எதிர்பார்த்த கேள்வியை சுஸில் கேட்டான்.

"ஆச்சாரி தாத்தாவுக்கு சாமான் வேண்டப் போறன்டா"

சீக்கிரம் அகன்றுவிடும் எதிர்பார்ப்போடு அவன் பதில் சொன்னான்.

"ஏன்டா இன்டக்கும் மந்திரம் ஓதுரதா?"

'இந்தப் பிசாசுக்கு மோப்ப சக்தி இருக்கோ தெரியல்ல'- அவ்வாறு நினைத்த வெள்ளயன் "மந்திரம் சொல்லத் தெரியாதுடா. சிரட்டக்கரி

ஒரு ராத்தலும் ஜோன் மாமாவிடம் நெருப்புத் தண்ணீர் ஒரு குப்பியும் வாங்கிட்டு வரச் சொன்னார்" என்று பொய்தான் சொன்னான்.

நண்பர் வட்டத்தினர் யாராவது இருக்கிறார்களா என்று சுற்று வட்டத்தைப் பார்த்துவிட்டு கடைக்கேறினான்.

"முட்டயொன்றும் வெற்றிலைக் கையும், கற்பூரப் பக்கற்றும் தாரு ங்கொ லிகிதர் ஐயா"

அவன் ஒரே சீராகச் சொல்லிக் கொண்டு சென்றான்.

சிறிய நேரத்தில் அவை அனைத்தும் வெள்ளயன் முன்னால் இருந்தன. அவன் அவற்றை சரிபார்த்தான்.

"லிகிதர் ஐயா இந்த முட்டை கொஞ்சம் கறுப்பாக இருக்கே"

வெள்ளயன் முட்டையை நன்றாக அவதானித்தான். அதைப் பார்த்த ஞாபகம் இருப்பதை உணர்ந்தான். எங்கேயென்றுதான் அவனுக்குப் பிடிபடவில்லை.

"அது இனி நாம போடுற முட்டயல்ல வெள்ளயன். சீ.ஜீ.ஆர். துரை சாமி ஆக்கள் கொண்டு வாரது. கோச்சிப் புகை படிந்து கறுப்பாகி யிருக்கும். சும்மா எடுத்திட்டுப் போடா. மந்திரம் செய்யத்தானே. ஆச்சாரி யாருக்கு அதெல்லாம் வெளங்காதுடா. வேண்டாமென்றா கொண்டுவா"

லிகிதர் ஐயா சொன்னார். எதுவும் சொல்லாமல் அதை எடுத்துக் கொண்டு சிறுபாதை நெடுக, சுஸிலோ வேறு எவருமோ நிற்கிறார்களா வென்று பார்த்தபடி சென்றான்.

❖❖❖❖❖❖

தனது வீட்டு முற்றத்தில் அமர்ந்தபடி சுஸிலும் கொதலாவலயும் பட்டமொன்றுக்கு கடதாசி ஒட்டிக் கொண்டிருந்தனர். இந்நேரத்தில் வெள்ளயன் சிறுபாதையால் வந்து கொண்டிருந்தான். அவன் அங்குமிங்கும் பார்த்து, சுஸிலுக்கோ கொதலாவலைக்கோ தெரியாமல் ஆச்சாரி தாத்தாவின் வீட்டுக்குள் புகுந்து கொண்டான்.

திடீரென்று நாடார் மாமாவின் கறுப்புக் கோழி முட்டையிட்டுவிட்டு அந்தப் பிராந்தியமெங்கும் கேட்கும்படி கொக்கரித்தது.

"நாடார் மாமா கோழி முட்டயிட்டிருக்கு"

சிறுமியொருத்தி நாடார் மாமாவின் வீட்டை எட்டிப் பார்த்துவிட்டுச் சத்தமிட்டாள். அதே நேரத்தில் அதற்கடுத்து ஆச்சாரியார் வீட்டிலிருந்து ஓரளவு சத்தமாக மந்திரம் ஓதும் சத்தம் எழுந்தது.

சுஸில் பட்டத்தை ஒரு பக்கம் போட்டுவிட்டு ஆச்சாரியார் வீட்டு முன்

ஜன்னலருகே சென்று கண்ணாடிக் கூடாகப் பார்த்தான். நான்கு அங்குல உயரமான வாங்கில் பலர் அமர்ந்திருந்தனர். பட்டறை பொருத்திய பலகைத் தட்டில் வெற்றிலை அடுக்கின் மேல் முட்டை வைக்கப்பட்டிருப்பது ஏனையவற்றைவிடத் தெளிவாக அவன் கண்களில் பட்டது.

வெள்ளயன் ஆச்சாரி தாத்தாவின் கட்டளை கிட்டும்வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

வாயோரமாகப் புன்னகை ஒன்றை நெளியவிட்டபடி சுஸில் மீண்டும் திரும்பினான்.

சிறிது நேரத்தின் பின் வெள்ளயன் கோயில் பக்கம் போகும்போது அவன் காணாமலிருப்பதற்காக சுஸில் கொய்யாமரத்திலேறி மறைந்து கொண்டான். கோயிலுக்குச் சென்ற வெள்ளயன் மாடசாமிக்கு பூஜைத் தட்டை பொறுப்பளித்துவிட்டு அமைதியான மனதோடு திரும்பினான்.

மாலை வேளையில் வெள்ளயன் சாமான் கொண்டு வரக் கடைக்குச் செல்லும்வரை சுஸில் பொறுமையின்றிப் பார்த்திருந்தான். வெள்ளயன் கடைப் பக்கம் சென்றபோது சுஸிலும் நண்பனும் கோயில் பக்கமாக உலாச் சென்றனர்.

நண்பன் கோயிலுக்குள் செல்லுமுன் மாடசாமியின் மடியைப் பார்த்தான். வெற்றிலையின் மேல் முட்டைக்கோது மாத்திரம் எஞ்சியிருந்தது. மாடசாமியின் அருகே நின்ற காகமொன்று தலையைத் திருப்பி சுற்றுவட்டத்தைப் பார்த்தது. எதிர்பார்ப்பு ஈடேறாவிட்டாலும் அவன் மனதிலிருந்து பயம் அகன்றது. அவனது மனதுக்கு நிம்மதி தெரிந்தது. அவன் மீண்டும் இதமான மனதோடு சுஸில் நின்ற பக்கமாகச் சென்றான். ஆலமரத்துக் காகங்களின் சத்தம் நீண்ட நேரமாக நிலவியது.

## 7

வாய்க்கால் வரம்பு கற்பாறை மேல் பையன்கள் அமர்ந்திருந்தனர்.

"எங்கடா கரும்பு கொண்டு வரப் போனவங்கள் இன்னும் வரலியா?"

சுஸில் விசாரித்தான்.

"ரெண்டுபேரும் அந்தப் பொம்பிளைக்கு பிடிபட்டாங்களோ தெரியல்ல"

தயா கேட்டான்.

"அதெப்படி நடக்க முடியும்? வாய்க்கால் அருகிலுள்ள கற்கள் வழுக்கும். அதெல்லாம் எங்கட பையன்களுக்கு நல்ல பழக்கம்.

இவங்கள் கற்களுக்கு மேலால் பாய்ந்து வந்துவிடுவார்கள். அந்தப் பொம்பிளயால இவங்களப் பிடிக்க முடியாது"

சரத் தெளிவுபடுத்தினான்.

ஹொலிறூட் பெருந் தோட்ட மேற்பகுதியிலிருந்து ஆரம்பித்து பெருக் கெடுத்துப் பாயும் வாய்க்காலை அறிமுகப்படுத்த விசேட பெயரில்லை. தோட்டத்துறைக்கு அப்பாற்பட்டவர்கள் பெரும்பாலோர் அழுக்கு வாய்க்கால் என்றுதான் சொல்வர்.

கொழும்பு- பதுளை புகையிரதப் பாலத்திலிருந்து இருபதடி அளவு கீழே இந்த வாய்க்கால் பிரவாகமெடுத்து மேற் கொத்மலை ஓயாவின் வரப்பிலிருந்து நீர் வீச்சாக மாறி ஓயாவில் சேரும். தோட்டப்புற லயங்க ளிலிருந்து வெளியேற்றும் கழிவுப் பொருட்களெல்லாம் கூட நீரோடு கலந்து கீழ்நோக்கிப் பாய்ந்து வருவதால் இந்த வாய்க்கால் அசுத்த மானதாக ஆகியுள்ளது. இந்தப் பாலத்தின் முனையில் தேயிலைத் தோட்ட லயம் அறைத் தொகுதி புகையிரதப் பாதைக்கும் தலவாக்கல-பூதுறுஓயா பெரும் தெருவுக்கும் இடையில் அமைந்துள்ளது.

புகையிரத வீதிக் கங்காணி துரைசாமியும் அவரது மனைவி மரியா யிம் இணைந்து வாய்க்கால் கரையில் மரக்கறி பயிரிட்டு அடைத்துப் பாதுகாத்து வருகின்றனர். அவர்களிடம் மாட்டுப் பட்டியும் இருந்ததனால் எந்தக் காலத்திலும் வற்றாமல் கீழ்நோக்கிப் பாயும் வாய்க்கால் காரணமாகவும் அவர்களது பயிர் நிலத்தை செழிப்பாக நடாத்திச் செல்ல முடிகிறது. மென்மையான குழாய் போன்ற புல் குடும்பத்தின் விசேட பயிர் வகையொன்று இந்த உற்பத்தி நிலத்தின் எல்லையில் வேலிபோல் சடைத்து வளர்ந்துள்ளது. 'எபல' என்று சொல்லப்படும் மென்மையான குழாய் போன்ற விசேட தாவர இலைகள் நீலம் அல்லது கடும் சாம்பல் நிறமாகப் பிரகாசிக்கும். இந்த நிலத்தில் கரும்புப் பற்றைகள் இருந்ததுண்டு. மிகவும் செழிப்பாக வளர்ந்த கரும்புப் பற்றை இரண்டு மூன்று பாலத்திற்குக் கீழ் அணைக்கட்டருகே இருந்தன. கறுப்பு வெள்ளை ஆகிய நிறங்களிலான இந்தக் கரும்புப் பற்றைகள் தானாக முளைத்தவையல்ல. துரைசாமியால் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டாலும் பெடியன்களுக்கு அது பிரச்சினையல்ல. மனிதர்கள் நடமாடும் மேல் பெருந்தெருவிலிருந்தோ புகையிரதப் பாதையிலிருந்தோ பார்ப்பவர்களு க்கு நன்கு தெரியும் அந்தக் கரும்புப் பற்றையருகே எவருக்கும் தெரி யாமல் செல்வதற்கு இந்த இளவட்டத்தினருக்கு விசேட திறமையுண்டு. கரும்புப் பற்றையிலுள்ள நன்கு முற்றிய இரண்டொரு தண்டுகளைப் பிடித்து உடைத்து கீழே பாயும் வாய்க்காலில் எறிந்து விட அவர்க

ளுக்கு மிகக் குறுகிய நேரமே செல்லும். பாலத்திற்கு சற்று கீழே வாய்க் காலருகே நிற்கும் பையன்களுக்கு நீரில் மிதந்துவரும் கரும்புத் தண்டுக ளைப் பிடித்தெடுப்பதற்கு யாரும் தடைசெய்யவில்லை. இந்த வாய்க் கால் ஆழமற்றதும் அபாயமற்றதுமென்பதாலும் அசுத்த வாய்க்காலென ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாலும் இளவட்டத்தினர் இதில் இறங்கு வதையிட்டு பெற்றார் அவ்வளவு எதிர்ப்புத் தெரிவிப்ப தில்லை. அசுத்த மென்று சொன்னாலும் கூட இதன் நீர் மிகவும் தெளிவானதே.

"அந்தா வாராங்கள்"

வாய்க்கால் மேற்பக்க வரப்பினூடாக இரு பையன்கள் வருவதைக் கண்ட வெள்ளயன் சத்தமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

"நாலைந்து கரும்பு மரத்திற்கு கதையைக் குடுத்திருக்காங்க போலிருக்கு"

விரைவாக வருமாறு அவர்களுக்கு சமிக்ஞை செய்தான் சுஸில்.

சரத்தும் சுனிலும் கரும்பு கடித்தபடி வந்து கொண்டிருந்தனர். அவர்களது கைகளில் நான்கு கரும்பு மரங்கள் காணப்பட்டன.

அபூர்வமான பொருளொன்று சுனிலின் கையிலிருந்தது. முறுகிய மரத்தண்டொன்றை ஒழுங்குபடுத்தி வர்ணம் தீட்டிய மனித உருவம். ஒரு கால் மாத்திரம் உடைந்து போயிருந்தது.

பெடியன்கள் கரும்பைப் பங்கு போட்டுக் கொள்வதில் உற்சாகமாக நின்றனர். மூன்று கணுக்கள் அளவு கரும்புத் துண்டொன்றைப் பெற்றுக் கொண்ட வெள்ளயன் பின்வாங்கினான். பற்களால் கடித்து கரும்புத் தோலை வேறுபடுத்திக் கொண்டிருக்கையில் சுனிலின் கையிலிருந்த அபூர்வ உருவத்தைக் கண்டான் அவன்.

"அது என்னடா? இங்க தா பாப்பம்"

"ம். உனக்கு கொண்டு வந்து தரத்தான் வாய்க்காலுக்குள் இறங்கி மிகவும் கஷ்டப்பட்டு இதன எடுத்தன்"

சுனில் மர உருவத்தைப் பார்த்தபடி வெள்ளயனின் வேண்டு கோளைக் கேலி செய்தான்.

"இங்கதா பாப்பம் சுனில் அத"

சுஸில் உருவத்தைக் கேட்டான்.

"தாரன் ஆனால் திருப்பித் தரணும். எவ்வளவு கஷ்டப்பட்டு இத வெளியெடுத்தன்"

அதை சுஸிலின் கையில் கொடுத்தபடி சுனில் சொன்னான்.

எல்லாப் பையன்களுமே அந்த அபூர்வ சிருஷ்டியை மிகவும் ஆர்வத்தோடு பார்க்கத் தொடங்கினர்.

“இந்தக் கைகள் ரெண்டயும் பாரன். சொல்லிச் செய்தது போலிருக்கு”

“தலைப் பக்கம் சும்மா நீளமென்ன?”

“மூக்கென்றா வெள்ளயன்றதப் போல பதிஞ்சிருக்கு”

“கால் உடஞ்சதால இத வீசியிருக்காங்க”

“யாராக இருந்தாலும் நன்றாக யோசித்துத்தான் இத செய்திருக்காங்க”

நண்பர்களின் விமர்சனத்திற்குள்ளான இந்த பலகைச் சிற்பம் மீண்டும் தனது கைக்கு எப்படி வந்ததென்று சுனில் யோசித்தபடி பார்த்திருந்தான்.

“கீழ்பக்க மைதானத்தில..... கிணற்றடியில ஒரு தேயில வேரிருக்கு. சரியா முதலயப் போலதான்”

சடுதியாக ஏதோ ஞாபகம் வந்தவனாக உபாலி சொன்னான்.

“ஆ..... நானும் கண்டன். என்ற மனசுக்கும் முதலதான் வந்தது”

அசோகா அதை உறுதிப்படுத்தினான்.

“எங்கட சிற்றப்பாவும் இப்படியொன்னு செய்தார். தேயில வேராலதான். அது எங்கட பாட்டி வீட்டில இப்பவும் இருக்கு”

கொதலாவல இதமாகச் சொன்னான்.

“நான் கண்டன் அத. காற்சட்டை போட்ட சிறுவனொருவன் கையிரண்டையும் ஒரு பக்கமாக கழுத்தில வைத்தபடி..... சரியா கோடாரியால கொத்துவது போல”

சின்னவனின் விஸ்தரிப்பு அதிகமானோரிடத்தில் ஆர்வத்தை மூட்டியது.

“சரியாச் சரி. அதுதான். மரக்கலையென்றுதான் சொல்வாங்க”

தச்சு வேலை தொடர்பான அனுபவம் உள்ளதால் தான் கொதலாவல அப்படிச் சொன்னான்.

“அப்படியானவற்ற எங்களால் செய்ய முடியாதா?”

வெள்ளயன் கேட்டான்.

“ஏன் முடியாது. முடியுந்தானே. செய்ற முறய நானுக்கு சொல்லித் தாரன்”

கொதலாவல கற்பரப்பில் அமர்ந்து கொண்டான்.

"எப்படிச் செய்றது? சொல்லு பாப்பம். உனக்கு இனி எங்களவிட தச்சு வேல நல்ல பழக்கம் தானே. எங்களுக்கு சொல்லித்தா. நாங்கள் சேர்ந்து மரக்கலை வேலை செய்வம். என்ன நீங்கள் சொல்றியள்"

சுஸில் கேட்டான்.

"சரி. நாங்க விருப்பம். இன்னேலிருந்து..... இல்ல. இப்போதே தேயிலக் காடு முழுதும் சுற்றிப் பாப்பம். முறுகிய..... வளைந்த வேர்களிலிருந்து வெட்டிக் கொள்வம்"

அப்படிச் சொன்னபடி அசோகா அருகே தெரிந்த தேயிலைப் பற்றைகளில் வெளி நீண்டிருந்த வேர்களை பார்க்கத் தலைப்பட்டான்.

கொதலாவல மரவேர்க் கலை பற்றி மிகச் சிறிய விளக்கமொன் றளித்தான். அது செய்வதற்கு சற்றே சிரமமான கலை. இதற்குத் தேவையான பிரதானமான ஆயுதங்கள் போத்தல் ஓடு, கைவாள். மண் கடதாசி என்பனவே. இறுதியாகப் பூச்சிட வேண்டும்.

பையன்களுக்கு ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு ஆர்வங்கள் ஏற்படுவதுண்டு. இதை ஒருவகையான பைத்தியம் என்றே சொல்லலாம். நிலவுகின்ற கால நிலைகேற்ப விளையாட்டுக்கள் கூட வேறுபடுவ துண்டு. மார்கழி மாத நடுப்பகுதியில் பட்டம் விடும் பைத்தியம் காற்று வீச்சுக் குறைவதோடு அற்றுப் போய்விடும்.

பாடசாலைகளில் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்கு நாள் குறித்ததும் ஏற்படுகின்ற பைத்தியம் புதுமையானது. பெற்றாரின் சத்தத்தினால் எந்த விருப்பமுமின்றி காலையில் ஆறுமணிக் குப் பின் எழும்பும் பொடிப் பயல்கள், அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து, சப்பாத்துக்கூட இல்லாமல் கற்கள் நிறைந்த சிறுபாதை வழியே ஓடத் தொடங்குவர். தேயிலைத் தோட்ட மத்தியில் விழுந்துள்ள சிறிய பாதையில் கால் மைல் தூரமளவு சென்று, கல் வெளித்தெரியும் விதமாக ஓரளவு தார்பூசிய கிரேட் வெஸ்டேர்ன் பாதை வழியே இன்னும் கால் மைல் ஓடி, பாதை பிரியுமிடத்தில் இடப்பக்கம் திரும்பி கீழே ஓடிச் செல்வார்கள். இவ்வாறு ஓடும் தூரம் ஒரு மைலுக்குக் கூடுமே தவிரக் குறையாது. இருந்தும் எல்லோருமே இந்தத் தூரத்தை ஓடிப் பூர்த்தி செய்வது குறிப்பிடத்தக்கது. இவர்களைப் பின்பற்றி இப்பொழுதுதான் நடக்கத் தொடங்கும் சிறுபிள்ளைகள் கூட ஓடுவதற்கு ஆர்வம் காட்டுவர். எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டிக்காக பயிற்றுவிக்கக் கூடிய, ஓட்ட வீரர்களை தேடிக் கொள்ளும் தேசிய வேலைத்

திட்டமொன்று இருக்குமாயின் ஒலிம்பிக் தங்கப்பதக்க வீரர் ஒருவரை இந்த சீதளப் பிரதேசத்திலிருந்து நிச்சயம் தேடிக் கொள்ள முடியும்.

சுமன மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி அல்லது நகர புதுவருடக் கொண்டாட்டத்தில் ஓட்டப் போட்டிகளில் பரிசு பெறும் பலர் இருந்தனர்.

இத்தகையவர்கள் செல்வந்தர்களாக இல்லாவிட்டாலும் கூட, அன்றும் சரி இன்றும் சரி இப்பிரதேசத்தில் கௌரவமிக்கவர்களாக இருந்து வருகின்றனர். அவர்கள் இளைய தலைமுறையினரின் மத்தியில் மாத்திரமன்றி வளர்ந்தவர்களிடையேயும் வீரர்களாக இடம் பிடித்திருந்தனர். ஜயகொடி வீரசிங்ஹ, ரஞ்சித், லியனகே, போதிராஜா, வீரசேன, நிஹால் வர்ணகுல, மாக்ரட், ஜெனட் ஆகியோர் வீரர்கள் வரிசையில் முக்கியமானவர்கள்.

பெடியன்களின் வருடாந்தப் பைத்தியம் ஒரே மாதிரியானதல்ல. பெரும்பாலும் அதற்கு புதுப் பைத்தியங்களும் சேர்ந்து கொள்ளும். மரவேர்க் கலையும் அத்தகையதொரு பைத்தியம் தான்.

பாடசாலைக்குச் செல்லும் போது கூட சுற்றயலிலுள்ள மரங்களின் கிளை, வேர்களை நன்றாக அவதானிக்கக் கூடியளவுக்கு இளவட்டத்தினரின் பைத்தியம் அவர்களது தலையில் வேகம் கொண்டிருந்தது. சிலர் தமது வீடுகளில் தேயிலை விறகுக் குவியல்களை இழுத்துப் போட்டு மரக்கலைக்கான மூலப் பொருட்களை தேடத் தொடங்கினர்.

"இந்தப் பெடியன்களுக்கு என்ன நடந்திருக்கோ தெரியல்ல. தேயிலப் பற்றைக்குள் நுழையிறாங்கள். வேர்கள் தேடுறாங்கள். பெரிய தொந்தரவு. தோட்டக் காவல்காரன் கண்டால் கஷ்டந்தான். எவளவு சொன்னாலும் கேட்கமாட்டாங்கள். உண்மயில் என்ன இந்தப் பைத்தியம்?"

நோனாச்சி சத்தமிடத் தொடங்கினாள். மரக்கறி வெட்டக் கத்தியைத் தேடியபோது, அதைக் கீர்த்தி கொண்டு போயிருப்பதை அறிந்த பாட்டி கோபத்திற்குள்ளாகியிருந்தாள். சீதை மாமியும் நோனாச்சிக்கு உதவியாக வந்து சேர்ந்தாள்.

"அதுதானம்மா. எங்கள வெள்ளயனும் வீட்டில் ஒன்னுமே செய்றதில்ல. போத்தல் ஓடுகளால் வேர்களை வழிக்கிறான். கையையும் வெட்டிக் கொண்டான் பாருங்க. அதெல்லாம் அவனுக்கு கணக்கில்ல. இந்தச் சின்னப் பயல் கனகு........ அவனுக்கும் அண்ணன்மாரின்ட வேல செய்யத்தான் விருப்பம்"

பெனியம் அணிந்து, கீழுடம்பு நிர்வாணமாக நின்ற சுமார் நான்கு

வயதான வெள்ளயனின் இளைய தம்பியைக் காட்டி சீதை மாமி கூறினாள்.

❖❖❖❖❖❖

ஒரு வாரம் கழிந்தது. ஒன்றாகவே சிறுபாதையில் அலைந்து திரிந்து மரங்களில் காய் பறித்து பெற்றாருக்குத் தலையிடியாகக் கருமமாற்றும், சிலபோது மிகப் பயங்கரமான செயல்களிலும் ஈடுபடுகின்ற, குழவி அல்லது தேன்கூட்டுக்கு கல்லெறிந்து பெரும் குழப்பம் செய்யும் பெடியன்கள் பிரிந்து சென்று தனித்தனியாக 'மரவேர்க் கலை நிர்மாணத்திற்கு' முழுமையான அவதானத்தைப் பாய்ச்சியிருந்தனர். பெரியவர்களுக்கு இது ஒரு வகையில் நிம்மதிதான். இன்னொரு பக்கம் ஓரளவுக்கு பெருமையாகவுமிருந்தது. தங்களது பிள்ளைகள் ஏதோவொரு நிர்மாணப் பணியில் ஈடுபடுவதை சாதகமான கோணத்தில் பார்க்க அதிகமான பெற்றோர்கள் முனைந்தனர்.

பெடியன்கள் தங்களது சிருஷ்டியை அடுத்தவர்களுக்கு காண்பித்தனர். எல்லோருமே மிருகமொன்றையோ விகாரமான மனித உருவமொன்றையோ செய்து அலங்காரமாக வர்ணம் தீட்டியிருந்தனர்.

"அசோகாவின் முயல் ரொம்பவும் அழகாய் இருக்கடா"

உபாலி சொன்னான்.

"நல்ல மாமா அதைக் கேக்கிறார். ஐந்து ரூபா தருவாராம். அம்மாவும் கொடுக்கச் சொன்னா. ஆனா நான் கொடுக்கமாட்டன்டா"

அசோகா சந்தோஷத்தோடு சொன்னான்.

"நல்லமாமாக்கு நான் செய்த யானய வாங்கச் சொல்லு. நான் நாலு ரூபாக்கு தாரன்"

கீர்த்தி கூறினான்.

"அத சல்லிக்கி ஏன் வாங்கணும். நல்லமாமா உங்க வீட்டிலதானே இருக்கார்"

கொதலாவல சொன்னான்.

"எங்கடா இந்த வெள்ளயன்? அவன் என்னவோ தெரியாது செய்தான்?"

சுஸில் கேட்டான்.

"அவன் நாக பாம்பு செய்றான். நல்ல அழகு. சுற்றி நின்று படமெடுத்த படி. நான் கண்டன். வெள்ளயன் போத்தல் ஓட்டால் நன்றாக வழித்து பள பளக்குமாப் போல மினுக்கியிருக்கான். வர்ணம் பூசினா அந்த மாதிரிதான்"

உபாலி எடுத்துரைத்தான்.

"வாங்கடா போய்ப் பார்ப்பம்."

சரத் முன்நிலை வகித்துச் சென்றான்.

வெள்ளயன் வீட்டிலிருக்கவில்லை. சீதைமாமி சிரித்து எல்லோரையும் வரவேற்றாள்.

"வெள்ளயன் எங்க போயிருக்கான் மாமி?"

"கல்கந்த பெரியப்பா வீட்டுக்கு"

"வெள்ளயனின் மரச் சிற்பத்தைப் பார்க்க வந்தோம்"

கொதலாவல அங்குமிங்கும் பார்த்தபடி சொன்னான்.

"அந்த மேசைக்குக் கீழே போட்டிருக்கான். பல நாட்களா கஷ்டப் பட்டுச் செய்தவன். எடுத்துப் பாருங்கொ"

சீதைமாமி சொன்னாள்.

கீர்த்தி உடனே குனிந்து மேசைக்கடியிலிருந்த அவனது சிருஷ்டியை வெளியெடுத்தான். அதை மேசை மீது வைத்த அவன் வாய்விட்டுச் சிரித்தான். எல்லோரும் அந்தப் பக்கமாகப் பார்த்தனர்.

அது ஒரு அற்புதமான கலைப்படைப்பு. எல்லோரையும் விட சிறந்த படைப்பொன்று வெள்ளயனின் கையால் உருவாக்கப்பட்டிருந்தது. சுருண்டு படமெடுத்து நிற்கும் நாகமொன்று. கீர்த்தியின் நையாண்டிச் சிரிப்புக்கான காரணம் நாகத்தின் வர்ணத்தைப் பார்த்த பின் நண்பர்களுக்கு விளங்கியது. நாகம் கடும் பச்சை நிறமாகக் காணப் பட்டது. இதன் காரணமாக ஏற்கனவே பல பகிடிப் பெயர்களைப் பெற்றிருந்த வெள்ளயனுடன் இன்னொரு பட்டப் பெயரு இணைந்து கொண்டது.

"பச்ச பாம்பு"

அடுத்த புதுப் பட்டப்பெயர் வைக்கப்படும் வரை, வெள்ளயனை இந்தப் பட்டப் பெயரே கோபமூட்டும். அதிர்ஷ்டவசமாக வெள்ளயன் வீட்டிலிருக்கவில்லை. இருந்திருந்தால் பெடியன்களின் முன்நிலையில் சீதை மாமி ஏச்சு வேண்டியிருப்பார்.

அதி குளிர்க் காலநிலையுள்ள இப்பிரதேசத்தில் நாக பாம்பையோ மற்றும் விஷ ஜந்துக்களையோ காண முடிவதில்லை. உயிருள்ள நாகமொன்றை காணாத சிறுபிள்ளைகளைப் போலவே வளர்ந்தவர்களும் நிறையவே உள்ளனர். இதனால் வெள்ளயன் நாகத்திற்கு பச்சை நிறந் தீட்டியதையிட்டு வியப்படைய எதுவுமில்லை.

# 8

சித்திரைப் புதுவருட மாதம் முற்றுப் பெற்றதும் சிறுபிள்ளைகளின் மனதில் வெசாக் கொண்டாட்டம் பற்றிய ஆனந்தமான உணர்வுகள் மலர்ந்து விடும். கண்களைக் கவரும் வெளிச்ச வெள்ளம் பரவுகின்ற வெசாக் கூடு, பந்தல், ஒளியேற்றிய விளக்குகள் என்பன சகிதம் சிறார்களின் உள்ளத்தை கொள்ளை கொண்ட இன்னொரு வெசாக் விழா நெருங்கிக் கொண்டிருந்தது.

ஹொலிறூட் பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து விசாலமான வெளிச்சக் கூடொன்றை செய்தவற்குத் தீர்மானித்தனர். அது தொடர்பாக பிரதேசவாசிகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உதவி சேகரிப்பு ஆரம்பமாகியது. இருந்தும் எதிர்பார்த்த அளவு உதவி கிட்டவில்லை. அதனால் எடுத்த முயற்சியை இளைஞர்கள் கைவிட்டுவிட்டனர்.

இது இளவட்டத்தினருக்கு இன்னும் வேலை அதிகமானதொரு சந்தர்ப்பம்.

புற்தரையில் எல்லே விளையாடல், பிள்ளையார் விளையாட்டு, கபடி போன்றவை தற்காலிகமாக நின்றன. நீர்த்தன்மை கொண்ட சேற்று நிலத்தில், கீரைவகைகள் பிடுங்குவது முற்றுப் பெற்றது. பாடசாலை விட்டு வந்ததும் ஆற்றில் பாய்ந்து குளிக்கும் நேரமும் மிகவும் குறைந்து விட்டது. ஆற்று வரப்புகளில் நடந்து, அடித்துவரப்படும் கற்களுக்கிடையேயும் வரப்புகளிலும் சேரும் 'வளங்'களை சேர்ப்பதெல்லாம் இடைநிறுத்தப்பட்டன.

வளர்ந்தவர்களின் கட்டளையோ வேண்டுகோளோ இன்றி பெடியன்களின் ஊக்கம் காரணமாக வெசாக்கூடு செய்தல் ஆரம்பமாகியது. கடைக்கு அனுப்பி சாமான் கொண்டு வருவதற்காக கெஞ்சுவதற்கோ, கள்ளக் கடையப்பம் சாப்பிட ஐந்து, பத்து சதம் கொடுப்பதற்கோ அவசியமற்ற சந்தர்ப்பம் இதுதான். எந்தவொரு சிறுவனும் எந்தவொரு நேரத்திலும் கடைக்குப் போய் வரச் சோம்பல் காட்டாத காலமிது.

வெஸாக் நோன்மதிக்கு இரண்டு வாரத்திற்கு முன்பிருந்தே பெடியன்கள் வெசாக் கூடு செய்ய மூலப் பொருட்களை சேகரிக்கத் தொடங்கிவிட்டனர். இளவட்டத்தினர் ஒன்றிணைந்து பொது வெசாக் கூடு செய்வது நடைபெற்றதால், கூடு செய்வதற்கு அவசியமான பிரதான மூலப் பொருளான மூங்கில் மரங்கள் தேடிக் கொள்வது கஷ்டமான காரியமாகியது.

மலைநாட்டுத் தோட்டங்களுக்குத் தேவைப்படும் தேயிலைக் கொழுந்துக் கூடை பின்னும் கைத்தொழில், தலவாக்கல நகர எல்லையிலுள்ள, தலவாக்கல பெருந்தோட்டத்திற்கு சொந்தமான வீட்டுத் தொகுதியிலேயே நடைபெறுகிறது. மூங்கில் குழாய் போதுமான அளவு இங்கே இருந்ததால், எவரும் அங்கு போய் மூங்கில் கொண்டு வருவதில்லை. அவற்றை விலை கொடுத்து வாங்க எவரும் முயற்சிக்கவில்லை. ஆற்றங்கரைகளில் கூட போதியளவு மூங்கில் பற்றைகள் இல்லை. ஆற்று மேடைகளில் மூங்கில் பற்றை ஒன்றிரண்டு இருந்த போதும், அவற்றுக்கு உரிமையாளிகள் இருந்தனர்.

நகர்ப் பகுதியில் பல இடங்களில் மூங்கில் பற்றைகள் உண்டு. இவற்றுள் விசாலமான மூங்கில் பற்றை பல பழைய தபாற் கந்தோர் பூமியில் தான் இருந்தன. இந்த இடம் நகரத்தில் உயர்ந்த மலைச்சாரலி லேயே காணப்படுகிறது. அந்த மூங்கில்களை மிகவும் குறைந்த தொகைக்குப் பெற்றுக் கொள்ள முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்க ளில் பணம் அறவிடுவதேயில்லை.

மூங்கில் மரங்களைத் தேடி இளசுகள் ஆற்று வரம்புகளிலும் வாய்க்கால் வரம்பிலும் நடந்தனர். இந்து சமயத்தைச் சார்ந்தவர்களான வெள்ளயனும் ஜெயக்குமாரும் வெசாக் கூடு செய்யும் காரியத்தில் சிங்கள நண்பர்களோடு ஒன்றாக இயங்கினர். ஜெயக்குமார் எல்லா நண்பர்களதும் கூடு செய்ய உதவினார். மூங்கில் மரங்களை வெட்டிக் கீலம் செய்தான். அவற்றை சுரண்டித் தேவையான அளவுக்கு வெட்டிக் கொடுத்தான். வெசாக் கூடு செய்வதற்கு, கோழிக் கூடுகளுக்கடிக்கும் கல்வனைஸ் கம்பி வலையை அவிழ்த்தே பயன்படுத்தினர். இவை பணம் கொடுத்து வாங்கப்படவில்லை. அந்நாட்களில் பழைய இரும்புக்கு பெறுமதி இருக்கவில்லை. அதனால் இந்த இரும்பு கண்ட கண்ட இடங்களில் போடப்பட்டிருந்தது. கோழிக் கூட்டு வலைத் துண்டுகளும் இவ்வாறு காணப்பட்டன. பையன்கள் ஒவ்வொரு இடமாகத் திரிந்து கம்பிவலைத் துண்டுகளைத் தேடிக் கொண்டதும் கோழிக் கூடுகளுக்கு அடிக்கப்பட்டிருந்த வலையைக் களவாக வெட்டிக் கொண்டதும், கூட்டுக்கு அவசியமான அளவுக்கு மேலதிகமான பகுதியைக் குறைத்து வெட்டிக் கொண்டதும் நிகழ்ந்த சந்தர்ப்பங்கள் இல்லாமலில்லை.

பையன்கள் வெவ்வேறாகத் தத்தமது வீடுகளிலே வெசாக் கூடு செய்ய ஆரம்பித்தனர். சக நண்பர்களை மறந்துவிட்ட போக்கிலேயே அவர்கள் தமது காரியத்தில் ஈடுபட்டனர். அவ்வாறாக இருந்தாலும் கூட, இருள் விழும் போது எல்லோரும் சிறுபாதையில் குறிப்பிட்டதொரு

இடத்தில் ஒன்றுகூடுவர். இளவட்டத்தினரின் சகவாசத்தையிட்டு கோபம் கொள்ளும் வீட்டின் முன்னால் சிறுபாதையில் ஒன்று சேர்வதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் பழகியிருந்தனர். பகல் வேளை முழுவதும் வீட்டை மூடிவிட்டு வியாபார நடவடிக்கைகளுக்காக நகரத்திற்குப் போய்விடும் நாடார் மாமாவின் வீட்டு முன்னால் ஒன்று கூடுவது சாதாரணமானது. தோட்ட வீட்டுத் தொகுதியின் நீர் இறங்கும் வடிகாலின் அந்தத்திலுள்ள மதகுக்கு மேலும் அவர்கள் ஒன்று கூடுவதுண்டு.

வெசாக் கூடு கட்டும் அடிப்படைக் கட்டத்தைப் பூர்த்தி செய்த நண்பர் குழு, நாடார் மாமாவின் வீட்டு முன்னால் ஒன்று குழுமினர்.

சுஸில், கொதலாவல, உபாலி, அசோக், சரத், சுனில், உக்குங், சூடி, தயா, சின்னவன், கீர்த்தி, நிமல், லலித், ஜெயகுமார் உள்ளிட்ட குழுவினர் அங்கு காணப்பட்டனர்.

"எங்கடாப்பா வெள்ளயன்?"

சுஸில் கேட்டான்.

"வெள்ளயன் பெரியப்பா வீட்ட போயிட்டான்"

ஜெயகுமார் பதில் சொன்னான்.

"கிறேட் வெஸ்டர்ன் தோட்டம்?"

சூடி கேட்டான்.

"கிறேட் வெஸ்டர்ன் தோட்டத்தைத் தாண்டிச் செல்லனும். கல்கந்த தோட்டத்தில் இருக்கார்"

ஜெயகுமார் விளக்கினான்.

"ராசையா மாமாவின் வீடென்ன? நானும் வெள்ளயனும் ஒரு நாள் அங்கு சென்றோம்"

உபாலி கூறினான்.

"நீ அங்கே போனியா? எப்படா போனாய்? தெரியுமென்றா நானும் வந்திருப்பேனே"

கொதலாவல குற்றம் சுமத்துமாப் போல் சொன்னான்.

"ஒரு வருடத்துக்கு முன்புதான் போனன். ஆனால் வெள்ளயனின் அப்பாவப் போன்றவரல்ல பெரியப்பா. மிகவும் நல்லவர். அன்பானவர். பெரியப்பாவின் மகளும் நல்லவள். அந்த அக்கா தோட்டத்தில கொழுந்து பறிக்கிறா. ரொம்ப அழகானவர். அதே போல அன்பானவர்.

அப்படிப்பட்ட அன்பான சீதேவி தமிழ்ப் பெண்ணொருத்திய நான் இந்தப் பக்கத்தில கண்டதேயில்ல"

உபாலி விபரம் சொன்னான்.

"ஏன்டாப்பா வெள்ளயன் திடீரென்று கல்கந்த போனான். தெரிந்திருந் தால் எங்களுக்கும் போயிருக்கலாம்.... சே......"

சின்னவன் பின்னடைந்துவிட்ட தோரணையில் கூறினான்.

"பகல் போனான். ஏன் போனானென்று தெரியல. மாமாவின் சீட்டுச் சல்லிய கொண்டுவர அம்மா அனுப்பியிருப்பா"

ஜெயக்குமார் சொன்னான். இந்நேரத்தில் வெள்ளயன் கிறேட் வெஸ்டர்ன் பாதையில் வந்து கொண்டிருந்தான்.

"அந்தா மேல் பாதயால் வெள்ளயன் வாரான்"

திடீரென்று உக்குங் சத்தமிட்டான். இருள் செறிந்திருந்தாலும் கூட அங்கே வருவது வெள்ளயன் என்பதை எல்லோரும் விளங்கிக் கொண்டனர்.

"என்ன கழுத்தில் வைத்துக் கொண்டு வாரான்?"

சுஸில் மிகுந்த ஆவலோடு கேட்டான்.

"மூங்கில் குழாய்க் கட்டொன்று கொண்டு வாரான்"

சூடி மகிழ்ச்சியுடன் சத்தமிட்டான்.

"இவனென்றால் கடவுளடா. கல்கந்தயில மூங்கில் குழாயிருப்பது எனக்கு ஞாபகம் வரவில்ல. ம்..... நட்சத்திரமொன்று செய்ய வழியில்லா மல் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தன். சா.... தெரியுமென்டா நானும் வெள்ளயனோட போயிருப்பன்"

கொதலாவல மகிழ்ச்சி வெளிப்பாட்டுடன் பேசினான்.

"பாவம்டா.... இவன் ரொம்பத் தூரத்திலிருந்து கழுத்திலடித்துக் கொண்டு வாரான். போவம். நாங்கள் அத எடுத்துக் கொண்டு வரப் போவம். அங்க நிற்கச் சொல்லி விசிலடித்துச் சொல்லுவம்"

சுஸில் அப்படிச் சொல்வதோடு பெடியள் கூட்டம் சிறுபாதை வழியாக ஓடத் தொடங்கினர்.

கோயில் முற்றத்திற்கு ஓடிச் சென்ற நண்பர்கள், விரல்களால் நாக்கை வளைத்து விசில் எழுப்பி மேல் பாதைப் பக்கம் பார்த்து கை கூப்பத் தொடங்கினர். அப்படி நின்ற வெள்ளயன், மூங்கில் குழாய்க் கட்டைக் கீழே போட்டுவிட்டு பதிலுக்கு கைகூப்பினான். பலரும் கோயில்

அருகேயுள்ள தேயிலைப் பற்றைக்கு மத்தியால் மேற்பக்கமாக ஓடத் தொடங்கினர். அசோகாவும் சூடியும் தார் வீதிக்கு போட்டிக்குப் போல் ஓடத் தொடங்கினர்.

"எங்களுக்கு களவாகப் போனாயென்ன?"

சுஸில் கோபப்பட்டது போல் கேட்டான்.

வெள்ளயன் வளர்ந்தவன் போல் தலையில் சுற்றியிருந்த தலைப் பாகையை அவிழ்த்து கையிலெடுத்துக் கொண்டு பாதையின் நடுவில் அமர்ந்தான்.

"நல்லாயிருக்கும் நீங்கள் எல்லோருமே வருவீங்கள். அப்பிடி வந்தி ருந்தா எனக்கு மூங்கில் குழாய் கொஞ்சமாவது கொண்டு வரக் கிடைத் திருக்காது. நீங்களெல்லாம் கிறேட் வெஸ்டர்ன் மலைக்காட்டு மூங்கில் பற்றைகளை நாசமாக்கத் தொடங்குவீங்கள். அப்புறம் தோட்ட மக்களி டம் அடிவேண்டிக் கொண்டுதான் வரவேண்டியிருக்கும்"

வெள்ளயன் களைத்தபடி சொன்னான். அவனது முகத்திலே சிரிப்பு மலர்ந்தாலும் களைப்புக் குணம் அகன்றதாகத் தெரியவில்லை.

"அது உண்மதான். எங்கட அண்ணாமாரைத் தெரியாதா? காட்டு மூங்கிலுக்கு மட்டுமல்ல, கரும்பு, தோடை, கொய்யா போன்றவற்றையும் விட்டு வைக்கமாட்டாங்கள்"

உக்குங் நகைச்சுவையாகச் சொன்னான்.

"ஐயோ சும்மா இரு. சொன்னதற்காக நீ சும்மா இருக்கப் போறியா? நீயும் பங்காளியாகிவிடுவாய்"

அசோகா சொன்னான்.

"சரி...... சரி...... இனிப் போவம்....வெள்ளயன் உனக்கு களைப்பிருக் குமே? ரெண்டு பேர் சேர்ந்து அந்த மூங்கில் குழாய்க்கட்டைத் தூக்குங்க"

சுஸில் ஆணையிட்டான்.

"வேண்டாம் வேண்டாம்..... என்னால் கொண்டு போக முடியும். நீங்கள் சிரமப்பட வேண்டாம்"

வெள்ளயன் எழுந்தான். தலையைச் சுற்றி தலைப்பாகையைக் கட்டிக் கொண்டான்.

"உன்ற இந்த மூங்கில் குழாய்த் தண்டுகளெல்லாம் எங்களுக்குத் தேவயில்ல. உனக்கு உதவி செய்யத்தான் வந்தோம்"

சின்னவன் குழாய்த் தண்டுக் கட்டை ஒரு பக்கத்தால் உயர்த்தியபடி சொன்னான்.

எல்லோருமாக வழிநெடுக நடந்து சென்றனர்.

"உனக்கு என்னத்துக்கடா குழாய்த்தண்டு? உங்களுக்குத்தான் வெஸாக் இல்லயே"

"ஏன்? எங்களுக்கு கூடு செய்யத் தடையென்னு உங்கட புத்த பெருமான் சொல்லியிருக்காரா?"

வெள்ளயன் கேட்டான்.

"இல்லயில்ல. அப்படியொன்றுமில்ல. நீ செய்யடா. டவுன் தமிழ்க் கடைகளிலயெல்லாம் வெசாக் கூடு பற்ற வைக்கிறாங்கதானே?"

சுஸில் சொன்னான்.

"இருந்தாலும் கந்தையாவின்ற சுருட்டுக் கடயிலும் பொன்னம்பலம் கடையிலும் வெஸாக்கிற்கு ஒரு நாளும் கொடி போடுறதுமில்ல. வெசாக் கூடு பற்ற வைக்கிறதுமில்ல"

அசோகா கூறினான்.

"ஏன் சீப் ஸைட், செல்வதி ஸ்டோர்ஸ், புஷ்பா.... இவங்க ஒரு நாளும் வெசாக்கிற்கு கடய அலங்கரிக்கமாட்டாங்க"

தயா, அசோகாவிற்கு விடுபட்டதை ஞாபகமூட்டினான்.

"அது மட்டுமில்லடா. இன்னும் நெறைய இருக்கு."

உபாலி சொன்னான்.

"சல்லி இருக்கிற முதலாளிமார் எல்லாரும் ஒன்றுதான். தோட்டத்து ஏழைத் தமிழ் மக்களுக்கு வெளியே வீசுகின்ற சாமானொன்றைக் கூட சும்மா கொடுப்பதில்லை. பழுத்த வெற்றிலையைக் கூட தமிழ் மக்களுக்கு குறைந்த விலைக்கு விற்கிறாங்க. எதையும் சல்லி கிடைக்குமென்னா செய்வாங்கள்"

கீர்த்தி சொன்னான்.

"எங்கட முதலாளிமாரவிட நாங்க உங்கள மதிக்கிறது அவங்கட மோசத்தாலதான். நாங்க வெசாக் கூடு செய்றம்..... அதைத் தூக்கிறம். அது நாங்கள் உங்களோடு இருக்கிறதால தான்டா"

வெள்ளயன் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான்.

"எங்கட அம்மா அப்பாமார் உங்களோட பழகுறதுக்கு விருப்பம்.

ஆனால் அளவுக்கதிகம் நட்பா இருக்கிறதுக்கு விருப்பமில்ல. இருந்தும் நாங்க அப்படிச் செய்றதில்லயே. ஒன்னாகக் குடிக்கிறம்.... பங்கு போட்டுச் சாப்பிடுறம்"

உபாலி சொன்னான்.

"இங்க இருக்கிற எல்லோரும் ஒன்று போல் ஏழைங்கதாே... சொல்லு பாப்பம்..... எந்த வீட்டிலயாவது பைசிக்கிள் துண்டொன்றாவது இருக்கா?"

சரத் சொன்னான்.

"ஏனடா உங்கட அடுத்த வீடு. உங்க மாமா வீட்டில இருக்கே"

அசோக ஞாபகமூட்டினான்.

"அது இருந்து என்னடா பயன்? பொடிஸிஞ்ஞோ மாமா அதிலதான வேலக்கி போறார். ம் உனக்கு எனக்கு ஓட ஒரு பைசிக்கிள் இருக் கான்னு கேக்கிறன்?"

சரத்தின் சகோதரன் சுனில் சொன்னான்.

"உண்ம தானடா..... எங்கட அப்பாவின்ட சம்பளம் குறைவு. அம்மா வும் பாட்டியும் கடயப்பம் செய்து கடைக்குக் கொடுக்கிறாங்க. எங்களு க்கும் வயிறு நிறைய சாப்பாடும் கிடைக்கிறதில்ல. இங்க யார்ரயும் தோட்டத்தில கொய்யா கரும்பென்று சாப்பிட்டுத்தான் வயிறு நிறையிது"

அனுபவப்பட்டு வளர்ந்தவன் போல் வெள்ளயன் சொன்னான்.

"இருந்தாலும் நாங்க சந்தோஷமா இருக்கோம் தானடா. இருந்திட்டு நாம சண்ட பிடிக்கிறதுதான்"

உக்குங் சொன்னான்.

பெடியன்கள் கோயில் அருகாமைப் பாதைக்கு வந்து சேர்ந்தனர்.

வெள்ளயனின் பாரத்தைச் சுமந்து கொண்டு வருவதை தமது வீட்டார் கண்ணுற்றால் பேச்சு வேண்ட நேருமென்று நினைத்த அசோகவும் சூடியும் மூங்கில் குழாய்க் கட்டை சிறுபாதையருகே கீழே வைத் தனர்.

"என்ற வெசாக் கூட்டைச் செய்து விட்டு எஞ்சிறத உங்களுக்கு தாரன்"

மூங்கில் கட்டைக் கழுத்தில் ஏற்றியபடி வெள்ளயன் சொன்னான்.

"இவனும் இவன்ற வெசாக் கூடும்"

"சின்னக் கூடொன்று செய்வான். அதுக்கு இவ்வளவு மூங்கில் தேவையா? ம்.... இவனுக்குப் பைத்தியம்"

"இவனுக்கெல்லாம் எதுக்கு வெசாக்?"

"இவன் சிங்களமாகப் பாக்கிறான்"

வெள்ளயன் சென்ற பின்பு இவ்வாறான கருத்துக்கள் அங்கே வெளிப்பட்டன.

"எப்படியிருந்தாலும் வெள்ளயன் எங்க எல்லா விஷயத்திலயும் கலந்து கொள்றான். எங்களுக்கு அவனில்லாமலும் முடியாதுடா. அவனுக்கு நல்ல மனசுடா"

சுஸில் கூறினான்

❖❖❖❖❖❖

தினசரி மதுபானப் பாவனைக்குப் பழகியிருந்த சிலர், இரவு வேளையில் சத்தமிடுவதும் அயலாருடன் சச்சரவில் ஈடுபடுவதும் சர்வசாதரணம். இருந்தும் வெசாக் தினத்திற்கு முதல்நாள் இரவு மிகவும் அமைதியாகக் கழிந்தது. மதுபானம் பாவிக்காமலிருந்தது அதற்குக் காரணமல்ல, மிகக் குறைவாகக் குடித்திருந்தார்களென்பதுதான் உண்மை. இதன் மூலம் வீட்டுப் பெண்களின் வேண்டுகோளுக்குத் தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர்.

வெசாக் தினம் உதயமானது.

இளம் சிறார்களின் முகங்கள் மகிழ்ச்சியால் அழகு பெற்றிருந்தது. வீட்டுத் திட்டத்தின் சகல வீடுகளுக்கு முன்னாலும் வர்ணக் கொடிக ளால் அலங்கரிப்பதில் பலரும் ஈடுபட்டனர். எஞ்சிய பல ரக நிறத்துண்டு துணிகள் இளம் சிறார்களின் பெறுமதியான பொருட்களாக மாறியிருந்தன. அவற்றை மேலே வீசியும் காற்றில் பறக்கவிட்டும் அவர்கள் ஓடியாடி சத்தமிட்டு வீடுகளுக்கு முன்னால் விளையாடிக் கொண்டிருந்தனர்.

"பௌத்த சமயம் பிரகாசிக்கட்டும்"
"நறுமலர்களால் புத்தரை பூஜிப்போம்"
"மகிழ்ச்சி நிறைந்த வெஸாக்"

இப்படியான வசனங்களைக் கொண்ட வர்ண வெசாக் கொடித் தொடர்களைத் தூக்குவதில் வளர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

வீட்டுத் தொகுதியில் ஜோன் மாமா, உபாலி, பொடி அப்பு ஆகியோ ரின் வீடுகளில் மாத்திரம் வானொலி இருந்தது. எல்லா வானொலிக ளிலும் பௌத்த கீதங்களே ஒலிபரப்பாகின.

"பௌத்த தர்மம் மனம்கொண்டு
பகிர்வோம் அனைத்தும் அடுத்தோர்க்கு....."

இவ்வாறான பழைய பக்திப் பாடல்கள் இனிமையான குரலில் ஒலித்து மனதைத் தொட்டுச் சென்றது. வாழ்க்கைப் போராட்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற அவர்களுக்கு அதிலிருந்து விடுபட்டு நிம்மதியாகப் பாடலொன்று கேட்பதற்கான சந்தர்ப்பம் இதுதான். புத்த தருமத்தின் மீதான ஈடுபாட்டை அவை வெளிப்படுத்தி அவர்களது ஆத்மாவை மகிழ்ச்சிப்படுத்தின. ஏனைய சாதாரண நாட்களில் கேட்கக் கிடைக்காத பக்தி கீதங்கள், வெசாக் தினங்களில் கேட்கக் கிடைப்பது உண்மையாகவே மூத்தவர்களுக்கு மாத்திரமன்றி இளையவர்களுக்கும் களிப்பூட்டின.

அந்நாட்களில் இப்போதுபோல் ஒவ்வொரு சந்தியிலும் விதவிதமான தானசாலைகள் காணப்படவில்லை. நகர வியாபாரிகளால் ஒழுங்கு செய்யப்படும் சாதாரண தான நிலையங்கள் ஒன்றோ இரண்டோ காணக் கிடைத்தன. அவற்றால் மகிழ்ச்சியடைந்தவர்கள் உண்மையாகவே வயிற்றுப் பசியால் அல்லறப்பட்டோரும் துன்பத்தில் துவண்டோரும் கஷ்டமான தோட்டத் தொழிலாளர்களும் தான்.

நகர விகாரையிலும் சுமன மகா வித்தியாலயத்திலும் பெரும் தரும நடவடிக்கைகள் தவறாமல் நடைபெறும். இங்கு தானமும் நீராகாரங்களும் நகரத்திலுள்ள பெரும் வியாபார நன்கொடையாளர்களது முழுமையான ஆதரவில், உயர்தரமாக எவ்வித குறைபாடுமின்றி நடைபெறும். வெசாக் கொண்டாட்டத்தின் அதி உச்சநிலை இருள்பரவும் போதே ஏற்படும்.

ஹொலிறூட் நகரசபை வீட்டுத்திட்ட பொது முற்றமாகத் திகழ்வது அந்த சிறுபாதைதான். ஒன்றாக இணைந்த வீடுகளுக்கு முன்னே விதவிதமான வெசாக் அலங்காரங்கள் ரம்மியமாகத் தெரிந்தன.

இருள் பரவி வரும்போது வெசாக் கூடுகளையும் களிமண் விளக்குகளையும் கையிலேந்திய வீட்டுக்காரர்கள் வீட்டுக்கு முன்னால் வரத் தொடங்கினர்.

அவர்கள் உயர்ந்த மூங்கில் மரங்களிலும் முன்பக்கச் சுவர்களிலும் யன்னல்களிலும் மரக்கிளைகளிலும் வெசாக் கூடுகளையும் வாளி விளக்குகளையும் தூக்கத் தொடங்கினர். வீட்டுத் தொகுதியில் இரண்டொரு வீடுகளில் மாத்திரமே மின்சாரம் காணப்பட்டது. அப்படிப்பட்ட வீடுகளுக்கு முன்னால் மிகவும் அலங்காரமான வெசாக் கூடு ஒன்றோ பலவோ ஏற்றுவது வழக்கம். சில வெசாக் கூடுகளில் மெழுகுதிரி பொருத்தியதாகவுமிருந்தன.

சிறு பிள்ளைகளும் பெற்றோரும் எல்லா வீடுகளுக்கும் சென்று தமது அயலவர்களின் அலங்காரங்களைப் பார்த்து மதிப்பீடு செய்தனர். வீட்டுத்

தொடரில் வசிக்கும் ஆச்சாரி தாத்தாவின் வீட்டுக்கு முன்னால் தேங்காய் எண்ணெய் விளக்குகள் அலங்காரமாக வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. அந்த வீட்டுக்கு வலப்பக்கமாக இன்னொரு தமிழ் சகோதரரான நாடார் மாமாவின் வீட்டுப் படியிலும் நிலத்திலும் எண்ணெய் விளக்குகள் பல ஒளிர்ந்தன.

மிகவும் அழகான வெசாக்கூடு வெள்ளயனுடையதே. செந்தாமரை மலரொன்றையும் சிறிய தாமரைப் பூக்கள் நான்கையும் அவன் நிர்மாணித்திருந்தான். வெண்ணிற அலை போன்ற மடிப்புகள் ஒட்டி மிகவும் சிரமமெடுத்து அவன் அக்கூட்டை உருவாக்கியிருந்தான். பௌத்த மக்களின் பாராட்டுக்கு உள்ளாகிய வெள்ளயனின் வெசாக் கூடு பற்றி எல்லோரும் கதைக்க ஆரம்பித்தனர்.

"பாருங்கள்.... தமிழ்ப் பெடியனானாலும் அவனது கூடு எவ்வளவு அழகு"

பொடியப்பு மாமா மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

வெள்ளயனின் தாய் சீதை மாமிக்கு வாய் நிறையச் சிரிப்பு; கதைக்கக் கூட முடியாதளவுக்கு!

"கொஞ்ச நாளா இவனுக்கு இதுதான் வேலை. சாப்பாடு தேத்தண்ணி இல்லாம கஷ்டப்பட்டான், பொடியப்பு அண்ணா. யாரெண்டாலும் நல்ல காரியங்கள் செய்யத்தானே வேணும்"

வெள்ளயனின் அப்பா கனகுமாமாவும் மிகவும் பெருமையோடு சிகரட் புகைத்தபடி வெசாக் கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். மகிழ்ச்சி மிகுதியால் அவருக்கும் பேசிக் கொள்ள முடியவில்லை. அவரது கண்கள் நிறைந்திருந்தன. வெள்ளயன் அதனை வடிவமைக்கும் போது தான் அதுபற்றி கவனிக்காததையிட்டு அவர் மனம் வருந்தினார். 'பெடியனுக்கு சல்லி கொஞ்சம் கொடுத்திருந்தா இன்னும் அழகாகச் செய்திருப்பான்' அவர் தனக்கே சொல்லிக் கொண்டார்.

இந்து சமயத்தவரான அவருக்கு பௌத்த சமயம் வேறுபட்ட சமயமாகத் தெரியவில்லை. தான் வேலை செய்யும் லொறியின் சாரதி ஆசனத்திற்கு மேமே கூட பௌத்த சமயம் உள்ளிட்ட ஏனைய சமய நாயகர்களின் படங்கள் காணப்பட்டன. கனகுமாமா அந்த புத்தரின் உருவத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வர முயன்றபடி சிகரட்டை உறிஞ்சினான்.

வெள்ளயன் களிப்புடன் காணப்பட்டான். புத்தரின் சாந்தமான முகத்தை நினைவில் கொண்டுவர அவன் பிரயத்தனப்பட்டான். மஞ்சள் நிறப் போர்வை போர்த்திய உருவம் அவன் நினைவில் தோன்றியது.

வெசாக் கூடுகளை ஏற்றிய பின்னர் நகரத்திலுள்ள விகாரைக்குச் செல்ல எல்லோரும் ஆயத்தமானார்கள். எல்லாப் போயா தினங்களிலும் விகாரைக்குச் செல்லாத சில இளைஞர்கள் வெசாக் போயா தினத்தில் மாத்திரம் விகாரைக்குப் போவார்கள். அங்கு மலர்பூஜை செய்து பஞ்சசீலம் காப்பர்.

பெடியன்களும் விகாரைக்குச் செல்ல ஒன்று கூடினர்.

"நீங்களெல்லாம் ஒன்றாக இருக்கிறது பிரச்சினயில்ல. இன்றக்கி நல்ல நாள். அதனால தேவயில்லாத வேலகள் செய்றதில்ல"

சுஸில், தயா, சின்னவன், சூடி ஆகிய குழு நண்பர்கள் நால்வரும் சிறுபாதைக்கிறங்கும் போது தாய் போல் அவர்களுக்கு பொறுப்பாகச் செல்லும் படி, அக்கா என்று இளவட்டத்தினர் அழைக்கும் சுமனக்கா எச்சரிக்கை விடுத்தாள்.

"ஓமோம்.... இன்றக்கி இந்த மேலான நாளிலயென்டாலும் உங்கட துடிப்பக் குறச்சிக் கொள்ளுங்க"

ஜோன்மாமி சொன்னார்.

"வெள்ளயன் விகாரைக்குப் போவமா?"

சிரிஸேன மாமா சிறுபாதையிலிருந்து வெள்ளயனைக் கேட்டார்.

வெள்ளயன் வெட்கத்தோடு சிரித்தான்.

நீ வாடாப்பா. போய் நல்ல உடுப்போட வா."

வெள்ளயனுக்கு அவ்வாறு சொல்லிவிட்டு நோனாச்சி சற்று தாமதித்தாள்.

இளவட்டத்தினர் எல்லோருக்கும் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

"பாட்டி போங்களன். நாங்கள் வெள்ளயனக் கூட்டிட்டு வாரம்"

கீர்த்தி நோனாச்சிக்கு சொன்னான்.

சற்று நேரத்தின் பின்னர் வெள்ளயன் நல்ல உடையணிந்து கொண்டு சிறுபாதைக்கு ஓடி வந்தான்.

"நாங்க வெள்ளயன விகாரைக்கு கூட்டிப் போறம்"

சீதைமாமி விரும்பினாள்.

"பரவாயில்லயம்மா கூட்டிப் போங்க"

இளவட்டத்திலிருந்து சற்று விலகிய நிலையில் இரண்டு மூன்ற பேர் மெல்ல மெல்ல நடந்தனர்.

"பாருங்கடா..... எல்லாருமே வெள்ளயன்ற வெசாக் கூட்டப் பற்றித்தான் கதைக்கிறாங்க"

ஒருவன் சொன்னான்.

"என்ன சொல்றாய்? அதொரு பெரிய கூடே? எனக்கும் குழாய்த் தண்டு கிடச்சிருந்தா நான் அதைப் போல இரண்டு மடங்கு பெரிதாச் செய்திருப்பன். சும்மாவல்ல.... குஞ்சுக்கூடுகள் ஆயிரம் வைத்து....."

இன்னொரு பையன் சொன்னான். அவனது தொனியில் பொறா மையே வெளிப்பட்டது.

"பாரென் அது இன்னக்கி மாத்திரந்தான் பத்தும்"

பாதை திருத்த அருகே குவிக்கப்பட்டிருந்த கல்லொன்றை எடுத்து தூர எறிந்தபடி இன்னொருவன் கூறினான்.

❖❖❖❖❖❖

பெடியன்களிடமிருந்து விடுபட்டுச் செல்ல வெள்ளயன் முயற்சித் தான். அது வெற்றியளிக்கவில்லை. மலர் விளக்குப் பூஜை செய்வதற்கு எல்லோரையும் வரிசைப்படும்படி பிரதம பிக்கு உத்தரவிட்டார்.

மலர்த்தட்டுக்களை இரு கைகளாலும் ஏந்தியபடி அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வரத் தொடங்கினர்.

"நான் ஒரு பக்கமாக நிக்கிறன்"

வெள்ளயன் சொன்னான்.

"ஆ.... சரி சரி"

சுஸில் ஏற்றுக்கொண்டான்.

மிகுந்த ஆசையுடன் பக்தி நிறைந்த மனதோடு, மலர்த்தட்டு, சந்தனக் குச்சிகளுடன் புத்த பூஜையில் ஈடுபட்டு வணங்குவோரை அவன் அவதானித்தான். பக்தர்கள் 'சாது' சொல்ல ஆரம்பித்தனர்.

புத்த பெருமானின் பிறப்பு, பரிநிர்வாணம், இறப்பு இவற்றை நினைவூட் டும் உயர்ந்த தினம் என்பதாலோ என்னவோ விகாரைப் பூமி யெங்கும் அன்பும் தயவும் பரவிக் கொண்டிருந்தது. வெள்ளயன் என்ற வேற்று மதச் சிறுவனொருவன புனித பூமியில் நிற்பது எல்லோருக்குமே மறந்து போயி ருந்தது. விசேடமாக அழைக்கப்பட்டிருந்த பௌத்த பிக்கு ஒருவரின் தர்ம போதனை ஆரம்பமாகியது.

சுனீத என்ற சிறுவனின் கணீரென்ற பேச்சு எல்லோருக்கும் விளங்கக் கூடியதாக சிறப்பாக அமைந்தது.

தர்மபோதனையில் பல விடயங்கள் வெள்ளயனுக்கு விளங்க வில்லை. பொறாமை, ஏமாற்றம், பரிநிர்வாணம் போன்ற சொற்களை, பின்னர் நண்பர்களிடம் கேட்டு விளக்கம் பெற நன்கு மனதில் பதிவு செய்து கொண்டான். அவன் அந்தச் சொற்களை மெல்ல முணுமுணுத்து மனப்பாடம் செய்து கொண்டான்.

"வெள்ளயன் எப்படி விகாரை?"

எப்பொழுதுமே வெள்ளயனுக்குத் தொந்தரவு கொடுக்கக் குறிபார்த்திருக்கும் கீர்த்தி, மிகவும் சிநேகபூர்வமாகக் கேட்டான்.

"எனக்கு நல்ல விருப்பமா இருக்கடா. பூஜை செய்பவற்றை இங்கே சாப்பிடக் கொடுக்கமாட்டாங்களா?"

அவன் கேட்டான்.

"எங்கட மதத்தின்படி பூஜை செய்தவற்றை சாப்பிடுவது பாவமான செயலாம்"

உபாலி தனக்குத் தெரிந்த அளவுக்கு விளக்கமளித்தான்.

❖❖❖❖❖❖

நகரத்தில் சிங்களக் கடைகளின் முன்னால் வெசாக் கூடுகளும் வாளிக் கூடுகளும் தொங்கவிட்டு, மின்னொளியூட்டியிருந்த விதத்தைக் கண்ட வெள்ளயனின் மனதில் மகிழ்ச்சியேற்பட்டது.

"அங்க பார் அல்விஸ் முதலாளி கடயில் வாளிக் கூடொன்றாவது இல்ல. வெளியே களி விளக்கு கொஞ்சம் பற்ற வைத்துள்ளார். அவரென்றால் பெரிய கஞ்சன்தான்டா"

வெள்ளயன் சொன்னான்.

வெசாக் அலங்காரத்தை ரசித்துக் கொண்டிருந்த பெடியன்களின் கவனம் அப்பக்கமாகத் திரும்பியது.

"உண்மதானடா. பிச்சக்காரனுக்குக் கூட இரண்டொரு சதம் கொடுக்காதவர். சம்பாதித்து சம்பாதித்து கட்டி வைக்கிறார்"

தயாசிரி சொன்னான்.

நகரத்தில் சில சிங்களக் கடைகளுக்கு முன்பாக புத்த உருவத்தின் தலைப் பகுதியிலிருந்து ஒளிக்கதிர்கள் பரவும் விதமாக, விட்டுவிட்டு ஒளிரும் அழகிய அலங்காரங்களும், புத்த உருவத்தின் பின்பக்கமாக மின்மோட்டார் இணைத்து வர்ணமான தடித்த மட்டை கடதாசி வட்டம் சுழலும் விதமான அலங்காரங்களும் காணப்பட்டன.

சித்தார்த்தரின் பிறப்பை பிரதிபலிக்கும் சந்தர்ப்பமும் அவர் நேரங் ஜனா நதியை குதிரையில் கடக்கும் காட்சியும் இயந்திர மூலம் செயற்படும் அலங்காரமும் புத்த தரிசனத்தின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும் ஒளிப்பெட்டியும் நகர சிங்கள பௌத்தவர்களின் கடைகளின் முன்னால் வைக்கப்பட்டுள்ளதைக் கண்ட வெள்ளயனின் உள்ளம் களிப்பால் நிரம்பியது.

இந்நேரமாகும் போது பெடியன்களோடு இன்னும் பலர் சேர்ந்திருந்த னர். வெள்ளயனின் இளைய சகோதரனான விஜயகுமார் எனும் கட்டயன், மூத்தவன் அல்லது தர்மசிரி, உபவங்ச எனும் காமினி, ஹொலி றூட் தோட்ட குடும்ப சுகாதார சேவகியின் உத்தியோக வீட்டில் வாழும் பியுங்மாமாவின் பிள்ளைகளான நிமல், கலு, சுஸில், டிகிரி ஆகிய நால்வரும் கூட அங்கே நின்றனர்.

இந்த இளவட்டத்தினரிடையே கருத்து வேறுபாடு, வெறுப்பு, கசப்பு ணர்வு இருந்தாலும் ஹொலிறூட் பிரதேசத்தில் ஒன்றாக வாழ்வதால் வெளிப் படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் உள்ளுக்குள் அந்யோந்ய உறவு இருந்தது. 'ஒரே ஊர்' என்ற உணர்வு இதயத்தில் ஊறியிருந்தது.

எல்லோரும் ஒன்று சேரும் பொது வைபவங்களின் போதே இந்த உணர்வு வெகுவாக வெளிப்பட்டது.

பெடியன்கள் தலவாக்கல நகரத்தில் ஹட்டன் பாதை நெடுக நடந்து சென்று இந்துக் கோயிலருகை அடைந்தனர்.

இளவட்டத்தின் பலரின் பாடசாலை நண்பர்களான செனவிரத்ன, சோமபால, ஹேமபால, ரத்னபால போன்றோரும் அவர்களோடு இணைந்திருந்தனர்.

தலவாக்கல புகையிரத நிலையத்திற்குச் செல்லும் படிக்கட்டருகே, ஹட்டன் பாதை ஓரமாக ரயில் தண்டவாளம் பொருத்தியமைத்த நீண்ட வேலி ஒன்றுண்டு. இந்த வேலிக்குக் கீழாக தலவாக்கல புகையிரத மேடை காணப்படும். இரும்பு வேலியருகே நின்றுபார்த்தால் தலவாக் கலை பிரதேசத்தின் பெரும்பகுதி தெரியும்.

பாதையின் இரு மருங்கிலும் ஆங்காங்கே இரவில் மணக்கும் பூப் பற்றைகள் காணப்பட்டன. அவற்றிலே பூத்திருந்த வெண்மலர்களின் நறு மணம், மனித மணங்களைப் புல்லரிக்க செய்து பரவிக் கொண்டிருந்தது.

தொலைவில் பரந்து சென்ற கிறேட் வெஸ்டர்ன் மலைமீது வெசாக் நிலா ஒளிக் கதிர்கள் படிந்து அபூர்வ சௌந்தர்யத்தை வழங்கியது.

ஹொலிறூட் பக்கம் செல்வதற்கான பூதுறுஓயாப் பாதையும் பதுளைப் புகையிரத வீதியும் நிலவொளியினால் ஓரளவு அழகாகத் தெரிந்தன.

துடிப்பான இளம் வயதைக் கடந்திருந்தாலும், பெடியள் கூட்டத்தின் அத்தனை பேரும் இந்த அற்புதக் காட்சியை விரும்பினர். வெசாக் கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியும் மன அமைதியும் காரணமாக, நிலவு பிரகாசிக்கும் இதர நாட்களைவிட இந்தச் சூழலின் அழகு வித்தியா சப்பட்டுத் தெரிந்தது.

"புத்தர் அவதரித்த இன்றைய நாள் எவ்வளவு அழகான நாள்? பசியோடிருந்தாலும் இது போன்ற நிலவு காயும் இரவில் இப்படியான அழகை கண்டால் போதும் வயிறு நிறைந்து விடும்"

வெள்ளயன் சொன்னான்.

"நீ சொன்னபோதுதான் ஞாபகம் வந்தது. ரெஸ்ஹவுஸ் அருகில் குடிபான தானமிருக்கு. வாங்க போவோம்."

அமர்ந்திருந்த இரும்பு வேலியிலிருந்து இறங்கியபடி ரத்னபால சொன்னான்.

இளவட்ட அங்கத்தவர் அத்தனை பேரும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

"எங்களுக்கு கிடைக்காதல்லவா? நாங்க ரயில் பாதயால் வீட்ட போறம்"

வெள்ளயனும் ஜெயக்குமாரும் அவர்களிலிருந்து விலகிச் செல்லும் எண்ணத்தோடு கூறினர்.

"ஏன் உங்களுக்கில்லை? அப்படி வேறுபாடில்லை. யாருக்கும் குடிக் கலாம். உங்களுக்குக் கிடைக்காவிட்டா எங்களுக்கு கிடைப்பதில் பங்கு போடுவோம்."

சுனில் சொன்னான்.

இரண்டும் கெட்டான் நிலையிலிருந்த வெள்ளயனும் ஜெயகுமாரும், இறுதியில் நண்பர்குழுவுடன் இணைந்து கொண்டனர்.

எல்லோரும் புகையிரத நிலையப் படிக்கட்டினூடாக கீழே இறங்கத் தொடங்கினர்.

❖❖❖❖❖❖

வெசாக் நிலவு, பொற்கதிர் பரப்பி மனித மனங்களில் அழகிய எண்ணங்களைப் பிறப்பித்துக் கொண்டு வானத்தில் பவனி வந்தது.

ஹொலிறூட் நகரசபை வீடுகளுக்கு முன்னால் வெசாக் விளக்குக் கூடு, வாளி விளக்குகள் சிலவற்றில் மாத்திரம் மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. வீட்டு வரிசையின் கடைசியில் வெள்ளயனின் வீட்டுக்கு முன்னால் கொய்யா மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த விசாலமான செந்தாமரை மலரும் சிறிய தாமரைப் பூக்கள் நான்கும் கொண்ட அலங்கார வெளிச்சக் கூட்டிலும் மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் பிறகு ஓரளவு இரவான பின் தனது கூடுகளில் மெழுகுதிரி ஏற்றியதால் நள்ளிரவு வரை அது அணையாமலிருந்தது.

வீட்டுத் திட்டத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து முழு இரவும் வானொலியில் பிரித் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. உலகிலுள்ள சகல உயிரினங்களுக்கும் நல்வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டு, மெல்லிய சந்தத்தோடெழுந்த பிரித் பாராயணம், நள்ளிரவில் பனி தோய்ந்த காற்றோடு கலந்து சுற்றுச் சூழலெங்கும் அமைதியை நிலை நிறுத்தியது. சிறு சத்தத்திற்குக்கூட முழுப் பிராந்தியமும் அதிரக் கூடியவாறு பெருங்குரலில் குரைக்கும் நகரசபை வீட்டுத் தொகுதி நாய்களுக்கு தமது கடமை மறந்து விட்டது போலும்!

வீட்டுத் திட்டத்திற்கு முன்னாலுள்ள சிறுபாதையில் இருளில் அசையும் சில உருவங்கள்........!

அந்தப் பக்கமாகத் தலையை உயர்த்திப் பார்த்த சுமனக்காவின் வைட்டா, அது புதியவர்களல்ல என்பதைப் புரிந்து கொண்டதாலோ என்னவோ மௌனமாக இருந்துவிட்டது. அதன் அருகிலேயே நின்ற ரோஸா சும்மா இருந்துவிடவில்லை. அது சிறுபாதைக்கு ஓடிச் சென்று காதுகளை உயர்த்திப் பார்த்தது. சிறுபாதையில் வெள்ளயனின் வீட்டின் முன்னால் கற்பாறை அருகில் நிற்பது யாரென்பதை விளங்கிக் கொண்ட அது மீண்டும் திரும்பி வந்து ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வைட்டாவின் அருகிலேயே நின்றது. மீண்டும் தூங்க ஆயத்தமான போது...

வெள்ளயனின் வீட்டருகே கேட்ட ஒலியால் ரோஸா டக்கென்று எழுந்தது. கூடவே வைட்டாவும் எழுந்து அந்தப் பக்கமாக ஓடியது. சிறுபாதை வழியில் ஓடும் சிலரின் பின்னால் இரண்டு நாய்களும் விரட்டிக் கொண்டோடின. அந்தளவுக்கு உயர்ந்த தொனியில் குரைக்காமல் தப்பியோடுபவர் பின்னால் பாய்ந்து சென்ற நாய்கள், அவர்கள் தெரியாவர்கள் அல்ல என்பதால் உடனடியாகவே நின்றுவிட்டன.

# 9

"ஐயோ கடவுளே! வெள்ளயனின் வெஸாக் கூட்டை உடைத்து..... இதப் பாருங்கொ நோனாச்சி. அட கடவுளே.... என்ன அநியாயம் இது"

வீட்டின் முன் கதவைத் திறந்த சீதைமாமி சத்தமிட்டாள். பெரிய விபரீதமொன்று நடந்திருப்பதாக உணர்த்திக் கொண்டு எழுந்த அந்த ஓலத்தால் நகரசபை வீட்டுத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் கண்விழித்தனர்.

"ஏன் என்ன நடந்திருக்கு?"

அல்பட் மாமா சாரத்தை உயர்த்தியபடி வெள்ளயன் வீட்டுப்பக்கமாக ஓடிக் கொண்டே அயல்வாசியொருவரிடம் கேட்டார்.

"தெரியாது போய் பார்ப்பம்"

"நேற்று இரவு வெள்ளயனின்ட வெசாக் கூட்டை கல்லடித்து உடைத்திருக்காங்க" யாரோ சொன்னார்கள்.

"யார் செய்தாலும் மிக மோசமான வேலை. பாவம்..... தமிழ்ப் பையனென்டாலும் வெசாக் போயாவுக்குச் செய்த கூடு"

சிரிஸேன மாமா வீட்டிலிருந்து வெளியே இறங்கியபடி சற்றே ஆவேசப்பட்டார்.

"கீழ்சாதி வேல. இந்தப் பெடியன் எவ்வளவு கஷ்டப்பட்டு அதச் செய்தான்"

வெள்ளயன் வீட்டு வாசற்படியில் அமர்ந்து மிகுந்த சோகத்தோடு, உடைந்து கிழிந்து கொய்யாமரத்தில் தொங்கும் வெசாக் கூட்டை பார்த்துக் கொண்டிருந்த விதம்.... எவர் மனதையும் சலனிக்கச் செய்யவல்லது.

தூக்க மயக்கத்தை கலைந்தபடி பெடியன்கள் ஒவ்வொருவராக வெள்ளயன் வீட்டுப் பக்கம் வர ஆரம்பித்தனர்.

"இப்பிடி வேல செய்ய வேற யாரும் வரப் போறதில்ல. இங்க உள்ள பெடியங்கள்தான் இதச் செய்திருப்பாங்க"

பையன்களை வெறுக்கும் பெண்ணொருத்தியின் குரல்.

"ம்.... உன்ற பெடியங்கள் இவங்களோட சேர்றதில்லதானே. அவங்க சாந்தமான அமைதியான பிள்ளைங்க. எங்கடயெல்லாம் கீழ்சாதிகள். என்ற வாயத் திறந்து கொள்ளாத"

நோனாச்சி அவள்மீது பாய்ந்தாள்.

"இன்னும் போயா கழியவில்லை. இது பெரும் பாவம். மிகப் பெரிதாக போயாவுக்கு விரதமிருக்காங்களாம்"

நோனாச்சியின் எதிர்வினைக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்துப் பேசிய அந்தப் பெண் அவ்விடத்திலிருந்து காணாமல் போய்விட்டாள்.

"நீ பயப்படாமலிரு வெள்ளயன். நானுக்கு கூடொன்று செய்யச் சல்லி தாரன்"

நோனாச்சி வெள்ளயனின் தலையைத் தடவியபடி சொன்னாள்.

அதுவரை மனதில் சிறைப்படுத்தியிருந்த சோகத்திற்கு வெள்ளயன் விடுதலை கொடுத்தான். அவன் இரு முழங்கால்களுக்குமிடையே தலை புதைத்து அழத் தொடங்கினான்.

நண்பர்கள் வெள்ளயனை சற்றே பயத்துடன் தான் நெருங்கினர். வெசாக் கூட்டிற்கு கல்லெறிந்த குற்றச்சாட்டு தம்மீது திரும்பிவிடுமென்ற சந்தேகம் பலரது மனதிலிருந்தது. அப்படியிருந்தாலும் வெள்ளயனை ஆறுதல்படுத்துவது தமது கடமையென்பதை நண்பர்கள் உணர்ந்தனர். வெசாக் கூட்டிற்கு கல்லெறிந்தவர்களும் அவனுக்கு ஆறுதல் கூற முன் வந்திருந்தனர். உண்மையிலேயே அந்த நடவடிக்கை யையிட்டு அவர் கள் பின்வாங்கவே செய்தனர். கடைசியாகத்தான். இளவட்டத் தலை வன் சுஸில் அங்கே வந்தான். அவன் நேரே சென்று வெள்ளயனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"இதுக்கு அழ வேண்டியதில்லயடா எழும்பு. நாங்க இருக்கிறம் தானே. நாங்கள் சேர்ந்து அந்தக் கூட்டைத் திரும்பவும் செய்வோம்"

சுஸில் சொன்னான்.

வெள்ளயனின் வீட்டு முன்னால் கூடியிருந்த அயலவர்கள் அத்தனை பேரும் சுஸிலின் வசனங்களால் மகிழ்ச்சிக்குள்ளானார்கள். வெள்ளய னின் வெசாக் கூட்டிற்கு கல்லெறிந்ததில் தங்களது பிள்ளைகளும் சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமென்ற சந்தேகம் எல்லாப் பெற்றார் மனதிலும் ஏற்பட்டிருந்தது. சுஸிலின் வார்த்தைகள் பெற்றாருக்கும் உணர்வூட்டி யிருந்தது.

"ஓம் நாங்களும் உதவி செய்வம். நீங்கள் கூடு செய்யுங்கடா"

பெற்றார் கூறினர்.

"அதே போல இந்த அநியாயத்த செய்தவங்களயும் தேடிப் பாருங்க. அவங்க கைகால்களை உடைக்கணும்"

சுஸிலின் அப்பாவான பொடியப்பு மாமா கோபத்தை வெளிக் கக்கினார். இளவட்டத்தினர் மாத்திரமன்றி நகரசபை வீட்டுத் திட்டப் பெற்றோரும் கூட பொடியப்பு மாமாவுக்குப் பயந்தனர்.

சீதை மாமியும் கனகு மாமாவும் வெள்ளயன் வீட்டாரும் இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுக்காத தோரணையில் பார்த்த படியிருந்தனர். அயலாரான சிங்கள மக்களின் அன்பையும் ஆதரவையும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் சீதை மாமியும் சரோஜினி அக்காவும் கண்களைத் துடைத்துக் கொண்டனர். அப்பாவியாகச் சிரித்தபடி உடைந்து போயி ருந்த வெசாக் கூட்டையும் வெள்ளயனையும் கனகுமாமா மாறிமாறிப் பார்த்தார். அவரது கண்கள் பளபளத்தன. அது கண்ணீரினாலா அல்லது தினசரி பாவிக்கும் மதுபானம், வெசாக் காரணமாகக் கிட்டாமல் போனதால் கண்கள் போதையேறாமல் விட்டதனாலா என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

"சரி காலயில முகங் கழுவிட்டு வேலயத் தொடங்குங்கோ. நான் உங்களுக்கு வடை சுடுறன்"

பாய்ந்து செல்லும் மகிழ்ச்சிப் பிரவாகத்தோடு சீதை மாமி சொன்னாள்.

வெள்ளயனின் மனதில் சூல்கொண்ட கவலை மெல்ல அகன்று சென்றது. அவன் வியப்போடு அம்மாவின் முகத்தைப் பார்த்தான். தனது சமயத்தில் கூடக் கிட்டாத கௌரவம் தனக்கும் தனது குடும்பத்த வர்களுக்கும் சிங்கள மக்களால் கிடைப்பதையிட்டு அவன் மனதில் மிகுந்த மகிழ்ச்சியேற்பட்டது.

"கொஞ்சம் கூடுதலா வடை சுடுங்க தங்கச்சி. நாங்க சல்லி தாரம். எங்கட வீட்டாக்களுக்கும் கொடுக்கணும்"

பொடியப்பு மாமா சொன்னார்.

"எங்களுக்கும் வேணும்"

"எங்களுக்கும்...."

"நாங்களும் சல்லி தாரம்"

ஏனைய பெற்றோரும் கேட்டார்கள்.

"வெள்ளயன் பிழயில்ல வேல. நீ கூடு செய்றதால அம்மாவுக்கு யோகம் அடிக்கிது"

யாரோ ஒரு அக்கா சொன்னார்.

"ஐயோ அப்படியில்ல பிள்ள. எனக்கு சல்லி வேணாம். நான் சும்மா செய்து தாரன். புத்த பெருமான ஞாபகமூட்டித் தாரன்"

சீதை மாமி சொன்னார்.

"ஹோ.....ஹோ...... சீதை மாமி வடைதானம் தரப் போறா"

கீர்த்தி சத்தமிட்டான்.

நல்லமாமா அவனை முறைத்துப் பார்த்தார்.

கீர்த்தி மௌனித்துக் கீழே பார்த்தான்.

"உனக்குத் தானம் தர எங்கிருந்தடா சல்லி? நாங்க சல்லி தாரம். நீங்கள் வடை சுடுங்கடா. தேவயென்னா எங்கட பெட்டயளயும் உதவிக்கு எடுத்துக் கொள்ளுங்க"

பொடியப்பு மாமா சொன்னார்.

சிறிது நேரத்திற்கு முன்பு வெள்ளயனின் வீட்டுக்கு முன்னாலிருந்த நிலைமையை விட வித்தியாசமான சூழல் உருவாகியிருந்தது.

வெசாக் நோன்மதி தினத்திற்கு அடுத்த நாளும் விடுமுறை நாளாக அமைந்ததால், எல்லோரும் அந்த விசேட தினத்தை மிகவும் இலேசாகக் கடத்தத் தயாராயினர்.

இருந்தாலும் நாள்தோறும் நகரத்திற்குப் போய் பழகிய ஆண்களுக்கு வீட்டிலிருந்து காலத்தைக் கடத்துவது கஷ்டமான காரியம் தான். அதனால் அவர்கள் காலை ஆகாரத்தின் பின்னர் மன நிம்மதியோடு நகர்ப் பக்கம் செல்லத் தொடங்கினர்.

❖❖❖❖❖❖

காலை ஆகாரத்தின் பின் இளவட்டத்தின் சகல உறுப்பினர்களும் வெள்ளயனின் வீட்டுக்கு முன்னால் ஒன்று சேர்ந்தனர். அதற்கிடையில் வெள்ளயன் வேலையை ஆரம்பித்திருந்தான். பாதிப்புக்குள்ளான கலையலங்கார வெசாக் கூட்டை, கொய்யா மரத்திலிருந்து கீழிறக்கு வதற்கு ஜெயக்குமார் மட்டுமல்ல, கனகரத்தினமும் வெள்ளயனுக்கு உதவினான்.

"நாங்கள் வரும்வரை இருந்திருக்கலாம் தானே? என்ன இப்பிடி அவசரப்பட்டு இறக்கினாய்?"

சற்றே கோபத்தோடு அசோகா கேட்டான்.

'கொய்யா மரத்துக்கேறி கூட்டை இறக்கும் போது நாலைந்து

கொய்யாப்பழங்களும் பறித்திருக்கலாம். அதுவும் அடிபட்டுப் போயிற்று. இவன் நிலத்திற்கே இறங்கிவிட்டானே'- அசோகாவின் அடிமனதில் இந்த எண்ணமே ஏற்பட்டது.

“நீங்கள் கொய்யா மரத்துக்கேறினால் கூட்டை மட்டுமா நிலத்திக்கு போடுவீங்கள். கொய்யாப் பழங்களயும் முடித்திருவீங்க”

ஜெயக்குமார் கூறினான்.

“எப்பிடியும் இனி நாங்கள்தானே இவற்றை பிடுங்கிச் சாப்பிடுவது”

தயா சிரித்தபடி சொன்னான். எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

பெடியள் ஒன்றாகச் சேர்ந்து மகிழ்ச்சியோடு மனம் கலந்து சிரிப்பதைப் பொறுக்காத பெண்ணொருத்தி ‘பைத்தியம்’ என்று தலையில் கையடித்தபடி வீட்டினுள்ளே சென்றாள்.

❖❖❖❖❖❖

“எங்கடா உபாலி இல்லயா?”

நண்பர்கள் மத்தியில் குறைபாட்டை உணர்ந்த வெள்ளயன் கேட்டான்.

“அவன் பசை செய்து கொண்டு வருவான். பலமாணிக்கம் போட்டு நல்ல பதமாக அதைச் செய்து கொண்டு வருவான்”

கொதலாவல பதில் சொன்னான்.

பையன்கள் வெள்ளயன் வீட்டுச் சாலையிலும் முற்றத்திலும் அமர்ந்து, விபத்துக்குள்ளான வெசாக் கூட்டை மீண்டும் ஒழுங்கமைக்க ஆரம்பித்தனர்.

மூத்த தரப்பினர் சிலர் பெடியளின் வேலைகளைப் பார்த்து ஆலோசனை வழங்கிச் சென்றனர். நல்ல மாமாவும் அவர்களோடு சரிசமமாய்ச் சேர்ந்து பகிடிவிட்டபடி நின்றமை இளவட்டத்தினருக்கு பெரும் உற்சாக மூட்டியது. இருந்தும் கீர்த்தி, அசோகா போன்றவர்கள் நல்லமாமாவின் வரவையிட்டு மகிழ்ச்சி கொள்ளவில்லை.

“கடதாசி கொஞ்சத்தையும் கொண்டு வந்து தந்துவிட்டு தன்ற வேலையைப் பார்த்துக் கொண்டு போயிருந்தால் சரிதானே”

கீர்த்தி சொன்னான்.

“அதில்லடா. இந்தப் பொடிப்பயல்களுக்குள்ள இவர் புகுந்து கொண்டு என்னதான் செய்றார்? எங்கட கூத்தும் இல்லாமல் போகுது. ம்.... பெரிய கரைச்சல்”

அசோகாவும் அதற்கு எதிர்வினை சொன்னான்.

"கூடு செய்திட்டம். இனி வடை தானம் தான்"

உக்குங் சொன்னான்.

"என்னடா.... இன்னும் வடை இல்லயா?"

சுஸில் ஜெயகுமாரிடம் கேட்டான்.

"இப்போதான் சுடுறாங்க"

கனகரத்தினம் பதில் கூறினான். அவனால் இன்னும் நன்றாக சிங்க ளம் கதைக்க முடியவில்லை.

"நீ போய் சுட்டிருக்கிறத எடுத்திட்டு வா தம்பி"

நல்லமாமா எல்லோருக்கும் கேட்பதற்கு கனகரத்தினத்திடம் சொல்லிவிட்டு, அவனை நெருங்கிக் காதுக்குள் ஏதோ சொன்னார்.

சிரித்துக் கொண்டு தலையைத் தாழ்த்திய கனகரத்தினம் வீட்டுக்குள் ஓடிச் சென்றான். ஜெயக்குமாரும் அவன் பின்னால் வீட்டினுள் சென்றான்.

"நல்லமாமா வட கேட்டாரம்மா"

கனகரத்தினம் அம்மாவிடம் சொல்லியபடி சமையலறை நிலைப்படி யில் சாய்ந்தான். வடை சுடுவதற்கு தாழியில் எண்ணெய் ஊற்றியபடி சரோஜினி அக்கா திரும்பிப் பார்த்தாள்.

"இன்னும் சுடவில்லையென்று சொல்லு"

அவ்வாறு கூறியபடி தனது காரியத்தில் ஈடுபட்டாள்.

"வெள்ள அண்ணாதான் வடை கொண்டு வரச் சொன்னதாக அம்மாவி டம் கூறும்படி நல்லமாமா சொன்னார்"

கனகரத்தினம் நல்லமாமா சொன்ன ரகசியத்தை வெளிப்படுத்தி னான். சரோஜினி அக்காவும் செல்லம்மாவும் சீதை மாமியும் சிரித்தனர். சீதை மாமியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"சரோ அடுப்பு எரியுதான்னு பார். செல்லம்மாவுக்கு அடுப்புப் பற்ற வைக்கத் தெரியாது"

சீதைமாமி சரோஜினி அக்காவுக்கு உத்தரவிட்டாள். அடுப்பருகே வாங்கில் அமர்ந்திருந்த வெள்ளயனின் பாட்டி, செல்லம்மா அடுப்பூதும் சிறிய இரும்புக் குழாய்த் துண்டை நிலத்திலடித்து எழுந்து, சமையல றைப் பக்கமாக கோபத்தோடு சென்றாள்.

"அம்மா இன்னுமே அடுப்பு பற்ற வைக்கல்லியா?"

ஜெயக்குமார் சமையலறைக்கு வந்து கேட்டான். சரோஜினி அவனை முறைத்துப் பார்த்தாள்.

"கொஞ்சம் பொறுத்துக்கோடா. என்ன அவசரம்? நம்ம வீட்டாக்களுக்குத்தான் இந்த அவசரம்"- கோபமடைந்ததை வெளிப்படுத்திக் கொண்டு சீதை மாமி சொன்னாள்.

வெள்ளயனின் வெசாக் கூட்டைச் சுற்றிக் கொண்டு பெடியள் காணப்பட்டதால் வீட்டுச்சாலை இடமின்றி நிறைந்திருந்தது. ஒரு மூலையில் இரு சுவர்களோடும் சேரும் வகையில் மூன்று தட்டுக்களைக் கொண்ட பலகை முக்காலியொன்று காணப்பட்டது. மேல் தட்டில் உலர்ந்த பெட்ரிகளால் இயங்கும் வானொலிப் பெட்டியொன்று. அதனருகே தண்ணீர் நிறைந்த மிட்டாய் போத்தல். அதனுள்ளே இரண்டு பிளாஸ்திக் மீன்களும் பச்சைச் செடியொன்றும் காணப்பட்டது. நடுத்தட்டில் சட்டமிட்டதொரு படம். கீழ்த்தட்டில் உலர் பெட்ரியொன்று. வீட்டுக்குள் பிரவேசித்ததும் கண்களில் படும்படியாக பெரிய படமொன்று முக்காலிக்கு வலப் பக்கமாக சற்று உயரத்தில் தொங்கவிடப்பட்டிருந் தது. அது வேலுப்பாட்டனின் உருவம். அவர் கனகுமாமாவின் தகப்ப னான போதும் சீதைமாமி உள்ளிட்ட எல்லோருமே 'வேலுப் பாட்டன்' என்ற பொதுப் பெயர் கொண்டே அழைத்தனர்.

வெள்ளயன் வீட்டிலிருந்து பரவிய வடை பொரிக்கும் மணத்திற்கு பெடியளின் வாய்கள் ஊறின. நல்லமாமாவும் இன்னும் இரு பெற்றோரும் அருகே நின்றதால் பெடியள் ஒருவரோடொருவர் சமிக்ஞையால் பேசிக் கொண்டனர்.

எல்லோரும் வாய் மூடிக் கொண்டிருந்த போதும், அவ்வாறிருக்க முடியாத கீர்த்தி வாய் திறந்தான்.

"வடை சுடும் மணத்திற்கே வயிறு நிறையுதடா"

பெடியன்களெல்லோரும் அதற்கு சிரித்தனர். நல்லமாமாவும் எங்கோ பார்த்தபடி சிரித்தார்.

வெசாக் கூட்டில் ஒன்றின் மேல் ஒன்று ஒட்டியிருந்த கடதாசியை விலக்கிக் கொண்டிருந்த வெள்ளயன் வீட்டினுள்ளே சென்றான். சுசில், சரத்தின் கக்கத்திற்கு விரலால் குத்தினான். கூச்சத்தினால் துள்ளிப் பாய்ந்த அவனது நாவிலிருந்து தூசண வார்த்தைதான் முதலில் வெளிப்பட்டன.

"....... சும்மா நில்லடா சுசில்"

நல்லமாமாவுக்கு கோபம் வந்தது.

"என்ன இங்க தூசணம் பேசிறீங்கள்?"

"நல்ல வேலை செய்யும் போதும் அவங்களால குழப்பம் செய்யாமல் இருக்க முடியல"

யாரோ மூத்தவர் ஒருவர் கூறினார்.

"அதுதான் பாருங்க"- என்று அதற்கு எண்ணெய் வார்த்த நல்லமாமா வும், சரத்தின் கக்கத்திற்கு குத்தினார். கூச்சத்தினால் துள்ளிப் பாய்ந்த சரத்தும் தூசண வார்த்தையின் முதலெழுத்தோடு நிறுத்திக் கொண் டான். நல்லமாமா எதுவும் நடக்காதது போல் எங்கோ பார்த்துக் கொண்டி ருந்தார். பெடியளின் சிரிப்பலையால் வெள்ளயனின் வீடு நிரம்பியது.

சமையலறையில் வேலைப் பழுவோடிருந்த மகளுக்கும் மாமியாரான செல்லம்மாவுக்கும் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்த சீதை மாமியின் மனம் மகிழ்ச்சியால் பூரித்துப் போனது. 'இந்த மகிழ்ச்சி எனது பெடியனால் அல்லவா? வெசாக்கினால் மகிழ்ச்சியடையும் தமிழ் பெண்ணொருத்தி உலகத்தில் வேறெங்கும் இருக்க முடியாது'. இப்படி எண்ணிய அவளது கண்களில் நீர் முட்டியது. எண்ணெய் வடிவதற்காக பால்வடியிலிட்ட வடை களை ஒவ்வொன்றாக பெரிய பேஸனொன்றில் போடத் தொடங்கினாள்.

"குடுங்கம்மா. நான் எடுத்திட்டுப் போறன்"

கனகரத்தினம் வடை பேஸனைக் கொண்டு போக முன்வந்தான்.

"முதல்ல நான் இதக் கொடுத்திட்டு வாரன். நீ அப்புறம் கொண்டு போ ராஜா"

வெள்ளயன் தனது சிங்கள நண்பர்களோடு வடை சாப்பிட்டு மகிழ்வ தைப் பார்க்கும் ஆசை சீதை மாமிக்கு ஏற்பட்டது.

"இந்தாங்க பிள்ளைங்களுக்கு வடை. பங்கிட்டுச் சாப்பிடுங்கோ. அந்த மாமாமாருக்கும் கொடுங்க"

சீதைமாமி வடை பேஸனை, சுஸிலின் கையில் கொடுத்தபடி சொன்னாள்.

இரண்டொரு வளர்ந்தவர்களும் கூட ருசித்து வடை சாப்பிடுவதைக் கண்டபோது அவளது கண்கள் மீண்டும் நிறைந்தன. அவள் உடனே வீட்டுக்குள் சென்று விட்டாள்.

❖❖❖❖❖❖

இருண்ட மழைமேகம் வானில் திரண்டபடியிருந்தது. வானத்தைப் பார்த்தபடியிருந்த வெள்ளயனின் மனம் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டது.

'இரவைக்கு மழைபெய்தால்? இல்லை பெய்யப் போவதில்லை. புத்தபெருமான் அப்படி நடக்க இடம் கொடுக்க மாட்டார்'

அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

இளம் பெடியள் கூட்டத்தின் பழக்கப்பட்ட செயற்பாடுகள் தற்காலி கமாக நிறுத்தப்பட்டிருந்தன. மூத்தவர்களின் கடும் கண்டனங்களாலும் வெசாக் கொண்டாட்டத்தினாலும் அந்நிலையேற்பட்டிருந்தன. அடுத்த வர்கள் உடைமைகளை நாசம் செய்வது பாவமென்று திரும்பத் திரும்ப சொல்வதன் மூலம் அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு அற்றுப் போய்விட்டது. முன்பு போல் அறிவுறுத்தல்களை நிராகரித்துவிட்டு, தவறு செய்ய முனைவதால் கடுந் தண்டனை கிட்டுவது சொறகளுக்கு மாத்திரம் கட்டுப்பட்டதல்ல என்பது பெடியளுக்கு நன்கு புரிந்திருந்தது.

எவ்வாறாயினும் அதிகம் கண்களுக்குப்படாத இடங்களிலுள்ள இரண்டொரு கொய்யா மரங்களும், பாலத்திற்கு கீழ் பக்க மரியாயியின் கரும்புப் பற்றையும் வழமையான தலைவிதிக்கு முகம் கொடுத்திருந் தன. வெசாக் பூரணை காரணமாக வீடுகளில் நிறையவே சாப்பிடக் கிடைத்த போதும் பெடியள் அதன் மூலம் திருப்தி அடையப் போவதி ல்லை. அடுத்தவர்களின் கொய்யா, மா மரங்களை காலியாக்கவிட்டால் அவர்களின் மனம் நிறைவதே கிடையாது. குறைந்த பட்சம் மாடசாமி கோவிலருகிலுள்ள பனிஜம்பு மரத்திற்கேறி, காயில்லாவிட்டாலும் ஜம்புப் பூக்களையாவது பறித்துச் சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் அவர்களில் எவருக்குமே தூக்கம் போகாது.

பெரியவர்களின் கண்களில் படாமல் சுதந்திரமாக கொய்யாவையும் கரும்பையும் சப்பியபடி அலைந்த பெடியள், இருள் படரும் போது நகரசபை வீட்டுத் தொகுதி எதிரிலான சிறுபாதையருகே வந்தனர்.

புனருத்தாரணம் செய்யப்பட்டு நவீனமாக்கப்பட்ட, வெள்ளயனின் வெசாக் கூட்டிற்கு ஒளியூட்டுவதே எல்லோரதும் ஆர்வமாகவிருந்தது.

வெள்ளயனின் வெசாக் கூட்டை இரண்டு மூன்று மின்விளக்குகளைக் கொண்டு ஒளியேற்ற நல்லமாமா யோசித்திருந்தார். வீட்டுத் தொகுதியில் இரண்டொரு வீடுகளில் மாத்திரமே மின்சார இணைப்பிருந்தது. அரு காமை வரையில் மின்கம்பம் காணப்பட்ட போதும், அதிகமானோரிடம் அதன் பயன்பாட்டைப் பெற வசதியிருக்கவில்லை. வீட்டுத் தொகுதிக்கு

சமாந்தரமாக மேரே 33,000 வோல்ட் மின்கம்பி நான்கு எங்கிருந்தோ ஹொலிறூட் பெருந்தோட்டம் வரை இழுக்கப்பட்டிருந்தது. அந்த அதிசக்தி வாய்ந்த மின்தந்திகளைப் பார்த்தபடி நகர சபை வீட்டுத் தொகுதி இருளில் மூழ்கிக் கிடந்தமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளயனின் வீட்டுக்கருகே நல்லமாமா வீட்டில் மின்சாரமிருந்தது. நோனாச்சியனதும் விருப்பத்தோடு, வெள்ளயனின் வெசாக் கூட்டிற்கு மின்சாரம் வழங்க நல்லமாமா முன்வந்தார்.

நகரசபை மின்சாரப் பகுதியில் வேலை பார்க்கும் ஆரியபால அண்ணாவும், மின்சார வேலைகள் தொடர்பாக சற்று அறிவுள்ள, பெடியள் வட்டாரத்தின் செயற்திறன் மிக்க உறுப்பினர்களான சரத்தும் சுசிலும் அந்தப் பணியில் ஒன்றிணைந்தனர்.

வீட்டுத் தொகுதிப் பிள்ளைகளின் கைகளால் உருவான விதவித மான வெசாக் விளக்குக் கூடுகள், மெழுகுவர்த்தி ஒளியால் பிரகாசித்து, இருளை விரட்டி சுற்றாடலுக்கு அழகூட்டியது. மழையிருட்டு வானமெங் கும் பரவி இரவை மேலும் அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டிருந்தது. முதல் நாள் இரவைப் போல் சௌந்தர்யமாக, அழகாக பிரகாசமானதாகக் காணப்படவில்லை. எவ்வாறாயினும் புத்தபெருமானை முன்னிட்டு மேற்கொள்ளும் ஒளிப் பூஜை மிகவும் துலாம்பரமாக வெளிப்படுத்துவ தற்காகவோ என்னவோ, சுற்றாடல் இருண்ட பின்னணியாகக் காணப்பட்டது.

வீட்டுத் திட்டத்தில் ஏனைய வெசாக் அலங்காரங்களை விட, வெள்ளயனின் வெசாக்கூடு பிரகாசமாக தனித்துவமாகத் தெரிந்தது. வீட்டுத் தொகுதி வாசிகள் பலரும் அந்த வெசாக் கூடு பற்றிப் புகழ்ந்து பேசினர். தமது பிள்ளைகளைப் பெடியளோட சேரவிடாத சில குடும்பத் தினர் மாத்திரமே வெசாக் கூடுபற்றி மகிழ்ச்சி தெரிவிக்க வில்லை.

"மேல் பாதைக்கு சென்றால் இந்தக் கூடு ரொம்ப அழகாத் தெரியும் வெள்ளயன்"

மகிழ்சியில் ஆழ்ந்து போயிருந்த நண்பர் குழுவில் பலரும் கூறினர்.

"அப்போ எல்லோரும் மேல் பாதைக்குப் போவம்"

சுஸில் முன்மொழிந்தான். சகபாடிகளும் அதனை அங்கீகரித்தனர்.

"இந்த இரவில் அங்க போகாதேயுங்கோ. மாடசாமி கோவிலுக்கு மேலேயல்லவா போறீங்கள்"

யாரோ ஒரு முதியவர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

நோனாச்சி முன்வந்து அவர்களுக்கு அனுமதி கொடுத்தாள்.

"கொஞ்சம் நில்லுங்கடா நானும் வாரன்"

நல்லமாமா சொன்னார்.

இதற்கிடையில் கோயிலடிக்கு ஓடிச் சென்று திரும்பிப் பார்த்தனர். குழுவில் இரண்டொருவர் குறைவென்பது சுஸிலுக்கு விளங்கியது.

"கொஞ்சம் நில்லுங்கடா. ஜெயக்குமாரயும் உக்குமயும் காணல்ல"

"தயயும் சூட்டியும் கூட இல்லயே"

அசோக சொன்னான்.

"அவங்க ரெண்டு பேரும் வரமாட்டாங்கள். பெரியக்காவோட பன்சலக்கு போயிட்டாங்க"

சுஸில் கூறினான்.

"ஆ....... அங்க ஜெயக்குமாரும் உக்குமும் வாராங்க"

இதற்கிடையில் நல்லமாமாவும் பெடியள் கூட்டத்தோடு கைகோர்த்திருந்தார்.

"இவ்வளவு நேரமா எங்கடா போயிருந்தீங்க? நீங்க போனதாலதான் சுணங்கிட்டம்"

நல்லமாமா கோபத் தோரணையில் ஜெயக்குமாரிடம் கேட்டார்.

சிகரட் பக்கற்றையும் எஞ்சிய காசையும் நல்லமாமாவிடம் கொடுத்தான் ஜெயக்குமார்.

"இங்க கடயில சிகரட் இல்ல. அடுத்த கடயில இருக்கு. ஆனா ஃபோரேஸஸ் இல்ல" என்று சொன்னான்.

"இனி என்ன கொண்டு வந்தீங்க?"

நல்லமாமா சிகரட் பக்கற்றைத் திறந்தபடி கேட்டார்.

"ஃபோரேஸஸ்தான் கொண்டு வந்தம். தோட்டக் கடைக்கே போனம்"

உக்குங் பதில் சொன்னான்

"தோட்டக் கடையில சிகரட் நெருப்பு விலை என்ன? இங்குள்ள கடயால் திரீரோஸஸ் ரெண்டு கொண்டு வந்திருக்கலாம். சரி பரவால்ல.... இந்தா இதைப்பிடி"

நல்லமாமா ஜெயக்குமார் கையில் ஐந்து சதத்தை வைத்தபடி கூறினார். பின்னர் சிகரொட்டொன்றைப் பற்ற வைத்தபடி, கோவிலடி சிறுபாதையால் சென்று பெடியளின் பின்னால் நடக்கத் தொடங்கினார். சற்று நேரத்தில் அவர்கள் மேற்பாதை வளைவருகே சென்றனர்.

பகல் வேளையிலும் கூட அவ்வளவாக வாகனங்கள் பயணிக்காத தோட்டப் பாதையில், இரவு வேளையில் அபூர்வமாகவே வாகனமொன்று செல்லும். எல்லோரும் தார் போடப்பட்ட சரிவுப் பாதையில் ஆங்காங்கே அமர்ந்து கொண்டனர். கீழே பிரகாசிக்கும் தத்தமது வீடுகளின் முன்னாலுள்ள வெசாக் கூடுகளைப் பார்க்கலாயினர். எல்லா வெசாக் கூடுகளையும் தோல்வியடைச் செய்தது வெள்ளயனின் கூடே. செவ்விளநீர் நிறமாகவும் பொன்னிறமாகவும் பளிச்சென்று தெரிந்தது.

நண்பர் வட்டத்தில் அநேகரின் நெஞ்சிலே மெல்லிய பொறாமைத் தீ சுடர்விட ஆரம்பித்தது. 'எவ்வாறாயினும் வெள்ளயன் புத்த பெருமானுக்காக அழகிய வெசாக் கூடொன்று செய்தது எங்களுக்கு மகிழ்ச்சி தான். எங்களை விட அழகாகச் செய்தமைக்காக நாங்கள் சந்தோஷப் படவேணும். உண்மையில் வெள்ளயன் எங்களில் ஒருவன்' என்ற கருத்து உருவாகியிருந்தது.

"நேற்றென்றால் சந்திரன் அழகாகத் தெரிந்தது"

வெள்ளயன் கூறினான்.

"இன்றைக்கு காணவில்லையே. மழைக் குணத்தால் இந்தப் பகுதியே இருண்டு போயிருக்கு. அதனால் உன்ற வெசாக்கூடு நன்றாக வெட்டித் தெரியுது"

இது நல்லமாமாவின் கூற்று.

"வெசாக் போயா நாளில் சந்திரன் இல்லாவிட்டாலும் பரவாயில்ல. எல்லோரும் வெசாக் கூடு, விளக்கெல்லாம் ஏற்றுவதால், எல்லா இடத்திலும் சந்திரன் உதித்தது போல் வெளிச்சம்"

உபாலி கூறினான்.

"இந்தப் பகுதியிலுள்ள எல்லாத் தமிழ் வீடடிலும் ஒவ்வொரு விளக்காவது வைத்திருந்தால் என்ன மாதிரி அழகாயிருக்கும்?"

சின்னத்தம்பி சொன்னான்.

"தோட்டப்பக்க தமிழ் முதலாளிமாரும் தொழிற் சங்கக்காரரும், அரசாங்க வேலை செய்யும் தமிழ் துரைமாரும் சொல்வதத்தான் தமிழ்

மக்கள் செய்றாங்க. வெசாக் போயாவுக்கு தங்களது வீடு வாசலைத் தூய்மையாக்கி அழகுபடுத்தி இரவைக்கு களிமண் விளக்கொன்றாவது பற்றவைக்க இந்த மக்கள் ரொம்பத்தான் விரும்புறாங்க. ஆனால் அதைச் செய்ய விடுறாங்களில்லயே"

அவ்வாறு கூறிய நல்லமாமா இன்னொரு சிகரட்டை உதட்டில் வைத்தார்.

"புத்தர் பிறந்ததும் காலமானதும் ஞானம் பெற்றதும் இந்தியாவில்.... அதை நினைவூட்டத்தான் நாங்கள் இங்கே இப்படிக் கொண்டாடுறோம்"

கொதலாவது கூறினான்.

"அப்படியிருந்தும் இந்தியாவிலிருந்து இங்கே வந்து..... இந்த நாட்டில் தோட்டங்களில் வாழும் மக்களுக்கு, புத்த பெருமானுக்காக ஒரு விளக்கு வைக்க இடங்கொடுக்காதத பாருங்க"

சுஸில் கூறினான்.

"அந்தத் தொழிற்சங்கக்காரரும் மொதலாளிமாரும் அரசாங்க துரைமாரும் தமிழ் மக்களின் எதிரிகள். சிங்கள மக்கள் நம்ம நண்பருங்க"

என்று கூறிய வெள்ளயன், கீழேயுள்ள வீட்டுத் தொகுதியில் பிரகாசமாக எரியும் தனது வெசாக் கூட்டை மகிழ்ச்சியோடு பார்த்தபடியிருந்தான். 'சிங்கள மக்கள் தமிழ் மக்களின் நண்பர்கள்'

அவன் உள் மனதால் முணுமுணுத்தான்.

## 10

ஸ்ரீ சத்தர்ம ராமய...... இது தலவாக்கலை பௌத்த விகாரையின் பெயர். தலவாக்கலை நகருக்கு பிரவேசிக்கும் போதே இந்து தேவாலயம் காணப்படுகிறது. நகர மத்தியில் முஸ்லிம் பள்ளிவாசல் உள்ளது. நகர எல்லையில் பௌத்த விகாரை அமைந்துள்ளது. இது இலங்கையில் எந்த நகரிலும் காணப்படாத லட்சணமென யாரோ ஒரு உல்லாசப் பயணி தெரிவித்திருந்தார்.

அப்போது விகாரைக்கு முன்னால், பண்டாரநாயக்க நாற்பக்க வீட்டுத் திட்டத்திற்கு செல்வதற்கான பாதையின் இடப்பக்கமாக வியாபார நிலையங்கள் பல இருந்தன.

விகாரைகளுக்கருகாமையில் வியாபாரம் நல்லபடியாக நடக்கா

தென்ற கருத்தை உறுதிப்படுத்துமாப் போல், சத்தர்ம விகாரை அயலிலும் வியாபார நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லை. விகாரைக்கு வலப் பக்கமாக பலகை வியாபார நிலையமும் இடப் பக்கமாக ரேடியோ ஐயாவின் எரோகிஸ் ரேடியோ கடையும் அமைந்திருந்தன. அதனருகே ஏதோ தொழிற்சங்கக் காரியாலயமொன்றும் இருந்தது.

❖❖❖❖❖❖❖

ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறிப் பாடசாலைக்குச் செல்வது ஆண் பிள்ளைகளுக்கு விருப்பத்திற்குரியதொரு விடயமல்ல. இன்று போல் அப்போதெல்லாம் பையன்கள் வெள்ளை சாரம் சட்டை அணிந்து செல்லவில்லை. பாடசாலைச் சீருடையான வெள்ளைச் சட்டையும் நீல அரைக் காற்சட்டையுமாகச் செல்வது பொருத்தமானதென ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

எல்லா பௌத்த சமயப் பிள்ளைகளும் கட்டாயமாக அறநெறிப் பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென பெற்றார்கள் கருதினர். இதன் காரணமாக பிள்ளைகளை தவறாமல் அனுப்புவதில் பெற்றார்கள் ஆர்வமுடன் செயற்பட்டனர். இருந்தும் அதே சமயம் அறநெறிப் பாடசாலைக்குச் செல்லாத பௌத்த பிள்ளைகள் கணிசமான அளவு காணப்பட்டனர்.

ஹொலிறூட் பகுதி நகரசபை வீட்டுத் தொகுதிப் பிள்ளைகள் அநேகர் தவறாமல் அறநெறிப் பாடசாலைக்குச் செல்லப் பழகியிருந்தனர்.

நண்பர் வட்டத் தலைவன் சுஸில் சிலகாலம் சென்றுவிட்டு, பின்னர் நின்றுவிட்டான். ஏனையவர்களில் சிலர் தொடர்ச்சியாகவே சென்றனர்.

அறநெறிப் பாடசாலைக்கு மலர் கொண்டு போகும் பிள்ளைகளுக்கு புள்ளி வழங்கும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வருட இறுதியில் அப்புள்ளிகளின் அடிப்படையில் பரிசு வழங்கப்பட்டது. இருந்தும் ஆண் பிள்ளைகளில் அதிகமானவர்கள் மலர் கொண்டு போவதை வெட்கமாகக் கருதினர். அறநெறிப் பாடசாலையில் கற்பித்தல் ஆரம்பிப்பதற்கு முன்பான வழிபாட்டின் போது வாய்விட்டு ஓதுவதும் ஆண் பிள்ளைகளுக்கு பிடிக்காத விடயம். இருந்தாலும் பாடசாலையில் கிட்டாத சுதந்திரம் இங்கு கிடைப்பது அவர்களுக்கொரு ஆறுதல். விகாராதிபதிக்கும் அறப்பாடசாலை முதன்மை ஆசிரியர் குவின்டஸ் அவர்களுக்கும் களவாக குழப்படி செய்வதற்கு பெடியளுக்கு இங்கு வாய்ப்புண்டு. அறநெறிப் பாடசாலை நகரத்தில் சனச் செறிவான இடத்தில் அமைந்திருந்தமையும் மனதுக்கு ஒரு சில சுதந்திர உணர்வை வழங்கியது.

ஹொலிறூட் பகுதி பெடியள் குழுவுக்குப் பொருத்தமான குழப்படிக்காரர்கள் பலரும் அறநெறிப் பாடசாலையிலிருந்தார்கள்.

விகாரைத் தோட்டத்து பழமரங்களைப் பார்ப்பதே பாவமென்று பெடியளின் மனதில் போடப்பட்டிருந்தாலும் கூட, அந்த மரங்களில் அரைவாசி கனிந்த ஏன் பச்சைப் பிஞ்சுகளைக் கூட பெடியள் விட்டு வைக்கவில்லை. அவை எந்த வகையிலும் அவர்களுக்கு விலக்கப்பட்டவையாக இருக்கவில்லை. பெடியளுடன் அறநெறிப் பாடசாலையில் இணைந்த முக்கியமான குழப்படிக்காரன் தயாவங்ச. உபாலியினதும் சுஸிலினதும் வகுப்பு நண்பனான அவன், குழப்படி காரணமாகக் கிடைக்கும் தண்டனைகளுக்கு தைரியமாக முகம் கொடுக்கும் ஒருவன்.

தயாவங்ஷவினது மூத்த சகோதரனான யஸபாலித அண்ணனும் பிரேமஸிரி அண்ணனும் மாலை வேளையில் கணிதம், ஆங்கிலப் பாட வகுப்புகளைப் பிரத்தியேகமாக நடாத்தினர். அதற்காக அவர்களுக்கு மிகச் சிறிய தொகை கொடுத்தாலும் அதையிட்டு அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. பணம் பண்ணும் நோக்கத்துடன் அவர்கள் கற்பிக்கவுமில்லை. அவர்களது வீட்டில் நடைபெற்ற அந்த வகுப்புக்கு உபாலி சென்றதன் காரணமாக, தயாவங்ஷ- இந்திரவங்ஷ சகோதரர்களுக்கு சுஸிலோடும் அவனது நண்பர்களோடும் தொடர்பு ஏற்பட்டது.

அப்போதெல்லாம் சைக்கிள் பாவிப்பவர்கள் மிகவும் குறைவு. தபால் கந்தோரில் வேலை செய்பவர்களிடமும் பசுமாடு வைத்திருப்பவர்களிடமும் மாத்திரமே காணப்பட்டன.

நகரத்தில் மணிக்கு இருபத்தைந்து சதம் கூலிக்கு சைக்கிள் எடுக்கக்கூடிய சைக்கிள் கடை இருந்த போதிலும், இருபத்தைந்து சதம் செலுத்தி சைக்கிளோடக் கூடிய வசதி யாரிடம் தானிருந்தது. சைக்கிளோடும் ஆர்வம் பெடியளிடம் காணப்பட்ட போதிலும் அதற்கான வசதி இருக்கவில்லை. இதனால் அதிகம் பேருக்கு சைக்கிளோட்டத் தெரியவில்லை.

பெடியள் வட்டத்தில் எவருக்குமே சைக்கிள் மிதிக்கும் பயிற்சி இருக்கவில்லை. ஹொலிறூட் தோட்டத்து பியும் மாமாவின் பிள்ளைகளான கறுப்பன், டிகிரி, சுஸில் ஆகியோர் சிலவேளை தமது அப்பாவின் சைக்கிளைக் கொண்டு வந்து, டிஸ்பென்சரிக்கு கீழாக வடகொட பாதையில், பெடியளுக்கு சைக்கிளோட்டும் பயிற்சி வழங்குவர். இவ்வாறு பயிற்றுவிப்பதைக் காணும் அவர்களது மூத்த சகோதரர்களான நிமல், ஜயசிங்ஹ அண்ணன் போன்றோர் எச்சரிப்பார்களே தவிர,

ஒருநாளும் அந்தக் காரியத்தைக் குழப்பவில்லை. அவர்களது அம்மா வான மருத்துவச்சி மாமியும் பெடியளின் குழப்படிகளைப் பொறுத்துக் கொள்ளும் கருணை மிக்கவர்.

❖❖❖❖❖❖❖

அறநெறிப் பாடசாலை இடைவேளையின் போது விகாரையின் முன் வாயிலருகே வந்தனர். 'எரோகிஸ்' ரேடியோ கடையிலிருந்து காது வெடிக்குமளவுக்கு சத்தம் எழுந்தது. அவ்வப்போது குறைந்து மீண்டும் எழுந்து குறைந்து கொண்டிருந்தது.

குவின்டஸ் ஐயா தனது காரில் ஏறி எங்கோ செல்வதைக் கண்டதும் அநேகம் பேரின் மனதிலே மகிழ்ச்சி பரவியது. தயாவங்ஷ உள்ளிட்ட நண்பர்கள் மிகவும் மகிழ்ந்து போயினர். வகுப்பாசிரியரான விஜேரத்ன ஸேர், ஏதோ தேவையொன்றுக்கு தர்மசாலைப் பக்கம் சென்றார். அந்தக் கணமே அவர்கள் விகாரை மண்ணிலிருந்து வெளிப்பட்டு பெருந்தெருவுக் குச் சென்றனர். ரேடியோ கடையருகே யாரோ கொண்டு வந்த பால்டொ·பி அவர்களிடையே பகிர்ந்து சென்றது.

"வாயில் படவும் போதாதடா"

அப்படிச் சொன்ன தயாவங்ஷ ரேடியோக் கடைக்கருகிலுள்ள தொழிற் சங்கக் காரியாலயத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிந்த சைக்கி ளைப் பார்த்தான். ஏனைய பெடியன்களும் தயாவங்ஷவின் அவதானிப் புக்குள்ளான சைக்கிளைப் பார்த்தனர்.

"ஜயசிங்ஹ அண்ணனுடையது போன்றதல்லடா. புத்தம் புது சைக்கிள். யாருடையதோ தெரியல"

ஒவ்வொருவராகப் பேசிப் பேசி ரேடியோக் கடையருகே கூடினர். தொழிற்சங்கக் காரியாலயத்தின் முன்பக்க மேல்பகுதி கம்பி வலையா லும் கீழ்ப் பகுதி பலகைகளாலும் அடைக்கப்பட்டிருந்தது. சைக்கிள் பலகைச் சுவரோடு சேர்த்து வைக்கப்பட்டிருந்தது.

தயாவங்ஷ கம்பி வலைக்கூடாக உள்ளே பார்த்தான். பின்னர் கவனத்தோடு சைக்கிளைப் பார்த்தான்.

"சைக்கிள் பூட்டிக் கிடக்கே"

யாரோ சொன்னான்.

"பரவால்ல. நான் பூட்டைத் திறந்து சைக்கிளை எடுத்துத்தாரன். நீங்க ஒரேயடியாகத் தள்ளிக் கொண்டு வாங்க. நான் பாதையில் வைத்து ஏறி மல்லியப்பு பக்கமாகப் போறன். நீங்க மெல்ல மெல்ல வாங்க"

தயாவங்ஷ சொன்னான்.

"சைக்கிள் யாருடையதோ தெரியல்லடா. உனக்குத் தெரியுமா?"

உபாலி கேட்டான்.

"ஓம்டா. எனக்குத் தெரியும். தொழிற்சங்கத் தலைவர்ட! ஆள் ஒன்னும் சொல்லமாட்டார். இப்போ சரிதானே. அறநெறிப் பாடசாலக்கி திரும்பப் போக வேண்டியதில்ல. யாராவது போய் புத்தகங்கள எட்டுத்திட்டு வாங்க"

"ஐயோ அதச் செய்ய முடியாது. புத்தகம் கொஞ்சமும் அப்பிடியே இருக்கட்டும். யாரும் எடுக்கப் போறதில்ல"

தயாவங்ஷவின் தம்பி, இந்திரவங்ஷ சொன்னான்.

❖❖❖❖❖❖

நண்பர் வட்டத்தினர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தெரியாத வண்ணம் கள்ளமாக வாகனங்களுக்கு மறைந்து மறைந்து பஸ் நிலையத்திற்கு மத்தியால் நுவரெலியா பாதைக்குச் செல்லத் தொடங்கினர். தயாவங்ஷ பஸ்நிலையத் தொங்கலிலுள்ள குறுக்குப் பாதையில் நின்றபடி கையசைத்தான். குழுவினர் அப்பக்கமாக வருகையில் அவன் நுவரெலியா பாதைக்குத் திரும்பி, இடப்பக்கமாக மிதித்துச் செல்லத் தொடங்கினான். சற்று நேரத்தில் முற்றாக மறைந்து போனான்.

"அவசரமாகப் போவம். அவன் மல்லியப்பு பக்கம் போய் வந்ததும் எங்களுக்கும் போகமுடியும்"

நண்பர்கள் நுவரெலியா பாதை வழியே முன்னோக்கிச் செல்லத் தலைப்பட்டனர்.

நுவரெலியாக பாதையருகே ஆங்காங்கே ஆற்று வரப்புகளில் வெளியெடுத்த ஆற்றுமண் குவிக்கப்பட்டிருந்தது. சில இடங்களில் போதிய இடைவெளியிருந்தது.

நண்பர்கள் அப்படிப்பட்டதொரு இடத்தில் நின்று பார்த்திருந்தனர். மல்லியப்பு பக்கமிருந்து இடப்பக்கமாக சைக்கிளில் வந்து கொண்டிருந்த தயாவங்ஷ, நண்பர்களைத் தாண்டி தலவாக்கல நகர்ப் பக்கம் சென்றான்.

"அங்க அவன் போறான்..... நாம இங்க"

பலர் நகர்ப் பக்கம் போக முனைந்தனர்.

"அப்படி நில்லுங்கடா. சைக்கிளத் திருப்பிக் கொண்டு வருவான்"

இந்திரவங்ஷ சொன்னான்.

மீண்டும் வந்த தயாவங்ஷ சைக்கிளை நிறுத்தி இறங்கினான். இந்திரவங்ஷ சைக்கிளைப் பிடித்துக் கொண்டான். அவனும் பொல்லுக்குக் கீழால் காலை விட்டே சைக்கிளை மிதித்தான்.

அதன் பின்னர் எல்லோருக்கும் சைக்கிள் விடப் பழக்கும் படலம் ஆரம்பித்தது. ஒவ்வொருவராக சைக்கிளில் அமர்த்தி பின்பக்கமாகப் பிடித்தபடி சொற்பதூரம் சென்று கைவிடுவதை இந்திரவங்ஷவும் தயாவங்ஷவும் கவனமாகச் செய்தனர்.

சைக்கிளில் அமர்ந்து மிதித்துச் செல்லக் கூடியளவுக்கு பெடியளின் கால்கள் நீளமற்றதால் அந்தப் பயிற்றுவிப்பு வெற்றியளிக்கவில்லை. பொல்லுக்குக் கீழாக கால்விட்டு மிதிப்பதும் சிரமமானதே. எவ்வாறா யினும் அமர்ந்தபடி முழுமையாக முடியாவிட்டாலும் ∴பெடலை மெல்ல மெல்ல மிதித்துச் செல்ல எல்லோரும் போல் பழகிக் கொண்டனர்.

சைக்கிளைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் இரண்டொருவர் சரிந்து விழுந்த போதும், சைக்கிளுக்கு பெரிதாகப் பாதிப்பெதுவும் ஏற்பட்வில்லை. ஏற்பட்டிருந்தாலும் கூட அது பற்றிய உணர்வு எவருக்குமிருக்கவில்லை. ஏன் சைக்கிள் யாருடையதோ அல்லவா?

❖❖❖❖❖❖

"இனி நீங்கள் போங்கடா. அது போதும். நான் மல்லியப்பு போய் திருப்பிக் கொண்டு வாரன்"

சற்று நேரத்திற்குப் பின்னர், குறுகிய கால சைக்கிளோட்டும் பயிற்சியை நிறைவு செய்து கொண்டு தயாவங்ஷ சொன்னான்.

"உபாலி ஏறடா. ஏறி பாரில் அமர்ந்து கொள். நாம ரெண்டுபேரும் போய் வருவம். நீங்கள் அவசரமாகப் போங்க. குவின்டஸ் ஸேர் தேடுவார்"

தயாவங்ஷ, உபாலியையும் ஏற்றிக் கொண்டு சைக்கிளை மீளத் திருப்பிக் கொண்டான்.

இடப்பக்கமாக கவனமாக சைக்கிளை ஓட்டிச் சென்ற தயாவங்ஷ வின் மனதிலே பயமச்சம் எதுவும் இல்லாவிட்டாலும், சைக்கிள்

ஹெண்டலை இறுக்கமாகப் பிடித்தபடி பொல்லின்மீது அமர்ந்திருந்த உபாலியின் மனம் குழம்பிப் போயிருந்தது. ஏதோவொரு பயம் அவனை ஆட்டிப் படைத்தது. முன்னால் வாகனம் வரும் போது அவன் திடுக்கிட்டான்.

'இவன் என்னையும் சேர்த்து வாகனத்தில் மோதிவிடுவானோ தெரியல' என்ற பீதி அவனது மனதிலே எழுந்திருந்தது.

"ஹெண்டல மெல்லப் பிடித்துக்கோடா. வாகனங்களக் கண்டால் நீ நடுங்கிறாய் என்ன? துடிக்காம நில்லன்"

தயாவங்ஷ களைத்தபடி சொன்னான்.

பல வாகனங்களைப் பிற்படுத்திக் கொண்டு தொலைவில் வரும் இ.போ.ச. பஸ்ஸின் வேகம் உபாலிக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியது. தயாவங்ஷவின் மனதில் மெல்லிய அதிர்வுதான்.

"பஸ்காரனின் வருத்து நல்லா இல்ல. வேகத்த குறைத்திட்டான் போலிருக்கு. பரவாயில்ல. எதற்கும் நான் மிதித்துப் போறன்"- இவ்வாறு நினைத்த தயாவங்ஷ, பஸ்ஸைத் தாண்டிச் செல்லும் நோக்கில் வேகத்தை அதிகரித்தான். அப்போது வலப்பக்கமாகத் திரும்பி ஒயேடியாக நின்றது.

"தடாங்"

தயாவங்ஷவும் உபாலியும் பஸ் வண்டியின் முன்னால் பாதை நடுவுக்கு வீசியெறியப்பட்டனர். பஸ்ஸிலிருந்தோரும் சுற்றிவர நின்றவர்களும் அவ்விடத்திற்கு ஓடிவந்தனர். இருவருக்கும் பாரிய காயங்கள் எதுவுமில்லை. மெல்லிய கீறல்தான். தயாவங்ஷ உடனே சைக்கிளை ஓரமாக இழுத்துச் சென்றான். சைக்கிளின் முன்பக்கச் சக்கரம் நடுவால் வளைந்து, ஹெண்டல் நெளிந்து காணப்பட்டது.

நடந்தது என்னவென்று நினைத்துப் பார்க்க முடியாத உபாலி மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாகியிருந்தான். வண்டிச் சாரதி உள்ளிட்ட அனைவரதும் பேச்சுக்களால், வெட்கித்து பயத்தால் செய்வதறியாது திகைத்துப் போயினர்.

"இது மாடின் மாமாவின் பெடியனல்லவா?"

"சைக்கிள் மிதிக்க கால் நீட்டம் காணாது. ஆனா டபள் போட்டு மிதிக்கிறாங்க"

"சரி.... சரி.... நடந்தது நடந்திட்டுது. இனி ஓடுங்கடா. பொலீஸ் வந்திட்டாங்கென்னா பெரிய கஷ்டம்"

"ஓம் ஓம் அது உண்ம. பயணிகளும் பாவம். சும்மா நேரம் போகுது. மணி அண்ணா பஸ்ஸ எடுத்திட்டுப் போங்க"

"ரெண்டு பேரும் போங்கடா. சைக்கிள் மாமாவின் விங்கில்ல குடுத்து திருத்துங்கோ"

கூடிநின்றவர்களின் ஏச்சுக்களையும் புத்திமதிகளையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த தயாவங்ஷ, சைக்கிள் அருகே சென்று ஹெண்டலின் வளைவைச் சீராக்க முயன்றான்

"இதக் கொஞ்சம் பிடியடா"

தயாவங்ஷ, உபாலியின் பக்கம் பார்த்து கோபகமாகச் சத்தமிட்டான்.

'உன்னால் தான் இப்படி நடந்தது' அப்படி நினைத்த போதும் சொல்லிவிடவில்லை.

பஸ்வண்டிச் சாரதி ஹாரன் அடித்து வாகனத்தை முன்னெடுத்து, அங்கு நின்ற ஒருவருக்கும் கைகாட்டி விட்டுச் செலுத்தினான்.

"இனி சைக்கிள தள்ளிக் கொண்டு போங்கடா. அதில ஏறிப் போகாதேங்கோ"

மூத்த ஒருவர் அவ்வாறு சொல்லிச் சென்றார்.

போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த வாகனச் சாரதிகள் தமது வேகத்தைக் குறைத்து, சைக்கிளையும் பெடியன் இருவரையும் பார்த்தபடி சென்றனர்.

"சரி. சீக்கிரம் போ. இத இருந்த இடத்திலயே வைப்பம், சைக்கிள் சொந்தக்காரன் வர முன்பு"

தயாவங்ஷ அப்படிச் சொல்லும் போது உபாலி குழம்பினான்.

"ஏன் சொந்தக்காரன உனக்குத் தெரியுமெண்டல்லவா சொன்னாய்?"

"எனக்கு யாரென்னு தெரியாதடா. பொய்தான் சொன்னன்"

தயாவங்ஷ செய்த தவறைப் பின்வாங்கியபடி சொன்னான்.

"அப்படியென்றா எங்கட கதை சரி. அந்தாள் பொலீஸில் முறைப்பாடு செய்தால்.....? எங்க ரெண்டு பேருக்கும் வீட்டில் நல்ல அடி கிடைக்கும்"

"சத்தம் போடாமல் போடா. நடப்பது நடக்கட்டும். நான் இத தள்ளியபடி மிளகாய் மில் அருகே நிக்கிறன். நீ போய்ப் பார். தொழிற் சங்கக்காரர் யாரும் வெளி நிக்கிறாங்களோ தெரியல்ல. யாரும் இல்லேன்னா எனக்கு சிக்னல் தா"

உபாலி வேக நடையில் பஸ் நிலையத்திற்குக் குறுக்காக விகாரைப் பக்கமாக வழமையான நடையில் செல்லவில்லை. அவனது ஒரு கால் வலித்தது. இருந்தும் அதனை அவன் பொருட்படுத்தவில்லை. வலது முழங்கையும் இன்னும் இரண்டொரு இடங்களும் கீறல் விழுந்து பழுதாகியிருந்தது. தார் வீதியில் விழுந்ததால் முழங்கைப் புண்ணிலி ருந்து, எரிவது போல் வேதனை வெளிப்பட்டாலும், மிகச் சிரமப்பட்டு அதைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'வீட்டில் என்னதான் சொல்வது? நடந்த விஷயம் வீட்டுக்குத் தெரியவரும். தெரிந்தவர்கள் யாரும் அவ்விடத்தில் இருக்கவில்லை. ஆ..... உபாலி மாமா நிண்டாரே. ஆனால் அவர் என்னை அறிமுகம் பிடிக்கவில்லை' அவன் இவ்வாறு நினைத்தான்.

தொழிற்சங்கக் காரியாலயக் கதவருகே பீடி புகைத்தபடி யாரோ நிற்பதைக் கண்டதும் உபாலிக்குப் பயம் வந்துவிட்டது. சற்று நேரத்திற்குப் பின் பீடித் துண்டை கானில் வீசி, இருமித் துப்பிவிட்டு மீண்டும் உள்ளே சென்றான்.

உபாலி விகாரை அருகே சென்று உளவு பார்த்தான்.

தயாவங்ஷ, பண்டார நாயக்கா சதுக்கத்திற்குச் செல்லும் பாதையருகே மிளகாய் மில்லடியில் பார்த்தபடியிருந்தான்.

விகாரை அரசமரத்தடி வகுப்பிலிருந்தவர்களுக்குத் தெரியாதபடி, பாதையருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றுக்கு மறைந்து நின்று, தயாவங்ஷவுக்கு சமிக்ஞை செய்தான் உபாலி.

தயாவங்ஷ சைக்கிளைத் தள்ளிக் கொண்டு சென்று தொழிற் சங்க சுவரோடு சேர்த்து வைத்துவிட்டான். பின்னர் எதுவுமே நடக்காதது போல் இருவரும் விகாரை வளவுக்குள் புகுந்தனர். தர்மசாலையின் முன்னாலுள்ள அறுகோணத் தடாகத்தினருகே குவின்டஸ் ஐயாவின் பழைய கறுப்புக்கார் நிறுத்தப்பட்டிருந்தது. குறுகிய கால சைக்கிள்

செலுத்தும் பயிற்சியில் ஈடுபட்டோர், விகாரை முன்றலில் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த வகுப்புக்களிலிருந்தபடி அந்த இருவரையும் கள்ளக் கண்களால் பார்க்கத் தொடங்கினர்.

"எங்க ரெண்டுபேரும் சுத்துரீங்க? ஓடுங்க வகுப்புக்கு"

குவிண்டஸ் ஸேரின் சத்தத்திற்கு அடிபணிந்து தர்மசாலைப் பக்கம் இருவரும் ஓடினர்.

அறநெறிப் பாடசாலை முடிந்த பின் விகாரைச் சூழலின் சாதாரண சுபாவம் மாறிவிடும். பிள்ளைகளின் கூச்சல் ஏனைய இடங்களை விடக் கட்டுப்பாட்டிலிருந்தாலும், அதுகூட விகாரையின் சாந்தமான தன்மையை இல்லாமல் செய்துவிடும்.

விகாரையின் அருகே பெருந்தெருவுக்கு வந்த மாணவ- மாணவிகள் நகரப் பக்கமாகவும் பண்டாரநாயக்கா சதுக்கப் பக்கமாகவும் செல்லத் தொடங்கினர்.

தயாவங்ஷ, உபாலி உள்ளிட்ட நண்பர்கள் பாதைக்கு வந்தனர். எல்லோருடைய கண்களும் தொழிற்சங்கக் காரியாலயப் பக்கமாக ஊனமுற்றிருந்த சைக்கிளிலேயே குவிந்திருந்தன.

"நீ சைக்கிளின் பூட்டைப் போட்டியா?"

இந்திரவங்ஷ திடீரென்று கேட்டான்.

"ஓம்டா போட்டன். இனி வாயை மூடிக் கொண்டு போங்கடா. இன்னும் கொஞ்ச நேரத்தில் யூனியன் ஆக்கள் வெளியே வந்தால்தான் வேடிக்கை இருக்கு"

"இங்க என்ன நடக்குதென்று பார்க்க எனக்கு ஆசையா இருக்குடா"

ஜயதிஸ்ஸ சொன்னான்.

"நீ அவனுக்கும் விபரம் சொல்லிட்டியா?"

தயாவங்ஷ, உபாலியை முறைத்துப் பார்த்தபடி கேட்டான்.

உபாலி கீழே பார்த்துக் கொண்டான். ஜயதிஸ்ஸ சைக்கிள் பயிற்சியில் கலந்து கொள்ளவில்லை. நகரசபை அருகிலுள்ள வீட்டுத் திட்டத்தில் வாழும் ஜயதிஸ்ஸ, சுஸிலினதும் உபாலியினதும் நல்ல நண்பன். காலையில் பாடசாலைக்குப் போகும் போது ஜயதிஸ்ஸவின்

வீட்டுக்குச் செல்லும் அவர்களுக்கு, ஜயதிஸ்ஸவின் அம்மாவான மியுரியல் மாமியிடம் இரண்டொரு அப்பம் சாப்பிடக் கிடைக்கும். இன்னொரு வகுப்பு நண்பனான ரணசிங்ஹவின் வீடும் அதனருகே தான் உள்ளது. தயாவங்ஷ, இந்திரவங்ஷ இருவரும் இந்த வீட்டுத் தொகுக்குக் கீழேயுள்ள குமாரகம பக்கமாக வாழ்ந்ததோடு இந்த நண்பர்களுடன் தான் பாடசாலைக்குச் செல்வார்கள்.

❖❖❖❖❖❖

விகாரை அருகேயுள்ள தொழிற்சங்கக் காரியாலய அருகே குழப்பநிலை நிலவியது.

"யாராவது சைக்கிளை எடுப்பதைக் கண்டீங்களா ஐயா?"

தொழிற்சங்கத் தலைவர் ரேடியோக் கடை குணசேகர ஐயாவிடம் கேட்டார்.

"இல்லை தலைவரையா....... நான் காணவில்லை"

எப்பொழுதும் சிரிப்போடு கதைக்கும் குணசேகர ஐயா அன்றும் சிரித்தபடியே சொன்னார்.

"ரேடியோவுக்குள் தலையைப் போட்டபடி சக்கரம் சுற்றும் ரேடியோ ஐயாவுக்கு உலகம் மறுபக்கம் புரண்டாலும் தெரியவா போகிறது"

யாரோ ஒருவன் சொன்னான்.

"சைக்கிள் பூட்டென்றால் அப்படியே இருக்கு"

"யாரோ கோபத்துக்கு தூக்கி நிலத்திலடித்திருக்காங்க போலிருக்கு"

"அங்க சேர்த்து வைத்திருந்தது நிலத்தில் விழுந்ததோ தெரியல்ல"

இளைஞனொருவன் கூறினான்.

கோபத்திற்குள்ளான தலைவர் அவ்வாறு சொன்ன இளைஞனை முறைத்து "போடா....." என்று ஆரம்பித்து இன்னும் பல சொற்களைப் பயன்படுத்தினார்.

இளைஞன் வெட்கப்பட்டு கீழே பார்த்துக் கொண்டான்.

"மூலையில்லாத கதை பேசாதே மடயா. சும்மா கீழே விழுந்தா இந்தக் கதியாகுமா? இத யாரோ கொண்டு போய் முட்டி உடைத்து

கொண்டு வந்து வெச்சிருக்காங்க போல. பூட்டுப் போட்டு வெச்சிருந்தும் கொண்டு போனானே..... ம்.... நாசமாப் போ"

அவர் சபித்தபடி மனதில் எழுந்த கோபத்தை வெளியனுப்பினார்.

"தலைவரையா- பொலிஸுக்குப் போங்க"

"வேலயில்ல மொதலாளி. சும்மா அலைச்சல்தான். சல்லி கொடுத்து திருத்திக் கொள்றன். அதுதான் நல்லது"

தொழிறசங்கக் காரியாலயத்தின் முன் கதவை மூடியபடி அவர் சொன்னார். கூடி நின்றவர்கள் மெல்ல மெல்லக் கலைந்து சென்றனர்.

ஆவணங்கள் கொண்ட கோவைக் கட்டை லகேஜில் வைத்துக் கட்டிய தலைவர், சைக்கிளைத் தள்ளியபடி பஸ் நிலையப் பக்கமாக செல்லத் தொடங்கினார். உள்மனமோ சம்பந்தப்பட்டவர்களைச் சபித் துக் கொண்டிருந்தது. அவர் இடைக்கிடை சைக்கிள் ஹெண்டலையும் வளைந்த முன்பக்க சக்கரத்தையும் பார்த்துக் கொண்டார். ஒரு தடவை வளைந்த சக்கரத்தை நிமிர்ந்த முயற்சித்தார். பற்களைக் கடித்தபடி மெல்லிய குரலில் சபித்துக் கொண்டார்.

பெடியள் கொத்மலை வீதி சொய்ஸா வெதுப்பகத்தை நெருங்கி யிருந்தனர். குழுவினர் பிரிந்து செல்வது அந்த இடத்தில்தான் தயா வங்ஷ, இந்திரவங்ஷ, ஜயதிஸ்ஸ, ரணசிங்ஹ உள்ளிட்ட பலர், ஹொலி றூட் குழுவினரிடமிருந்து விடைபெற்றுச் சென்றனர்.

"இனிப் போங்கடா. என்ன பார்த்துக் கொண்டிருக்கீங்க"

குழுவில் ஒருவன் கூறினான்.

"கொஞ்சம் நில்லுங்கடா உபாலி வரட்டும். அவன் பேப்பர் கொண்டு வரப் போயிருக்கான்"

"என்னடா அதற்கு அவ்வளவு நேரம் போகுமா? கலினசிரி கடைய டியால் வரும் போது எடுத்திருக்கலாமே"

"அவனுக்கு மறந்து போய் திரும்பவும் போயிட்டான்"

"சைக்கிள் பஸ்ஸில் முட்டிய விஷயத்த நீங்க வீட்டில சொல்லக் கூடாது. பாவம். உபாலியின் வீட்டுக்குத் தெரிந்தால் அவனுக்கு செம் மயா அடி விழும். அவன்ற அம்மா கேட்டால் விழுந்து கால் உளுக்கிய தாகச் சொல்லுங்க"

"சரி சரி இனிப் போவம். அங்க உபாலியும் வாறான்"

பெடியள் பதிரன மாமாவின் வீட்டருகால் புகையிரதப் பாதைப் பக்கம் இறங்கத் தொடங்கினர்.

❖❖❖❖❖❖

ஹொலிறூட் நகரசபை வீட்டுத் தொகுதி குழப்படிக்காரப் பெடியளின் செயற்பாடுகள் பற்றி அதிக கவனம் செலுத்திக் கொண்டிருந்தவர்கள் சிறுபிள்ளைகள் தான். தங்களது அண்ணன்மாரின் பின்னால் சென்று விளையாடுவதற்கும் மரமேறுவதற்கும் சிறு ஆண்பிள்ளைகள் எப்போதுமே தயாராக நின்றனர். கொதலாவலயின் தம்பி குமார, சுஸிலின் தம்பிமார்களான நிமல், லலித் ஆகியோர், உபாலியின் தம்பிமாரான நிஹால், பாலித, சுதத் ஆகியோர், வெள்ளயனதும் ஜெயக் குமாரினதும் தம்பியான கனகரத்தினம் ஆகியோர் அதில் அடங்குவர்.

சரத், சுஸில் ஆகியோரின் தம்பி உக்குங், பெடியளின் செயற்பாடுகளில் பங்காளியாக இருந்து வந்துள்ளான். அண்ணன்மார் எவ்வளவு விரட்டினாலும், சின்னவர்களும் அண்ணன்மாரின் அடிச் சுவட்டில் பயணிப்பதை நிறுத்தவில்லை.

எவ்வாறாயினும் சின்னவர்களை, வீட்டுத் தொகுதியின் பார்வைக்கு அப்பால் அழைத்துச் செல்லாதிருப்பதில் பெடியள் கவனமாகவிருந்தனர். சிற்சில நடவடிக்கைகளின் போது சின்னவர்களால் கிடைக்கும் ஒத்தாசையை அவர்களால் நிராகரிக்க முடியவில்லை. உளவு பார்த்தால், கடைக்கு அனுப்புதல், ஆற்றிய குளிக்கப் போய் வரும் போது ஈர உடுப்புக்களை கொண்டு வரல் போன்ற சில்லறை வேலைகளை சிறுவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு மேற்கொண்டனர். வீட்டில் வயிறு நிறைய எவ்வளவுதான் சாப்பிட்டாலும், அடுத்தவர் மரத்தால் களவாகப் பறிக்கும் கொய்யாப் பிஞ்சையோ மாம்பிஞ்சையோ சாப்பிடுவதில் கிட்டும் மனக் களிப்பை அவர்களும் உணர்ந்திருந்தனர்.

கொதலாவலயின் தம்பி குமார, சாடையாக நடக்கத் தொடங்கிய காலம் முதலே அண்ணன்மாரின் பின்னால் செல்ல விரும்பியவன். விரைவாகக் கோபம் கொள்ளும் குமாரவை, கோபமூட்டி ரசிப்பவர்களில் நல்லமாமா முதன்மை வகித்தார். நல்லமாமாவின் பகிடிகளால் அழுதபடி வீட்டினுள் ஓடும் குமாரவை அமைதிப்படுத்தி விட்டு, வீட்டுக்கு முன்னேவரும் ஜேன்மாமி அல்லது சிரிஸேன மாமா, தமது பிள்ளையைக் கோபமூட்டியது யாரென அறிந்ததும் சிரித்துவிட்டு அமைதியடைவர்.

"தட்டயன்.... அந்தமாமா....."

அம்மாவை நெருங்கிச் சுருண்டு கொண்டிருக்கும் குமார நல்ல மாமாவை திட்டுவான்.

"ஆ..... ஆ.....வேண்டாம் தம்பி. நல்லமாமா உன்னோட அன்பாலதானே குழப்பிறார்"

ஜேன்மாமி சொல்வாள்.

குமாரவுடன் மிகவும் நெருக்கமானவன் அசோக. வயதைவிட அதிக உயரமான அசோக, அவனது வகுப்பில் உயரமான மாணவனாவான்.

# 11

மழை இருள் காரணமாக மற்ற நாட்களைவிட சீக்கிரமாக இரவாகியிருந்தது. கடையப்பம் கணக்குப் பார்ப்பதற்காகவும் மண்ணெண்ணை வேண்டுவதற்காகவும் சென்ற அவனது அம்மாவும் சகோதரன் ஜெயக்குமாரும், ஏன் இவ்வளவு தாமதிக்கிறார்கள் என்று எண்ணியபடி வெள்ளயன் சிறுபாதையால் சென்றான்.

கைநெடிய சேட்டும் நீட்டக் காற்சட்டையும் அணிந்து, அசோகவின் கையில் தொங்கியபடி வந்து கொண்டிருந்த குமாரவைத் தொலைவில் கண்ணுற்ற வெள்ளயன் அப்படி நின்றான்.

"ஆ பக்ரயா கடைக்குப் போனியா?"

குமாரவைக் கோபமூட்டும் எண்ணத்தோடு வெள்ளயன் சொன்னான்.

"போடா போ பச்சப்பாம்பு..... சளி மூக்கன்....."

கோபமடைந்த குமார வெள்ளயனின் பட்டப் பெயர்களெல்லாம் அடுக்கிக் கொண்டு போனான்.

முன்னே பாய்ந்த வெள்ளயன் குமாரவின் காதைத் திருக எத்தனித்தான்.

"சும்மா இரு வெள்ளயன். நீ அவனக் குழப்பிவிட்டு அவன் பேசியதும் அடிக்கவும் போறாயென்ன? அது சரி எங்கடா போற நீ"

அசோக கேட்டான்.

"அம்மா கடைக்குப் போனவ இன்னும் வரேல்ல. நான் தேடி வந்தன். எங்கட அம்மாவ கடையில கண்டியா?"

"கடையில மண்ணெண்ணெய் இல்லயே. எல்லாரும் தோட்டக் கடைக்குப் போறாங்க. உங்க அம்மாவும் அங்க போயிருப்பா"

மனதில் எந்தக் கோபமுமில்லாதவாறு குமார சொன்னான்.

"ஏன்டா ஹரமானிஸ் அண்ணனின் கடையில கூட இல்லயா?"

"அங்க எங்கடா மண்ணெண்ணெய்? 'கூத்து' எண்ணெயென்றால் இருக்கும்"

அசோக சிரித்தபடி சொன்னான். வெள்ளயனுக்கு சற்று நேரத்துக்குப் பின்புதான் விளங்கியது. அவனும் சிரித்தான்.

❖❖❖❖❖❖

நேரம் இரவு ஒன்பது மணியை நெருங்கியிருந்தது. வீட்டுத் திட்டத்திற்கு அணித்தான சிறுபாதை வெறிச்சோடிக் கிடந்தது. வீடுகளில் ஒளிரும் விளக்குகளால் அப்பாதை வெளிச்சமடைவதில்லை. மாடசாமி கோவிலுக்கு நிழல் கொடுத்துக் கொண்டு, பரந்த பிரதேச மொன்றை மூடிக் கொண்டிருந்த விசாலமான ஆலமரங்களிரண்டை உள்ளடக்கிய பகுதி மனதுக்கு ஒருவித பயத்தைக் கொடுத்தது. இருளான இரவுகளில் இப்பாதை வழியே செல்கின்ற எவராகவிருந்தாலும் 'இப்பக்கத்தை பார்ப்பதில்லை' என்று நினைத்துச் சென்றாலும், கோயில் எல்லைக்கு வந்ததும் ஒரு தடவையாவது அந்தப் பக்கத்தைப் பார்க் காதிருப்பதில்லை. அது இயல்பாகவே நடக்கும் விஷயம். இருந்தும் அந்த ஒரே பார்வையில் மனதில் எழும் பயம் பாதங்களை அவசரப் படுத்தும்.

தீப்பந்தத்தோடு கடைப் பக்கமிருந்து சிறுமியொருத்தி வந்து கொண் டிருந்தாள். அவளது ஒரு கையில் சில்லறைச் சாமான் பையொன்று. தைரியமான ஆண்களே தனியே செல்லப் பயப்படும் அச்சிறுபாதையில் இந்த இருண்ட இருளில் கடைக்குப் போய் வருபவள், வெள்ளயனின் தங்கை நாகசுந்தரி. எவருக்கும் பயப்படாத துடிப்பான சிறுமியான அவள் எந்த இரவிலும் இச்சிறுபாதையூடாகச் செல்லப் பின்வாங்குவதில்லை.

திடீரென்று நகரசபை வீட்டுத் தொகுதிக்குப் பின்னாலுள்ள நீர் வழியும் காணுக்கருகால் வெளிப்பட்ட கறுத்துயர்ந்த பேயைக் கண்டு நாகசுந்தரி பயந்து சத்தமிட்டாள்.

"ஐயோ அம்மா பேய்.... பேய்...."

சாமான் பையை ஒரு பக்கமாக எறிந்த அவள், அசோக வீட்டு பின்பக்கமாக ஓடினாள்.

வீட்டுத் தொகுதியிலுள்ள அத்தனை பேரும் மதகடிக்கு ஓடிவந்தனர்.

"நாகசுந்தரிக்கு பேயடித்திருக்கு"

"கறுத்துயர்ந்த உருவமாம்"

"மதகடியிலிருந்துதான் வெளிப்பட்டதாம்"

"மாடசாமியின் அவதாரம் தான்"

"இந்தக் கடும் இருட்டுக்குள்ள என்னத்துக்கு கடைக்கனுப்பினாங்க?"

"சரி பிழ விளங்காத சின்னப் பிள்ளையக் கடைக்கு அனுப்புறதா? சீதை மாமிக்குப் பைத்தியமோ தெரியாது"

"அவளும் சொல்லுக் கேட்காதவள்தான். யாருக்கும் பயமுமில்ல"

"ஆரியஸேன அண்ணனுக்குச் சொல்லி மந்திரித்து நூல் போடணும்"

அங்கு கூடியவர்கள் தத்தம் எண்ணங்களை வெளிப்படுத்தினர்.

நாகசுந்தரி இன்னுமே நடுங்கிக் கொண்டிருந்தாள். இருந்தும் அவள் நல்ல சுயசிந்தனையோடிருந்தாள்.

"பிள்ள.... நீ என்ன கண்டாய்?"

மூத்த மனிதர் ஒருவர் கேட்டார்.

"உயரமான உயரமான...... கறுப்புப் பேய்..... மேலே.....மேல... பார்த்துக் கொண்டு நின்றிச்சி"

நாகசுந்தரி களைத்தபடி சொன்னாள்.

கறுப்புப் பேயின் முகம் நன்கு கண்டு பழகியது போல் திடீரென்று அவளுக்கு நினைவு வந்தது. மனம் குழம்பியிருந்த அவள் அந்த முகத்தை ஞாபகப்படுத்த கடுமையாகப் பிரயத்தனப்பட்டாள். அணிந்திருந்த உடை கூடக் கண்டு பழகியதுதான். கறுப்பு சார்ந்த உடை..... மஞ்சள் நிறமான புள்ளிகள் கொண்ட உடுப்பு. அவள் கவனமாக

அதைக் கவனித்தாள். 'ஆம்..... அந்தப் பேய் அதைத்தான் அணிந்திருந் தது..... மஞ்சள் புள்ளி கொண்ட கறுப்பு சாரன்'

அப்படிப்பட்டதொரு சாரனை அசோகதான் அணிந்திருந்தான். நாகசுந்தரியின் மனம் ஒரு நிலைப்பட்டதாக இல்லை. அவள் அசோகவின் பக்கம் பார்த்தாள்....'இல்லை நான் கண்டது அசோகவின் முகமல்ல. அசோக அண்ணன் உயரமானவர்தான். ஆனால் நான் கண்டதோ அதைவிட உயரம்'. திடீரென்று அசோகவின் அருகிலிருந்த குமார அவளது பார்வையில் பட்டான். 'ஆம் குமார.... குமாரவின் முகத்தத் தான் நான் கண்டேன். ஆனால்..... குமார அவ்வளவு உயரமாக இல்லயே. இருக்க முடியாது.... அப்படியிருக்க முடியாது' மனம் அமைதியற்றிருந்ததால், யாரைப் பற்றியும் உறுதியான முடிவுக்கு வர அவளால் முடியவில்லை.

எல்லோரும் தத்தமது வீடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். சீதை மாமியின் கையைப் பிடித்தபடி நாகசுந்தரியும் சென்று கொண்டிருந்தாள்.

"யஸாச்சி.... யஸாச்சி பேய் பேய்"

இந்தக் குரலால் நாகசுந்தரி திரும்பிப் பார்த்தாள்.

அசோக தன் தோளில் குமாரவை அமர்த்தியிருந்தான்.

"நில்லுங்கடா.....உங்களுக்கு"

"இவ்வளவு நடந்தும் இவளின்ற துடிப்பு. வாடீ வீட்டுக்கு"

சீதை மாமி நாகசுந்தரியின் முதுக்கு ஓர் அடிகொடுத்து, கடுங்கோபத் தோடு கையைப் பிடித்துத் தன்பக்கம் இழுத்துக் கொண்டாள்.

❖❖❖❖❖❖

"ஏய் வாங்கடா..... கோயில்ல பூஜையொன்றிருக்கு. போவம் பார்க்க"

புற்றரையில் விளையாடிக் கொண்டிருந்த பெடியள் சற்று நேரத்திற்கு விளையாட்டை நிறுத்தினர்.

"மாடசாமிக்கு பூஜை செய்யாத நாள் இருக்காடா? ஒவ்வொரு நாளும் வைக்கிறாங்க"

தகவல் கொண்டு வந்த ஜெயக்குமாரை நெருங்கியபடி தயாஸிரி கேட்டான்.

"பூஜை வைக்கிறவங்க ரெண்டொரு தேங்காய் கல்லில் அடித்து உடைத்திட்டுப் போவாங்கள். ம்.... தேங்காய்த்துண்டு பொறுக்கிறதுக்கு சண்ட பிடிக்கிறதவிட இங்க விளையாடுறது நல்லது. நீயும் இங்க வா விளையாட"

சுசில் ஜெயக்குமாரை அழைத்தான்.

"வேண்டாம் வேண்டாம்.... நீ போ. போய் ஆச்சாரி தாத்தாவுக்கு உதவி செய். விளையாட ஆக்கள் கூடிட்டாங்க"

வெள்ளயன் குறுக்கிட்டான்.

"இன்னக்கி தேங்கா உடைக்கிறது மட்டுமல்ல, சேவலொன்றும் பலி குடுக்கிறாங்க"

ஜெயக்குமார் கூறினான்.

அநேகமான பெடியள் வியப்பை வெளிப்படுத்தினர்.

"நானென்றால் பலிபூஜை பார்த்ததேயில்ல. அதனால பார்க்கப் போகணும்"

அசோக சொன்னான்.

"நாங்களும் பார்த்ததில்ல. நாங்களும் போகோணும்"

பலரும் ஒரேயடியாகக் கூறினர்.

"நானென்றா பார்த்திருக்கன். சரி போவம் பார்க்க"

சுசில் விளையாட்டை நிறுத்தி விட்டுச் சொன்னான்.

இளவட்டத்தினரின் துடிப்பையும் விளையாட்டையும் பார்த்து ரசிப்பதோடு, எல்லே விளையாடும்போது தூரப் போய்விழும் பந்தை தேடிக் கொடுத்துதவும் சிறிய ஆண்பிள்ளைகள் பலர் கற்குவியலில் அமர்ந்திருந்து இந்தக் கதையை மிகுந்த ஆர்வத்துடன் கவனித்தனர்.

"சுசில் அண்ணா நானும் வரட்டே?"

குமார கேட்டான்.

"உனக்குப் பைத்தியமா? சின்னப் பிள்ளைங்க அதெல்லாம் பார்க்கக் கூடாது. நீ வீட்டுக்கு ஓடு"

கொதலாவல தம்பி குமாரவுக்கு உத்தரவு போட்டான்.

"முடியாது"

"இந்தப் பொல்லயும் பந்தயும் எடுத்துக்கொண்டு வீட்டபோ குமார"

தயையும் கூறினான்.

"ஆ..... அப்ப நாங்க விளையாடுவம். அண்ணன்மார் கோயிலுக்கு போனபிறகு நாங்க எல்லே விளையாடுவம்"

குமாரவின் யோசனைக்கு சிறுபிள்ளைகள் விருப்பம் தெரிவித்தனர்.

"லலித், நிமல், நீங்களும் நில்லுங்கடா. பலி பூஜை பார்ப்பது சரியில்ல"

சுசில் தனது தம்பிமாரையும் எச்சரித்தான்.

"சுசிலண்ணா சூட்டிக்கும் வேண்டாமென்னு சொல்லுங்கொ"

சின்னதம்பி சுசிலுக்குச் சொன்னான்.

"சூட்டி மட்டுமல்ல நீயும் நில்லு. நீங்கள் இன்னும் சின்னப் பிள்ளைங்க தான். கனவில பயப்படுவீங்க. அப்புறம் எண்ணெய் மந்திரிக்க வேண்டி வரும்"

சுசில் தன் சகோதரர்களுக்கு எச்சரிக்கையாகச் சொன்னான்.

"நானும் தயா அண்ணனும் அப்பிடியான பல பூஜை பார்த்திருக்கிறம். அதனால வாரம்"

சின்னத்தம்பி அனுமதி கோரினான்.

"இங்க அவன் வரட்டு சுசில்"

சரத் வேண்டினான்.

"சரி போவம்..... ஆனா உங்களுக்கு ஒன்னு சொல்றன். வந்ததுக்குப் பரவாயில்ல. பேசாம பாத்திட்டிருங்கோ சரிதானே. தோட்டத்துப் பெடியன்களோட சண்டைக்குப் போகக் கூடாது. அப்படி ஏதாவது நடந்தா அவங்க எங்களயும் சேர்த்துப் பலி கொடுத்திருவாங்கள்"

சுசில் குழுவினருக்கு முன்னெச்சரிக்கை செய்தான்.

இளவட்டத்தினர் தேயிலைப்பற்றை நிறைந்த மலைச் சாரலுக்கூடாக மேலே ஏறத்தொடங்கினர்.

❖❖❖❖❖❖

மாடசாமி கோயில் கதவுகள் திறந்திருந்தன. கோயில் முற்றத்தின் மத்தியிலுள்ள 'தேங்காய் கல்'லை ஒரு கூட்டம் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். சரிந்து விழும் களிசான் துண்டுகளுடன் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் சற்றே தூர நின்று அவதானித்தனர். இளைஞர், நடுவயதினர், முதியோர் என இருபதுக்கு மேற்பட்டவர்கள் பூசைக்கு வந்திருந்தனர்.

அகன்ற பித்தளைத் தட்டொன்றை வைத்திருந்த ஒருவர் இடைவிடாது அதில் தாளத்திற்கேற்ப தட்டிக் கொண்டிருந்தார். அதிலிரு ந்து எழுந்த ஒலி அந்தச் சூழலின் அமைதியை விரட்டியடித்தது. ஆலமர வேரொன்றில் கட்டியிருந்த சேவல், அவ்வப்போது தன் சிறகுகளைத் தட்டி வெறுப்பை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. கட்டப் பட்டிருந்த நூலை அவிழ்த்துக் கொள்ள அது இடைவிடாது முயற்சித்தது. சிறகடித்தடித்து மேலே துள்ளியது.

இந்த எல்லா சந்தர்ப்பங்களின் போதும் மரணம் நிச்சயிக்கப்பட்டுள்ள அந்த அப்பாவி உயிரியை, அங்கு கூடி நின்றோர் பார்க்கத் தவறவில்லை. சின்னஞ் சிறுவர்கள் அனுதாபப் பார்வை வீசி நின்றனர்.

'பாவம் அப்பாவிச் சேவல்'- எல்லாச் சிறுவர்களதும் பார்வையின் அர்த்தம் இதுவாகவேயிருந்தது. இருந்தாலும் மிகவும் அபூர்வமாகக் கிடைக்கும் கோழி இறைச்சித் துண்டின் சுவையும் எதிர்பார்ப்பும் அடிமனதில் தலைகாட்டியது. சிறுவர்களிடம் மாத்திரமல்ல இளைஞர், முதியவர் என்ற வேறுபாடின்றி அவர்களது மனதிலும் இதே ஆவல் மேலோங்கியிருந்தது.

இந்தப் பூசையின் மூலம் தமது எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற நம்பிக் கையை வலுவூட்டும் விதமாக, வேதவரிகள் பல உச்சாடனம் செய்த, வயதான சமயப் பிரதிநிதி சேவலின் கழுத்தை வெட்டினார். பின்னர் கோயில் முற்றத்தில் தேங்காய் கல்மீது சேவலின் உடலைப் போட்டார். சிறகடித்தடித்து இருபக்கமாகவும் மேலும் கீழும் துடிதுடித்த தலை யில்லாச் சேவலின் கழுத்திலிருந்து வழிந்த குருதி சூழவரச் சிதறியது. சிறிது நேரம் துடித்து கல்மீது விழுந்த அது அமைதியடைந்தது.

நாலைந்து தேங்காய்கள் கல் மீதடித்து உடைக்கப்பட்டன. கோயில் பூமியிலேயே சமைப்பதற்கு அதன் சிறகுகளை இடுங்கி சுத்திகரிக்கத் தொடங்கினர் சிலர்.

"ம்..... சரி இனி நாங்க விளையாடப் போவம்"

சுசில் குழுவினருக்கு ஆணையிட்டான்.

"கழுத்து வெட்டப்பட்டாலும் ஒரேயடியாகச் சாகேல்ல என்ன"

பலி பூஜையைப் பார்த்து அதிர்வுக்குள்ளான ஒருவர் சொன்னார்.

"தலையில்லாவிட்டாலும் உடல் சண்டை போடுமென்று சும்மாவா சொன்னாங்க?"

எல்லா விடயத்தையும் சிரிப்பாக எடுத்துக் கொள்ளும் கீர்த்தி சொன்னான்.

"பலி பூஜைக்கு வரும் சேவல் ஒருநாளும் தப்புவதில்லயே. அது எப்படியும் பலியாகிவிடும்"

வெள்ளயன் கூறினான்.

"அடுத்த வாரம் இப்படியான இன்னொரு பூஜை இருப்பதாக ஆச்சாரி தாத்தா சொல்வதை நான் கேட்டேன். அதற்கு சேவலொன்று தேட முடியுமான்னு என்னக் கேட்டவர். எங்கட சின்னம்மா வீட்டால் வாங்க முடியுமென்று சொன்னன். எவ்வளவென்று கேட்டார். இருபது ரூபா வருமென்றேன். பூஜை தினத்தில் எடுப்பதாக அம்மனிதன் சொன்னார்"

ஜெயக்குமார் புதுச் செய்தியொன்றை வெளியிட்டான்.

"அவர் எந்தப் பக்க ஆள்? ஹொலிறூட் தோட்ட ஆளா ஜெயக்குமார்?"

சுஸில் அதுபற்றி ஆவலுடன் கேட்டான்.

"இந்தத் தோட்டமல்ல. கீழ்ப் பகுதி ஆள். சேவல வாங்கினால் எனக்கும் ஏதாவது கிடைக்கும்"

ஜெயக்குமார் மகிழ்ச்சியோடு தெரிவித்தான்.

"ஏன் உனக்கு சின்னம்மாவிடமும் எவ்வளவென்டாலும் எடுக்கலாம் தானே"

வெள்ளயன் யோசனை கூறினான்.

"அப்படி முடியுமாடா? நீயென்றால் அம்மாவிடமும் வாங்குவாய். என்னால் முடியாது"

ஜெயக்குமார் தன் சகோதரனின் யோசனையைப் பகிடிக்குள்ளாக்கி னான்.

சுஸில் யோசித்தபடி முன்னால் சென்றான். வெள்ளயனதும் ஜெயக்குமாரினதும் வாதம் அவனது யோசனையைக் குழப்பியது.

"ரெண்டு பேரும் வாய மூடிக் கொண்டு வாங்க. அடுத்த கிழம பலி பூஜைக்குப் போய் கோழியின்ற உயிரக் காப்பாத்துவம்"

சுஸிலின் அபிப்பிராயத்தால் அவர்களுக்கு நடுக்கமேற்பட்டது.

"அதச் செய்யப் போய் கடைசியில மாடசாமிக்கு எங்களயும் பலி கொடுக்க வேண்டி வரும். அதெல்லாம வேணாம் சுஸில்"

வெள்ளயன் தனது விரோதத்தை வெளிப்படுத்தினான்.

இதற்கிடையில் பெடியன்கள் புற்றரை கல்பரப்புக்கு வந்துவிட்டார்கள்.

"நீங்கள் இதுபற்றி வாய் திறக்கக் கூடாது. ஒரு உயிரைப் பாதுகாப் பது எவ்வளவு பெரிய புண்ணியம்? அதுமட்டுமல்ல எங்களுக்கு சிறிய தொரு கொடுக்கல் வாங்கலும் செய்து கொள்ளலாம்"

சுஸில் சிரித்தபடி சொன்னான். பெடியனின் முகம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.

"கொடுக்கல்.... வாங்கல்.... அது எப்படியென்று சொல்லெண்டா"

வெள்ளயன் கேட்டான்.

"பலி கொடுக்கக் கொண்டு வரும் கோழிய களவாகக் கொண்டு போய் விற்கிறதத்தானே சொல்றீங்க. சரி பிடிபட்டா பொலிஸில் தான் போய் நிற்க வேண்டிவரும்"

சரத் கற்பரப்பில் அமர்ந்தபடி சொன்னான்.

"அப்படி ஒன்றும் நடக்காது. அத எப்படிச் செய்யணுமென்று நான் பிறகு சொல்றன். இங்க சொல்ல முடியாது. சின்னதுகள் நிற்கிறான்கள். ம்..... வாங்கடா இப்போ விளையாடுவம்"

சுஸில் அவ்வாறு சொன்னபடி, தேயிலைப் பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த றப்பர் பந்தைக் கையிலெடுத்தான்.

❖❖❖❖❖❖

ஒரு வாரம் நகர்ந்தது. அன்று பொருத்தமானதொரு நாள்.

பாடசாலைவிட்டு வந்த இளசுகள் அவசர அவசரமாக பகலுணவை விழுங்கித் தள்ளத் தயாராயினர்.

"சோற்றுத் தட்டில் பாதி கூட சாப்பிடேல்ல. விளையாட்டுக்கு போற அவசரம். சோறு கொஞ்சத்த சாப்பிட்டிட்டுப் போ தம்பி"

கொதலாவலயின் அவசரத்தைப் பார்த்து ஜேன்மாமி சொன்னாள்.

"என்னவோ தெரியாது இன்னக்கி இவன் அவசரப்படுறான்"

அசோக சோற்றுப் பிடிகளை விழுங்கும் வேகத்தைப் பார்த்து அவனது அக்கா சொன்னாள்.

"இங்க நீ சாப்பிட்டு முடிச்சிட்டியா கீர்த்தி?"

சோற்றுப் பீங்கானை முடிக்க எடுத்த சோற்றுப் பிடிகளின் எண்ணிக் கையைப் பார்த்து நோனாச்சி வியப்புடன் கேட்டாள்.

"பாடசாலை விட்டு வந்த பிள்ளைங்க சாப்பிடுறதில்ல. விழுங்கிறாங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில் கீழ்ப் பக்கத்திலிருந் 'விசில்' சத்தம் வரும். அப்புறம் பெடியங்களெல்லாம் அந்தப் பக்கம் ஓடுவாங்கள். எங்கட பெடியன்கள் ரெண்டு பேரும் அப்பிடித்தான். ஒரே விளையாட்டு"

முன் படிக்கட்டில் அமர்ந்து நாகசுந்தரியின் தலையில் பேன் பார்த்துக் கொண்டிந்த சீதை மாமி கூறினாள். அப்பொழுது கீழ்ப்பக்க புல்வெளியி லிருந்து விசில் சத்தம் கேட்கத் தொடங்கியது. அதன் பிரதிபலிப்பாக பல பக்கமிருந்து விசில் ஒலி கேட்டது.

"அங்க கேட்குது கேட்குது... நான் சொன்னன் தானே. இனி பெடியன்க ளெல்லாம் ஓடுவாங்க. ஐயோ இவங்களுக்கு என்ன நடந்திருக்கோ தெரியாது நோனாச்சி"

"பெடியன்கள் அப்படித்தான் சீதே. அடிதடி குழப்பமில்லாமல் என்னவென்றாலும் செய்யட்டும்"

நோனாச்சி சொன்னாள்.

❖❖❖❖❖❖

கற்தரையில் அமர்ந்து இளவட்டத்தினர் கொஞ்சநேரம் கதைத்துக் கொண்டிருந்தனர். சுஸில் எல்லோருக்குமே வேலை பகிர்ந்து கொடுத்

தான். கூடவே, இங்கு கதைக்கின்ற செய்கின்ற விடயங்களை எவரும் வீடுகளில் போய்ச் சொல்வதில்லையென உறுதியெடுத்துக்கொண் டான்.

அதன் பின்னர் எல்லோரும் எல்லே விளையாடுவதற்கு புல் மைதானத்திற்கு இறங்கினர். விளையாடிக் கொண்டிருக்கும் போது கூட சுஸில் இடையிடையே சில எச்சரிக்கைகளும் புத்திமதிகளும் சொல்லிக் கொண்டிருந்தான். இரண்டு மணி நேரம் அளவு விளையாடிய பெடியன்கள் சிறுவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு மைதானத்திலி ருந்து விலகினர். சுஸில் கற்தரையில் அமர்ந்து இளவட்டத்தினரை அருகே அழைத்தான்.

"சரி நாங்க வேலய ஆரம்பிப்பம்"

சுஸில் அவ்வாறு சொல்லும் போது சிறுபிள்ளையொன்று கற்தரைக்கு ஓடி வந்தது.

"ஜெயக்குமார் அண்ணா உங்கள ஆச்சாரி தாத்தா கூப்பிடுறார்"

"நான் வாரதாச் சொல்லுங்க பபா"

அப்படிச் சொன்ன ஜெயக்குமார் கைகளைக் கழுவிக் கொள்வ தற்காக சிறிய கிணற்றின் பக்கம் ஓடினான். கால் கை கழுவிக் கொண்டு வந்த ஜெயக்குமாரை அழைத்து சுஸில் அறிவுரை சொன்னான்.

"அப்படியென்னா நீ காசு வேண்டிக் கொண்டு கடையடியில நில்லு. பத்து நிமிஷத்தில உன்ற கையில சாமான் கிடைக்கும். நன்றாக ஞாபகம் வெச்சிக்கொள். நீயும் அந்த மனிதனோட போகணும் யாராவது கூப்பிட்டா ஆச்சாரி தாத்தாவின் வேலை, வேறெங்கயும் போக முடியாதென்னு சொல்லு. உன்ற கையில தான் விஷயமிருக்கு சரியா?"

"சரி வேல தடைப்பட்டா என்ன செய்றது?"

வெள்ளயன் கேட்டான்.

"இப்பிடியான நேரத்தில எனக்கு பேய்க் கோபம் வரும் வெள்ளயன். நாங்க நல்ல வேலதான் செய்றம். எங்களுக்கு பிழைவராது. உன்னால முடியாட்டா இப்போதே போய்விடு. நாங்க இதைச் செய்வம்"

சுசில் கோபமுற்றுள்ளதை வெளிப்படுத்தினான்.

"உண்மையாகவே வேலை தடைப்பட்டால் என்ன செய்றது?"

சுசில் சந்தேகத்தோடு கேட்டான்.

“பயப்பட ஒன்றுமில்லடா. வேல குழம்பினால் ஜெயக்குமாரிட்ட இருக்கிற காசு உனது சின்னம்மாவுக்குப் போகும். அவ்வளவுதான்”

“அப்போ எங்களுக்கு ஒரு சதமும் இல்லை”

தயாஸிரி கேட்டான்.

“வேல தடப்பட்டால் நாங்கள் தப்பிக் கொள்வது பெரிய விஷயமில்ல”

சுசில் விளக்கமளித்தான்.

“சரி சரி அது நல்லது. போவம்...”

❖❖❖❖❖❖

இருளுக்கு இடம் கொடுத்துவிட்டு ஆதவன் மறைந்து கொள்ளத் தொடங்கினான். பூசைப் பூமியில் ஆலமரத்தில் அடங்கும் பறவைகள் ஒவ்வொன்றாக வந்து இலைகிளைக்கிடையில் புகுந்தன. மாடசாமி கோயில் கதவு திறக்கப்பட்டிருந்தது. சாணக்களி பூசப்பட்டிருந்த கோயில் தளத்தை நடுத்தவர வயது மனிதனொருவன் பெருக்கினான். விளக்குமாறு மற்றும் சிறு சிறு பொருட்களை மாடசாமி எழுந்தருளியுள்ள மேடைக்கு ஒருபக்க ஓரமாக வைத்தான். பித்தளைச் செம்பில் நீர் கொண்டு வந்த இன்னொருவன் கோவிலினுள்ளே வந்து சாணக்களித் தளத்திற்குத் தெளித்தான். சின்னப் பையன்கள் இருவர் முற்றத்தில் விழுந்திருந்த காய்ந்த இலைகள் சருகுகளை துப்புரவு செய்தனர்.

“ஒழுங்கா கூட்டுங்கடா”

சிறுவர்களின் வேலையில் திருப்தியடையாத பாங்கில் வயதாளியொருவன் சத்தமிட்டார்.

“எங்களுக்குத் தெரியும். நீ வாய் மூடு கிழவன்”

ஒரு சிறுவன் அந்த முதியவருக்கு ஏசினான்.

அவருக்கு மௌனமாக இருப்பதைத் தவிர வேறெதுவும் செய்வதற்கில்லை. இவர்களோடு வாய் கொடுத்தால் இன்னுமின்னும் அவமதிப்புக்கு ஆளாக நேருமென்பது அவருக்கு விளங்கியது.

ஒவ்வொருவராகக் கோயிலுக்கு வரத் தொடங்கினர். பித்தளைப்

பாத்திரங்கள், தேங்காய்கள், பழத்தட்டு, ஊதுவத்தி, கற்பூரம் என்பனவற்றைக் கொண்டு வந்தவர் நேரே கோவிலினுள்ளே எடுத்துச் சென்றார்.

இரண்டு ஆலமரங்களுக்கிடைப்பட்ட கோயில் முற்றத்திற்கு பிரவேசிக்கும் சிறுபாதை மருங்கில் ஆலம் சருகுகளைக் குவித்து தீமூட்டியிருந்ததால் அதன் புகை ஆலமரத்தின் கிளைகளுக்கூடாக நுழைந்து மேலெழுந்தது.

ஹொலிறூட் தேயிலைத் தொழிற்சாலைப் பக்கம் பாதையால் வந்த சுஸில் வட்டத்தினர், கோவிலுக்குள் புகும் சிறுபாதை அருகில் தீமூட்டத்தின் முன் நின்றனர். குழுவில் பலரைக் காணவில்லை. ஜெயக்குமார், வெள்ளயன் இப்படி இரண்டு மூன்று பேர் குறைவு. சுசில் அவர்களுக்கு வெவ்வேறு பொறுப்புக்களைக் கொடுத்திருந்தான்.

"அங்க பாருங்க. பூஜை வைக்கிறவர ஜெயக்குமார் கூட்டிட்டு வாரான். அந்தாளின் கையில் சேவலொன்று இருக்கிறாப் போல"

வீட்டுத் தொகுதியை பார்த்தபடியிருந்த அசோக சொன்னான்.

"அப்படீன்னா வேல சரி. சரத்..... நீ அப்படியே குனிந்து ஆலமர வேர்ப்பக்கமாகவுள்ள தேயிலைப் பற்றைக்குள் மறைந்து நில். என்ன செய்யணுமென்னு தெரியுந்தானே? சாமான் கையில் கிடைத்ததும் பின்பக்கமாக மெல்லப் பள்ளமிறங்கி புல்தரைப் பக்கமாகப் போட்டுவிடு. நேரத்துக்கு அது தன் கூட்டுக்குப் போய்விடும். உங்கட வேல முடிஞ்சுதென்னா, யாருக்கும் தெரியாத விதமா மெல்ல நாம இருக்கிற பக்கம் வந்துவிடு"

சுசில் குழுவைச் சேர்ந்த ஒருவனுக்கு அறிவுறுத்தல் செய்தான்.

பூஜை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஜெயக்குமார் பூஜைக்கு ஒதுக்கியிருந்த சேவலை அதற்குப் பொறுப்பானவர் கையில் கொடுத்தான். அவன், இரு ஆலமரங்களுக்கிடையிலான ஆலம் வேரொன்றில் அதன் ஒரு காலைக் கட்டிவிட்டான். ஆலமரத்திற்குக் கீழாக தேயிலை பற்றைக்குள் மறைந்திருந்த சரத் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெயக்குமார் மீண்டும் வந்து கோயில் வேலைகளுக்கு அறிவுரைகள் சொன்னான். கோவில் பொறுப்பாளர் ஆச்சாரி தாத்தாவின் அதிகாரமிக்க பிரதிநிதியான ஜெயக்குமாரின் கூற்றுகளுக்கேற்ப பூஜை வேலைகளில்

காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பூஜைக்கு வந்த மூத்தவர்கள் விருப்பம் காட்டினர்.

பித்தளைத் தட்டின் நாதம் எழுப்புவதோடு கற்பூரம் எரித்தல் ஆரம்பிக்கப்பட்டது. மாடசாமியின் முன்னால், தேங்காய் கல்மீது, கோவிலின் முன்னாலுள்ள சீமெந்துக் கட்டில் கற்பூரம் எரிக்கப்பட்டது. அவர்கள் திரிசூலத்திலும் காணிக்கை கட்டினர்.

அதிக நேரமெடுக்கவில்லை. அங்கே குழப்பநிலை உருவாகியது. பக்தர்கள் மத்தியில் நின்ற நடுத்தர வயதுக்காரன் ஆவேசம் கொண்டார். அதைச் சாதகமானதொரு வெளிப்பாடாக பூஜைக்குப் பொறுப்பானவர் கள் கருதினர். அவர்களது முகம் பிரகாசமடைந்தது. கடவுள் பூமிக்கு அல்லது இந்தப் பூஜைப் பூமிக்கு இறங்கியுள்ளதாக விசுவாசித்தனர். ஆவேசம் கொண்டவர் பித்தளைத் தட்டின் நாதத்திற்கேற்ப வேகமாக ஆடத் தொடங்கினார். எல்லோருடைய கவனமும் அவர்மீதே குவிந்திருந்தது. உதவியாளரென்று கருதத்தக்க ஒருவர், ஆவேசமடை ந்த மனிதனின் முன்னே சென்று மஞ்சள் நீர் தெளித்து அவருக்கு நமஸ்காரம் செய்து வேத வாசக மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்.

பூஜை பார்ப்பதற்காக மாத்திரமே வந்த இளைஞர் வட்டத்தினர் இதனால் மிகவும் எழுச்சியுற்று அந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்த னர். ஆவேசமடைந்துள்ள மனிதனின் அருகே சென்று, ஆலமர வேர்ப் பரப்பு மறையும்படியாக நிற்குமாறு சுஸில் நண்பர்களுக்குச் சொன்னான். கொஞ்ச நேரம் ஆவேச மனிதனை அவதானித்ததாகக் காட்டிக் கொண்டுவிட்டு, இடப்பக்கமாயுள்ள ஜம்பு மரத்தடிக்குச் சென்றனர். குழுவின் எஞ்சிய அங்கத்தவர் சிலரும் அவ்விடத்திற்கு வந்தனர்.

ஆவேச மனிதனின் ஆட்டம் ஓய்ந்தது. பக்கத்தவர்கள் அடுத்த கட்டத்தில் கவனம் கொண்டனர்.

“கோழி எங்கடா?”

மீண்டும் குழப்பநிலை. பக்தியினால் கண்கள் இருண்டு நின்ற வயதாளிகளின் நாவிலிருந்து புலம்பலும் பிரார்த்தனையுமாக.....

“ஆண்டவனே..... முருகா..... மாரியம்மா.....சிவசிவா...... புள்ளயாரே....... வடிவேலனே.......”

கடவுளிடமும் உதவி வேண்டி நின்றனர்.

முகூர்த்த நாளில் கடவுளின் பேய்க்கு பலி கொடுக்கவிருந்த கோழி காணாமல் போயிருந்தது.

பக்தர்களின் ஒரு சாராருக்கு அது நல்ல அறிகுறி. இருந்தும் பக்தி பூர்வ மனதோடு பார்க்கும்போது ஏதோவொரு குறைபாடு ஏற்பட்டதன் காரணமாக கடவுள் கோபப்பட்டி ருப்பதாக, பயந்த கண்களோடு கோழி கட்டப்பட்டிருந்த இடத்தை நன்கு நோட்டமிட்டனர்.

கோழியின் காலில் கட்டியிருந்த கயிற்றின் மறு அந்தத்தில் கோழிச் சிறகொன்று மாத்திரம் சிக்கியிருந்தது. பல சிறிய இறகுகளும் இரத்தத் துளியென்று எண்ணத்தக்க சிவப்பு சார்ந்த அடையாளம் கொண்ட உலர்ந்த ஆலம் இலைக் சிலவும் காணப்பட்டன.

பனிஜம்பு மரத்தடியில் நின்ற பெடியள் பக்கம் சற்றே சந்தேகத்தோடு பார்த்த நடுவயதினர் ஒருவர் அவர்களருகே வந்தார்.

"நீங்க ஏதாவது கண்டீங்களா?"

அவர் உடைந்த பாஷையில் கேட்டார்.

"மாசிலாமணி அண்ணன் ஆவேசமடைந்து ஆடியதப் பார்த்தம்"

கீர்த்தி பதில் கூறினான்.

"நீ கனகு அண்ணன்ற மவன்தானே?"

அவர் வெள்ளயனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமா அண்ணே"

வெள்ளயன் அப்பாவியாகப் பதில் சொன்னான்.

அம்மனிதர் மீண்டும் சென்றார். சற்று நேரத்தில் இந்தச் செய்தி ஹொலிறூட் பெருந்தோட்டம் முழுவதும் பரவியது. கடையருகே நின்றவர்களெல்லாம் கோயிலருகே வரத் தொடங்கினர்.

"இந்த மாதிரி சம்பவம் செய்யக் கூடாது. இந்த ஆடு கோழி வெட்டுற விஷயங்களெல்லாம் விட்டுவிடவேணும்"

"பேய் பிசாசு வார இந்த நேரத்தில கோழி வெட்டுறது யார்தான் செய்வான்?"

"மாசிலாமணி அண்ணனுக்கு கடவுள் பார்வை விழுந்ததாமே.....

அதே நேரத்திலதான் கோழி காணாமல் போனதென்று பார்த்தவங்க சொன்னாங்க. அது உண்மயா?"

"இது புனிதமான பூமி. இனிமேல் இங்க ஆடு-கோழி வெட்ட இடம் கொடுக்கக் கூடாது"

"இந்தப் பூஜை செய்றது இங்கே உள்ளவங்களல்ல. பனியகல்பாவுல இருந்து வந்தவங்கள். அவங்களுக்கென்ன? எதாவது விபரீதமென்டா நம்மளுக்குத் தானே?"

கோயிலில் சேர்ந்தவர்கள் இவ்விடயம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தச் சிக்கல்களுக்கு மத்தியில், பூஜை நடாத்த வந்தவர்கள் கோயில் பூமியிலிருந்து மெல்ல வெளியேறியிருந்தனர். கோழி பலிபூஜை செய்வது இந்து வழிபாட்டின்படி தடைசெய்யப்பட்ட விடயமாக இல்லாத போதும், எதிர்பாராத விதமாக நடந்த இந்நிகழ்வால் ஹொலிறூட் பெருந்தோட்ட தமிழ் மக்களின் கோபம் தங்கள் மீது பாயக்கூடுமென்று உணர்ந்ததாலோ என்னவோ, பூஜைக்குக் கொண்டு வந்த பித்தளைப் பாண்டங்கள் உள்ளிட்ட அனைத்தையும் எடுத்துக் கொண்டே வெளியேறினர்.

கோயிலின் கதவை மூடிய ஜெயக்குமார், நண்பர் குழுவை நெருங்கினான்.

"உனக்கு அந்த மனிதன் எவ்வளவு தந்தவர்?"

வெள்ளயன் கேட்டான்.

"அது உனக்கென்னத்துக்கு?"

ஜெயக்குமார் சத்தமாகச் சொன்னான்.

"ஆ...... இப்போ ரெண்டுபேரும் சண்ட பிடிக்கப் போறியளோ? இனி எல்லாரும் போய் விடுங்க. பலி பூஜை முடிந்ததுதானே"

ஜெயக்குமாரின் கையைப் பிடித்துக் கொண்ட சுஸில் நண்பர்களைக் கலைந்து போகுமாறு உத்தரவிட்டான்.

"நீங்க ரெண்டுபேரும் மாத்திரம் சேர்ந்து போறது நல்லதா? எங்களுக்கொன்றுமில்லயா?"

சுனில் கேட்டான். சுஸில் அப்படியே நின்றான்.

"சத்தம் போடாதடா பேயா. இப்போதான் விஷயம் முடிஞ்சிருக்கு. நாளைக்கு சனிக்கிழமை. லீவுநாள் தானே? காலமே கீழ் மைதானத் துக்கு வாங்க. இப்போ சத்தம் போடாம வீட்டுக்குப் போங்க"

சுஸிலின் ஆணைக்கு அடிபணிந்து பெடியள் தத்தமது வீடுகளை நோக்கிச் செல்லத் தலைப்பட்டனர்.

"அந்த மனிதன் எனக்கு ஒரு ரூபா தந்தார். பாவம் நல்ல மனிதன்"

ஜெயக்குமார் கூறினான்.

"அதில் பாதி எனக்குத் தந்தால் நல்லது"

சுஸில் அவ்வாறு சொன்னான்.

"ஒரு ரூபாவில் ஐம்பது சதம் உனக்குத் தாரன் சுஸில்"

ஜெயக்குமார் சொல்லும்போதே சுஸிலின் கண்கள் மகிழ்ச்சியில் பிரகாசித்தன.

"நீ வெள்ளயனவிட நல்லவன்டா"

சுஸில் சொன்னான். ஜெயக்குமார் சிரித்தான்.

❖❖❖❖❖❖❖

"சின்னவங்களுக்கு பலிபூஜை பார்ப்பது நல்லதல்லவென்றாலும் சுசில் அண்ணன் இன்னக்கி எங்கள கோயிலுக்கு வரவேண்டாமென்று சொல்லேல்ல"

லலித் கூறினான்.

"நான் யோசித்தன். பலி கொடுக்க வந்த கோழி சரியாக வெள்ளய னின் கோழியைப் போலவேதான்"

தன் மனதில் தோன்றிய சந்தேகத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் நிமலுக்கு.

இந்நேரமாகும் போது எல்லோரும் போல தங்களது வீடுகளை நெருங்கியிருந்தனர்.

"ஏய்...... வெள்ளயன்ற கோழி கூட்டில நிக்கிது. அது......."

வெள்ளயனின் வீட்டு முன்னாலிருந்த கோழிக் கூட்டை எட்டிப் பார்த்த குமார, சத்தமிட்டுச் சொன்னான். வெள்ளயன், குமாரவின் வாயைப் பொத்தியபடி சொன்னான்.

“ஒரே மாதிரி கோழி பல இருக்குத்தான்”

❖❖❖❖❖❖

வீட்டுத் தொடரின் முன்பக்க சிறுபாதையில் சுதந்திரமாக டிக்போல் விளையாடுவதற்கு முடியவில்லை. வீடுகளிலிருந்து வரும் அழைப்பு, சிறுபிள்ளைகளின் குழப்படி, சில சந்தர்ப்பங்களின் வீட்டுக்காரரின் எதிர்ப்பு, இப்படிப் பல காரணங்களால் சுதந்திரமாக விளையாடக் கூடியதொரு இடத்தின் அவசியம் அவர்களுக்கேற்பட்டிருந்தது. கீழ் புல்நிலத்தின் அருகே கற்பரப்பு சமதளமாக இல்லாததால் அதுவும் பொருத்தமாகவில்லை.

மிகவும் சிறந்த சுதந்திரமான இடமொன்றை இறுதிக் கட்டத்தில் அவர்களால் தேடிக் கொள்ள முடிந்தது. கோயில், கோயில் முற்றம், தேங்காய்கல் இவற்றுக்கிடையே டிக்போல் அமைப்பை செய்து கொள்ள சுஸில் தீர்மானித்தான். அதன்படி கருங்கல்லால் தட்டி நிலத்தை சமாதளமாக்கிக் கொண்டு மாபல் போல் போடும் பெட்டியை கீறி ஒழுங்கு செய்து கொண்டனர். இளவட்டத்தினர் அனைவரும் அதற்குப் பங்களிப்புச் செய்தனர். தேங்காய் கல்மீதும் மேற்கிளம்பி நிற்கும் ஆலம்வேர்களிலும் நன்றாக அமர்ந்து விளையாட்டைப் பார்த்து ரசிக்க முடிவதால் அது பொழுதுபோக்கான இடமாக ஆகியிருந்தது. எவராலுமே தொல்லையுமில்லை. மெல்லிய இரும்புப் பட்டங்களை சதுரப் பாங்கில் அமைத்துச் செய்த இரட்டைக் கதவால் கோயில் மூடியிருந்தாலும் அங்கமர்ந்திருக்கும் கதவுச் சட்டகத் துளைகளுக்கூடாக டிக்போல் விளையாட்டைப் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

“அங்க பாருங்கடா மாடசாமியும் எங்களுக்குத் தெரிகிறார். எங்களுக்கு விளையாட நல்ல இடம் கிடச்சிருக்கு. யாருக்கும் பொய் புரட்டு செய்ய முடியாது. மாடையா பார்த்துக் கொண்டிருக்கார்”

சுஸில் சொன்னான்.

“ஆச்சாரித் தாத்தா ஏசுவாரோ தெரியல”

கீர்த்தி சந்தேகித்தான்.

"அந்தாளு பொல்லுக்குத்தி குத்தி வரும் போது எங்களுக்கு ஓடிவிடலாம்"

சரத் கூறினான்.

"யார் ஏசினால்தான் என்ன? நாங்க சூதாடவில்லயே. ஒரு சதம் இரண்டு சதத்துக்கு டிக்போல் அடிக்கிறம். மாடசாமிக்கு நாங்கள் இருப்பதால் சோம்பலில்லை"

சுஸில் சொன்னான்.

வெள்ளயனையும் ஜெயக்குமாரையும் விட மாடசாமி மீது பயமும் பக்தியும் இருப்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. மொத்தத்தில் எல்லோர் மனதிலும் மாடசாமி மீது பயமும் பக்தியும் இருக்கவே செய்தது.

பரந்த இரு ஆலமரங்களினால் நிழல் படுத்தப்பட்டுள்ள இந்த புனிதபூமியில் சிற்சில அற்புதங்கள்..... நிகழ்ந்திருப்பதாக மூத்தவர்கள் நிதமும் சொல்வார்கள். இந்த இடத்தால் போய் வருகின்ற பெற்றார்-பெண்களெல்லாம் மாடசாமி மீது கொண்டுள்ள பயமும் கௌரவமும் காரணமாக நமஸ்காரம் செய்து கொள்வதைக் காணுகின்ற எவரும் இந்தப் பூமியின் தெய்வீகத் தன்மைகளால் துணுக்குறாமலிருக்க முடியாது. பெடியள் குழுவில் அநேகர் பௌத்தர்களான போதும், தமிழ் மக்கள் இக்கோயிலின் மீதும் மாடசாமி மீதும் கொண்டுள்ள கௌரவத்தையிட்டு பகிரங்கமாக வாய் திறப்பதில்லை.

மாடசாமி மீதும் அவர் வீற்றிருக்கும் பூமிமீதும் அடிமனதில் பயமிருந்த போதும், அதை மறைத்துக் கொண்டு இளமைத் துடிப்பே மேற்கிளம்பி நிற்பதால், மூத்த மனிதர்களின் எச்சரிக்கையையோ பயமூட்டலையோ கவனத்திற்க் கொள்ளாதிருப்பது பெடியளின் பொதுவான குணம்தான். மிகவும் வியப்பான விடயமென்னவென்றால் இந்து சமயத்தைப் பின்பற்றும் மாடசாமி மீது பற்றும் பயமும் கொண்டுள்ள சகோதரர்களான வெள்ளயனும் ஜெயக்குமாரும் சிலபோது தாங்கள் இந்து சமயத்தவர் என்பதை மறந்து சிங்கள நண்பர்களோடு சேர்ந்து செயற்படுவார்கள். எந்தவொரு விடயத்திலும் முதலில் பின்வாங்கினாலும் இறுதியாகும் போது அர்ப்பணிப்போடு ஒத்துழைப்பது இவர்கள் இருவரும்தான்.

வீட்டுத் திட்டத்திலுள்ள சில பெண்களால் கூறப்படும் டிக்போல் சூதால் சிறுபாதையில் போவோர் வருவோருக்கு இருந்த அசௌகரியம்

இப்போது அகன்றிருந்தது. இப்பொழுது டிக்போல் சூது, மாடசாமி கோயில் முற்றத்திற்கு இடம்பெயர்ந்திருந்தது. புல் மைதானத்தை விட்டால் இளவட்டத்தினரின் காலம் அதிகம் கழியுமிடம் கோயில் பூமிதான். கோயிலின் முன்னால் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு நாலைந்தடி இடைவெளியில், இரண்டடி கனபரிமாணமுள்ள இரண்டு பூஜாசனங்கள் காணப்படுகின்றன. அவை சீமெந்தினால் உருவாக்கப் பட்டவை. இவ்விடங்களிலும் பெடியன்கள் அவ்வப்போது உலா வருவதுண்டு.

"அவற்ற மிதிக்க வேண்டாமடா. அது கடவுள்"

அப்படியான சந்தர்ப்பங்களில் ஜெயக்குமாரோ வெள்ளயனோ கோபத்தோடும் வேதனையோடும் சொல்லும் போது, சிலர் அதற்குமேல் நின்று தோடம்பழ மரத்திற்கேறுவர். நன்கு முற்றிய தோடம்பழம் ஒன்றிரண்டை தேடிக் கொள்வது மிகவும் கஷ்டமான காரியமே. நன்கு முற்றிய தோடம்பழமொன்றை இங்குள்ள எந்தவொரு மரத்திலாவது கண்டவர் எவருமில்லை. அந்தளவுக்கு பெடியன்களின் பேயாட்டத்திற்கு இலக்காகி கிளைகளும் தண்டும் பாதிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் பின்னாலுள்ள பனிஜம்பு மரத்தின் நிலை அதை விட வித்தியாசமானது. அதில் தினாந்திரம் பூப்பூத்தாலும் மரம் ஓரளவுக்கு உயர்ந்ததாலும் இருந்திருந்து சிலகாய்களாவது முற்றும் வரை மறைந்திருக்க வாய்ப்புண்டு. இருந்தும் காய்களை விட நன்கு மலர்ந்த பனிஜம்புப் பூ இளவட்டத்தின் நாவுக்கு புதுமையான சுவையைக் கொடுக்கும். மிகவும் சிரமத்தோடு பனிஜம்பு மரத்திற்கு ஏறி, உச்சியிலிருக்கும் ஜம்புப் பூவைப் பறிப்பதற்கு அவர்கள் எடுக்கும் பிரயத்தனம் இலேசானதல்ல. இருந்தாலும் லட்சக் கணக்கில் முற்றி நிலத்தில் விழுந்திருக்கும் சிவப்பு நிறமான ஆலம்காய்களிடையே ஒரு காயையாவது பொறுக்கிச் சுவைப்பதற்கு பெடியன்கள் சும்மாவென்றா லும் நினைப்பதில்லை.

## 12

இளவட்டத்தின் இரண்டொருவர் மைதானத்தில் அமர்ந்து சுதந்திரமாக கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"எங்கடா நம்ம ஆக்கள்? ஒருவரையும் காணேல்ல. சுஸில் அண்ணனும் இல்லயே"

தயாதான் கேட்டான்.

"மேல் இனஸ் கிரவுண்டில் ஓடிப் பாயப் பழகுவதற்கு பாடசாலயால கூட்டிட்டுப் போயிருக்காங்க"

கொதலாவல பதில் மொழிந்தான்.

"அப்படீன்னா நாளை முதல் நாங்களும் காலையில் ஓடவேண்டி வரும்"

அது ஜெயக்குமார். அவன் இவ்வாறான விடயங்களில் ஆர்வமில்லை.

"நீ சும்மா இரு. நாங்க போறம்"

அசோக சொன்னான்.

❖❖❖❖❖❖

கிரேட் வெஸ்டேர்ன் மலைச்சாரல் பனிமூட்டத்தால் மறைந்திருந்தது. சீதளக் காற்று பெரும் ஆலமரங்களின் கிளைகளில் பனித்துளிகளைத் தோய்த்தபடி வீசியது. அதிகாலைப் பனியை அதற்குமேலும் தாங்கிக் கொள்ள முடியாத ஆலம் இலைகள் பனித்துளிகளை கீழே சிந்தின. ஆதலால் ஆலமரச் சூழலில் மெல்லிய பனிமழை சொரிந்தது.

பனிபடர் சோலையின் பனியையும் குளிரையும் வெளியேற்றிக் கொண்டு, இன்னொரு நாள் உதயமாவதை சேவல் கூவி அறிவித்திருந்ததைத் தொடர்ந்து வீட்டுத் தொகுதியில் சில வீடுகளின் கதவுகள் திறந்து கொண்டன. கட்டைக் களிசான் அணிந்தபடி சுசிலும் அவனது நண்பர் வட்ட அங்கத்தவர்களும் முற்றத்துக்கிறங்கினர். திண்ணைகளில் படுத்துக் கிடந்த நாய்களின் தூக்கம் குழம்பியதாலோ என்னவோ இடைவிடாது குரைத்து கோபத்தை வெளிக்காட்டின.

இரவு நெருங்கியபின் பேய் பிசாசுகள் வெளியிறங்கி ஆட்டம் போடுவதாக முதியவர்கள் கூறுகின்ற ஆலந்தோப்பில் அமைந்துள்ள மாடசாமி கோயிலும் பெரும் பூதத்தின் புகலிடமும் இன்னும் இருளில் மூழ்கியிருந்தன. வெண் சுண்ணாம்பு பூசிய கோயிலின் பின்பக்கச் சுவர் மாத்திரம் சாடையாகத் தெரிந்தது. இருட் பிராந்தியத்திலிருந்து பேய்கள் இன்னும் வெளியேறாமல் மாடசாமியைக் காவல் காப்பதாக வெள்ளயனும் ஜெயக்குமாரும் நினைத்தனர். அவர்கள் இருவரதும் மனதில் மெல்லிய கோபம் தலைகாட்டியிருந்தலும் சிங்கள நண்பர்கள் மத்தியில் அதை வெளிக்காட்டுவதை அகௌரவமாகக் கருதி

மௌனம் காத்தனர். அடுத்தவர்களின் மனதில் பயம் புள்ளியளவு கூடப் படிந்திருக்கவில்லை. அவர்களுக்கு இது பகல் காலத்தில் நடமாடும் பழக்கப்பட்ட விளையாட்டுத் திடல்.

"சீக்கிரமா போங்கடா. கீழ்ப்பக்க பாதையால் போய் தெஸிரிபுர சந்தியால் திரும்பி கிறேட் வெஸ்டேர்ன் தார்ப் பாதை நெடுக திரும்ப கீழே வரணும்.... ம்.... ஓடுவோம்"

சுஸில் கட்டளை பிறப்பித்தான்.

உடல் விறைத்து விடுவது போன்ற குளிரை ஊடறுத்துக் கொண்டு, மிகவும் பொறுமையோடு பாதி இருளுக்குள் கோயில் அருகிலான சிறுபாதை வழியே இளவட்டத்தினர் மரதனோட்டத்தை ஆரம்பித்தனர்.

❖❖❖❖❖❖

"சுமனா எங்கட பொடியள் எங்க போயிட்டாங்க?"

பொடியப்பு மாமா சுமனக்காவிடம் கேட்டார்.

"பொடியள் காலமே ரேஸ் ஓடுறாங்க அப்பா. பள்ளிக்கூடத்தில இப்ப ஸ்போட்மிட் தானே. எங்கட சுஸிலும் பங்குபத்திறானாம்"

பாடசாலைக்குச் செல்லும் சின்னவர்களுக்கு காலைச் சாப்பாடு தயாரித்துக் கொண்டிருந்த சுமனக்கா பதில் சொன்னாள்.

❖❖❖❖❖❖

அதிகாலை மரதன் பயிற்சியின் இரண்டாம் நாளில் மேலும் போட்டியாளர்கள் இரண்டுமூன்று பேர் சேர்ந்திருந்தனர்.

தூரத்திலிருந்து வருபவர்களை அறிமுகம் காண முடியாதபடி சுற்றாடலில் இருள் கவிந்திருந்தது. கடும் குளிரைப் பொருட்படுத்தாமல் இளவட்டத்தினர் ஓட்டத்தை ஆரம்பித்தனர். கால்களின் வேதனையை மறந்தே விட்டார்கள்.

"எனக்கென்றா இதுக்கு மேலே ஓடமுடியாது. நான் நிற்கிறன்"

ஜெயக்குமார் கொஞ்சத் தூரம் ஓடிவிட்டு நின்றுவிட்டான்.

"எனக்கும் கஷ்டமா இருக்கடா. நேற்று கல்லில முட்டிய கால் வலிக்கிது"

"நாங்கள் ஆலமரத்தடியில் இருக்கிறம். நீங்கள் ஓடிட்டு வாங்க"

ஜெயக்குமாரும் உபாலியும் மீண்டும் கோயில் பக்கம் நடந்து வரத் தொடங்கினர். இன்னும் இருள் அகலவில்லை. பகல் நேரத்தைப் போன்று தேங்காய் கல்லின் மீது அமர்ந்து கொள்ள முடியாதென்பது அவர்களுக்கு விளங்கியது. அதன் மீது பனிபடர்ந்திருந்தது. அதைவிட இருளில் தனித்துப் போயிருக்கும் மாடசாமியின் பார்வையிலிருந்து தப்பிக் கொள்வது எப்படியென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால் அவர்கள் இடப்பக்கமாக ஆலமர வேரில் அமர்ந்து கொண்டனர்.

“டேய் ஜெயக்குமார் ஸ்டோரிலிருந்து தேயில மணக்குது பாரன்”

ஜெயக்குமார் தலை தாழ்த்தி அதை அனுமதித்ததோடு, தேயிலை மணத்தை நுகரத் தொடங்கினான்.

அவனது மனதில் ஏதோவொரு சந்தேகம் தோன்றியது. அவன் அதை உபாலியிடம் சொன்னான்.

“இந்த மணம் ஸ்டோரிலிருந்து வரேல்லடா. பக்கத்திலிருந்துதான்”

“நேற்றிரவு ஸ்டோரில வேல செய்த யாராவது தேயில களவெடுத்து, கோயில் பக்கம் மறைத்து வைத்தாங்களோ தெரியல்ல”

அமர்ந்திருந்த இடத்தால் எழுந்த உபாலி கோயில் பக்கம் போனபடி சொன்னான். ஜெயக்குமாரும் எழுந்தான்.

“கோயிலுக்குள்ள மறைக்கப் போறதில்ல. தோட்டத்து ஆக்கள் மாடசாமிக்குப் பயம். தவறு செய்தால் மாடசாமி விடமாட்டாரென்று”

“அப்படியென்னா இங்க எங்காவதிருக்கும். மல்லிகை பற்றைக் குள்ள ஒளித்திருப்பாங்க. வா பார்ப்பம்”

அவர்கள் இருவரும் இரு ஆலமரங்களுக்கிடையிலான மல்லிகை பற்றையைப் பரீட்சிக்கத் தொடங்கினர். தேயிலை மணம் கலந்த சீதளக் காற்றை ஆழமாக சுவாசிக்க வேண்டிய நிலை. அவர்களது முயற்சி வெற்றியளிக்கவில்லை.

“ஆலமரத்தில எங்கயும் ஒளித்து வெச்சிருப்பாங்க போலிருக்கு”

ஆலமரம் கீழ்ப் பகுதியிலேயே கிளை பிரிவதால் உட்குழிவுகளைப் பார்த்தபடி ஜெயக்குமார் ஏறத் தயாரானான்.

இதற்கிடையில் தார் வீதிச் சரிவுப் பக்கமிருந்து களைத்தபடி

ஓட்டவீரர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தனர். சுசில் முதலாவதாக வந்தான். ஆலமரத்தடியில் அமர்ந்து களைப்பாறினான்.

"சரி மசான் சாமான் இருக்கு. ஒரு சாக்குப்பை நிறைய.... இதை வெளியே எடுப்பம்"

ஜெயக்குமார் சொன்னான். அவன் ஏனைய நண்பர்களும் ஓட்டத்தைப் பூர்த்தி செய்து வந்துள்ளதைக் காணவில்லை. களைப்பாறிக் கொண்டிருந்த பெடியன்கள் ஆலமரப் பக்கம் பார்த்தனர்.

"யாரோ தேயில ஒளித்திருக்காங்க"

நண்பர் பக்கம் சென்றபடி உபாலி கூறினான். பெடியன்களின் சோர்வு ஒரேயடியாக ஓடியொளிந்தது.

"எங்க? எங்க இருக்கு?"

சுஸில் துடித்தெழுந்து கேட்டான்.

"ஆலமரத்தில். ஜெயக்குமார் மேலே ஏறி இருக்கான். தேயிலைக் கொழுந்து ஒரு சாக்கு இருக்காம்"

"வாங்கடா அதக் கீழ எடுப்பம். நேற்றிரவு ஸ்டோரில் வேல செய்த வங்க கடத்தியதா இருக்கலாம். நீங்க ரெண்டு மூணுபேர் போய் யாரும் வாறாங்களான்னு பாருங்க. ஒளித்தவங்க கொண்டு போக வரக் கூடும்"

சுஸில் நண்பர்களுக்கு உத்தரவிட்டபடி ஆலமரத்தடிக்குச் சென்றான்.

அது உயர்ந்த தரத்திலான முப்பது றாத்தல் அளவு நிறைக்கப்பட்டதொரு சாக்குப்பை.

"இதுக்கு என்ன செய்றது?"

அசோக கேட்டான்.

"நாலைந்து றாத்தல் எடுத்திட்டு இருந்தபடியே வைப்பம். எனக்கென்னா பயமா இருக்கு"

இது வெள்ளயனின் ஆலோசனை.

"பைத்தியமா.... தோட்டத்து ஆக்கள் டீமேக்கரோட சேர்ந்துதான் களவெடுப்பாங்க. எதுக்கு நாம பயப்படணும்? உனக்குப் பயமென்னா

நீ போய் விடு. ஆனா வாய் திறந்தியோ நடப்பது வேறு. நாம இதவிற்று வயிறு நிறையுமட்டும் கள்ளக் கடயப்பம் தின்னுவம்"

வெள்ளயனின் கூற்றுக்கு சுசில் கட்டுப்பட்டான்.

சுஸிலின் அறிவுறுத்தலுக்கேற்ப தேயிலைச் சாக்கை இருவரும் தூக்கியபடி தெவ்ஸிரிபுர பாதையால் சிறிது தூரம் சென்று, கீழ் கற் பரப்புக்கருகே தேயிலைப் பற்றைக்குள் மறைத்து வைத்தனர்.

பின்னர் எதுவும் நடைபெறாதது போல் அவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர்.

"நீ யாரிடமும் இது பற்றிச் சொல்லக் கூடாது. நாங்க பாடசாலை விட்டு வந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்திட்டுப் போய் விற்றுக் காசாக்குவோம். எங்களுக்கு எப்படியும் ஒரு வருஷம் கள்ளக் கடயப்பம் சாப்பிடலாம். வீட்டுக்கு சாமான் வேண்டப் போகும் போது சல்லியடிக்கத் தேவயுமில்லை"

சுஸில் மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னான். பெடியளும் அதைக் கேட்டு பேருவகை அடைந்தனர்.

"பள்ளத்துக்கடை லொலி பொப் போத்தல் முடியுமட்டும் சாப்பிடுவம். லிகிதருக்கு காட்டிக் காட்டிச் சாப்பிடுவம். நேற்று ஒரு சதம் குறைவெ ன்னு எனக்கு லொலிபொப் தரமாட்டேனென்டான் கஞ்சப் பயல்"

கீர்த்தி சத்தமிட்டுச் சொன்னான்.

"சத்தம் போடாதடா. பார் சுஸில், இவன் இபோதே வேலயக் குழப்பிறான்"

அசோக பற்களைக் கடித்தபடி கீர்த்தியை முறைத்துப் பார்த்தான்.

"கீர்த்தி சத்தம் போடாமப் போவம். உன்ற வாய் சரியில்ல. நோனாச்சியப் போலதான். அங்கபார். வீடுகளிலிருந்து ஆக்கள் எங்களப் பாக்கிறாங்க. நீ சொன்னது கேட்டிருக்குமோ தெரியாது"

சுஸில் சந்தேகத்தோடு சொன்னபோதிலும் எவருமே இந்தப் பெடியளின் பேச்சு வார்த்தை வேலை வெட்டிகளில் அப்படிக் கவனம் செலுத்துவது கிடையாது.

❖❖❖❖❖❖

பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த பெடியன்கள் நகரத்திற்குச்

செல்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். கூட்டுறவுக் கடையிலிருந்து பங்கீட்டரிசி எடுப்பதற்கு அவர்கள் திங்கள் கிழமைகளிலேயே வரவேண்டும். அதனால் பலருக்கு நகரம் செல்வதற்கு வீட்டில் பிரச்சினை இல்லை. அரிசி கொண்டு வருவது தயாவினதும் சின்னத்தம்பியினதும் பொறுப்பென்பதால், விளையாட்டுப் பயிற்சிக்குப் போக வேண்டுமென்று பொய்யொன்றைச் சொல்லி சுமனக்காவிடம் அனுமதி பெற நேர்ந்தது சுஸிலுக்கு. பொய் வெளியாகி விடுமோவென்று பயந்த அவன் பாடசாலை செல்லும் தனது சகோதரிகளான சுதா, அனுலா, பிரேமா ஆகியோருக்கு லொசிஞ்சர் கொண்டு வந்து தருவதாக வாக்களித்தான். சுஸிலின் இளைய சகோதரர்கள் அவனுக்கெதிராக சுமனக்காவிடம் ஒன்றும் சொல்வதில்லை. அவர்கள் பெரும்பாலும் அண்ணாவின் செயற்பாடுகளுக்கு ஆதரவு நல்குவார்கள்.

எந்தப் பிரச்சினையுமில்லாமல் கொதலாவலைக்கு அனுமதி கிடைத்தது. சின்னப் பருவம் முதல் அவனைச் சீர்தூக்கி வளர்த்தவர் கள் அவனது ஜேன்மாமியும் சிரிஸேன மாமாவும் தான். அதனால் அவர்கள் அவனது எந்த வேண்டுகோளையும் புறம் தள்ளுவதில்லை. சரத், சுனில், வெள்ளயன், உபாலி எல்லோரும் எப்படியோ வீட்டிலிருந்து வெளிப் பாய்ந்துவிட்டனர்.

கற்பரப்புக்கு வந்து சேர்ந்த இளவட்ட அங்கத்தவர்கள், வீடுகளிலிருந்து கொண்டு வந்த கடதாசிப் பைகளை வெளியெடுத்தனர்.

"எப்பிடி தேயிலையை நிறுப்பது?"

வெள்ளயன் கேட்டான்.

"ஆச்சாரித் தாத்தாவின் தராசை கேட்டுக் கொண்டுவர சுனிலை அனுப்பியுள்ளோம்"

சுஸில் சொன்னான். முன் கூட்டியே எல்லாம் திட்டமிட்டிருந்தான்.

தராசுத் தட்டுகளோடு மட்டும் சரத் வந்தான்.

"நீ தட்டுகள மட்டுமா கொண்டு வந்தாய்?"

சுஸில் அமைதியாக நின்றான்.

"உக்குங் தம்பி அதக் கொண்டு வாரான்"

சரத் கூறினான்.

"எல்லாம் போச்சு..... நீ அவனுக்கும் விபரம் சொல்லிட்டியா?"

சுசில் சரத்திற்கு ஏசத் தொடங்கினான்.

"இனி விஷயம் ஜோன் பாஸுக்குப் போகும்"

கீர்த்தி சொன்னான். அது சரத்தையும் சுனிலையும் கோபமூட்டும் கதையாகும். அவர்களின் தகப்பனான ஜோன்மாமாவை சில பேர் ஜோன் பாஸ் என்று சொல்வார்கள்.

"அடிச்சனென்டா பல்லுக் கொஞ்சமும் பறக்கும் கீர்த்தி"

சுனில் கீர்த்தியின் பக்கம் விரலை நீட்டிக் கொண்டு பாய்ந்தான்.

"சும்மா இருங்கடா. இப்போ நான்கு பேரயும் அடித்து விரட்டுவன்"

சுசில் அவர்களை எச்சரித்தான்.

"அங்கே உக்குங் வாரான்"

சின்னத்தம்பி சொன்னான்.

"ஜெயக்குமார், நீயும் சுனிலும் போய் இவ்விரண்டு றாத்தலாக நிறுத்து பையில் போட்டு வைங்க. பிறகு யாரும் காணாதபடி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு டவுனுக்குப் போங்க"

சுஸில் அறிவுரை பகர்ந்து கொண்டிருக்கையில் கோயில் பக்கமாக வேவு பார்த்துக் கொண்டிருந்த சூட்டி ஓடோடி வந்தான்.

"டீ மேகர் ஐயாவின் தோட்டத்தில் வேல செய்ற ஜினசேன மாமாவும் ஸ்டோர் காவல்காரனும் கோயில் பக்கமாக வந்து ஆலமரத்தடி தேயில பற்றயில புகுந்து பாக்கிறாங்க. இப்போ கோயில் பாதையால வாறாங்க"

"அந்த வேலய கொஞ்சம் நிறுத்திட்டு இங்க வாங்கடா. அந்தத் தராச தேயில மரத்துக்குள்ள மறையுங்க. நாங்க ஒன்னும் தெரியாத மாதிரி விளையாடுவம். தோட்டத்து பெரியவனும் களவெடுப்பதாக நான் உங்களுக்கு சொன்னேன் இல்லயா? ஜினசேன மாமா பகலைக்கு டீமேக்கரின் தோட்டத்தில வேல. இரவைக்கு ஸ்டோரில வேல. யாரவதொரு ஏழை தேயிலை கொஞ்சம் கொண்டு போய் பிடிபட்டால் அவனது வேலை போய்விடும். பெரியவங்க களவெடுக்கிறாங்க. அவங்களுக்கு இடிகூட விழாது"

சுசில் வளர்ந்தவன் போல் சொன்னான். உடனே எல்லே விளையாட அடுத்தவர்களை அழைத்தபடி இறப்பர் பந்தைக் கையிலெடுத்தான்.

அப்போது ஜினசேன மாமாவும் காவல்காரனும் கற்பரப்புக்கு வந்தனர்.

"ஏய்...... நீங்கள் காலமே மாடசாமி கோவில் பக்கத்தில விளயாடப் போனீங்களா?"

காவல்காரன் பொலீஸ் ஸாஜன்ட் போல் கேட்டான்.

"நாங்க என்னத்துக்கு அங்க போகணும்? இப்பதான் நாங்க பள்ளிக்கூடம் விட்டு வந்தோம். ஏன் மாடசாமிய கள்ளர் கொண்டு போயிட்டாங்களா?"

எல்லாவற்றிற்கும் முதலில் கதைக்கும் கீர்த்தி, நையாண்டியாகச் சிரித்தபடி கேட்டான். பெடியன்கள் அதற்குச் சிரித்தார்கள்.

"வாய்.... வாய்.... யாருக்கு பேசுறீங்களென்னு தெரியுமா?"

ஜினசேன மாமா கோபப்பட்டுக் கேட்டார்.

"யாருக்கென்டாலென்ன? சொல்ல வேண்டியத சொல்றம். என்ன நாங்க கொல செய்திட்டமா? இல்ல களவெடுத்திட்டோமா? தேயில மரங்கள பிடுங்கினோமா? நாங்க விளையாடுறம். தெரியலையா?"

காவல்காரன் நடுங்கினான். அவன் கோபமுற்று கீர்த்தியினருகே போக முனைந்தபோது ஜினசேன மாமா அதைத் தடுத்தார்.

"காவல்கார அண்ணா நம்ம நிலம அவ்வளவு நல்லாயில்ல. இந்தப் பெடியன்கள தோட்டத்துப் பெடியன்களப் போல வாயால பயம் காட்டமுடியாது. இவங்கட பெரியவங்க யாருக்கம் பயப்படமாட்டாங்க. அங்க ஒருவனின் ஆச்சி இங்க பார்த்தபடி நிக்கிறா. நாங்க போவம். இவங்களுக்கு எதுவுமே தெரியல. காலமே பள்ளிக்கூடம் போன பெடியள்" என்றவாறு அவர்கள் இருவரும் மெல்லத் திரும்பிக் கோயில் பக்கமாக நடக்கத் தொடங்கினர்.

"அம்மா நான் பயந்து போனன். காவல்காரன் கீர்த்திக்கு அடிப்பானென்று"

வெள்ளயன் சொன்னான்.

"அதெப்படி..... அவங்க தேயில கள்ளங்க. பொலிஸுக்கு சொன்னா

பெரியவரும் அகப்படுவார். இனி எங்களுக்கு இதெல்லாம் விற்க முடியாமல் போகும். அதனால ரெண்டுமூணு றாத்தல் கொண்டு போய் டவுன்ல விற்பம். தேயில இவ்விரண்டு றாத்தலா நிறுத்து பேக்களில் போட்டு சாக்கினுள்ள போடணும். நாங்க கள்ளனுக்குக் கள்ளன். யோசினயா வேல செய்வம். தேயில கொஞ்சத்தையும் நிறுத்திவிட்டு ஆச்சாரி தாத்தாவின்ற தராச சீக்கிரமா கொண்டு போய்க் கொடுங்க. எங்கட கெட்ட நேரத்துக்கு யாராவது தராசு கேட்டுக் கொண்டு வந்தால் பிரச்சினைதான். அப்படியான வேலதான் எங்களுக்கு நடக்கும்"

சுஸிலின் அபிப்பிராயத்தை எல்லோரும் ஏற்றனர்.

சுஸில் மீண்டும் தோழர்களுக்கு அறிவுரை சொன்னான். அதற்கு நன்கு காதுகொடுத்த பெடியன்கள் திரும்பவும் தேயிலைப் பற்றைக்குள் புகத் தொடங்கினர். சிறிது நேரத்திற்குப் பின் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு தேயிலைப் பற்றைக்குள் புகுந்தான்.

"இது வெளிநாட்டுக்கனுப்பிற தரமான தேயிலைத்தூள். நல்ல விலைக்குக் கொடுக்கலாம். முப்பத்தைந்து றாத்தல் இருக்கு. சா..... யாருடைய உறவினர்களாவது வந்தாங்களென்னா நாலைந்து றாத்தல விற்றுக்கலாம்"

கொதலாவல சொன்னான்.

"இப்போ நாங்க இத எடுத்திட்டு வீட்டுப் பக்கம் எப்பிடிப் போறது? கடைப்பக்கமும் போக முடியாது. மணமடிக்குதே"

சரத் சுஸிலிடமிருந்து பதிலை எதிர்பார்த்து நின்றான்.

"இந்த வழியாக கீழ்ப் பக்கம் போய் பீலிப் பக்கமாக ரயில் பாதைக்கேறுவம்"

சுஸில் யோசித்துக் கொண்டிருந்துவிட்டு அதற்குப் பதில் சொன்னான்.

"இங்க நகரக் கடைகளுக்கா நாங்க இத விக்கிறது?"

தயாசிரி கேட்டான்.

"வேற யாருக்கு விற்கலாம்? கடைக்காரருக்குத் தான்டா. ஆனா டவுனிலுள்ள தேயிலக் கடைகளுக்கு மட்டும் போகவேணாம். எந்தத் தோட்டத் தேயிலயென்று அவங்களுக்குத் தெரியும்"

சுஸில் இன்னொரு அபாய அறிவித்தல் செய்தான்.

"அப்பிடீன்னா முதல் நான் போறன். நீங்களும் மெல்ல மெல்ல வாங்க. தெவ்ஸிரிபுர பக்கமாகவும் இரண்டொருவர் போங்க"

சரத் கூறினான்.

"வேணாம் வேணாம்...... அந்தப் பக்கம் போறது பற்றி நினைக்கவும் வேணாம். மணத்துக்கு சந்தேகப்பட்டு இடையில யாராவது பார்த்தால் பிடிபட்டு விடுவோம். அதனால் பீலிப் பக்கமாகவே போவம்"

சுஸில் சரத்தின் யோசனையை மறுத்துச் சொன்னான்.

❖❖❖❖❖❖

சூரியன் மேற்கே நகர்கையில் சுசிலும் பெடியளும் தலவாக்கல நகரத்திலிருந்து ரயில்பாதை வழியாக மீண்டும் வந்து கொண்டிருந்தனர். சகலருடைய கையிலும் கடலைப் பக்கற் காணப்பட்டது. அவர்கள் இடையில் ரயில் மதகருகே நின்றனர். சுஸில் சகலருக்கும் சமமாகப் பணத்தைப் பகிர்ந்து கொடுத்தான்.

"பாருங்க எல்லாம் பகிர்ந்து தந்திட்டன். இனி நாங்க போவம். நீங்கள் வீட்டுக்குப் போய் கோயிலுக்கு வாங்க. எங்கள் கைக்குப் பணம் கிடைத் தது மாடையாவால்தானே? அதனால குறைந்தபட்சம் மாடையாவுக்கு கற்பூரம் கொழுத்தி தேங்காய் ஒன்றாவது உடைக்க வேண்டும். ஜெயக்குமார் நீ கடைக்குப் போய் தேங்காயொன்றும் கற்பூரப் பக்கற்றும் வேண்டிக் கொண்டுவா"

சுஸில் புதிய கருத்தொன்றை முன் வைத்தான்.

"இன்னொரு தொகையை மாடையாவுக்கு செலவழிப்பது அநியாயம். அதுக்கு நாங்க பாணும் சக்கரையும் சாப்பிடுவம்"

சுனில் யோசனை தெரிவித்தான்.

"அப்பிடி கஞ்சத்தனம் காட்டக்கூடாது. எங்களுக்கு மாடசாமியின் பாதுகாப்புக் கிடைக்கவும் வேணுமல்லவா? பாரன் தேயிலச் சாக்கு இன்னும் அங்குதானே. அதை நாளைக்கு விற்கும்வரையில பாதுகாக்கச் சொல்லித்தானே தேங்காய் உடைக்கப் போறம். அடுத்தது தேங்காய் உடைத்ததுக்கா மாடையா சாப்பிடவா போறார். நாங்கள்தானே சாப்பிடு றம். சரி பாணும் சக்கரயும் தேங்காயும் கலந்தா அந்தமாதிரி டேஸ்ட்"

சுஸில் அப்படிச் சொல்லும் போது ஜெயக்குமாரும் வெள்ளயனும் அதனை அங்கீகரித்தனர்.

❖❖❖❖❖❖

கோயில் முற்றத்தில் தேங்காய் கல்லருகே டிக்போல் சூது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாடசாமியின் பார்வை யைத் தடுத்து நிறையப் பேர் சுற்றிவர நின்று டிக்போல் விளையாடு வதைப் பார்த்திருந்தனர். தோடை, மாங்காய், பனிஜம்பு மரங்களில் மட்டுமன்றி கோயிலின் முன்னால் பத்துப் பன்னிரண்டடி உயரமான கமுகு மரங்களில் கூட பெடியன்கள் ஏறியிருந்தனர்.

அது ஞாயிற்றுக் கிழமையென்பதால் அந்தப் பக்கம், அதாவது ரயில் பாதைக்கு அப்பாலுள்ள வீடுகளைச் சேர்ந்த சிறுசுகளும் சில வாலிபர்களும் டிக்போல் விளையாட வந்திருந்தனர். ஏனைய நாட்களில் ஓரிரண்டு சதமாகவிருந்து சூது அன்று ஐந்து சதம் வரை உயர்ந்தி ருந்தது. அதனால் இளவட்டத்தில் பலருக்கு பார்வையாளர் அந்தஸ்து மட்டுமே கிட்டியிருந்தது. அந்தப் பக்க வாசிகளான குசேல அய்ய, எட் டின், காமினி, தர்மஸிரி, அனுர, பொடிகுணே, லொகு குணே போன்றவர் கள் டிக்போல் சூதில் மூழ்கிப் போயிருந்தனர். இவர்களோடு தோளுக்கு தோள் நின்று போட்டி போட முடிந்தது இருவரால்தான். இளவட்டத்தைச் சேர்ந்த சுசிலுக்கும் கொதலாவலைக்கும்தான்.

இரண்டு மணி நேரத்திற்குப் பின் ‘மாபெரும் டிக்போல் களியாட்டம்’ முடிவுக்கு வந்தது.

கொதலாவலயும் சூது விளையாட்டில் அதிகம் வென்றிருந்தான். புதிதாக வந்த விளையாட்டுக்காரர்கள் கோயில் முற்றத்தால் வெளியே றிக் கொண்டிருந்தனர்.

“எங்கட தோல்விய மாடையாவும் பார்த்துக் கொண்டுதானிருந்தார்”

யாரோ சொன்னார்கள்.

“நீங்க தோற்றுப் போனதுக்கு மாடையா பலியில்ல. போங்க போங்க”

குலே அண்ணன் சொன்னார்.

“தடாஸ்”

யாரோ கோயில் கதவுக்கு கல்லால் எறிந்தார்கள்.

மோசமானதொரு நடவடிக்கை.

“இன்னக்கி மாடையாவின் கதை முடிந்தது”

இளவட்டத்தில் ஒருவன் சிரித்தபடி கூறினான். இன்னொருவன்

கோயில் கூரைக்குக் கல்லெறிந்தான். சுசில் அவனருகே வந்து அவனது காதை நெரித்தான்.

"சும்மா இரடா பேயா. நாங்க என்னக்கும் இதில விளையாட வேணும். நீ ஒரு முறை தோற்றதுக்கா கோயிலுக்கு கல்லெறிகிறாய். கேட்டிருந்தால் ஐந்து சதம் தந்திருக்கலாமே"

சுசில் கோபத்தோடு சொன்னான்.

"நல்ல காலம் இன்னக்கி வெள்ளயனும் ஜெயக்குமாரும் இல்லை. அவங்க வந்திருந்தா திரும்ப எங்களோட பழகமாட்டார்கள்"

உபாலி சொன்னான்.

"அதோ ரெண்டு பேரும் வாறாங்க"

கிறேட் வெஸ்டேர்ன் பக்கமாக மேற்பாதையால் அவர்கள் வருவதைக் கண்டு பொடிபுதா சத்தமிட்டான்.

"இவங்கள் எங்க போய் வாறாங்கள்?"

"கல்கந்த பெரியப்பா வீட்டுக்கு போயிட்டு வாராங்க போலிருக்கு"

கொதலாவல சொன்னான்.

"அவங்க ரெண்டு பேரும் வரும்வரையிலிருந்து நாங்க போய் கீழ் மைதானத்தில விளையாடுவம்"

சுஸில் ஆலோசனை சொன்னான்.

❖❖❖❖❖❖

"கிறேட் வெஸ்டேர்ன் பாதையில மேற்பக்கமாக தேன்கூடுகளிருக்கு. நாங்க வரும் போது கண்டம்"

ஜெயக்குமார் சொன்னான்.

இளவட்டத்தினர் அதுபற்றி விபரம் அறிய ஆர்வப்பட்டனர். விளையாட்டுப் பார்க்க வந்திருந்த இளைஞர் இருவர் கற்பரப்பில் அமர்ந்திருந்தனர். அவர்கள் கூட இவ்விடயத்தில் ஆர்வப்பட்டனர்.

"மிகப் பெரிய தேன்கூடு இரண்டு மூன்றிருக்கு"

வெள்ளயன் விபரம் கூறினான்.

"எங்களுக்கு அந்தக் கூட்டை எடுக்க முடியாதா?"

கொதலாவல கேட்டான்.

"அப்படி உடைக்க முடியாது. கல்லடிக்கும் போது தேன்பூச்சிகள் குழம்பும். அதன் பிறகு தப்ப முடியாது"

இளைஞன் சொன்னான்.

இருந்தாலும் எப்படியாவது தேன்கூடொன்றை உடைத்தெடுக்க வேண்டுமென்ற தேவை இளைஞர் உள்ளங்களில் ஏற்பட்டது.

"நாங்கள் சும்மா அந்தப் பக்கம் போவோம். தேன்கூடுகளை பார்க்கவும் சேர்த்து"

சரத் யோசனை கூறினான்.

"இப்போ மாலை நேரம். அங்க போகும்போது இரவாகிவிடும். அதிக தூரம் போக வேண்டியிருக்கு"

வெள்ளயன் சொன்னான்.

"நானென்றால் அந்தப் பக்கம் ஒருநாளும் போனதில்லை"

உபாலியின் கூற்று.

"ஏனில்லை. ஒருநாள் கல்கந்தை பெரியப்பா வீட்டுக்கு போனோம். மறந்திட்டியா?"

வெள்ளயன் ஞாபகமூட்டினான்.

"அந்தப் பக்கப் பாதையால தானே அன்னக்கி போனோம். பாமஸ்டன் ஆற்றுப் பக்கம்"

கொதலாவல ஞாபகம் காட்டினான்.

"ஆ.....ம்... எனக்கு ஞாபகம். மைதானத்துக்கு மறுபக்கமாகப் போனோம்"

உபாலி சொன்னான்.

"அப்படீன்னா நாங்க நாளக்கி போவம். பள்ளிக்கூடம் விட்டு வந்து தேன்கூடு பார்க்கப் போவம்"

சுஸில் தீர்ப்பு வழங்கினான்.

"சின்னவன்கள் வரத் தேவயில்ல. உங்களுக்கெல்லாம் அவ்வளவு

தூரம் போக ஏலாது. அங்க போய் ஏதாவது நடந்தா எங்களுக்குத்தான் அடிவிழும்"

பெற்றாரைப் போல உக்குங் சொன்னான்.

"நீயும் பெரிய ஆளோ உக்குங்? நீயும் வரவேணாம்"

உக்குமின் அண்ணன் சரத், அவனை எச்சரித்தான்.

"சரி சரி இனி நீங்கள் போங்கோ நாங்க வரமாட்டம்"

உக்குங் அப்படிச் சொன்னபோதும் அடிமனதால் 'உங்களுக்கு கள்ளமாக நாங்க போவம்' என்று சொல்லிக் கொண்டான். அருகே நின்ற சூட்டிக்கும் லலித்துக்கும் கண்ணடித்தான்.

## 13

"தம்பி எங்க போறாய்?"

பாடசாலைவிட்டு வீட்டுக்கு வந்து அவதிப்பட்டு இரண்டொரு பிடி சாப்பிட்டுவிட்டு வெளியே பாயும் கொதலாவலயிடம் ஜேன் மாமி கேட்டாள்.

"சோமா வீட்டுப் பக்கம் போறனம்மா"

"அப்படீன்னா மாமிக்கு இந்தப் பலாக்காய்த் துண்டைக் கொண்டு போய்க் கொடு தம்பி. அப்பிடி நில்லன். அதையும் எடுத்துக் கொண்டு போ. வரும்போது பெரியப்பா வீட்டுக்குப் போய் சீட்டுச் சல்லியும் கேட்டுக் கொண்டு வா"

ஜேன்மாமி அவனுக்கு மேலதிக ராஜகாரியமொன்றையும் பொறுப்பளித்தாள்.

கொதலாவலைக்கு இது அவசியமில்லாம வேலைகளென்று சொல்ல வேண்டியதில்லையே.

"எனக்கு இதெல்லாம் தூக்கிக் கொண்டு போக முடியாது"

அவ்வாறு சொன்ன கொதலாவல, கோவிலுக்குப் போகும் சிறுபாதைப் பக்கமாக ஓடினான்.

கோயில் 'தேங்காய் கல்' மீது இளவட்ட உறுப்பினர் சிலர் அமர்ந்திருந்தனர்.

சிறுவர்கள் எவருமில்லை. சுசில் கவணில் இறப்பர் நாடாவை இரட்டைக் காம்பில் இறுகி நிற்குமாறு முடிச்சிட்டுக் கொண்டிருந்தான்.

"என்ற கெட்டபொலயும் கொண்டு வரட்டே சுனில்?"

கொதலாவல கேட்டான்.

"ஓம் போய் எடுத்திட்டு வா. பாதையிலிருந்து அவ்வளவு உயரத்திற்கு எறிவது லேசான வேலயில்ல"

சுஸில் கூறினான்.

"மேல் பாதையால் போவதா? இல்லாட்டா ஸ்டோர் பாதையால் போய், சக்கர காண் வழியா மேல் பாதைக்குப் போறதா?"

சரத் கேட்டான்.

"ஸ்டோர் பாதையால் போவம்"

சுஸில் கூறினான்.

கொதலாவல மீண்டும் வீட்டுப் பக்கமாக ஓடினான். கோயில் முற்றத்தில் நின்ற பெடியள் சிறுபாதை நெடுகச் சென்று தார்வீதியை அடைந்தனர்.

"கொதலாவல வரும்வரை பார்ப்பதில்லயா?"

உபாலி கேட்டான்.

"நாங்கள் மெல்ல மெல்லப் போவம். அவன் வருவான்"

சுஸில் சிறு கல்துண்டொன்றை கவணில் வைத்து ஆலங்காய்க் குலைக்கு இலக்குப் பார்த்தபடி சொன்னான்.

"அந்தா தெரியும் வளைவால் திரும்பியதும் மலை தெரியும்"

சக்கர காணுக்கு மேலாக தேயிலைப் பற்றைக்கிடையால் பெரும்பாதைப் பக்கமாக உள்ள ஒற்றையடிப் பாதையில் முன்னே சென்றபடி வெள்ளயன் சொன்னான்.

இளவட்டத்தினர் சகலரது கைகளில் இடையில் பொறுக்கிய ஏதாவது அல்லது அடுத்தவர் தோட்டத்தால் பிடுங்கிய கரும்புத்துண்டுகள் அல்லது கொய்யாபழங்கள் சிலவோ இருந்தன. ஒவ்வொருவரதும் காற்சட்டைப் பையில் கெட்டப்பொல்லும் இருக்கவே செய்தது.

❖❖❖❖❖❖

கிறேட் வெஸ்டேர்ன் பாதையிலிருந்து கீழ் தேயிலை ஸ்டோர் அருகே தேயிலைக் கொழுந்து மூடைகளை அனுப்புவதற்கு அமைக்கப்பட்டுள்ள கம்பியருகே கொஞ்சநேரம் நின்ற இளவட்டத்தினர் பாதை நெடுக மீண்டும் பயணத்தை ஆரம்பித்தார்கள். சிறிது நேரத்தின் பின்பு அவர்கள் பாதையோரப் பெருங்கல்லருகே வந்தனர். தேன்கூடு இரண்டு மேற்பரப்பில் கட்டப்பட்டிருந்தன. அவ்விடத்திற்கு நெருங்குவது இலகுவானதல்ல. தண்ணீர் கசியும் பாசிப் படர்வு காணப்பட்டதாலும் பிடித்துக் கொள்ள ஆதாரம் எதுவும் இல்லாததாலும் அந்த இடத்திற்குச் செல்வது அபாயமானதே. கல்மலையிலிருந்து ஓரளவு வளைவருகே தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்கள் சிலர் காணப்பட்டனர். பெடியன்களுக்கு அதுபற்றி எந்த உணர்வும் இருக்கவில்லை. இந்த இடம் ஹொலிறூட் பெருந்தோட்டத்தின் மேற்பிரிவின் எல்லைப் பிரதேசமாகும். எல்லைக்கு மறுபகுதி கிறேட் வெஸ்டேரின் பெருந்தோட்டத்துக்கு உட்பட்டதாகும். கொழுந்து பறிப்பது கிறேட் வெஸ்டேர்ன் பெருந்தோட்டப் பெண்களாக இருக்க வேண்டும்.

இது பாழடைந்ததொரு பாதையாகும். அவ்வப்போது யாரும் போய்வருவார்கள். அபூர்வமாக வாகனமொன்று செல்லும். இரண்டு பக்கமாகவும் வருவோரை நீண்ட தூரத்திலிருந்தே கண்கொள்ளலாம். சுஸில் பெரும் பாதையிலிருந்து கொண்டே தேன்கூட்டுக்கு கல்லெறிந்தான். அது இலக்கு நோக்கிச் சென்ற போதும் பாரதூரமாக ஒன்றும் நடக்கவில்லை. தேனீக்கள் சில கூட்டிலிருந்து வெளிப்பட்டுச் சுற்றிவிட்டு மீண்டும் புகுந்து கொண்டன. சிறிது நேரத்தின் பின் கூட்டிலிருந்து இரண்டொரு துளிகள் நிலத்தில் விழுந்தன. வெள்ளை நிறமான செதில் போன்ற ஏதோ காற்றோடு வந்து அருகிலிருந்த மூங்கில் பற்றையில் தங்கியது. அதைப் பொறுக்க பலரும் அப்பக்கமாக ஓடினர். பெடியளின் கவண்களிலிருந்து வெளிப்பட்ட சிறிய கற்கள், தேன்கூடுகளிலும் கற்பாறையிலும் மோதின. இருந்தும், தேன்கூடு எப்படிப் போனாலும் அதிலிருந்து உடைந்த சிறு துணிக்கையைத்தானும் அவர்களால் கண்டெடுக்க முடியவில்லை.

"இது சரிவராது. நாங்கள் கையால் கல்லடிப்போம்"

சுஸில் கெட்டபொல்லை ஒரு பக்கம் வைத்துவிட்டு அளவான கல்லொன்றால் தேன்கூட்டுக்கு அடித்தான். அது அதனருகே கல்லில்பட்டு மீண்டும் கீழே தெறித்தது.

"அவ்வளவு உயரத்துக்கு கல்லடிக்க முடியாதென்னு நெனச்சன். அடிக்க முடியுமென்ன..... வா கல்லடித்துப் பார்ப்பம்"

சுஸில் திருப்தியடைந்ததும் பல கற்களைப் பொறுக்கிச் சேர்த்தான். தார்ப் பாதையில் நடுப்பகுதியில் கற்கள் கழன்று குழிகள் உண்டாகியிருந்தன. வாகனம் செல்வதால் கழன்ற அங்குலம் அளவான கற்கள் போதுமானளவுக்கு ஆங்காங்கே காணப்பட்டன. அது பெடியளுக்கு வசதியாகிவிட்டது.

கல்லெறிந்து ஒரு போட்டி போன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொலைவில் யாராவது வருவது தெரிந்தால், பாதையோரமாக அமர்ந்து கொள்ளும் பெடியள், அந்நபர் அப்பகுதியிலிருந்து தூரமாகும் வரை கள்ளமாகக் கற்கள் பொறுக்கினர். மீண்டும் கல்லெறிபடலம் ஆரம்பித்தது. இருந்தும் புதிதாக நடந்ததொன்றுமில்லை.

"இது சரிவராது கொதலாவல. நாங்கள் இன்னும் கொஞ்சம் மேல போவம். அந்த தேயிலைச் செடிகள் இருக்கிற கல்லருகே போய் அடிப்போம்"

சுஸில் தேயிலைப் பற்றையொன்றைப் பிடித்தபடி மேலே ஏறியபடி சொன்னான். இரண்டொருவரைத் தவிர ஏனைய அனைவரும் ஏறத் தொடங்கினர்.

"ரெண்டு பக்கமாகவும் யாராவது வாராங்களான்னு கவனமா இருந்து சொல்லுங்கோ"

சரத் பாதையில் இரண்டொருவருக்கும் உத்தரவு பிறப்பித்தான்.

கல்மலை அடிவாரத்தில் நின்று நேரே மேலே கல்லெறிவது இலகுவான காரியமல்லாத போதும் பெடியன்கள் அதையொரு சவாலாகக் கருதவில்லை. நாலைந்து பேர் இடைவிடாது கருங்கல் எறிந்து கொண்டிருந்ததால் தேன் கூட்டின் சிறியதொரு பகுதி உடைந்து விழுந்தது. தேனீக்கள் வெளியே பறந்தவிடும் வரை தேயிலைப் பற்றைக்குள் குனிந்து நின்ற பெடியள் அந்த தேன்கூட்டுத் துண்டை சூழ்ந்து நின்று புரட்டிப் புரட்டிப் பார்த்தனர். சிறிது தேன்பாணியுடன் அந்த மெழுகை சுவைத்துப் பார்த்த அவர்களின் உற்சாகம் மேலும் அதிகரித்தது.

கல்லெறிதல் மீண்டும் தொடங்கியது. அப்போது தேன்கூட்டுக்கு நல்ல தொரு அடிவிழுந்தது. எவரும் எதிர்பாராதவிதமாக தேன்கூடு தாக்கத்திற்குள்ளாகியது. தேனீக்கள் "நூங் நூங்" சத்தத்துடன் கூட்டிலிருந்து வெளியேறி தாக்குதலுக்கு தயாராகி நின்றன.

"வேல குழம்பிட்டுது. இனி ஓடுவோம்"

தேயிலைப பற்றைக்குள்ளால் ஓடிப் பாதைக்குப் பாய்ந்த சுசில் சொன்னான்.

"சக்கரக் காணுக்கு இறங்கி நேரே ஓடுங்க"

கொதலாவல ஓடுபவர்களுக்கு அறிவுறுத்தல் கொடுத்தான்.

"தேனீக்கள் விரட்டிக் கொண்டு வந்தால் சக்கரக் காணுக்குள் இறங்கி முகத்த தண்ணீருக்குள் அமிழ்த்துங்கடா"

சுஸில் ஓடியோடிச் சொன்னான்.

"அநியாயம் கெடபோல் விட்டிட்டு வந்திட்டன்"

வெள்ளயன் அப்படி நின்றான்.

"ஓடு...... நிற்காதே ஓடு"

சத்தமிட்டுச் சொன்ன சுனில் சக்கர காணுக்குள் இறங்கினான்.

"ஐயோ அம்மா"- ஆபத்தான சந்தர்ப்பமான போதும் எல்லோரும் ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தார்கள்.

வெள்ளயனை தேனீயொன்று குத்தியிருந்தது. அவனது வலது காதுப் பக்கமாக அந்தத் தாக்குதல் நடந்திருந்தது. அவன் காதுக்கு கையால் அடித்துவிட்டபடி, முனகிக் கொண்டு சக்கரக் காணுக்குள் இறங்கினான். சக்கர காணுக்கூடாக ஓடிச் செல்லும் இளவட்டத்தினரை, ஹொலிறூட் பெருந்தோட்ட கீழ் லயங்களைச் சேர்ந்த சிலர் அவதானித்தபடியிருந்தனர். இளவட்டத்தினர் தேயிலைத் தொழிற்சாலைக்கு வடக்குப் பக்க மலைச் சாரலுக்கு நடுப்பகுதியிலுள்ள தெப்பக் குளத்திற்கிறங்கி அதன் சீமெந் கட்டுமானத்தைப் பிடித்தபடி சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தனர். தேனீக்களைக் காணவில்லை. பெடியன்கள் தெப்பக்குளத்திலிருந்த மேலேறினர்.

வெள்ளயன் மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தான். அவனது காது சிவப்பேறியிருந்தது. அதைப் பார்த்து எல்லோரும் சிரித்தனர்.

"உங்களுக்கென்றா சிரிப்பு. என்ற காது வலிக்குதுடா"

"நில்லாதே ஓடச் சொல்லி உனக்குச் சொன்ன நாங்கதானே.... நீ கேட்கவில்லை. கெடபோல்ல எடுக்கப் போகப் பார்த்தாய். இப்ப என்ன செய்றது?"

சுனில் சொன்னான். இப்படியான அபாயமான கட்டத்திலும் அவனது சிரிப்பு அற்றுப் போகவில்லை. அது வெள்ளயனின் கோபத்தை மேலும் கிளறியது.

"அதுக்கு சின்ன வெங்காயத்த தகர்த்து பூசினால் சரிவரும்"

உபாலி சொன்னான்.

"இந்த நேரத்தில் சின்ன வெங்காயம் எங்க தேடுறது?"

சுஸில் கேட்டான்.

"ஏன் என்னிடமிருக்கு"

பொடிபுதா சொன்னான்.

"எங்கிருந்து நீ இதக் கொண்டு வந்தாய்? எப்படியும் விஷயம் குழம்புமென்று தெரிந்து கொண்டு வந்தாப் போலிருக்கு"

தயா கேட்டான்.

"ஏன்டா- எங்கட அடுத்த வீட்டு நாடார் மாமாட வெங்காயக் களஞ்சியம். பகல் வேளயில காயப் போட்டிருப்பது தெரியாதா? அதால இரண்டொன்று எடுத்து நான் பொக்கற்றில் போட்டுக் கொண்டன்"

பொடிபுதா சின்ன வெங்காயமொன்றை உரித்து வெள்ளயனின் கையில் கொடுத்தபடியே சொன்னான்.

"சரி சரி இனி சீக்கிரமா போங்க. போகும் போதே அதை தேய்த்துக் கொள்ளலாம் தானே"

சுஸில் நனைந்த காற்சட்டையை அணிந்திருக்கும் போதே தண்ணீ ரைப் பிழிந்தபடி முன்னோக்கிச் சென்றான். ஏனையவர்கள் அவன் பின்னால் போகத் தொடங்கினர்.

❖❖❖❖❖❖

இருள்படரும் வரையில் புற்பரப்பில் விளையாடிய இளவட்டத்தினர் சின்னக் கிணற்றில் முகம்கை கழுவிக் கொண்டு வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

சிறுபாதை வழியே டயரொன்றை உருட்டியபடி வாயால் ஒலியெழுப் பிக் கொண்டு வந்த உக்குங், சிறுபாதைக்கேறும் இளவட்டத்தைக் கண்டு அப்படி நின்றான்.

"நீங்கள் தேன்கூட்டுக்கு கல்லடித்திருக்கீங்க. கொழுந்து கிள்ளுற பொம்புளைங்கள தேன்பூச்சி குத்தி..... தோட்டத் துரைமார் உங்களத் தேடுறாங்க"

அதற்கு மேலும் பேச இடங்கொடுக்காமல் சுசில் அவனது வாயைக் கையால் மூடிக் கொண்டான்.

"சத்தம் போடாதே. யார் உனக்குச் சொன்னது?"

சுஸில் கேட்டான்.

"தோட்டத்து ஆக்கள் கதைக்கிறத நான் கேட்டன்"

சுற்று முற்றும் பார்த்தபடி ரகசியம் போல் உக்குங் கூறினான்.

"சரி..... சரி... நீ போ. என்ன நடக்குதென்று பாப்பம்"

சரத் சொன்னான்.

❖❖❖❖❖❖

பெருந்தோட்ட கண்டக்டர் ஐயாவும் தொழிற்சாங்கத் தலைவரும் இன்னும் பலரும் இரவு ஏழு மணியளவில் நகரசபை வீட்டுத் தொகுதிக்கு வந்தார்கள். பெற்றார்கள் வீட்டிலிருந்து வெளியே வந்து அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு காது கொடுத்தனர்.

"கொதலாவல எங்கட பிள்ள.... அவன நான் எங்கட தங்கச்சி வீட்டுக்கு அனுப்பினன். துரைமாருக்கு தெரிந்திருக்கும். அந்த சாத்திரம் சொல்லும் சோமா. எங்கட பிள்ள சீட்டுச் சல்லி கொடுக்க அங்க போனவன்"

ஜேன்மாமி கொதலாவல சார்பில் கதைத்தார்.

"எங்கட பெடியள் எங்கயும் போகேல்ல ஐயா. அவங்க கீழ் மைதானத்தில விளையாடினவங்க"

சுமனக்கா முன்னுக்கு வந்து சொன்னாள்.

"இவங்க சின்னப் பெடியன்கள். இவங்க அவ்வளவு தூரம் போறதெப்படி? தோட்டத்து பெடியன்கள்தான் அதச் செய்திருப்பாங்க. எங்கட பெடியள் அதுக்கெல்லாம் போகமாட்டாங்கள் ஐயா. இவங்கள் மாடசாமி கோவிலுக்கு அப்புறம் போகமாட்டாங்க. அங்க மரத்தடியில விளையாடுவாங்கள். மரங்களில காய் கனியக் கண்டா இரண்டொன்று பறிப்பாங்க... இப்பிடியான வேலகள் கடைசிவரை செய்யமாட்டாங்கள்"

பெற்றார்கள் சொல்லத் தொடங்கினர்.

"அப்படீன்னா கனகின்ற பெடியன் யாரு?"

தோட்டக் கண்டக்டர் கேட்டார்.

"வெள்ளயன்"

தோட்ட அதிகாரி வெள்ளயனைக் கவனமாக நோட்டமிட்டார்.

"சரி இந்தப் பெடியன தேன்பூச்சி எப்பிடி குத்தினது?"

வந்திருந்த அதிகாரி கேட்டார்.

"அது தேனீயல்ல. குளவி கொட்டினது. ஐயா கீழ்ப்பக்கமாக ஒரு மரம்.... அதிக குளவி நிறைந்திருக்கு. பொய் சொல்றதா நினைக்காதீங்க. வேணுமென்டா போய்ப் பாருங்க. அங்க விளையாடும் போது குளவி

கொட்டியிருக்கு.... போன கிழம சுசிலின்ற காலுக்கு மிதிபட்டிருக்கு.... தெமரக்கா இன்னுமே மருந்து செய்றா. ஆ....... எவ்வளவு நாளாச்சி"

மூத்த ஒருவர் குளவியால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலை விரித்தார்.

"என்னால் அதை நம்ப முடியாது"

கண்டக்டர் கூறினார்.

"அப்படீன்னா வாங்க குளவி மரத்தடிக்கு... குளவி கொட்டுறது எப்பிடீன்னு காட்டுறன்"

இளைஞர் ஒருவர் அழைப்பு விடுத்தார். வந்திருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"நல்லது அப்படியென்னா நாங்க போறம். ஆனால் எங்கட பரிசீலனை முடியேல்ல"

தோட்ட அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

வெள்ளயனின் வீங்கிய காதைப் பார்த்து சுஸில் சிரிக்கத் தொடங்கினான்.

"வெள்ளயனின் காதுக்கு தேன்பாணி தடவினால் சுகமாகும்"

யாரோ சொன்னார்கள்.

அதைக் கேட்ட நோனாச்சிக்கு கோபம் வந்துவிட்டது.

"இப்பொ கொஞ்ச நேரத்துக்கு முன்ன தோட்டத்து ஐயாமார் காதுக்குள்ள தேன்பாணி ஊத்திறமாதிரி சொன்னதக் கேட்டீங்களா...? தேன் பாணி....ஹ்ம்.... பெடியன்கள் கூடு உடைக்கப் போய் தேன்பூச்சிகள் குழம்பி அந்த அப்பாவிப் பொம்பிளைங்கள குத்தியிருக்கு. பெரும் போயாவுக்கு சீலம் எடுத்தாலும் பெடியனக் காப்பாத்த நானும் பொய் சொன்னன். ஏழு தேனீ குத்தினா பாம்பு விஷம். செய்திருக்கிற வேல பெரிய கெட்டித்தனமென்ற நெனவா? இதுக்குப் பிறகு இப்பிடி வேல செய்தால் தெரியும்"- என்று பெடியளுக்கு ஏசத் தொடங்கினாள்.

சுசில் தலையைச் சொரிந்தபடி கீழே பார்த்துக் கொண்டான். மற்றவர்கள் ஒளிந்து கொள்ள இடந்தேடினார்கள். வெள்ளயன் மெல்ல வீட்டுக்குள் புகுந்து கொள்ளப் பார்த்தான். ஆனால் அது வெற்றியளிக்க வில்லை. சீதை மாமி அவனது கையைப் பிடித்துக் கொண்டாள்.

அருகேயிருந்த விறகுக் குவியலிருந்து காய்ந்த தடியொன்றை எடுத்துக் கொண்டாள்.

"ஐயோ அம்மா- அடிக்கவாண. ஐயோ நோனாச்சி என்னக் காப்பாத்துங்கோ. ஐயோ ஆச்சி"

வெள்ளயன் நோனாச்சியின் பக்கமாகப் பார்த்து சீதைமாமி அடிப்பதற்கு முன்னாலேயே சத்தமிடத் தொடங்கினான். இருந்தும்... நோனாச்சி இம்முறை வெள்ளயனைக் காப்பாற்ற முன்வரவில்லை. எதுவுமே கேட்காதது போல் அவள் எங்கோ பார்த்தபடி நின்றாள்.

"ஐயா வரட்டும் உனக்கு வாங்கித் தாரன்"

சீதைமாமி தேயிலைத் தடியை எறிந்துவிட்டு, வெள்ளயனின் இடக்காதை திருகியபடி சொன்னாள்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில வெள்ளயன்ற ரெண்டு காதும் ஒன்றுபோலாகும். ஆமா யானைக் காதாகும். என்னடா சொல்றியள்? ஒன்றுக்கு பத்து. யார் வாரீங்க பந்தயத்துக்கு?"

நல்லமாமாவின் அந்தக் கதைக்கு எல்லோருமே சிரிக்கத் தொடங்கினர்.

வெள்ளயன் மாத்திரம் முறைத்துப் பார்த்தான். இப்போது அவனுக்கு அவர் நல்ல மாமா அல்ல.



## உபாலி லீலாரத்ன

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியத்துறையில் உழைத்து வரும் உபாலி லீலாரத்ன சிறந்த மொழிபெயர்ப்பாளராக முத்திரை பதித்தவர்.

ஜெயகாந்தன், பிரபஞ்சன், கு.சின்னப்பாபாரதி, போன்ற தமிழ் நாட்டு பிரபலங்களின் படைப்புக்களை மாத்திரமின்றி, நம் தேச எழுத்தாளர் பலரையும் சிங்கள வாசகர் மத்தியில் அறிமுகப்படுத்தியவர்.

இருபதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ள இவர், பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

தென்னிலங்கையில் பிறந்த போதும் நெடுங்காலம் தலவாக்கலையில் வாழ்ந்தவர். 08-12 வயது இளமைக் குதியாட்டஅனுபவங்களை, அப்படியப்படியே மலையக பின்னணியில் சித்தரித்த பினிவந்தலாவ என்ற நாவல் இலங்கை நூலக ஆவணவாக்கல் சபையின் அனுசரணையில் வெளிவந்துள்ளது.

இதன் தமிழ் வடிவமான விடைபெற்ற வசந்தம் எனும் இந்நூல் இவரது படைப்பாளுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

350/-

ISBN 978-955-30-2825-9

எஸ். கொடகே சகோதரர்கள்
675, பீ. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

அட்டை வடிவமைப்பு : மேமன்கவி